தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

சனிக்கிழமை, 3 மே 1986,

சித்திரை 30. அட்சய, திருவள்ளுவராண்டு-2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

இராயபுரம் அருகே மேம்பாலம் கட்டுதல்.

* 219. வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை-கல்கத்தா தேசிய நெஞ்சாலையில், இராயபுரம் அருகில் இராசாசி சாலையின் முடிவில், இருப்புப் பாதை குறுக்கிடும் இடத்தில், மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

(உ) இல்லை எனில், இனியாவது அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) தற்போது இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) வடக்குக் கடற்கரை சாலையில் (இராசாசி சாலை) இரண்டு இருப்புப் பாதையின் மேல் கட்ட உத்தேசித்திருந்த மேம்பாலத்தைத் தொழில் நுட்ப சிரமங்களுக்காகவும் மற்றும் அதிகப்படி செலவிட வேண்டியதின் காரணமாகவும், கைவிட முடிவு எடுக்கப்பட்டது. எனினும், இத்திட்டத்திற்குப் பதிலாக ராயபுரம் மன்னார்சாமி கோவில் சாலையிலுள்ள இருப்புப் பாதையின் மேலுள்ள மேம்பாலத்தின் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு இருவழித் தடங்கள் இருப்பதற்குப் பதிலாக நான்கு வழித் தடங்களாக அகலப்படுத்தும் திட்டம் பரிசீலனையிலுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, சென்னை-கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில், இராயபுரம் அருகில் இராசாசி சாலையின் முடிவில், இருப்புப் பாதை குறுக்கிடும் இடத்தில் மேம் பாலம் கட்டும் செயற்குறிப்பு 'தற்போது இல்லை' என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். 'தற்போது இல்லை' என்றால் பின்னாலே அது உருவாக்கப் படுமென்று பொருள் இருக்கிறது. அப்படி ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா? மக்களுடைய நன்மை குறித்து இப்போது அது இல்லாவிட்டாலும், எதிர் காலத்தில் அந்தச் செயற்குறிப்பை உருவாக்கி, தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, தற்போது இல்லை. ஏற்கெனவே இருந்தது என்று சொன்னேன். அந்தச் செயற்குறிப்பு இப்போது கிடையாது. பணப் பற்றாக்குறை காரணமாக அந்த இரண்டு இடங்களிலும் போகின்ற தண்டவாளங்களுக்கு மேலாகப் பாலம் போட அதிகப் பணம் செலவாகும் என்பதால், மன்னார்சாமி கோவில் சாலைக்குப் பக்கத்தி லுள்ள இருப்புப்பதையின் மேலுள்ள மேம்பாலத்தை அகலப்படுத்தலாமென்று அரசு பரிசிலிக்கிறது என்று சொன்னேன். அந்த வகையில் இது பரிசிலிக்கப் படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, மன்னார்சாமி கோவில் சாலையிலுள்ள இருப்புப் பாதையின் மேலுள்ள மேம்பாலத்தை அகலப் படுத்துவது பரிசிலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன் னார்கள். அந்தப் பரிசிலனையை விரைவிலே முடித்து, அதை அகலப்படுத்தும் பணி தொடங்கப்படுமா? அதற்கு எந்த அளவுக்கு செலவிடலாமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது? அந்தப் பணி எப்போது தொடங்கும், எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக 5.60 கோடி ரூபாய் செலவாகுமென்று கணக்கிடப்பட்டிருக் கிறது. இதிலே பாதியை அரசும், பாதியை மாநகராட்சியும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டது. மாநகராட்சியில் நிதிப் பற்றாக்குறை காரணமாக, அரசே அதை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். இந்தச் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு, ஆய்வு முடிந்த பிறகு, வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

1986 மே 3]

பண்ணுருட்டி நகராட்சி

* 220. வினா —திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பண்ணுருட்டி நகராட்சியை, முதல்நிலை நகராட்சியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) விரைவில் முடிவெடுக்கப்படும்.

திரு. அ. ப. சிவராமன் : துணைத் தலைவரவர்களே. பண்ணுருட்டி நகராட்சியை முதல் நிலை நகராட்சியாக மாற்றுவதற்குத் தேவையான மக்கள் தொகை, நிதி வருவாய் இருந்தபோதிலும், அதை முதல் நிலை நகராட்சியாக மாற்றுவதற்குக் காலதாமதம் ஏற்பட என்ன காரணம்? விரைவிலே அது முதல் நிலை நகராட்சியாக மாற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, நகராட்சியை இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்கு உயர்த்த வேண்டுமென்று சொன்னால், அதற்குச் சில வழிமுறைகள் இருக்கின்றன. நிதியைப் பொறுத்த மட்டில், கடந்த 3 ஆண்டுகளில் சராசரி ரூ. 25 லட்சம் ஆண்டுக்கு வருமானம் வந்திருக்க வேண்டும். 1983-84-ல் ரூ. 29 இலட்சம் வந்திருக்கிறது. இது பற்றிப் பரிசீலித்து, விரைவிலே முடிவெடுக்கப்படும்.

திரு. அ. ப. சிவராமன் : துணைத் தலைவரவர்களே, தமிழகத்திலே இரண்டாம் நிலை நகராட்சிகளாக இருந்து, முதல் நிலை நகராட்சிகளாக தங்களை உயர்த்த வேண்டுமென்று மனுச் செய்திருக்கும் நகராட்சிகள் எத்தனை ? எத்தனை நகராட்சிகள் பற்றி பரிசீலனையில் இருக்கிறது ? எத்தனை நகராட்சிகளை முதல் நிலையாக மாற்றுவதற்குக் கருத்துரு இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, பண்ணுருட்டி பற்றிக் கேட்டதால், அதுபற்றிய விவரம்தான் என்னிடம் இருக்கிறது. இதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 221, 222 ஒத்தி வைக்கப்படுகின்றன.

[1986 மே 3

பேருந்துகளைச் சுத்தப்படுத்த புதிய கருவிகள்.

* 223. வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள், தங்கள் பேருந்துகளைக் கழுவி சுத்தப்படுத்த, புதிய கருவிகளை வாங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, தற்போது தமிழகத் திலுள்ள போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளைக் கழுவி, அவற்றைச் சுத்தப்படுத்தும் பணிகளைப் பொறுத்தவரையில், திருப்திகரமாக இல்லை. நாம் பயணம் செய்யும்போது பார்க்கிறோம், பல வண்டிகள் மிகவும் அசுத்த மாக இருக்கின்றன. நவீன முறைகளில் கருவிகளைப் பயன்படுத்தினால் அசுத்தம் ஏற்படாது. இதை மேல் நாடுகளில் பயன்படுத்துகிறார்கள். அப்படி நம்முடைய நாட்டிலும் பயன்படுத்தக்கூடாதா என்று பொது மக்கள் பேசு கிறார்கள். எனவே வருங்காலத்திலாவது அந்த நவீனக் கருவிகளைப் பயன் படுத்த வழிமுறைகளை அரசு காணுமா ?

(முற்பகல் 10-05)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : கட்டணம் என்று வருகிறபோது, பொது மக்கள் அம்மாதிரிப் பேசுகிறார்களா ? வெளிநாட்டில் கட்டணம் அதிகம், இங்கே குறைவு, ஆகவே இங்கேயும் கட்டணத்தை அதிகமாக்க வேண்டும் என்று பேசுகிறார்களா ? அத்தகைய உணர்வு இங்கேயும் வரும்போது, நாமும் செய்யலாம். ஒரு கருவி வாங்க 2 லட்சம் ரூபாய் செலவாகிறது. சிக்கனமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அம்மாதிரி முயற்சியை எடுக்க முடிய வில்லை. ஆனாலும் சில போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், அவர்களே தனியாக இதற்கான கருவிகளைத் தயார் செய்து பயன்படுத்தி வரு கிறார்கள். நம்மிடம் இருக்கிற வசதியைப் பயன்படுத்தி நாம் இப்படித்தான் செய்ய முடியும். இங்கிலாந்தில் இந்தக் கருவியின் விலைபற்றிக் கேட்டபோது, அது 2 லட்சம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை யில் நாம் இந்தக் கருவியை வாங்குவது நமக்குக் கஷ்டமாக இருக்கும் என்பதால்தான், அந்த ஆலோசனை கைவிடப்பட்டது.

1986 மே 3]

திரு. எல். ஜெயச்சந்திரன் : ஒரு வருடத்திற்கு முன்பு பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துத்தான், நான் இந்தக் கேள்வியைப் போட்டேன். ஆலோசனை கைவிடப்பட்டது என்று அமைச்சர் சொன்னார். இன்றைக்கு ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் 300 பேருந்துகளுக்கு மேல் இருக்கும் நிலையில், இரண்டு அல்லது மூன்று கருவிகளாவது வாங்கலாம் அல்லவா? இப்போது இல்லையென்றாலும், வருங்காலத்திலாவது ஒன்றிரண்டு கருவிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இரண்டு அல்லது மூன்று போதாது. ஒவ்வொரு டெப்போவுக்கும் ஒன்று வேண்டும். இப்போது கிட்டத்தட்ட 237 டெப்போக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு டெப்போவுக்கும் 2 லட்சம் ரூபாய் விதம் செலவு செய்து இக்கருவியை வாங்குவது என்பது இப்போதைய நிலையில் கஷ்டமான காரியம். ஆனாலும் இப்பொழுது கூட அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களே இத்தகைய கருவிகளைத் தயார் செய்து, பேருந்துகளைக் கழுவி, சுத்தப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கிலாந்திலுள்ள கருவியைப் பொறுத்தவரையில், அதை இப்பொழுது வாங்குவதற்கான முயற்சி கைவிடப்பட்டதே தவிர, இந்த ஆலோசனை கைவிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : புதிய கருவிகளை வாங்கி பயன்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்பு இழப்பு அதிகமாக இருக்கும் அல்லவா. அந்த அடிப்படையில் இந்த முயற்சி கைவிடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : எல்லாவற்றிலும் நாம் அப்படிப்பட்ட நிலையைக் கடைப்பிடித்தால் பேருந்துகளையே நிறுத்த வேண்டிய நிலை வந்துவிடும். அப்படிப் பார்த்தால், சிறிய வண்டிகளை நிறைய பேர் வைத்துக் கொண்டு பயன்படுத்துவார்கள். இதைப் பொறுத்தவரையில், இது தேவையான ஒன்று, பொதுமக்களுக்குப் பயன்படக் கூடிய ஒன்று. இதனால் வேலை இழப்பு ஒன்றும் ஏற்பட்டு விடாது. இது நல்ல பலன் தரக்கூடியது என்பதால், வேறு விதமாக இதை ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம்.

[1986 மே 3

நொய்யல் ஆற்றின் மேல் உள்ள பாலம்

***224 வினா—திரு. அ. மயில்சாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கோயம்புத்தூருக்கும் பேரூருக்கும் இடையே, நொய்யல் ஆற்றின் மேல் உள்ள பாலத்தை, அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

திரு. அ. மயில்சாமி: இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையிலே இருக்கிற பாலம் குறுகியதாக இருக்கிறது. அன்றாடம் லாரிகளும் பஸ்களும் நூற்றுக் கணக்கில் இந்தப் பாலத்தின் வழியே செல்கின்றன. இந்தப் பகுதியில் ஒரு சிறு விபத்து ஏற்பட்டால் கூட, கோவை, பேரூர் போன்ற பகுதிகளுக்குப் போய் வர முடியாது. இப்பொழுது இல்லையென்றாலும், அடுத்த ஆண்டி லாவது இப்பாலம் அகலப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: 4.90 மீட்டர் அகலம் தான் இருக்கிறது. அதை 8 மீட்டர் அகலமாக ஆக்க வேண்டும் என்பது நம்முடைய நோக்கம். இப்பொழுது இல்லை. ஆனால் எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கு ஏற்ப நிச்சய மாக இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள் 225 மற்றும் 226 ஒத்தி வைக்கப்படுகின்றன.

26—4—1986 ஆம் தேதிய வினாப் பட்டியலிலிருந்து 3—5—1986 ஆம் நாளுக்கு ஒத்திப் போடப்பட்ட வினாக்கள் எண் 203 மற்றும் 204 ஒத்தி வைக்கப்படுகின்றன. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்புகள்.

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, சட்டமன்ற மேலவையில் நடப்புக் கூட்டத்தொடரின் அலுவல் விபரம்.

3—5—1986 (சனிக்கிழமை)	—	தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம்.
4—5—1986 (ஞாயிற்றுக்கிழமை)	—	விடுமுறை
5—5—1986 (திங்கட்கிழமை)	—	மாலை 4 மணி அரசின் சட்ட முன்வடிவு களை ஆய்வு செய்தல்.
6—5—1986 செவ்வாய்க்கிழமை முதல் 9—5—1986 வெள்ளிக்கிழமை வரை	—	கூட்டம் இல்லை.
10—5—1986 சனிக்கிழமை	—	(1) தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம். (2 மணி நேரம்)
	—	(2) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல் (1 மணி நேரம்)
11-5-1986 ஞாயிற்றுக்கிழமை	—	விடுமுறை
12—5—1986 திங்கட்கிழமை	—	(1) தனி உறுப்பினர் அலுவல்
		(2) 26—6—1986 அன்று ஓய்வு பெறவிருக்கும் உறுப்பினர்களுக்கு பாராட்டுரை
13—5—1986 செவ்வாய்க்கிழமை மற்றும் 14—5—1986 புதன்கிழமை	—	அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல்

10—5—1986 அன்று கேள்வி நேரம் இல்லை. மேலவை வழக்கம்போல் காலை 10-00 மணிக்குக் கூடும்.

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 10-10)

3. தகவல் கோரல்

(1) சென்னையிலுள்ள இன்ஸ்ட்டியூட் ஆப் பிரிண்டிங் டெக்னாலஜி முதல்வரைப் பற்றி கல்வியமைச்சர் விளக்க வேண்டுவது பற்றி.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுப்பதற்கு முன், ஒரு பிரச்சினை. சிறிய விளக்கம் கேட்க விரும்புகிறேன். இங்கே கல்வி மானியக் கோரிக்கையின்மீது நடந்த விவாதத்திற்கு விடையளித்த கல்வியமைச்சர் அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார்கள். இங்கே பேசிய எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள் கூட சென்னையில் உள்ள இன்ஸ்ட்டியூட் ஆப் பிரிண்டிங் டெக்னாலஜியின் முதல்வரைப் பற்றிய செய்திகளைச் சொல்லும்போது, அவர் போதிய தகுதியில்லாமல் நியமிக்கப்பட்டிருக்கிறார், பல்வேறு முறைகேடுகளைச் செய்திருக்கிறார் என்று சொன்ன பிறகும், அப்படி இல்லை என்று ஆதாரபூர்வமாக அறிவிப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எந்த அடிப்படையில் உறுப்பினர் இந்தப் பிரச்சினையைக் கிளப்புகிறார்?

***திரு. க. மீனாட்சிசுந்தரம்:** ஒழுங்குப் பிரச்சினையாகக் கிளப்புகிறேன். இன்றைக்குக் கூட உயர்நீதிமன்றத்தின் உத்தரவு அவர் தகுதியற்றவர்—பதவியில் நீடிக்கக்கூடாது என்று அவரைப்பற்றி வந்திருக்கிறது. ஆகவே, இந்த அவையில் அமைச்சர் அவர்களால் ஒரு தவறான தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு மாறான தகவல் கல்வியமைச்சரால் தரப்பட்டிருக்கிறது. இது கல்வித் துறைக்கும், கல்வியமைச்சருக்கும் இழுக்கு ஏற்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே இது குறித்து அரசுத்தரப்பில் விளக்கம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்சினை என்றால் முதலிலேயே தகவல் தெரிவித்தால், அதை அமைச்சரிடம் சொல்லி பதில் கொடுக்கச் செய்யலாம். திடீர் என்று இப்போது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறீர்கள். பதில் சொல்ல ஒருவரும் இல்லை. இதுகுறித்து பின்னர் எடுத்துக்கொள்ளலாம். இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம்.

4. கவன ஈர்ப்பு

சத்துணவுக்கூடங்களை ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பார்வையிடுவது பற்றி தஞ்சை மாவட்ட ஆட்சியரின் ஆணை குறித்து.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "மதிய சத்துணவுக் கூடங்களைப் பார்வையிடும் ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் குறிப்புகள் மீது ஆணையாளர்கள் நடவடிக்கை எடுக்கக்கூடாது என தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவிட்டுள்ளது குறித்து" மாண்பு மிகு சத்துணவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரு கிறேன்

மாண்புமிகு திரு. இரா. சௌந்தரராஜன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன் விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் உள்ளாட்சித் துறை அமைச்சருக்குக் கொடுத் திருந்தேன். சத்துணவுத் துறை அமைச்சர் விடை அளித்திருக்கிறார்கள். சாதாரணமாக உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்த பிறகு, அரசு எதிர் பார்த்த முடிவுகளுக்கு எதிராக தேர்தல் முடிவுகள் அமைந்துவிட்டதால், புதி தாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பெருந்தலைவர்களுடைய பொறுப்புக் களையெல்லாம் படிப்படியாகக் குறைக்கிற பணியில் இந்த அரசு ஈடுபட்டிருக் கிறது. அந்த வகையில்தான் இந்தச் செயல்கூட நடந்திருக்கிறது. இந்தச் சத்துணவுக் கூடங்களை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் பார்க்கக் கூடாது, அப்படிப் பார்த்தால் அதுபற்றிய குறிப்பு எழுதக்கூடாது, அப்படியே எழுதினாலும் அதுபற்றிய நடவடிக்கை எதுவும் ஆணையாளர்கள் எடுக்கக் கூடாது என்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணை பிறப்பித்து, இது சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டதோடு மட்டுமல்லாமல், மற்றொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார். ஒன்றியப் பெருந்தலைவர்கள் பார்வையிடுகிறபோது, "எந்த அதிகாரத்தின் அடிப்படையில் பார்வையிடுகிறார்கள்?" என்று அங்கே பணியாற்றுபவர்கள் கேட்டுவிட்டால் என்ன ஆகும் என்று, அவரே ஒரு குறிப்பு கொடுத்து தூண்டிவிடக்கூடிய அளவுக்குச் செயல்பட்டிருக்கிறார் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்கும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். ஆனால் இங்கே தரப்பட்டிருக்கிற விவர

@ 508 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் அப்படி அவர் குறிப்பாகச் சொல்லவில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். அவர், நிருபர்களை அழைத்துப் பேசி, அந்தக் குறிப்புக்கள் அப்படியே பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூட ஒருமுறை சொல்லியிருக் கிறார்கள், சத்துணவுக் கூடங்களை ஆங்காங்குள்ள பொதுமக்களே பார்வையிட வேண்டுமென்று கேட்டு, "அங்கே குறைகள் இருந்தால் என்னிடம் தெரிவிக்க வேண்டும்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் பல்வேறு இடங்களில் ஆளுங் கட்சியினர் அந்தச் சத்துணவுக் கூடங்களை வழிநடத்திக் கொண்டும் இருக்கிறார்கள். அந்த வகையில் அங்கே பல்வேறு ஊழல்கள் நடப்பதாகவும் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் இந்த அவையிலும்கூட சொல்லப்பட்டன. ஆகவே பொதுமக்களே பார்த்தாலும் கூட, அங்கே முறை கேடுகள் இருந்தால், அதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு அரசு, இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் அந்தக் கூடங்களைப் பார்வையிட்டால், அது குறித்து நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொல்வது எந்த வகையில் நியாயமாகும்? இது சர்வாதிகாரம் அல்லவா? இது அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களை அவமதிப்பது ஆகாதா என்ற வகையில் அரசு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: விளக்கம் கேட்பது சொற்பொழிவாற்றுவது போல் இருக்கிறது.

திரு க. மீனாட்சிசுந்தரம்: ஒன்றே ஒன்று. இந்தக் கட்டிடங்கள் பஞ்சாயத்து யூனியனின் கண்ட்ரோலில் இருக்கின்றன. அங்கே சுகாதார

(முற்பகல் 10-15)

வசதியை அவர்கள்தான் செய்ய வேண்டும். நீர் வசதி அவர்கள்தான் செய்ய வேண்டும்; துப்புரவு வசதி அவர்கள்தான் செய்ய வேண்டும். மின் வசதி அவர்கள்தான் செய்ய வேண்டும். இவ்வளவு பொறுப்புகளையும் செய்யக்கூடிய பெருந்தலைவர் அவற்றைப் பார்க்கக்கூடாது என்று ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், ** உத்தரவு போடுகிறார் என்றால், அது எப்படிச் சரியாகும் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

1986 மே 3]

*மாண்புமிகு திரு. இரா. சௌந்தரராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ உள்நோக்கம் கற்பிக்கின்ற அளவில், நடந்து முடிந்த 1986 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்களின் தேர்தலில் மிகுந்த பொறுப்பு எதிர்க் கட்சியினருக்கு வந்துவிட்ட காரணத்தால், தாழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வாறு உத்தரவு போடப் பட்டது என்று அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த வரையறையை ஏற்படுத்தி உத்தரவு போட்டது 1984 ஆம் ஆண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங் களுக்கும் தேர்தல் நடந்தது 1986 ஆம் ஆண்டாகும். இந்த ஆணை 1984 ஆம் ஆண்டிலே போடப்பட்டது. அப்போது போடப்பட்ட இந்த ஆணையின்படி இன்னின்னார்தான் சத்துணவுக் கூடங்களைப் பார்வையிடலாம், இன்னின்ன அதிகாரிகள்தாம் நடவடிக்கை எடுக்கலாம் என்று தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. எவரும் பார்வையிட்டு அறிக்கை தருவதென்பது வேறு; அதன்மேல் நடவடிக்கை என்பது வேறு. எல்லோருமே நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றுதான் சொன்னோமே தவிர, சுட்டிக்காட்டக் கூடாதென்று சொல்லவில்லை. குறைகளை யார் வேண்டுமானாலும் சுட்டிக்காட்டலாம். ஆனால் அவற்றின்மீது விசாரணை நடத்தி, நடவடிக்கை மேற்கொள்கிற பொறுப்பு அதிகாரிகளிடத்திலேதான் இருக்கிறது. 1984 இல் போடப்பட்ட இந்தச் சட்டத்தின்படி இன்னின்னார் சொல்லலாம் என்றும் இன்னின்னார் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் தெளிவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியுள்ள பிரச்சினையில் தஞ்சை மாவட்டத்திற்குள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். வேறு எந்த ஊராட்சி ஒன்றியத்திலும் இந்த மாதிரி பிரச்சினை இல்லை. தஞ்சை மாவட்டத்தில், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் மிக வேகமாகச் செயல் படுவதாக எண்ணிக்கொண்டு, சத்துணவுக் கூடங்களுக்குப் போய் நடவடிக்கை எடுக்கும் காரணத்தால், மேற்படி சத்துணவுக் கூடங்களின் செயல்பாடு நின்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் வரையறையைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று ஆணையாளர்களுக்குத் தாக்கீது அனுப்பினார்களே தவிர, உள்நோக்கத்திலே அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சத்துணவுக் கூடங்களைப் பார்வை யிடுகிற பொறுப்பைப் பெறுகிறார்கள். அவர்கள் இவ்வாறு சத்துணவுக் கூடங்களைப் பார்வையிடலாம், குறைகள் இருந்தால் தெரியப்படுத்தலாம்.

அதன்மீது நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். ஆனால் தடி எடுத்தவர்கள் எல்லாம் தண்டல்காரர்கள் ஆகிவிடக் கூடாது என்பதற்காகத் தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சுற்றறிக்கையை அனுப்பி யிருக்கிறார்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கவன ஈர்ப்புக்கு சத்துணவு அமைச்சர் பதிலளிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். உறுப்பினர்கள் எந்தத் துறைக்கு அனுப்பினாலும், சம்பந்தப்பட்ட துறைக்கு அது மாற்றப்பட்டு, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அத்துறைக்குப் பொறுப்பாளர் ஆதலால் பதிலளிப்பார். எனவே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கவன ஈர்ப்புக்கு சத்துணவு அமைச்சர் பதிலளிப்பது சரியானது. அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ** செயல்படுகிறார் என்று சொன்ன வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன். ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரை ** என்று சொல்வது சரியல்ல.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கின்ற சொற்கள் எப்படி இருக்கிற தென்றால், ஆய்வு செய்ய வருகிற பெரும் தலைவர்களை, "நீங்கள் எந்த விதியின் கீழ் ஆய்வு செய்ய வருகிறீர்கள்" என்று அங்குள்ளவர்கள் கேட்டு விட்டால் என்ன செய்வது என்கிற முறையில் ஒரு வாசகத்தை மாவட்ட ஆட்சித் தலைவரே அடி எடுத்துக் கொடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவர் சொல்லியிருக்கிறார். தவறுதான். அவர் அவ்வாறு சொல்லக்கூடாதுதான். அவர் ஏன் சொன்னார் என்று கேட்கலாமே தவிர, ஓர் அரசு அதிகாரியை ** என்று சொல்வது தவறு.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தவறாகாது. எந்தச் சட்டத்தின்படி தவறு என்று சொல்கிறீர்கள்?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தவறா இல்லையா என்று முடிவு செய்வது தலைவருடைய விருப்பத்தைப் பொறுத்தது. அடுத்த விவாதத்திற்குப் போகுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடி எடுத்தவன் தண்டல்காரன் ஆவதற்கு அனுமதிக்க முடியாது என்று சொன்னார்கள். அது தேவை இல்லை. ஆணையாளருக்குத்தான் நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது. அவர்தான் நேரடியாக எதுவும் செய்ய முடியும். ஆனால் தவறு நடந்திருக்கிறது என்கிற குறிப்பைத்தான் எழுதி வைத்திருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அவற்றின்மீது கூட ஆணையாளர்கள் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பத்திரிகைகளுக்கு விளம்பரம் செய்வதென்றால், அவர்களுக்கு அந்த அதிகாரம் இல்லை என்று சொல்வதென்றால், இது ஜனநாயகத்தையே அவமதிப்பது என்றுதான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த அறிக்கையில், "மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு முக்கியத்துவம் அளித்து மாவட்ட முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்ட ஆய்வுக்குழுவில் அவர்கள் அங்கம் வகிக்க பொது (மு.கு.ச.தி.) அரசு ஆணை பல்வகை எண். 826, நாள் 15—4—86-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. 8 ஆம் தேதி நடைபெற்றது நிகழ்ச்சி, 15 ஆம் தேதி உத்தரவு போடப்பட்டிருக்கிறது. பெரும் தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சித் தலைவர்கள் மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள்தான். ஆகவே யாருக்கு அதிகாரம் என்று தெளிவாக இதில் குறிப்பிடப்படவில்லை. ஆகவே இவர்கள் எல்லோருக்கும் அந்த அதிகாரம் இருக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்; இல்லையென்றால் அவர்களுக்கு அந்த அதிகாரத்தை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(முற்பகல் 10-20)

* **மாண்புமிகு திரு இரா. சௌந்தரராஜன்:** துணைத் தலைவரவர்களே, இந்தச் சம்பவம் நடைபெற்றதே பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். வேறு எந்த ஊராட்சி ஒன்றியத்திலும் இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை உருவாகவில்லை. ஆனால் அங்கு அதிகமான பிரச்சினை உருவாகி மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு வந்த பிறகு, அவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய ஒரு காலக் கட்டாயத்திற்கு ஆட்பட்டார்கள். யாரையும் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்கல்ல. ஊராட்சி ஒன்றியத் தலைவர் அவர்கள் "இன்னின்ன குற்றத்தைச் செய்தார்கள், அவரை உடனடியாகத் தற்காலிக வேலை நீக்கம் செய்ய வேண்டு"-மென்று எழுதி வைத்தார்கள்; குற்றங்களை

எழுதி வைத்திருந்தால் இந்தப் பிரச்சினை வருவதற்கில்லை. ஊராட்சி ஒன்றியத் தலைவர் அவர்களே அங்கு தண்டனையையும் ஊழியர்களுக்கு நிச்சயம் செய்த காரணத்தினாலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இத்தகைய ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டிய காலக் கட்டாயத்திற்கு ஆட்பட்டார்கள். சமீபத்தில் போடப்பட்டிருக்கும் அரசு ஆணையின்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் அனைத்துப் பொறுப்புக்களிலே இருப்பவர்களும் அடங்குவார்கள் என்பதுதான் அதன் பொருள். சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் வேறு, வேறு என்று எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. சத்துணவுக் கூடங்களை அவர்கள் பார்க்கலாம்; அங்கு நடைபெறும் தவறுகளை உரிய அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டலாம்; அவைகளுக்கெல்லாம் விசாரணை நடந்ததற்குப் பிறகு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5. அரசின் தீர்மானம்.

தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவரவர்களே, "சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கையும் திட்டங் களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு@ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

இந்தக் கொள்கைக் குறிப்பின் மீது 8 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். பின்பு அமைச்சர் அவர்கள் பேச வேண்டும். ஆகவே உறுப்பினர்கள் 15 அல்லது 20 நிமிடத்திற்குள்ளாக தங்களது உரையை முடித்துக்கொண்டால், அவையை இன்று பிற்பகல் 2 மணிக்குள்ளாக முடிக்கலாம்.

@ 509—543 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1986 மே 3] [திருமதி வி. ஜெயலட்சுமி]

திருமதி வி. ஜெயலட்சுமி: துணைத் தலைவரவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான தொழில் கொள்கைக் குறிப்பின் மீதும், திட்டங்களின் மீதும் நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தொழில் வளர்ச்சியில் தமிழகம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது என்பதையும், முன்னணியில் உள்ள முதல் 4 மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோன்று அகில இந்திய ரீதியில் நிதி நிறுவனங்களிலிருந்து முதலீட்டைப் பெறும் விஷயத்தில் தமிழ் நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது என்பதையும் பெருமையுடன் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பெருமையிலே நானும் முழுமையோடு பங்குகொள்கிறேன். 1955லிருந்து மத்திய அரசினுடைய பல்வேறு விதமான கனரகத் தொழில்கள் எல்லாம் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டு, தொழில் வளர்ச்சி முழுவதுமாகச் செயலாற்றப் பட்டு, அகில இந்திய அளவிலே தமிழகம் தொழில் துறையிலே நான்காவது இடத்தை அடையும்படியான ஒரு பொற்காலத்தை உருவாக்கித் தந்தது அன்றைய காங்கிரசு அரசு என்பதை நான் பெருமையோடு இந்த இடத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1947லிருந்து 1967 வரை அந்த 20 ஆண்டுக் கால காங்கிரசு ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசும், மாநில அரசும் ஒருங்கிணைந்து நல்லவிதமாகச் செயலாற்றி வந்ததால், தமிழகம் இன்று தொழில் வளர்ச்சியில் நான்காவது இடத்தைப் பெற்றிருக் கிறது என்று சொல்லும் அளவுக்கு நாம் வந்திருக்கிறோம். அதுபோன்று பல்வேறு நிதி நிறுவனங்களிலிருந்து, இந்திய தேசிய தொழில் வங்கியானாலும் சரி, ஆயுள் காப்பீட்டுக் கழகமானாலும் சரி, வங்கியானாலும் சரி, இவைகள் எல்லாம் தமிழகத்திற்கு நல்ல முறையிலே நிதி உதவி செய்து வந்திருக்கின்றன. அவைகளின் நிதி உதவிகள் நல்ல முறையிலே செலவழிக்கப்பட்டு வருகின்றனவா என்பதைப்பற்றி நான் சிறிது இங்கே எடுத்துக் கூறலாமென்று நினைக்கின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், டிட்கோ, சிட்கோ, டிஐஐசி, சிப்காட் போன்ற பல்வேறு தொழில் நிறுவனங்களை அமைத்து அதன் மூலமாக தொழில் முனைவோர்களுக்கு நல்லவிதமாக ஆதரவும், ஒத்துழைப்பும், நிதி உதவியும் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே செயலாற்றிக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் இங்கேயுள்ள கம்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல் அவர்களின் ரிப்போர்ட்டின்படி பார்த்தால், டிட்கோவைச் சார்ந்த பொதுத் துறை நிறுவனங்களில் பல நிறுவனங்கள் இன்று கோடிக் கணக்கான ரூபாய்

(முற்பகல் 10-25)

நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவதில் தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். 9 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ. 9,80,38,000 மூலதனமாக அளிக்கப்பட்டது. இந்த அளவுக்கு மூலதனத் தொகை அளிக்கப்பட்ட பிறகு, பார்த்தால் ரூ. 18,09,69,000 அதாவது 200 அல்லது 300 சதவிகிதத்திற்கு மேலாக 'அக்யூமுலேட்டட் லாஸ்" ஏற்பட்டிருக் கிறது என்று இங்கே புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது.

அதைப் போலவே ஆலங்குளம் சிமின்ட் ஆலை மற்றும் அரியலூர் சிமின்ட் ஆலை என்ற இரண்டு சிமின்ட் தொழிற்சாலைகளையும் பார்த்தால், அவற்றின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று வேதனைப்படத்தக்க அளவில்தான் நிலைமைகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆலங் குளம் சிமின்ட் தொழிற்சாலையின் 'இன்ஸ்டால்டு கெப்பாசிடி' ஆண்டொன் றுக்கு 4 லட்சம் டன் சிமின்ட் உற்பத்தியாகும். அதைப் போலவே அரியலூர் சிமின்ட் தொழிற்சாலையின் நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் (இன்ஸ்டால்டு கெபாசிடி) 5 லட்சம் டன் ஆகும். இந்த இரண்டு சிமின்ட் ஆலைகளுக்கும் கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய தினம் ஆலங்குளம் சிமின்ட் தொழிற்சாலையின் நிலைமை என்னவென்றால், அது ஆண்டொன்றுக்கு 3 லட்சம் டன் அளவுக்குக் கூட உற்பத்தியை எட்ட வில்லை. அதைப் போலவே அரியலூர் சிமின்ட் தொழிற்சாலை 2 லட்சம் டன் உற்பத்தியைக் கூட எட்ட முடியாத அளவுக்குச் செயல்பட்டுக் கொண்டிருக் கின்றது. அதற்கு பல்வேறு காரணங்களை பொது நிறுவனங்களின் குழு தன்னுடைய ஆய்வின்போது கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறது. ஆலங் குளம் சிமின்ட் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், அதற்கான இடமே தவறான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதோ என்ற ஐயப்பாட்டு உணர்ச்சிகூட அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. தண்ணீர்ப் பற்றாக்குறை, தரமான நிலக்கரி இல்லாமை, நவீனப்படுத்துவதில் ஏற்பட்ட கால தாமதம், சுண்ணாம்புக் கல்லை வெட்டி எடுப்பதில் அதிகமான செலவு, தொழிலாளர் களின் ஒத்துழையாமை ஆகிய பல்வேறு காரணங்கள் அந்த சிமின்ட் ஆலையின் உற்பத்திக் குறைவுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. தண்ணீர்ப் பற்றாக்குறை என்று சொல்லும்போது, அந்த ஆலைக்கு ஒரு நாளைக்கு 5 லட்சம் கேலன் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால் அதற்குக் கிடைக்கும் தண்ணீர் மிகக் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால், இரண்டு ஆழ்குழாய் துளைக் கிணறுகளைப் போட்டு, 20,000 கேலன் — அதாவது ஒவ்வொன்றும் ஆயிரம் கேலன் தண்ணீர் வீதம் — தண்ணீரைப் பெற்று வருகிறது. மேலும் வடகரை

நீர்தேக்கத்திலிருந்து தண்ணீர் பெறுவதுபற்றியும் சொல்லப்படுகிறது. மேலும் வெம்பக்கோட்டை நீர்த் தேக்கத்திலிருந்தும் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம் என்பது பெரிய நீர்த்தேக்கம் அல்ல. எப்போதாவது பெய்கிற மழை நீரைத் தேக்கி வைக்க ஒரு அணை கட்டி வைத்திருக்கிறார்கள். அவ்வளவுதான். அதன் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்வதற்காகக் கட்டி வைக்கப்பட்டது. அப்படிப்பட்ட நிலையில் ஆலங்குளம் சிமின்ட் பேக்டரிக்கும் அதிலிருந்து தண்ணீரை எடுத்துக் கொள்வது என்பது சரியான திட்டமாக இருக்காது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தரமான நிலக்கரி கிடைக்கவில்லை என்றும் ஒரு காரணம் சொல்லப்படுகிறது. 1960 முதல் 1970 வரையான 10 ஆண்டுக் காலத்தில் துலுக்கப்பட்டியில் ராம்கோ சிமின்ட் தொழிற்சாலை ஒன்று தனியாரால் தொடங்கப்பட்டு, அது இப்போதும் செயல்பட்டு வருகிறது. அது 1978 ஆம் ஆண்டுக்குள் அதனுடைய இன்ஸ்டால்டு கெபாசிடியான 4 லட்சம் டன் உற்பத்தி அளவையும் தாண்டி, 4.85 லட்சம் டன் உற்பத்தியைச் செய்து வருகிறது. அதுமட்டுமல்ல. அந்த ஆலைக்கும் இதே மாதிரியான நிலக்கரி தான் கிடைக்கிறது. சிங்கரேணியிலிருந்துதான் அந்த நிலக்கரியும் தருவிக்கப்படுகிறது. அதைப் போலவே அதே மாதிரியான சுண்ணாம்புக் கற்களைத் தான் ராம்கோ சிமின்ட் நிறுவனமும் பயன்படுத்துகிறது. ஆலங்குளம் சிமின்ட் ஆலையைப் பொறுத்த அளவிலாவது, அதற்கு சுண்ணாம்புக் கல்லுக்கு 5 கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால் ராம்கோ சிமின்ட் ஆலையைப் பொறுத்தவரை, பந்தக்குடி குவாரி என்கிற சுமார் 20 கிலோ மீட்டர் தள்ளி இருக்கிற இடத்திலிருந்து சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு வருகிறார்கள். இப்படி இத்தனை இன்னல்களையும் தாண்டி ஒரு தனியார் ஸ்தாபனத்திற்கே உரிய முறையில் செயல்பட்டுக் கொண்டு, அதற்கே உரிய முறையில் பல்வேறு செலவுத் தொகைகளையெல்லாம் எழுதிக் கொண்டும், அதற்கு மேலும் இந்திய தேசிய தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்குத் தர வேண்டிய தொகையையும் தவறாமல் கட்டிக் கொண்டு வந்தும், அதில் பங்கு மூலதனம் செலுத்திய அனைத்து ஷேர் ஹோல்டர்களுக்கும் டிவிடென்ட் தொகையைத் தவறாமல் கொடுத்துக்கொண்டு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஒரே மாதிரியான முதலீட்டுடன் ஒரே மாதிரியான "சோர்சஸ் ஆப் ரா மெட்டீரியல்ஸ்" எல்லாம் கொண்ட தனியார் நிறுவனமான ராம்கோ சிமின்ட் தொழிற்சாலை அந்த அளவுக்கு லாபத்தில் நடக்கும் போது, பொதுத் துறையில் செயல்படும் நிறுவனங்களான ஆலங்குளம் சிமின்ட்

பேக்டரியும் அரியலூர் சிமின்ட் பேக்டரியும் ஏன் இப்படி நட்டத்தில் செயல்படுகின்றன என்று தெரியவில்லை. அரசாங்கம் போதிய கவனம் செலுத்தவில்லையா அல்லது அரசாங்கத்தில் சமாளிக்க முடியாத அளவுக்கு நிலைமை போய்விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையைப் பொறுத்த வரையில், அதனைச் சுற்றியுள்ள நிலங்களை ஆர்ஜிதம் செய்து எடுத்துக்கொண்டார்கள். அப்படி அவர்களுடைய நிலங்களை எடுத்துக்கொண்ட பிறகு, 1970-லிருந்து 1980 வரையில் யாருக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றால், திராவிட முன்னேற்றக் கழக அரசிலே தொழில் அமைச்சர்களாக இருந்த எல்லோரும் அவரவர் பகுதியிலிருந்து ஆட்களை வரவழைத்திருக்கிறார்கள். குறிப்பாக கிழக்கு இராமநாதபுரத்திலிருந்து, சிவகங்கை தாலுக்காவில் இருந்து ஆட்களை வரவழைத்து அவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள். இந்த மக்கள் தங்கள் நிலங்களையும், வேலை வாய்ப்பையும் இழந்திருக்கிறார்கள். நான் இதைச் சொல்லும்போது 'Sons of the soil' என்ற முறையில் பேசுவதாக நினைக்கக் கூடாது. அவர்களுக்கு ஜீவாதாரமாக இருந்த நிலங்களை எடுத்துக்கொண்டு, பிறகு அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறோம் என்று காங்கிரஸ் அரசு சொன்ன வாக்குறுதியை மீறி, பல்வேறு இடங்களிலிருந்து ஆட்களை வரவழைத்து வேலையைக் கொடுத்து அந்த ஆலையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆலைக்கு உரிய வேலையாட்களை நியமித்திருக்கிறார்களா என்றால், இல்லை. 'சர்ப்ளஸ் லேபரர்ஸ்' என்ற வகையில் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் தொழிலாளர்களை அங்கே நியமித்திருப்பதால், 'அட்மினிஸ்ட்ரேஷன்' செலவுகள் அதிகமாகி அந்த ஸ்தாபனத்தையே தின்னுகின்ற அளவிற்கு நிலைமை வந்துவிட்டது.

இந்த ஆலையை நவீனப்படுத்துவதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியும், பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியும் இதை நவீனப்படுத்துவது பற்றி குறிப்பிட்டிருக்கின்றன. இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள செலவுகளைப் பார்க்கும்போது, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு நிச்சயமாக வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1978 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட சிமெண்ட் பாக்டரியில் தூசி தடுப்பான் கருவியைப் பொருத்தி அதைச் சுற்றியுள்ள கிராமங்களும், நிலங்களும் பாதிக்காத வண்ணம் நல்ல முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

ஆனால் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட இயந்திரங்கள் இல்லை என்று சொல்லி, இவற்றை அமைப்பது பற்றி பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற முறையில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்தத் தூசி தடுப்பான் கருவிகளை இயக்க, நவீனப்படுத்தும் முறை என்ற வகையில் அதிகமான மின்சார உற்பத்திக்காக ஜப்பானிலிருந்து இரண்டு ஜெனரேட்டர்களை வாங்கியிருக்கிறார்கள். ஒன்று அரியலூருக்கு, மற்றொன்று ஆலங்குளத்திற்கு, ஆலங்குளத்திற்கு வாங்கிய ஜெனரேட்டருக்கு செலவு 230 இலட்சம் ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. அதே போல அரியலூருக்கு வாங்கிய ஜெனரேட்டருக்கு செலவு 350 இலட்சம் ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. மின்சார உற்பத்திக்குத் தடையில்லாமல் இருக்க இந்த ஜெனரேட்டர்கள் வேண்டும் என்றாலும், இவை இரண்டுக்கும் ஏன் இவ்வளவு வித்தியாசம் இருக்கின்றது? கிட்டத்தட்ட 100 இலட்சம் ரூபாய் அதிகமாகச் செலவழிக்கப்பட்டிருப்பதன் காரணம் என்ன? இவை இரண்டும் இரண்டு காலக் கட்டத்திலே வாங்கப்பட்டனவா? ஒரே காலக் கட்டத்திலே வாங்கப்பட்டனவா? ஏன் இந்த விலை வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் ஒத்துழையாமை என்பது ஆலங்குளம் சிமெண்ட் ஆலையைப் பொறுத்தவரையில், நிதர்சனமாக இருக்கிறது என்பதைப் பார்க்கலாம். கட்சி வாரியாக தொழிற் சங்கங்கள் அமைக்கப்படுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் ஆலங்குளத்தைப் பொறுத்தவரையில், சாதி வாரியாக சங்கங்கள் அமைந்து தொழில்கள் நல்ல விதத்தில் செயல்பட முடியாமல் இருக்கின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அரியலூர் சிமெண்ட் ஆலையைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியில் பிசுபிசுப்பு உள்ள சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கின்றன என்று இப்போது சொல்லப்படுகிறது. இதை நல்ல சுண்ணாம்புக் கற்களாக மாற்றுவதற்கு ரூபாய் 6.5 கோடி செலவழிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொழிலை ஆரம்பிக்கும்போது, பிசுபிசுப்பு இருக்கிறது என்பதை 'பீசிபிளிட்டி ரிப்போர்ட்'-ல் அறிந்து அதற்கேற்ப தொழிற்சாலையை அமைத்து, நல்லபடியாக அன்றைக்கே இதற்கான திட்டங்களைத் தீட்டியிருந்தால், அதற்கான இயந்திரங்களை அப்போதே போட்டிருந்தால், இப்போது ரூபாய் 6.5 கோடி செலவு ஏற்பட்டிருக்காது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1986 மே 3

'டான்செம்' இன் பெர்ஃபாமென்சைப் பார்த்தால், இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட் விற்பனையில் இலாபம் 575 இலட்சம் ரூபாய் என்று இருக்கிறது. அதே சமயத்தில் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷனில் உற்பத்தி செய்யப்பட்ட சிமெண்ட்டால் நஷ்டம் 390 இலட்சம் ரூபாய் என்ற குறிப்பு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. பொதுத் துறை நிறுவனம் எவ்வளவு அழகாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்லுகிறேன்.

'எல்காட்' என்ற நிறுவனத்தை இங்கே ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், எலெக்ட்ரானிக்ஸ் சம்பந்தப்பட்ட தொழில்கள் நல்லவிதமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட எல்க்ட்ரானிக்ஸ் யுகத்தை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்றும் அதற்காக தமிழகத்திலே எலெக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷனை ஆரம்பித்து நல்லவிதமாகச் செயல்படுத்த ஆயிரம் கோடி ரூபாய் அளவில் ஸ்கீம் போட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று அழகாக கொள்கைக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். ஆனால் அந்த நிறுவனமானது எவ்வளவு மோசமான முறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுவரையிலே மத்திய அரசுக்குச் சொந்தமான எச்.எம்.டி.யிலே வாட்சுகளுக்கு, அயல் நாட்டிலேயிருந்து ஸ்பேர் பார்ட்ஸ் தருவித்து, அங்கே வெறும் அசெம்பிளிங் யூனிட் வைத்துக்கொண்

(முற்பகல் 10-35)

டிருக்கின்றார்கள். கடியாரங்களை தயாரித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களே அதற்கு நல்லவிதமாக மார்க்கெட் பிடிக்க முடியாமல் இருக்கின்றார்கள். இங்கே டிஜிட்டல் வாட்சுகளை செய்யப் போகிறோம் என்ற முறையிலே, மிகவும் குறைவான, அதாவது 6 ஆயிரம் எண்ணிக்கையுள்ள எலெக்ட்ரானிக் வாட்சுகளை உற்பத்தி செய்திருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அது தவிர 'அலுமினியம் எலெக்ட்ரிக்கல் கேபாசிடர்' குழாய்களை நாம் செய்யப் போவதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். 415 மில்லியன் எண்ணிகையுள்ள அந்தக் குழாய்களை தயார் செய்யப்போவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால் அதற்கு மார்க்கெட் எங்கு என்று பார்த்தால், 60 சதவிகிதம் அல்லது 40 சதவிகிதம் உள்நாட்டில் விற்கப்பட்டு மீதமுள்ளவைகளை எக்ஸ்போர்ட்டுக்காக இங்கே தயாரித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். 'எக்ஸ்போர்ட்' நம்முடைய நாட்டிலிருந்து செய்வது என்றால், அமெரிக்காவிலேயே இன்றைக்கு ஜப்பான் நாட்டுடன் போட்டிபோட முடியாத அளவுக்கு

நிலைமைகள் இருக்கின்றன. வெளிச் சந்தையிலே அவ்வளவு கஷ்டம், போட்டி இருக்கும்போது, இந்த கேபசிட்டரை நாம் வெளிச் சந்தையிலே நல்லவிதமாக மார்க்கெட் செய்ய முடியுமா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஏன் திட்டம் தீட்டவில்லை என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அது தவிர, தமிழ்நாட்டில் உள்ள நம்முடைய சிமெண்ட் நிறுவனத்திலே ஆஸ்பெஸடாஸ் தகடுகளை தயார் செய்து கொண்டிருக்கின்றார்கள். 36 ஆயிரம் டன் கேபாசிட்டி நிறுவனமாக அதை நிறுவியிருக்கிறார்கள். ஆனால் அதைத் தயாரிக்க தண்ணீர் பற்றாக்குறையும், அங்கு சூழ்நிலைகள் சரியாக இல்லாததாலும் ஆலங்குளத்திலுள்ள அந்த ஆஸ்பெஸ்டோஸ் தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை நல்லவிதமாகச் செயல்பட்டு வருமா என்பதில் சந்தேகம் இருக்கிறது. அதைப்போலவே திருச்சி மாயனூரில் சிமெண்ட் குழாய்கள் தொழிற்சாலை ஆரம்பித்திருக்கின்றார்கள். 30 ஆயிரம் டன் குழாய்கள் தயாரிக்கப்போகிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனாலும் 6 ஆயிரம் குழாய்கள் தயாரித்து வைக்கப்பட்டு தேங்கி யிருப்பதாகவும், அது மார்க்கெட் செய்யமுடியாத அளவுக்கு இருப்பதாகவும், ஒரு கமிட்டியின் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. 6 ஆயிரம் எண்ணிக்கையுள்ள அந்தக் குழாய்களை மார்க்கெட் செய்ய முடியவில்லை என்ற நிலை இருக்கின்றது. குறிப்பாக, தமிழ் நாடு ட்வாட் போர்டில் கூட அந்தக் குழாய்களை வாங்கத் தயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப் பட்ட நிலையில் அவைகளை வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்போவதாகச் சொல்கின்றார்கள், உள்ளூரிலேயே அதற்கு மார்க்கெட் இல்லை. இந்தத் திட்டத்தை நல்ல விதமாகச் செயல்படுத்த முடியுமா என்பதை யோசித்தார்களா என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் என்று ஒரு நிறுவனம் தமிழகத்திலே செயல் பட்டுக்கொண்டிருக்கின்றது. அதாவது கிருஷ்ணகிரியில் உள்ள சாம்பல் கற்பாறைகள் வெளிநாட்டிலே, அதன் பெயர் 'போராடிஸ்' என்பார்கள். நினைவுக் கற்கள் செய்வதற்காகவும், பங்களாக்களுக்கு அழகுப்படுத்து வதற்கும், கிரேவ் யார்டுகளிலே நினைவுக் கற்கள் செய்யவும் பயன் படுகின்றன. அதற்கு ஐரோப்பா சந்தையிலே ஏகப்பட்ட கிராக்கி இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கின்றது. மேற்கு ஜெர்மனியில் மெசர்ஸ் டெஸ்ட்டாக் நிறுவனமும். டாக்கோ கிரானைட் என்ற ஒரு நிறுவனமும் சேர்ந்து நம்முடைய

'டாமின்' நிறுவனத்திலே இருந்து வாங்குவதாகவும் தெரிகின்றது. அதற்கு நல்ல மார்க்கெட் இருக்கின்றது. ஐரோப்பா சந்தையில் அது 420 முதல் 475 அமெரிக்க டாலர் விலைக்கு விற்கின்றது. டாக்கோ கிரானைட் என்ற ஜெர்மன் கம்பெனிக்கு மட்டும் இங்கேயிருந்து அதை அனுப்பிக்கொண்டிருக் கின்றார்கள். இவ்வளவு கிராக்கி வாய்ந்த ஒரு மூலப்பொருளை டெண்டர் விட்டு விற்பனை செய்யவேண்டும். உலகிலுள்ள அத்தனை கம்பெனிகளுக்கும் டெண்டர் முறையில் விற்பனை செய்திருந்தால், நல்ல லாபம் ஈட்டியிருக்கலாம் என்று இங்கேயும் சொல்லப்பட்டிருக்கின்றது. 8,618 மெட்ரிக் டன் அந்த ஜெர்மன் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்ன விலைக்குக்

(முற்பகல் 10-40)

கொடுத்திருக்கின்றது? வெறும் ரூ. 2,610-க்குக் கொடுத்திருக்கின்றது. 5,400 ரூபாய் விலையிலே செல்லக்கூடிய கற்கள், 2,610 ரூபாய் விலையில், அதாவது 50 விழுக்காடு குறைவான விலையில் அந்தக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக் கின்றன. அதுமட்டுமல்ல, கற்பாறைகளை உடைத்து எடுக்கும்போது, சரியான மைனிங் இன்ஜினியர்சை வைத்து வேலைகளை வாங்கவில்லை. வெறும் ஜியாலஜிஸ்ட்களை வைத்து வேலை வாங்குகிறார்கள். அந்தத் துறையைப் பொறுத்தவரையில், அதன் மேனேஜிங் டைரக்டராக ஒரு ஜியாலஜிஸ்ட், புவியியல் நிபுணர், ஒரு கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர் இருக்கிறார். அவர் புவியியல் துறையில் காட்டும் விசுவாசமோ என்னவோ, அங்கே வேலையில் சேர்ந்திருக்கிறவர்கள் எல்லாம் ஜியாலஜிஸ்டுகள்தான். எந்த அளவுக்கு ஜியாலஜிஸ்டுகள் தேவை, எந்த அளவுக்கு 'மைனிங் டெக்னாலஜி' படித்தவர்கள் தேவை என்பதை ஆராய்ந்து பார்க்காமல், அனைத்து அதிகாரிகளும் ஜியாலஜிஸ்டுகளாக இருக்கிறார்கள். அதன் காரண மாக நமக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது 1,000 கன மீட்டர் கற்கள், சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கற்கள் தாறுமாறாக உடைக்கப் பட்டு, அந்தக் குவாரியிலே குவிந்து கிடக்கிறதென்று கேள்விப்பட்டேன். அந்த 50 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அந்தக் கற்களை ஓரளவுக்கு ஒழுங்கு படுத்தி, வெளிநாட்டுச் சந்தைகளில் விற்கலாமென்று ஒரு இத்தாலியக் கம்பெனி கேட்டபோது . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் 20 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள், விரைவிலே முடிக்க வேண்டும்.

திருமதி வி. ஜெயலட்சுமி: துணைத் தலைவரவர்களே, இது தொழில் கொள்கை. எங்கள் கட்சியில் நான் மட்டும்தான் பேசுகிறேன். தயவுசெய்து கொஞ்ச நேரம் கூடுதலாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இதில் பேசுவதற்கு 8 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதனால் சொல்கிறேன்.

திருமதி வி. ஜெயலட்சுமி: ஒரு கன மீட்டர் 620 அமெரிக்கன் டாலர் என்று சொல்லுமளவுக்கு, ஆயிரம் கன மீட்டர் கற்கள் அங்கே குவிந்து கிடக்கின்றன. அதுவும் சரியான முறையில், கொடுக்க முடியாத நிலையிலே இருக்கிறது. அதனாலே 60 இலட்சம் ரூபாய் அளவுக்கு அந்நியச் செலாவணி கிடைக்காத நிலை இருக்கிறது. இப்போதுதான் தமிழகக் கனிம நிறுவனத்தின் கோலாகலமான ஆரம்ப விழாவெல்லாம் மாண்புமிகு முதலமைச்சரவர்களின் தலைமையிலும், மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களின் முன்னிலையிலும் நடந்தது. அந்தத் தொழிற்சாலைக் கட்டிடம் எந்த நிலையில் கட்டப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால், 2 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. மணலிக்குப் பக்கத்திலுள்ள அந்தத் தொழிற்சாலையைக் கட்டுவதற்கு முன்னால் 'சாயில் டெஸ்ட்' செய்து, கட்டப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன். உப்புத் தண்ணீர் உள்ள அந்தப் பகுதியிலே 'சால்ட் ரெசிஸ்டன்ட் சிமென்ட்' என்ற முறையிலே உப்புச் சக்தியை இழுக்கும் சிமென்ட்டை உபயோகப்படுத்தி, கட்டுமானம் கட்டவில்லை என்று கேள்விப்படுகிறேன். இப்படி கட்டிடங்களைக் கட்டுவதற்கு என்று தமிழ்நாடு கட்டுமானக் கழகம் வைத்திருக்கிறார்கள். அந்தக் கழகத்திடம் இந்த வேலைகள் ஒப்படைக்கப்படாமல், லார்சன் & டூப்ரோ என்ற தனியார் நிறுவனத்திடம் அந்தப் பணி கொடுக்கப்பட்டு அந்தக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த லார்சன் & டூப்ரோ கம்பெனிக்கு, டெண்டர் கோரப் பெறாமலேயே, இவ்வளவு பெரிய வேலை எப்படி கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, 2,500 சதுர மீட்டர் அளவுக்கு தமிழ்நாடு கட்டுமானக் கழகம் 'பைல்ஸ்' போட்டு, அஸ்திவாரம் போட்ட நிலையில், என்ன காரணத்தாலோ பின்வாங்கிவிட்டது. அதற்குப் பிறகு லார்சன் & டூப்ரோ நிறுவனத்திடம் அந்தப் பணி கொடுக்கப்பட்டது. அஸ்திவாரம் பலம் இல்லாததால், உப்புச் சக்தி நிறைந்த அந்தப் பகுதியிலுள்ள கட்டிடம் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்குமா அல்லது சிங்கப்பூர், பெங்களூர் போன்ற இடங்களில் நடந்ததுபோல் இந்தக் கட்டிடமும் உள்ளே இறங்கிவிடுமா என்ற சந்தேகம்

கூட ஏற்பட்டிருக்கிறது. இந்தியத் தொழில் அபிவிருத்தி வங்கிகூட சந்தேக மான 'ரிமார்க்' எழுப்பியபோது, எவ்வாறோ அது சரிக்கட்டப்பட்டு, இன்றைக்கு அந்தக் கட்டிடம் கட்டப்பட்டு, நிர்வாகம் செயல்பட்டு வருகிறது.

அடுத்து, கனிம நிறுவனத்திற்குச் சொந்தமாக சிவகங்கையில், கிராபைட் திட்டம் 3 கோடியில் செலவிட்டு நடக்கப் போவதாக அறிகிறேன். என்னுடைய மாவட்டம் மூன்றாகப் பிரிந்து, இந்தத் தொழிற்சாலை சிவகங்கைக்குப் போனாலும், தொழில்கள் இல்லாத அந்தப் பகுதியிலே இந்தத் திட்டங்கள் வருவதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். 1984-லே 1½ கோடி ரூபாய் மதிப்புள்ள மெஷினரி வாங்க டெண்டர் விட்டும், இன்னும் ஏன் முடிவெடுக்கப்

(முற்பகல் 10-45)

படவில்லை என்று அறிய விரும்புகிறேன். அதுவும் தவிர, பொது நிறுவனங்கள் இப்போது எப்படிச் செயல்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். 'ஜாயின்ட் செக்டார்' என்று சொல்லப்படுகிற கூட்டுத் துறை களைப் பொறுத்தவரையில், அவற்றின் நடைமுறைகளையும், செயல்முறை களையும் பார்க்கும்போது, வேதனை அளிக்கிறது. 'ஜாயின்ட் செக்டார்' என்று சொன்னால், அதன் நோக்கத்தைப் பொறுத்தவரையில், அரசின் ஒத்துழைப்பு அதற்கு உண்டு. அரசின் குறைந்த அளவு மூலதனம் உண்டு. அதுபோல் அரசின் தொழில்நுட்ப நிபுணர்களின் உதவி உண்டு. அத்துடன் தனிப்பட்ட வர்களின் பணத்தையும், பொதுமக்களின் பணத்தையும் வைத்துக்கொண்டு இது நடத்தப்படுகிறது. ஆனால் காம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் இதுபற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"The Committee on Public Undertakings, in its 17th Report, has stated that the twin advantages of the joint sector were the availability of both Government assistance and private entrepreneurship. It was stated that in view of the investment from non-Government sources more units could be started with limited assistance from Government. Equity participation by TIDCO in the joint sector projects was intended to be 26 per cent, that of the private promoters 25 per cent and the balance 49 per cent by public."

என்ற முறையிலே அந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல கம்பெனிகளைப் பொறுத்தவரையில், நிறுவனத்தினுடைய கான்ட்ரிபியூஷன் எவ்வளவு என்று பார்த்தால், ஒன்றுமே இல்லை. இன்றைக்கு டிட்கோவின் மூலதனம் 50 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கிறது. ஆகவே, நான் சொன்ன அனைத்தையும் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல சிப்காட் என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. நலிந்த ஆலைகளுக்கு அவர்கள் உதவி வருகிறார்கள். ஏற்கெனவே அவர்கள் கொடுத்த லோன்சே வசூல் ஆகாது என்கிற நிலைமை இருக்கும்போது, இப்போது வேறு வகையில் 15 கோடியே 55 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இதை எப்படித்தான் வசூல் செய்யப் போகிறார்களோ? இன்னொன்றையும் சொல்கிறேன். சிப்காட் நிறுவனத்திலே பல்வேறு ஊழல்கள் நடந்திருக்கின்றன. இரண்டு சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட மன வேற்றுமையின் காரணமாக ஒரு நிறுவனம் மூடப்பட்டது. ஒருவருக்கொருவர் அரசுக்குப் பெட்டிஷன் போட்டார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்ததற்குப் பிறகு, அது சம்பந்தமாக ஒரு கமிட்டி போட்டு, பரிசீலிக்க வேண்டுமென்று சொல்லி, ஒரு வருடத்திற்கு மேல் ஆகியும், இன்னும் அந்தக் கமிட்டி போடப்படவில்லை. அடுத்து, இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். எப்போது பார்த்தாலும், மத்திய அரசு நிதி உதவி செய்யவில்லை, சரியான முறையில் லெட்டர் ஆப் இன்டென்டுகளுக்கு அனுமதி வழங்குவதில்லை, புதிதாகத் தொழில்களை ஆரம்பிக்க உதவுவதில்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே மத்திய அரசின் ஒத்துழைப்பு நல்லமுறையில் இந்த அரசுக்கு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு நிதி உதவி தர வேண்டும், தொழில்கள் தொடங்க ஒத்துழைப்பு தர வேண்டும் என்று சொல்கிற இவர்கள் தங்களுடைய கூட்டு நிறுவனங்களை இந்த லட்சணத்தில் நடத்திக் கொண்டிருப்பது சரிதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். குறிப்பாக இது சம்பந்தமாக நான் ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மத்திய அரசினுடைய ஒரு குறிப்பிலே நான் பார்த்த ஒன்றை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"Industrial investment in Tamil Nadu has slipped from the 4th to the 7th position between 1972 and 1977."

ஆக, மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், வருடத்திற்கு 81.7 விழுக்காடு என்கிற அளவில் தொழில் வளர்ச்சி இருக்கும்போது, தமிழ்நாட்டிலே வளர்ச்சி 35.4 விழுக்காடு என்கிற அளவில் இருக்கிறது.

"In the period 1960-80, the all-India average annual growth was 3.6 per cent and the per capita income grew by 1.3 per cent, whereas the growth rate in Tamil Nadu was at 2.3 per cent and the per capita income growth was at 0.4 per cent."

Mr. DEPUTY CHAIRMAN: **From where is the Hon.** Member quoting these figures?

THIRUMATHI V. JAYALAKSHMI: I am quoting from a report of the Central Government.

MR. DEPUTY CHAIRMAN: What is that report?

திருமதி வி. ஜெயலட்சுமி: மத்திய அரசின் குறிப்பினை நான் பிறகு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களிடம் காட்டுகிறேன்.

(முற்பகல் 10-50)

Mr. DEPUTY CHAIRMAN: When the Hon. Member is quoting a figure, she should say from where she is quoting, so that its authenticity may be verified by the Hon. Minister. Otherwise, there would not be any authenticity.

திருமதி வி. ஜெயலட்சுமி: மத்திய அரசின் ரிப்போர்ட்டில் பார்த்ததாக ஞாபகம்.

MR. DEPUTY CHAIRMAN: The normal procedure is that when an Hon. Member quotes something, that Hon. Member should inform the Chair from where it is being quoted.

திருமதி வி. ஜெயலட்சுமி: அதே சமயத்தில், சர்க்கரைத் தொழில் சம்பந்தப்பட்டவரையில், தமிழகத்தில் இன்னும் 30 சர்க்கரை ஆலைகளுக்கு புதிதாக லைசன்ஸ் கொடுக்கப்பட இருப்பதாக அறிகிறேன். அது வரவேற்கத் தக்கது. அதேசமயத்தில், அவைகளை கூட்டுறவுத் துறைக்கு அளித்தால், அந்த லாபம் கூட்டுறவு விவசாயிகளுக்கும், பகிர்ந்தளிக்கப்படும் நிலை ஏற்படும். இப்போது நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தில்கூட, விவசாயிகளுக்கு கூட்டுறவுத் துறையில் கரும்புக்கு விலையை அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் ஆலை முதலாளிகள் அந்தக் கரும்பு விலையை அதிகப்படுத்தமாட்டார்கள். அதேபோன்று, என்னுடைய பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். அங்கே நித்திய கல்யாணி என்ற மூலிகைச் செடி வளருகிறது. அதனுடைய வேரை எடுத்து ஜெர்மனிக்கு அனுப்பி,

அங்கிருந்து அது கான்சருக்கான மருந்தாக மாற்றப்பட்டு அது இங்கேயே நமக்கு வருகிறது. இந்த மருந்து அக்ரோ பேஸ்டு இண்டஸ்டிரீஸ் என்ற முறையில் . . .

நம்முடைய விஞ்ஞானிகளை வைத்து அந்த முறைகளை மருத்துவ ரீதியில் கண்டுபிடித்து, அந்தச் செடியையும் வேர்களையும் வைத்து, தமிழகத்தில் மருந்துத் தொழிலை ஆரம்பிக்கலாமா என்று தொழில் துறை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் மல்லிகைப்பூ 15 ஆயிரம் ஹெக்டேர் ஏக்கரில் பயிரிடப்படுகிறது. இந்தப் பூவிலிருந்து செண்ட் தயாரித்து, 50 மில்லிகிராம் செண்ட், பாண்ட்ஸ், டாட்டா போன்ற நிறுவனங்கள் 1,500 ரூபாய் விலைக்கு வாங்கிக்கொள்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது. அத்தகைய அக்ரோ பேஸ்டு இண்டஸ்ட்ரீஸை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிப்காட் நிறுவனத்தின் கிளை சாத்தூருக்கு வருகிறது வருகிறது என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் சாத்தூருக்கு எப்போது வரப் போகிறது என்பதற்கான அறிகுறியே இல்லை. அதற்கான நிலங்கள் கையகப் படுத்தப்படக்கூட இல்லை என்ற செய்திதான் இங்கே இருக்கிறது. ஆகவே சாத்தூரில் தொழில் மையம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அங்கே ஊரகத் தொழில்கள் வளரும் வாய்ப்புக்கள் இருப்பதால், இங்கே ஊரகத் தொழில் பற்றி எதுவும் குறிப்பிடவில்லையென்றாலும், அந்த அமைச்சர் இல்லையென்றாலும், அதுபற்றியும் சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நிறையப் பேர் பேச வேண்டும். இந்த அமைச்சர் ஊரகத் தொழில்கள்பற்றி பதில் சொல்ல முடியாது. ஆகவே அதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் பேசாமல் விடுவது நல்லது.

திரு. க. சுப்பு: இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற தொழில் கொள்கைக் குறிப்போடு ஊரகத் தொழில்கள், கதர் கிராமத் தொழில்கள் பற்றியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த முறையும் இதுபோல் கொடுக்கப்பட்டு, அமைச்சர் ஆனூரார் பதில் அளித்தார். எங்களுக்கும் வேறு சந்தர்ப்பம் கிடையாது. இதிலேயே ஊரகத் தொழில் பற்றியும் பேச அனுமதிக்க வேண்டும்.

(முற்பகல் 10-55)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எல்லாப் புத்தகங்களையும் கொடுக்கிறார்கள். அதனாலேயே எல்லாப் புத்தகங்களின் மீதும் பேச முடியாது. இங்கே இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் அலுவல், பெருந் தொழில்கள் பற்றியது. போன தடவை எல்லாத் தொழில்கள் பற்றியும் இருந்தது, பேசவும் வாய்ப்பு இருந்தது. அமைச்சரும் பதில் அளித்தார். இன்றைக்கு அந்த வாய்ப்பு இல்லை. காரணம் அலுவல் ஆய்வுக் குழுவில் தான் கேட்க வேண்டும். அவர்கள்தான் எந்தப் பொருள் வருகிறது என்று முடிவெடுக்கிறார்கள். இன்றைக்கு உறுப்பினர் அவர்கள் ஊரகத் தொழில் பற்றிப் பேசினால் பெருந்தொழில்களுக்கான அமைச்சர் பதில் அளிக்க இயலாது. அவர் பதில் சொல்வாரா மாட்டாரா என்றும் தெரியவில்லை. அமைச்சரை வேண்டுமானால் கேட்டுக்கொள்ளலாம். உறுப்பினர் அவர்களுக்கு 35 நிமிடம் ஒதுக்கும்போது, சம்பந்தம் இல்லாமல் பேசி நேரத்தை வீணாக்க வேண்டாமென்றுதான் சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் 35 நிமிடத்தில் எதை வேண்டுமானாலும் பேசலாம், அமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டியவர்.

திருமதி வி. ஜெயலட்சுமி: பொது நிறுவனங்களுக்கும் கூட்டுத் துறை நிறுவனங்களுக்கும் இடையில் இருக்கிற சங்கடங்களும் சிக்கல்களும் சட்ட மன்றப் பேரவையிலும் மேலவையிலும் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறபோது, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியும், பப்ளிக் அன்டர் டேக்கிங்ஸ் கமிட்டியும் அவைகளைப் பரிசிலனை செய்தாலும், அவை எந்த அளவுக்கு அமைச்சர்களாலும், அரசாலும், அதிகாரிகளாலும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்பதைப் பார்த்தால், மிகவும் வேதனையாக இருக்கும். அந்த அளவுக்கு அக்கறை இல்லாமல் நடந்து வருவதைப் பார்க்கிறோம். அதுவும் தவிர 1983-84 ஆம் ஆண்டு ஒவ்வொரு பப்ளிக் அன்டர்டேகிங்கும் (பொது நிறுவனமும்) எவ்வாறு செயல்படுகின்றது என்று பார்ப்பதற்கு அது தொடர்பான ஆய்வறிக்கை 1986 ஆம் ஆண்டில் வந்தாலாவது, இரண்டு, மூன்று ஆண்டு இடைவெளியிலே அதைக் கமிட்டி முன் வைத்து தவறுகளைக் கண்டறிவதற்கு வசதியாக இருக்கும். ஆனால் இப்போது குறைந்தபட்சம் பத்தாண்டுகளுக்குப் பின்னால்தான் அந்த அறிக்கை வைக்கப்படுகிறது. இவ்வாறு பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் செயல்பாடுகள்பற்றி பத்தாண்டுகளுக்குப் பின்னால் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி முன் வைக்கப்படுகிறபோது, அதன் பின் சட்டமன்ற அவைகளிலே அவைகுறித்து விவாதங்கள் வருகிறபோது,

தவறு செய்த அதிகாரிகள் அதற்குள் பழத்தையும் தின்று கொட்டையையும் போட்டுவிட்டு, ஓய்வும் பெற்று சென்று விடுகிறார்கள். அவர்களுக்கு எந்த விதத் தண்டனையும் கொடுக்க முடியாத சூழ்நிலை, எதுவும் அவர்களிட மிருந்து ரிகவரி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இந்த நிலைமையில்தான் நிதித் துறை செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியினுடைய பரிந்துரை ஒன்றில் "மத்திய அரசினுடைய பொது நிறுவனங்கள் அனைத்திலும் பட்ஜெட் திட்டங்களை, வரவு-செலவுத் திட்டங்களை வைக்கும்போது, அவர் களுடைய "பர்ஃபார்மன்ஸ் ரெவியூ" என்கிற முறையிலே விரிவான ஒரு ரிப்போர்ட் இங்கே வைக்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, எல்லாக் கமிட்டிகளைப்பற்றியும் அவ்வாறு வைக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தும்கூட அவ்வாறு சரியானமுறையில் வைக்கப்படவில்லை' என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. 35.41 கோடிக்கு மேலே முதலீடு செய்துள்ள 228 நிறுவனங்களின் சாதனைகள் பற்றிய விவரங்கள் குறித்து நாடாளுமன்றத்திலே ஆய்வுக்குழு அறிக்கை வைக்கப்படும்போது . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டி ரிப்போர்ட் வர நாளாகிறது என்று சொல்கிறார்களா ?

திருமதி வி. ஜெயலட்சுமி: 'பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டிக்கு' அவற்றினுடைய 'பர்ஃபார்மன்ஸ்' வைக்கப்படுவதற்கு நாளாகிறது என்று சொல்கிறேன்.

Mr. DEPUTY CHAIRMAN : Is the Hon. Member talking about the Public Undertakings Committee Report or. . . .

THIRUMATHI V. JAYALAKSHMI : It is the 28th Report.

MR. DEPUTY CHAIRMAN : It is the report of a Legislature Committee. The Hon. Minister is not concerned with it. That is what I would like to tell the Hon. Member. The Public Undertakings Committee's Report is placed by the relevant Committee.

திருமதி வி. ஜெயலட்சுமி: நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், 10, 12 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஆய்வைப்பற்றி பத்து, பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் எடுத்துக்கொள்ளும்போது, அவற்றின் குறைகளை

அல்லது நிறைகளைச் சரியாக விவாதிக்க முடியவில்லை என்கிற அளவுக்கு இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். "தமிழ் நாட்டிலே தொழில் துறை நிறுவனங்கள் பற்றிய ஆய்வு அறிக்கையைச் சுருக்கமான வடிவத்தில் சட்டமன்றத்தில் தாக்கல் செய்வதற்குப் பதிலாக வழக்கம்போல் விரிவான வடிவத்தில், சட்டமன்றத்தின் வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில், ஒவ்வோராண்டும் வைக்க நிதித் துறை ஏற்பாடு செய்ய வேண்டும், இந்த ஆய்வு அறிக்கை பொதுத் துறை நிறுவனங்களில் முந்தைய நிதி ஆண்டின் பணி குறித்த ஆய்வு பற்றிய விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது 1985-86 ஆம் ஆண்டிற்குரிய ஆய்வு அறிக்கை 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெறும் வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் சட்டமன்றத்தில் வைக்கப்படவேண்டும்" என்று பொது நிறுவனங்கள் குழுவின் 28-வது அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மனதில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த அந்த ஆண்டு வைக்கப்பட முடியா விட்டாலும்கூட, குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலாவது சட்டமன்றப் பேரவை, மேலவையில் அந்த அந்த கமிட்டிகளுக்கு முன்னால் ஒரு 'ரெவியூ ரிப்போர்ட்' என்கிற முறையில் வைத்தால், அவற்றின்மூலம் பொது மக்களுடைய பணம் நல்ல முறையில் செலவழிக்கப்படுகிறதா இல்லையா என்பதை இம்மாமன்றம் அறிய துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கையும் திட்டங்களும் (பெருந் தொழில்கள்) என்கிற கொள்கைக் குறிப்பின்மேல் என்னுடைய கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகம் படிப்படியாக ஆனால் ஸ்திரமாக தொழில் வளர்ச்சியிலே சிறப்பாக முன்னேறிக்கொண்டு வருகிறதென்பதை இந்தக் கொள்கைக் குறிப்பிலே கோடிட்டு விளக்கியிருக்கிறார்கள். சிலர் திரும்பத் திரும்ப உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்வதனாலேயே, அவற்றைப் பல முறை சொல்கின்ற காரணத்தினாலேயே, அவை உண்மையாகிவிடும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையிலே தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடையவில்லை என்றும்,

சிறப்பான இடத்தை எட்டவில்லை என்றும் திரும்பத் திரும்ப தங்களுடைய கருத்துக்களை தமிழகம் முழுவதும் சொல்லிக்கொண்டிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கிறோம்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே தமிழகம், தொழில் வளர்ச்சியிலே சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. அது இந்தியாவிலே முன்னணியில் இருக்கிற நான்கு மாநிலங்களிலே ஒன்றாக இருக்கிறதென்பதையும் கோடிட்டுச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

அதைப்போலவே பம்பாயில் உள்ள இந்திய தேசிய ஆய்வு மையம் 1985 செப்டம்பர் மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தொழில் வளர்ச்சியை நிர்ணயிக்கும் 5 அம்சங்களில் தமிழகம் முதல் 4 இடங்களில் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி பாராட்டி இருக்கிறது என்பதையும் இந்தத் தொழில் கொள்கைக் குறிப்பிலே எடுத்துக்காட்டி, தமிழகம் தொழில் வளர்ச்சியிலே படிப்படியாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே முன்னதாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் புதிய தொழில் களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைப் பெருக்கித் தருவதிலே தமிழகம் முன்னணியிலே இருக்கிறது என்பதையும் தொழிற்சாலைகள் உற்பத்தி, முதலீடு ஆகியவற்றில் தமிழகம் நான்காவது இடத்தில் இருக்கிறது என்பதையும் இங்கே சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போலவே 1960-61—1980-81 ஆண்டுக் காலத்தில் உருவாக்கப்பட்ட ஆலைகளின் மதிப்பீட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்போது தமிழகம் 4-வது இடத்தில் இருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே தொழில் வளர்ச்சியிலே தமிழகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பது அசைக்க முடியாத உண்மையாகும். தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு நான்காவது இடத்தையும், தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், மூன்றாவது இடத்தையும் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதை இந்தக் கொள்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டி, நம்முடைய சிறப்பான தொழில் வளர்ச்சியை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போலவே மத்திய அரசு நமக்கு ஏராளமான வசதி வாய்ப்புக்களைச் செய்துதருவதுபோலவும், தமிழகத்தில் சில குறைபாடுகள் இருப்பது போலவும் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி

அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். கடந்த காலம் வரை இந்தியாவில் 87 மாவட்டங்களை தொழில் இல்லாத மாவட்டங்களாக மத்திய அரசு பிரித்து, அதில் தமிழகத்திலே ஒரு மாவட்டம் கூட தொழில் வளர்ச்சி இல்லாத மாவட்டம் என்ற வரிசையில் சேர்க்கப்படாமல் தமிழகம் புறக்கணிக்கப்பட்டது என்பதை நாம் யாரும் மறுக்க முடியாது. பிறகு தமிழகம் தனது முயற்சியினாலும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் நல்ல திட்டங்களினாலும் தொழில் வளர்ச்சியிலே சிறப்பாக முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் எந்த ஆட்சி இருந்தாலும், நலிந்த ஆலைகளை அரசு எடுத்தாக வேண்டுமென்ற கோரிக்கை ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு நிலைக்கு ஏற்ப எழுந்தது. தொழிலாளர் நலனுக்காக பாதிக்கப்பட்ட ஆலைகளை எல்லாம் அரசு எடுத்தாக வேண்டுமென்று நாடு பூராவும் கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை உள்ளிட்ட மேட்டூர் மில்ஸ், அலெக்சாண்டர் மில், சனார்த்தனம் மில், வசந்தா மில், இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ போன்ற தொழிற்சாலைகள் எல்லாம் நலிந்த தொழிற்சாலைகளாக இருந்து, பல நாட்களாக தொழிலாளர்கள் எல்லாம் வேலை இல்லாமல் கஷ்டப்பட்ட நேரத்தில், தமிழக அரசு அவைகளையெல்லாம் எடுத்து பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்களின் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு, புரட்சித் தலைவர் அவர்கள் திடமான நடவடிக்கை மேற்கொண்டதற்கும் தொழிலாளர்களின் சார்பாக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு தொழிற்சாலை நலிவுறுகிறது என்று சொன்னால், அதற்குப் பல காரணங்கள் உண்டு அகில இந்திய ரீதியில் அந்தத் தொழிற்சாலைகள் நலிவுறுவதற்கு சில ஆராய்ச்சிகளைக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். நிர்வாகத் திறமையின்மை, தவறான நிர்வாகம், இப்படிப்பட்ட காரணங்களாலே ஒரு தொழிற்சாலை நலிவுறும் நிலையை அடைகிறது. ஒரு தொழிற்சாலை ஓராண்டு நட்டமாக இயங்குமானால், பரவாயில்லை; அதனுடைய வியாபாரத்திலே இறுதியிலே நட்டம் வருவது இயற்கை. ஆனால் எனக்குத் தெரிந்தவரையில், சில தொழிற்சாலைகளில் வருகிற லாபத்தை, அதன் நிர்வாகம் அதிலே நட்டக் கணக்கைக் காட்டி அதனுடைய பொருட்களை வேறு தொழிற்சாலையில் முதலீடாகப் போட்டு, முதலில் இருந்த தொழிற்சாலையை நலிவுற்ற தொழிற்சாலையாக மாற்றி, அதிலிருந்து வேறு தொழிற்சாலைக்கு அதன் பணத்தையும் பொருளாதாரத்தையும் முதலீடாகப் போட்டு தொழில்களை வளர்த்துக்கொள்கிற சில முதலாளிகள் நாட்டில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிறுவனங்கள் மீது அரசு, அங்கு முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு வரிசையில் நட்டக் கணக்கு வருமானால், ஆரம்பத்

திலேயே அதைப்பற்றி விசாரித்து, அதை அரசின் பொறுப்பிலே எடுத்துக் கொண்டு, தன்னுடைய கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்வதற்கு அரசு முன் வந்தால், இப்படிப்பட்ட நலிவடைந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைவதற்கு வாய்ப்பு இருக்கும். அங்கு நட்டக் கணக்கு வரும்போதெல்லாம், அதை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும். அப்படி அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் சூழ்நிலையை அரசு உருவாக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-05)

பல தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, அவற்றின் அதிபர்கள் அங்கே பெறுகிற லாபத்தையெல்லாம் வேறு தொழிற்சாலைகளில் முதலீடாகப் போட்டு தங்களை வளர்த்துக் கொள்கிற நிலையில் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களை நாட்டு மக்களுக்கு நாம் அடையாளம் காட்டியாக வேண்டும். இந்த நிலைமை தொடருகிற காரணத்தால், இன்றைக்கு பல தொழிலாளர்கள் வேதனைப்படுகிற சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வெல்பேர் ஆபிசர்கள் என்னும் தொழிலாளர் நல அதிகாரிகளைப் பல நிறுவனங்கள் தாங்களாகவே நியமித்துக் கொள்கிற நிலைமை இன்றைக்கு இருப்பதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட தொழில் நிறுவனங்களில் எந்தக் காரணத்திற்காகத் தொழிலாளர் நல அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்களோ அந்த நோக்கமே பாதிக்கப்படுகிற நிலைமை உருவாகிவிடுகிறது. அந்த நிறுவனங்களால் நியமிக்கப்படுகிற தொழிலாளர் நல அதிகாரிகள் முதலாளி களுக்கு சாதகமாகச் செயல்படுகிற சூழ்நிலை உருவாகிவிடுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே அனைத்துத் தொழிற்சாலைகளிலும் தொழிலாளர் நல அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பு அரசாங்கத்திடமே இருக்க வேண்டும்; அரசுப் பொறுப்பில் இருந்தால்தான், தொழிலாளர்கள் நலன்கள் காப்பாற்றப்பட முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்தைப் பொறுத்தவரையில், மைய அரசு பல நிலைகளிலும் உதவி செய்வதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், தமிழகத்தில், மைய அரசு சற்று பாராமுகமாகத்தான் செயல்பட்டுக்கொண்டு வருகிறது

என்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஈரோடு, சத்தியமங்கலம் போன்ற பகுதிகளை இணைக்கும் வகையில் புதிய அகல இரயில் பாதை அமைக்க வேண்டும். அப்போதுதான் கோவை பெரியார் போன்ற மாவட்டங்கள் தொழில் துறையில் வளருவதற்கு வாய்ப்பாக இருக்கும். மத்திய அரசைப் பொறுத்த வரையில், புதிய ரெயில் பாதைகளைப் போடுவது, இருப்பவை களைச் செப்பனிடுவது, மின்சார ரெயில் அமைப்பது, அகல ரெயில் பாதை போடுவது போன்ற பணிகளைத் தமிழகத்தில் புறக்கணித்து வருகிறது என்று சொல்லாமலிருக்க முடியவில்லை. தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில் வளம் பெருக வேண்டும் என்றால், அதற்கு அடிப்படையான தேவை, போக்குவரத்து சிறப்பாகவும் ஏற்புடையதாகவும் இருப்பது. அந்தப் பொறுப்பு மைய அரசிடம் இருக்கிறது. இரயில்வே துறை தமிழகத்தைப் புறக்கணிக்கிறது என்ற பொதுவான குறை இங்கே இருக்கிறது.

சென்னையில் உள்ள ரெயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும் அதிகமான லாபத்தை ஈட்டவும் நூதனமான முறைகளைப் பின்பற்றி இன்றைக்கு சிறப்பான சாதனையை அடைந்திருக்கிறது. அப்படிப்பட்ட ரெயில் பெட்டி உற்பத்தித் தொழிற் சாலையை மைய அரசு இங்கே விரிவுபடுத்தாமல், வடக்கே இருக்கிற கபர்தலா என்ற இடத்தில் ரூ. 180 கோடி செலவில் புதிதாக ஒரு ரெயில் பெட்டித் தொழிற்சாலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது, அதிலே முனைப்புக் காட்டிக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணும்போது, வேதனையாக இருக்கிறது. இங்கே சிறப்பாகவும் இலாப நோக்கத்தோடும் சாதனை புரிந்து கொண்டிருக்கிற விரிவாக்கத்தை மேற்கொள்ளாமல், அங்கே வேறு ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்திருப்பது நல்லதல்ல என்பதைச் சொல்லிக்கொண்டு, தமிழகத்தில் உள்ள ரெயில் பெட்டித் தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய மைய அரசு துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஈரோட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் தோல் பதனிடும் தொழில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழில் சிறப்பாக அமைய வேண்டுமென்றால், அதன் மூலம் இங்கே உள்ள தோலை வெளிநாடு களுக்கு அனுப்ப வேண்டுமென்றால், அவற்றை சரியாகப் பக்குவப்படுத்த வேண்டும், சரியாகப் பதப்படுத்த வேண்டும், என்று மைய அரசு சொல்லுகிறது. அந்த அளவுக்கு தோலைப் பக்குவப்படுத்துவதற்கும், பதப் படுத்துவதற்கும் தேவையான இயந்திரங்களைப் பயன்படுத்த முடியாத அளவுக்குத்தான் அங்கே உள்ள சிறு தொழில் அதிபர்கள் இருக்கிறார்கள். இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு அந்தப் பகுதியில் ஒரு பொது தோல்

தொழில் சேவை மையம் அமைக்கப்பட வேண்டும். அந்த சேவை மையத்தை ஈரோட்டில் அமைத்துக் கொடுத்தால், பெரியார் மாவட்டத்தில் உள்ள சிறு தொழில் தோல் பதனிடும் அதிபர்களுக்கு ஏற்புடையதாக அமையும் என்று சொல்லிக்கொள்கிறேன். பெரியார் மாவட்டத்தில், 40, 50 இடங்களில் சிறு தொழில் என்கிற வகையில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. எனவே அவர்களுக்கெல்லாம் உதவி செய்யும் வகையில் அங்கே சேவை மையத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கைத்தறித் தொழிலும் அதோடு இணைந்துள்ள மற்ற தொழில்களும் சிறப்பாக நடக்கின்றன. பருத்தி நூலோடு பாலியஸ்டர் நூலை இணைத்து உற்பத்தியாகக் கூடிய துணிகள் அங்கே நெய்யப்படுகின்றன. ஆகவே 'பாலியஸ்டர்' நூலை உருவாக்கக் கூடிய மூலப் பொருள்களை உருவாக்குகிற ஒரு தொழிற்சாலையை தமிழகத்திலே உருவாக்க வேண்டும். அதுவும் ஈரோட்டுப் பகுதியிலே உருவாக்கப்படுமானால், அந்தப் பகுதியில் உள்ள நெசவாளர்களுக்குத் துணை புரிவதாக அது இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே பாலியஸ்டர் நூலை உருவாக்கக் கூடிய மூலப் பொருள் தொழிற்சாலையை தமிழகத்திற்குக் கொண்டு வர மைய அரசு உதவியாக இருக்க வேண்டும். அதுவும் பெரியார் மாவட்டத்திலே ஈரோட்டிலே அந்தத் தொழிற்சாலையை உருவாக்க இந்த அரசு முனைப்பாகச் செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், மின்சார உற்பத்தியில் தன்னிறைவு பெற்றாக வேண்டும், மின்சார உற்பத்தியில் தன்னிறைவு பெறுமானால், தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு அது வாய்ப்புடையதாக அமையும் என்பதை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். அந்த வகையிலே நெய்வேலியில் வெட்டப்படுகிற மூன்றாவது சுரங்கத்தில், அனல் மின் நிலையத்தை உருவாக்கி, அங்கே உற்பத்தி செய்யப்படுகிற அனைத்து மின்சாரத்தையும் தமிழகத்திற்கே தருகிற வகையில் மாநில அரசு மைய அரசை வலியுறுத்திப் பெற வேண்டும். அப்படிப் பெற்றால்தான், நம்முடைய தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். அப்படி இல்லாவிட்டால், அங்கே வெட்டியெடுக்கப்படுகிற நிலக்கரியை தமிழக அரசு மத்திய அரசிடமிருந்து வாங்கி, தமிழக அரசின் பொறுப்பிலே ஒரு அனல் மின்சார நிலையத்தை உருவாக்கி, அதில்

உற்பத்தியாகும் அனைத்து மின்சாரமும் தமிழ் நாட்டிற்கே பயன்படுகிற வகையில் நம்முடைய அரசு செயல்படுத்த வேண்டும். அதற்காக மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும். இதற்கு மைய அரசு உடன்படுவதாக இருந்தால். தமிழகத்தைப் பொறுத்த வரையில், மின்சார உற்பத்தியில் தன்னிறைவு பெற வாய்ப்பாக இருக்கும்.

தஞ்சைத் தரணியில் விவசாயப் பெருமக்கள் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருக்குக் கொடுத்த நேரம் முடிந்தாகிவிட்டது.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மேட்டூரில் தண்ணீர் இல்லாததால் விவசாயம் சரியாகச் செய்யப்படாமல் வறட்சியான நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலை இருந்தாலும், அங்கே இயற்கையாக எண்ணெய், எரி வாய்வு ஏராளமாகக் கிடைப்பதாக ஆய்வில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மைய அரசு அந்த எண்ணெய் வளத்தைப் பயன்படுத்தி, எரி வாயுவைப் பயன் படுத்தி, ஒரு மின்சார நிலையத்தை பெரிய அளவிலே உருவாக்கி தமிழகம் முழுவதற்கும் பயன்படும் வகையில் அதில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை வழங்க மாநில அரசு மைய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் உருக்காலை போன்ற பல ஆலைகளைப்பற்றிக் கணக்கெடுத்தால், இன்றைய தினம் மைய அரசு தமிழகத்தைப் புறக்கணித்து வருகிற சூழ்நிலையை நம்மாலே சொல்ல முடியும். அந்த அடிப்படையிலே மைய அரசோடு பேசி கிடப்பிலே கிடப்பதாகச் சொல்லப்படும் பல ஆலைகளைக் கொண்டு வர நாம் முயற்சி செய்ய வேண்டும்.

எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், 1947-லிருந்து 1967 வரை மைய அரசு சிறப்பான முதலீட்டைச் செய்து இங்கே தொழில் வளர்ச்சிக்கு உதவியது என்று சொன்னார்கள். 1967-க்குப் பிறகு 1986 வரை அந்த முதலீடு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து ஒதுக்கப்படுகிற நிலையிலே தமிழகம் இருக்கிறது என்பதை அவர்கள் உணர்வார்கள். அப்படிப்பட்ட நிலை இருந்தாலும் கூட, தமிழகம் தொழில் வளம் பெற மைய அரசின் நிதி உதவியைப் பெறுவதில் தமிழகம் சிறப்பான இடம் பெறுகிறது என்பது இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகிறது. மைய அரசிலிருந்து நிதியுதவி பெறுவதில் தமிழகம் முதலிடம் பெறுகிறது. ரூபாய் 13.7 கோடியை நாம் பெற்றிருக்கிறோம். குஜராத் 9.8 கோடி ரூபாயையும், மகாராஷ்டிரம் 7.6 கோடி

ரூபாயையும், ஆந்திரம் 9.4 கோடி ரூபாயையும் பெற்றிருக்கின்றன. அந்த வகையில் மைய அரசிடமிருந்து நிதியுதவி பெறுவதில் முதலாவதாக இருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு என்பதைச் சொல்லி, தமிழகத்தைப் பொறுத்த வரையில், படிப்படியாக சீர்தன்மையோடு தொழில் துறை வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதைச் சொல்லி அமைகிறேன். வணக்கம்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழில் துறை கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பங்குபெறுவதற்கு வாய்ப்பளித் தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக ஒரு நாடு பொருளா தார முன்னேற்றத்தில் வளர்ச்சி அடைய தொழில் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு உண்டு என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். பொருளாதார வளர்ச்சிக்காக மைய அரசும், மாநில அரசும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்திலே நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-15)

நமது தமிழக அரசு நம் தொழில் முனைவர்களுக்கு என்று தொழில் துறையிலே நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கிறது. குறிப்பாகக் கூற வேண்டுமென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் அழைத்து, தொழில் துறையில் மாவட்ட அளவில் என்ன செய்ய வேண்டும். எந்த அளவுக்கு தொழில்களை முன்னேற்றுவிக்க வேண்டும் என்பதற்கு கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்தார்கள். அந்த அடிப்படையிலே ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்தந்த மாவட்டங்களில் தொழில் கருத்தரங்குகளை நடத்தி நம் தமிழகத்தில் தொழிலை எந்த அளவுக்கு முன்னேற்றலாம், எந்த அளவுக்கு நல்ல அளவில் செய்ய முடியும் என்று அறிய வேண்டும். இந்தக் கருத்தரங்குகள் அதற்கு நல்ல வாய்ப்பளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவில் தென்னாற்காடு மாவட்டத்தில் மார்ச் 27, 28 ஆகிய இரண்டு நாட்கள் தொழில் கருத்தரங்கு நடந்தது. அந்தக் கருத்தரங்கிலே நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு பல யோசனைகளைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்ற தொழில் கருத்தரங்குகளில், ஒவ்வொரு மாவட்டத்திலும் எடுத்த முடிவுகளை ரிப்போர்ட்டுகளாக அரசுக்கு அனுப்பியிருக்கின்றார்கள். நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது

இதுபோன்ற பல்வேறு மாவட்டங்களில் தொழில் கருத்தரங்கு நடந்து, அந்த அறிக்கைகளை நம்முடைய அரசுக்கு அனுப்பியிருந்தால், அந்த அறிக்கைகளை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த அளவுக்கு அந்தத் தொழில்களை உருவாக்கலாம், எந்த அளவுக்கு அங்கு தொழில்களை ஆரம்பிக்கலாம், அவர்களுக்கு எந்த அளவுக்கு உதவலாம் என்று சொல்லியும் அறிக்கை அனுப்பியிருக்கின்றார்கள். அந்த அறிக்கை களிலே உள்ள கருத்துக்களை அரசு எடுத்துக்கொண்டு அந்த மாவட்டங் களுக்கு எந்த அளவுக்கு உதவ வேண்டுமோ அந்த அளவுக்கு உதவ வேண்டும் என்றும் பல்வேறு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். தமிழக அரசும் மத்திய அரசிடம் பெரிய தொழில்களை ஆரம்பிக்கக் கோரியிருப்பதாக குறிப்பிலே சொல்லியிருக்கின்றார்கள். 819 விண்ணப்பங்களை தமிழக அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாகவும் அந்தக் குறிப்பிலே கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் எந்தெந்தப் பெரிய தொழில்கள் என்று குறிப்பாகச் சொல்லவில்லை. அப்படிக் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். மத்திய அரசு 468 தொழில் களுக்கு உத்தரவு கொடுத்திருப்பதாகவும் இன்னும் 275-க்கு உத்தரவு அளிக்க வில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அது குறித்து விவரமாக வைத்திருந்தால், நலமாக இருந்திருக்கும். எந்தெந்தத் தொழில்கள் மாநில அரசுக்குச் செல்ல வேண்டும். எந்தெந்தத் தொழில்கள் மத்திய அரசுக்குச் செல்ல வேண்டும் என்று தெரிந்திருந்தால், நலமாக இருந்திருக்கும். முழு அதிகாரமும் மத்திய அரசில் இருக்கின்றது. தொழில்கள் தொடங்க மாநில அரசின் மூலமாக மத்திய அரசை வேண்டிக்கேட்டுக்கொள்வது என்று ஒரு கொள்கை இருக்கின்றது. அந்தக் கொள்கையின் காரணமாக முழு அதிகாரத்தையும் மத்திய அரசு எடுத்துக்கொண்டு செயல்படுகின்றது. அதுபோன்று அதிகாரத்தை எடுத்துக்கொண்டிருப்பது, நிச்சயமாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் தடையாகத்தான் இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். மாநிலத் தொழில் அமைச்சர்கள் மாநாடுகள் நடக்கும்போது, அதிலே நமது தொழில் அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு அவருடைய கருத்துரைகளை சொல்லியிருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நான் முன்னரே சொன்னதுபோல், மாநில அரசுகள் மத்திய அரசிடம் கேட்டுப்பெறுவது என்பது உண்மையிலேயே நம் நாட்டில் தொழில் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தொழில்கள் இல்லாத மாவட்டத்திற்கு மட்டும் 25 சதவிகிதம் சப்சிடி, உதவித் தொகை தெரிவிக்கின்றோம் என்று மத்திய

அரசில் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு உத்திரப் பிரதேசம், பீஹார், பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களுக்கு உதவித் தொகையைக் கொடுத்திருக்கின்றார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு தொழில்கள் இருக்கின்றன என்று சொல்லி, அந்த 25 சதவிகிதம் கிடைக்காமல் போய்விட்டது என்று குறிப்பில் இருக்கின்றது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதே மாமன்றத்தில் கேள்வி நேரத்தில் சொல்லியிருக்கின்றார்கள். தமிழகத்தில் 21 இடங்களில் 25 சதவிகிதம் சப்சிடி தர இருக்கிறோம் என்று சொல்லி இருக்கின்றார்கள். அண்மையில் பார்த்தால் இரண்டு இடங்களில் கும்முடிப்பூண்டி, திருப்பூர் போன்ற இடங்களில், மத்திய அரசினுடைய உதவியாக 10 சதவிகிதமும் நம்முடைய மாநில அரசின் உதவியாக 15 சதவிகிதமும் கொடுத்து மொத்தமாகச் சேர்ந்து 25 சதவிகிதம் கொடுப்பதாக

(முற்பகல் 11-20)

அறிவித்திருக்கின்றார்கள். அவர்கள் இப்போது அறிவித்துள்ளதுபோல, தென் ஆற்காடு, வட ஆற்காடு மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள பகுதிகளுக்கும் அறிவிக்க வேண்டும். அந்த 21 இடங்களை விரைவிலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் அந்த இடங்களை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், முன்பே கூறியதுபோல், தொழில் கருத்தரங்கிலே தெளிவாக வலியுறுத்தினோம். தென் ஆற்காடு மாவட்டத்திலே உள்ளவர்கள், பக்கத்திலே உள்ள பாண்டிச்சேரி மாநிலத்திற்குப் போய், தொழில்களை ஆரம்பிக்கிறார்கள். அங்கே 25 சதவிகிதம் தொழில் முனைவர்களுக்கு அளிக்கிறார்கள். இடம், இயந்திரங்கள், மற்றும் பல்வேறு வசதிகள் செய்து கொடுப்பதால், தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ளவர்கள் அனைவரும் புதுவைக்குச் சென்று, தொழில்களைத் துவங்குகிறார்கள். எனவே உடனடியாக அந்தச் சலுகையை தென் ஆற்காடு மாவட்டத்திற்கு அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் பாண்டிச்சேரிக்குச் சென்று அவர்கள் தொழில்களைத் துவங்குவார்கள். அப்படிப்பட்ட சலுகையைக் கொடுத்தால், நம்முடைய மாநிலத்திலேயே அவர்கள் தொழில்களைத் துவங்குவார்கள் என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பெரிய நடுத்தரத் தொழில்கள் அமைக்க 'சிங்கிள் விண்டோ ஏஜன்சி' அமைத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். உரிமம் கொடுப்பதிலும், அடிப்படை வசதிகளைச் செய்வதிலும் காலதாமதம் ஏற்படாமல் இருக்கத்

தான் 'சிங்கிள் வின்டோ சிஸ்டம்' என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் செயலளவில் முழுமையாக அது நடைபெறுகிறதா என்று பார்த்தால், ஐயப்பாடாகத்தான் இருக்கிறது. இங்கே சிப்காட்டின் 14 ஆம் ஆண்டறிக்கை—ஆன்யுவல் ரிப்போர்ட்—கொடுத்திருக்கிறார்கள். அதில், one window that opens all the doors. அதைப் பார்க்க மிக நன்றாக இருக்கிறது. அது முழு அளவில் இருக்கிறதா என்றால் இல்லை. என்னைப் பொறுத்தவரையில், "Even if you open all the windows the doors are not open" என்றுதான் நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்லமுறையிலே அதை அறிவித்திருந்தாலும், அதனுடைய நடைமுறைத் திட்டங்கள், செயல்கள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதைப் பார்த்து, அதிலுள்ள சங்கடங்களைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த எண்ணம் நல்ல எண்ணம். விரைவில் உரிமம் கொடுக்க வேண்டும், ஒப்புதல் அளிக்க வேண்டும், அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளை விரைவிலே செய்து கொடுக்க வேண்டுமென்றுதான் அதை அறிவித்திருக்கிறார்கள். அது முழு அளவில் நிறைவேற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்களின் மேற்பார்வையில் சிப்காட், டாமின், டி.ஐ.ஐ.சி., டிட்கோ போன்ற நிறுவனங்கள் எல்லாம் இருக்கின்றன. ஒவ்வொன்றைப்பற்றியும் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நல்லமுறையிலே அவற்றைச் செயல்படுத்தி வருகிறார்கள். அவைபற்றி பல்வேறு ஆலோசனைகளைக் கூறலாமென்று நான் நினைக்கிறேன். அதிலே பல குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் அகற்ற வேண்டும். அப்படிச் செய்தால்தான், எந்தப் பயனுக்காக அவற்றை அறிவித்திருக்கிறோமோ அவை முழு அளவில் நிறைவேறும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். சிப்காட் பற்றிக் கூற வேண்டுமென்றால், நான் முன்பே கூறியதுபோல, 25 சதவிகிதம் உதவியை அனைத்துப் பகுதிகளுக்கும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென் ஆற்காடு மாவட்டம், கடலூரில் சிப்காட் ஆரம்பித்திருக்கிறார்கள். அங்கே அனைவருக்கும் ஓரளவுக்கு நிலத்தைக் கொடுத்துவிட்டதாக அறிகிறேன். இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். புதிதாக இரசாயனத் தொழிற்சாலை ஆரம்பிக்க நினைக்கிறவர்களுக்கு அங்கே இடமில்லை. அங்கே பெரிய தொழிலதிபர்களுக்கு 30 ஏக்கர்,

40 ஏக்கர் என்று கொடுத்துவிட்டார்கள். அவர்களுக்குக் கொடுத்தது தவறு என்று சொல்லவில்லை. அப்படி அவர்களுக்குக் கொடுத்த நிலத்தை முழு அளவில் அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருந்தால், நன்றாக இருக்கும். அதில் பாதி அளவுக்கு இப்போது உபயோகித்துக்கொண்டு, மீதியை 10 வருடங்கள் கழித்து வரும் 'ப்யூச்சர் எக்ஸ்பான்ஷன்'-க்காக வாங்கி வைத்துவிட்டார்கள். அதனால் இன்று தொழில் ஆரம்பிக்க நினைக்கிறவர்களுக்கு அங்கே இடமில்லை. எனவே 'பில்டிங் பிளான்', 'சைட் பிளான்' எல்லாவற்றையும் பார்த்து, இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'ப்யூச்சர் எக்ஸ்பான்ஷன்' என்ற நிலை வரும்போது, வேறு இடங்களில் அதை ஆரம்பிக்கலாம். குறிப்பாக சிறு தொழில்களை ஆரம்பிக்க நினைக்கிறவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை. எனக்குத் தெரிந்த ஒருவர் 'ஐஸ் பிளான்ட்' போட நினைத்தார். கடைசியில் 'ஒயிட் ஐஸ்' என்பது இரசாயன சம்பந்தப்பட்டது இல்லை, எனவே அனுமதி கொடுக்க மாட்டோம் என்று அனுமதி மறுக்கப்பட்டது. வாங்கிய 2,500 ரூபாயையும் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். 'ஒயிட் ஐஸ்' என்பது இரசாயனக் கலவையை வைத்துத்தான் 'பார்ம்' ஆகிறது.

(பிற்பகல் 11-25)

அங்குள்ள அனைத்து தொழிற்சாலைகளுக்கும் அதனை ஒரு 'ரா மெட்டிரியல்'-லாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அது அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதுபோல சிப்காட்டைப் பொறுத்தவரையில், 12 பெர்சென்ட் 'இன்டரஸ்ட்' மற்ற இடங்களில் எல்லாம் வாங்கும் நிலையில் கடலூரில் மட்டும் கூடுதலாக வாங்குகிறார்கள். இதுகுறித்தும் கவனிக்க வேண்டும்.

அடுத்து, ஒரு ஏக்கர் நிலத்திற்கு 40 ஆயிரம் ரூபாய் என்று முன்பு இருந்தது. இப்போது 1 லட்சம் ரூபாய் என்கிற அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். இதுகுறித்து நான் முன்பே பேசியிருக்கிறேன். 10 அல்லது 20 பெர்சென்ட் ஏற்றினால் பரவாயில்லை. ஆனால் இப்படி 120 பெர்சென்ட் அதிகமாக்குவது சரியல்ல. எந்த நோக்கத்திற்காக இது ஆரம்பிக்கப்பட்டது என்பதையும் பார்க்க வேண்டும். நிலம் வாங்கி விற்பது அவர்களுடைய நோக்கமல்ல. இதுகுறித்தும் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து, இந்தியாவில் இருக்கிற இயந்திரங்களைப் பொறுத்தவரையில், அதை வாங்குவதற்கு 'டைம்' கொடுக்கிறார்கள். ஆனால் வெளிநாடுகளிலிருந்து வாங்க வேண்டுமென்றால், 60 நாட்களில் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் உரிய காலத்தில் அதற்கான லைசென்ஸ் மத்திய அரசிடமிருந்து கிடைப்பதில்லை. 60 நாட்கள் என்றால் நிறைய வித்தியாசம் இருக்கிறது. இதுகுறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணி அடித்தார்கள்.)

திரு. எல். ஜெயச்சந்திரன் : இப்பொழுதுதான் ஆரம்பித்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் பேச ஆரம்பித்த நேரமும், கடிகாரமும் என் கையில் இருக்கிறது. இந்த விஷயத்தில் கூடவா உறுப்பினர் அதிக நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும்? பட்டதாரி ஆசிரியர் பிரதிநிதி சீக்கிரம் இதுகுறித்துப் பேசிவிட்டு மற்றவர்களுக்கு வாய்ப்பு தர வேண்டும். அரசியல் கட்சித் தலைவர்கள்தான் இதிலே பேச அதிகம் வாய்ப்பிருக்கிறது. சீக்கிரம் முடித்து விட்டு ஒத்துழைப்பு தர வேண்டும்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்தவரையில், அது நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. அண்மையில் ரூ. 30 லட்சத்திலிருந்து ரூ. 60 லட்சமாகக் கடன் தொகையை உயர்த்தியிருக்கிறார்கள். வேலைவாய்ப்பினைப் பொறுத்தமட்டில், 1978-லிருந்து 1986 வரை 2 லட்சத்து 43 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அதற்காக இந்நிறுவனத்தை நான் பாராட்டுகிறேன். டி.ஐ.ஐ.சி.-யைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசும் மாநில அரசும் வேலைவாய்ப்பற்றவர்களுக்கும், படித்து பட்டதாரியாக வேலைவாய்ப்பற்றிருப்பவர்களுக்கும் இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து இன்னும் அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு ¼ பங்கு தொகையைக்கூட கட்டுவதற்கு வேலைவாய்ப்பில்லாதவர்கள் வசதியில்லாமல் இருக்கிறார்கள். இந்தத் தொகையையும் மானியமாக மாநில அரசே கட்டுவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்து, 'சிக் இன்டஸ்ட்ரீஸ்' என்று நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. பேப்பர்களில் இதுபற்றி விளம்பரம் வருவதையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நிறைய தொழில்கள் இன்றைக்கு நலிந்துகொண்டிருக்கும் நிலையில், கடைசியாக அவர்களுக்கும் நாம் ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அதற்கும் வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்து, அமைச்சர் அவர்களுடைய பொறுப்பிலே இல்லையென்றாலும் கூட, ஒன்றைச் சொல்கிறேன். திரு. ராஜகோபால், பி.ஈ., என்பவர் அசிஸ்டென்ட் டெவலப்மென்ட் ஆபீசராக 2—6—1980-ல் பணியில் சேர்ந்தார். 6—3—1985 அன்று பணி நிரந்தரம் செய்யப்பட்டது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சிறு தொழில்கள்பற்றி ஊரகத் தொழில்கள் குறித்து விவாதம் நடைபெறும்போது சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : அடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிதாகத் தொழில்கள் தொடங்கும்போது பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்து அல்ல, கடைசியாக என்று சொல்லுங்கள்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : கடைசியாக, முடித்து விடுகிறேன். அப்பிரச்சினைகள் குறித்து, கருத்தரங்குகளில்கூட விவாதிக்கப்பட்டது. 'இன்பிராஸ்ட்ரக்சர் பெசிலிட்டீஸ்' தான் தொழில்களைத் தொடங்கும்போது அதிகமாக தேவைப்படுகின்றன. அதுபற்றி அறிக்கையும் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக அந்தந்த மாவட்டங்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்து தர வேண்டும். அத்துடன் தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடலூரில் 'போர்ட்' இருக்கிறது. சென்னைக்கும் நாகப்

(முற்பகல் 11-30)

பட்டினத்திற்கும் இடையில் உள்ள ஒரு பெரிய துறைமுகமாக கடலூர்தான் இருக்கிறது. அதை அபிவிருத்தி செய்தால், பயணிகள் வந்து இறங்க முடியும், பொருள் போக்குவரத்தும் கடல் வழியாகச் செய்யலாம்.

அடுத்ததாக மின்சாரம் பற்றிக் கூற வேண்டும். சிறு தொழில் அதிபர்களிடம் எக்சைஸ யூனிட்காரர்கள் எத்தனை தொல்லை கொடுக்கிறார்கள் என்பதைப் பார்த்தால், அது அதிகமாக இருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை, டெபாசிட் அதிகரித்துக்கொண்டே போகிறது. மாதா மாதம் கொடுக்கும் தொகையைப்போல, பல மடங்குகள் அதிகமாக டெபாசிட்டாக எலெக்டிரிசிடி போர்டுக்குக் கட்ட வேண்டும். அப்படிக் கட்டவில்லையென்றால், கனெக்ஷனை 'கட்' செய்துவிடுகிறார்கள். சிறு தொழில் ஆரம்பிக்கிறவர்களுக்கு 'இன்சென்டிவ்' கிடைக்கவில்லை. இதுபோன்ற சங்கடங்கள் எல்லாம்

இருக்கின்றன. இதுபோன்ற குறைகளை அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்தில் மாவட்ட அட்வைசரி கமிட்டி மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் இயங்குகிறது.

(மணியடிக்கப்பட்டது)

விற்பனை வரியைப் பொறுத்தவரையில், சிறு தொழில் துவங்குவோருக்கு அது சீரமைக்கப்பட வேண்டும். இதன் காரணமாக வெளி மாநிலத்தில் உள்ள வர்களும், வெளிநாடுகளில் உள்ளவர்களும் இங்கே நமது மாநிலத்தில் தொழில் ஆரம்பிக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நமது விற்பனை வரிக் கொள்கையின் காரணமாக நமது மாநிலத்தில் உள்ளவர்களே கர்நாடகம் போன்ற பிற மாநிலங்களில் தொழிலைத் துவங்குகிறார்கள், அந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி நமது தொழில் அமைச்சர் அவர்கள் நிதியமைச்சரிடமும், வணிகவரித் துறை அமைச்சரிடமும் பேசியதாகச் சொன்னார்கள். அதை நல்லமுறையில் நிறைவேற்ற வேண்டு மென்று கேட்டு, இக்கொள்கைக் குறிப்பில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

* Thiru N. C. RAGHAVACHARI: Hon. Chairman, I have had the opportunity of going through the Industrial Policy and Programme placed before the House by the Hon. the Minister for Industries and I am grateful to him. While welcoming the programme for further development of Industries in Tamil Nadu, I would like to make two or three suggestions for further development.

The stumbling blocks for development of industries in Tamil Nadu are three—(1) the Industries (Development and Regulation) Act, 1951 (2) the acute power shortage and (3) Corporate Tax. I am not going to deal with the Corporate Tax which does not come within our province.

(Vice-Chairman Thirumathi V. Jayalakshmi in the chair.)

As regards the Industries (Development and Regulation) Act, of course, suggestions have been made for the amendment of the Constitution in the Reply to the questionnaire of the Sarkaria Commission and I am not going to touch that subject at all. It is going to take some time for Justice Sarkaria to make his recommendations for necessary amendments to the Constitution. Pending such recommendations, it is possible to do something and I will refer only to this. The Industries (Development and Regulation) Act was passed in 1951. We see that these are ordinary items of industries

over which the Central Government has got control. I will refer to certain unimportant industries—unimportant from the point of view of the Central Government. For instance, the Schedule contains items like Food Processing industries, Vegetable oils and Vanaspathi, Soaps, cosmetics and toilet preparations, Rubber goods, Leather goods, Clue and gelatin, glass, ceramics, cement and gypsum products, timber products, etc.

Now, these are all very ordinary subjects over which, in my humble opinion, the Centre need not have any control. Therefore, I would like to make a humble suggestion to the Hon. the Minister for Industries. Before the Justice Sarkaria Commission submits its report, the Central Government may be requested to delete these items from the Schedule to this Act. The Tamil Nadu Government have made a suggestion to the Justice Sarkaria Commission to the effect that Entry 52 in the Constitution may be amended. In the State List, in Schedule 7, Entry 24 relates to Industries, subject to entry 52 & 7 of list. Of course, various requests and suggestions are made from time to time for amending the Constitution. But, that does not mean that we should keep quiet till amendments are carried out in the Constitution. I would, therefore, in all humility request the Hon. the Minister for Industries to approach the Centre for deleting these small and insignificant items from the Schedule to the Act over which the Centre need not have control at all. After all, the purpose of this Act which was passed in 1951 is to have control over the manufacture of Defence items and there was no oher intention at all. But, in course of time, they have been including the ordinary pdoducts also in the Schedule. As a result, a person who wants to start an industry for these items has got to make several trips to Delhi to get licences and other things. But, even when ultimately he gets the licence, the financial institutions may not be willing to give him financial assistance for starting the industry for which he has got the licence. The net result of all these things is that industrial development is blocked. Therefore, the first point which I want to make is that the Hon. Minister may kindly consider whether it is possible to request the Central Government to delete, by an amendment to the Schedule to the Act, all these small items. The applicability of the Act may be restricted to items of great importance and defence production and the other items may be omitted. Then, a number of Engineering Graduates and other persons will be prepared to start industries because there will be no need for them to go to Delhi on a number of occasions incurring huge expenditure.

(முற்பகல் 11-35)

Sir, I want to make another suggestion also. In page 40 of the Policy Note, there is a reference to the Tamil Nadu Industrial Investment Corporation. This Industrial Investment Corporation finances a number of major, medium and small industries. The industries which receive financial assistance from the TIIC make supplies of tools and other products to some big industries. But, those big industries do not settle the bills quickly. There is considerable delay in their making payment and, sometimes there is delay of even one or two years. Till such time they receive payment from the big industries, those who started industries with financial assistance from the TIIC have to pay interest to the TIIC. Sometimes, if the instalment and the interest is not paid on the due date, the TIIC forecloses the loan. As a result, the industry is closed down and the person who started the industry is thrown out in the street. I feel that such persons should be given some breathing-time to pay the amounts due to the TIIC and, therefore, I would like to make a suggestion. I know that the State Government have no control over the private industries. So, the big industries which do not settle their bills in time are compelled to make payment. However, I would like to make a humble suggestion. A small industrialist the payment of whose bills is getting delayed and who owes money to the TIIC should be in a position to approach the State Co-operative Bank for assistance. The State Co-operative Bank should be asked to give him loan against the security of his bills for which he is expecting payment from some big industries. I think that this can be easily arranged because, after all, the State Co-operative Bank is the State Government's own Bank. If such an arrangement exists, the persons who owe money to the TIIC can get money from the State Co-operative Bank and pay off the interest and principal-instalments due to the TIIC.

The third thing I would like to say is that the TIIC appears to levy penal interest and interest on arrears. When we ask them, "Why are you charging penal interest?" they say that under the Refinancing system, the I.D.B.I. is charging penal interest. The net result is that the poor industrialists are made to pay penal interest, if there is delay in payment of arrears. I would suggest that at least in hard cases, the State Government, through the T.I.I.C. could request the I.D.B.I. to waive the penal interest, so that these industrialists might not be forced to pay penal interest. These are the three suggestions I want to make on this. The policy note on Industries placed on the table of the House is very good and I con-

gratulate the Hon. Minister and I have no comments to make on that. I wish there will be very good industrial development in the State.

As regards acute shortage of power, I know that the State Government are taking several steps to augument the power supply. But a number of Tamil people from Tamil Nadu rush to Hyderabad, in Andhra Pradesh to start their industries, because there is no power shortage there. In Karnataka also there is power shortage. In Kerala there is labour unrest. Therefore, a number of industries are started in Hyderabad. I would request the Hon. Minister to take speedy steps to get over this power shortage, so that more industries may be stated in Tamil Nadu and Tamil Nadu might get further industrial development. I thank the Hon. Vice-Chairman for giving me this opportunity. Thank you very much.

(முற்பகல் 11-40)

திரு. க. சுப்பு: மாற்றுத் தலைவரவர்களே, தொழிற் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புமீது சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இதன் கிளையாக பல செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதிலே பல விவரங்கள் தரப்பட்டிருப்பதால், கொள்கை எங்கே என்று தேடிப் பிடிப்பது ஒரு சிலருக்குக் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் இதில் கொள்கை இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அடிப்படையில் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கக்கூடிய ஒன்றிரண்டு கொள்கைகளை வைத்துக்கொண்டு ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக தமிழ்நாட்டில் தொழில்கள் எந்த அளவுக்கு வளர்ச்சியடைந் திருக்கின்றன என்பதற்குரிய விவரங்களை எல்லாம் கொடுத்துவிட்டு, ஒரு இடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. உரிமங்கள் வழங்குவதற்கு முன் மாநில அரசின் பரிந்துரை பெறுவதில் ஒரு நிலையான நடைமுறையை மத்திய அரசு பின்பற்றவில்லை என்ற ஒரு சங்கடமான சூழ்நிலையைக் குறிப்பிட்டாக வேண்டும். புதிய தொழில்களுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் முழுவதும் மத்திய அரசிடம் இருக்கிறது என்ற ஒரு சங்கடமான நிலைமையைக் குறிப் பிட்டிருக்கிறார்கள். நமக்கு அனுமதியை மத்திய அரசு கொடுக்க வேண்டி யிருக்கிறது. நம்முடைய ஊரில் வளங்கள் இருந்தாலும், தொழில்களைத் தொடங்கும் வாய்ப்பு இருந்தாலும், இவற்றிற்கெல்லாம் அனுமதி மத்திய அரசிடத்திலிருந்து வர வேண்டியிருக்கிறது. அந்த சங்கடமான நிலைமையை எப்படி மாற்றலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராகவாச்சாரியார்

அவர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். அதற்கு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரலாமென்று சொன்னார்கள். ஆனால் அதன் மூலமாக முடியுமா என்று ஒரு ஆலோசனையை அவர்கள் சொன்னார்கள். பொதுவாக தொழில் களைத் தொடங்குவதற்கு ஒரு மாநில அரசுக்கு மத்திய அரசு துணையாக இருக்கவேண்டுமே தவிர, தடையாக இருக்கக்கூடாது. அதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். தடையில்லாமல் இருப்பது எப்படி? அதற்குரிய வழி களைக் கண்டுபிடித்தால் நமக்கு ஏதாவது வழி பிறக்கும். இல்லாவிட்டால், பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர் போல் இங்கும் தகராறுதான் வரும். அது மாதிரி தகராறுகளுக்கு இடமளிக்காத வகையில் நம்முடைய தொழில்கள் வளருவதற்குரிய வாய்ப்புகள் இங்கு அதிகமாக இருக்கின்றன என்ற உணர்வு மாநில அரசுகளுக்கு இருக்கவேண்டும். இங்கு நாம்தான் குறிப்பிடுகிறோம். மத்திய அரசு நம் கையிலே இருந்தாலும், மாநில அரசு தொழில்களை அதிக மாகத் தொடங்கவில்லை என்ற குற்றச்சாட்டை காங்கிரசு கட்சித் தரப்பிலே யிருந்து சொல்வதை இந்த மன்றத்திலே நாம் பார்க்கிறோம். அதுமாதிரி பல மத்திய அமைச்சர்கள்கூட சொல்கிறார்கள். அவர்களை நான் அதற்காகக் குறை சொல்லவில்லை. இப்போது தொழில் வளம் தமிழகத்தில் குறைவாக இருக்கிறது; அதற்கு மாநில அரசுதான் காரணம் என்று ஒருசில மத்திய அமைச்சர்கள் சொல்கிறார்கள். அவர்கள்மீது நான் குறை சொல்ல மாட்டேன். ஏனென்றால் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி இங்கு தொழில்களைத் தொடங்குவதற்கு அவர்களால் அனுமதியைப் பெற முடியாது. நமக்குத் தெரியும். அவர் அங்கு ஒரு மாநில அந்தஸ்துள்ள ஒரு மந்திரியாக இருப்பார். அந்தப் பதவியையும் அவர் இழப்பதற்குத் தயாராக இருந்தால் தான், அந்த நிலையில் அவர் இருக்க முடியும். அது ஒரு இக்கட்டான நிலைமைதான். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில், தொழில் வளங்கள் பெருகுவதற்கு உரிமங்கள் பெறுவதே பெரிய சிரமமாக இருக்கிறது. தொழிற் சாலை என்பது பெரிய விஷயம். பிறகு அதற்கு ஆளைத் தேடி அலைய வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கிடையேதான் தொழில் புரிய வேண்டும். அதோடு எம்.ஆர்.பி.டி. ஆக்டில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்குக்கூட இங்கே விரிவாக்கம் என்ற அடிப்படையிலே விரிவாக்கத்திற்கு அனுமதி கொடுத்துவிடுகிறார்கள். ஆகையினால் இங்கே புதிதாக மேலும் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு நமக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. மத்திய அரசு முதலீடு போடும்போது, அதற்குப் பல தடைக் கற்களை விதிக்கிறார்கள். இப்போது வாய்மொழி மூலமாகக் கொடுத்த தகவல் என்னவென்றால், 10 கோடி ரூபாய்க்கு அதிகமாக மத்திய

சர்க்கார் தொழிற்சாலை ஏதாவது இங்கு வரவேண்டுமென்றால், அதை யெல்லாம் உத்திரப் பிரதேசத்திற்குக் கொண்டு போங்கள் என்று சொல்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை இங்கு கிடையாது என்கிறார்கள்.

இங்குகூட பாரத் எலக்ட்ரானிக்ஸ் சம்பந்தமாக முன்பு ஒருமுறை நான் கேள்வி கேட்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நேரத்தில் அவர்களிடம் தகவல் இல்லை. இருந்தாலும் அதுபற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுத்திருக்கிறார்கள். பாரத மின்னணு நிறுவனம் 30 கோடி ரூபாய் செலவில் நந்தமபாக்கத்தில் அமைக்க உத்தேசித்துள்ளது என்று சொன்னார்கள். ஏற்கெனவே மின்னணு திட்டத் தலைமை அலுவலகம் அடையாற்றில் வந்துவிட்டது. எலக்ட்ரானிக்ஸ் ஆபீஸ் பக்கத்தில் இருக்கிறது. அங்கு 120 பேர்களவரை வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமாக தொழிலாளர்கள் வேலை பார்க்கவேண்டும். இதற்கு மத்திய அரசின் முதலீடு 16 கோடி அல்லது 18 கோடி ரூபாய் என்றால், அதை உத்திரப் பிரதேசத்திற்குக் கொண்டு போக வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு ஒரு காரணம், தொழில்களே இல்லாத மாவட்டம் என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு மாவட்டம் தமிழ்நாட்டில் இல்லை. தொழில்களே இல்லாத மாவட்டம் என்றால், தமிழ்நாட்டில் ஒரு தொழிலும் வராது. 'கேப்பிட்டல் அசிஸ்டன்ஸ்' கிடைப்பதற்கு நமக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. அதற்குரிய வரன்முறைகளை மத்திய அரசு வகுக்கிறது. அப்படி அது வகுக்கும்போது, நாம் சொன்னாலும் அந்தக் கருத்து எடுபடுவதில்லை. 'மாவட்டங்கள் என்பதைவிட தொழில்களே இல்லாத வட்டங்கள் என்று இருந்தால், நன்றாக இருக்கும். வட்டத்திலிருந்து மாவட்டங்களுக்குப் போக வேண்டும். பிளாக் என்று வட்டாரத்திற்கு வையுங்கள் என்று சொன்னார்கள்; ஆனால் அங்கே 'பிளாக்' பண்ணிவிட்டார்கள். மத்திய அமைச்சர் திரு. அருணாசலம் அவர்கள்கூட அதற்கு ஒத்துக்கொண்டார்கள். அதை அவர் வலியுறுத்த முடியுமா? அதை வலியுறுத்துவதாக இருந்தால், அவருக்கு வேலை இருக்காது. தாலுக்கா அளவிலே அப்படி வைக்க வேண்டுமென்று மத்திய அளவிலே போய்ச் சொன்னால், மத்திய மந்திரியாக இருப்பது கஷ்டம். ஆனால் அந்த மத்திய அமைச்சர் அவர்கள் அதை உணர்ந்ததற்கு நன்றி. அப்படி ஒரு கொள்கைத் தடை நமக்கு இருக்கிறது. மாநிலங்களில் தொழில்களைத் தொடங்குவதற்கு மத்திய மூலதனம் வர வேண்டும். என்னதான் அதைப்பற்றிப் பேசினாலும் அது வந்திருக்கிறதா? நான்-ரெசிடென்ட் இந்தியன் இங்கு வந்து 6 கோடி, 5 கோடி ரூபாய் போட்டாலும், தொழில் முன்னேறு

கிறதா என்றால், அது 3000 ஆண்டில் முன்னேறுமென்று நினைக்கிறேன். இதற்கிடையிலே தமிழ்நாடு முன்னேறுவதற்கு வாய்ப்பே இல்லை. நான்-ரெசிடெண்ட் அதிகமான

(முற்பகல் 11-45)

முதலீடு போடுவதில்லை. மத்திய அரசுதான் அதிகமான முதலீடு போட முடியும். நான்-ரெசிடென்ட் இந்தியன்ஸ் ஒன்றிரண்டு சிமிண்ட் மற்றும் சர்க்கரை ஆலைகளையும் இங்கே இருப்பவர்களுக்கு எதிராகப் போட்டி போட்டு அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். காரணம் என்.ஆர்.ஐ. கேட்டால உடனே கிடைக்கிறது. எல்லாவிதமான அடிப்படை வசதிகளையும் அவர்களுக்கு அரசாங்கம் செய்து கொடுக்கிறது. காரணம் அவர்கள் மூலமாக நமது நாட்டுக்கு 'பாரின் எக்சேஞ்ச்' கிடைக்கிறது. ஆனால் அத்தகைய உதவிகள் இங்கே இருக்கிற தொழில் முனைவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்களுக்கு அந்த வசதிகளைச் செய்து தருவதில்லை என்ற வருத்தம் பல பேருக்கு இங்கே இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட சிக்கல்களுக்கிடையே மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் பல நல்ல காரியங்களைச் செய்கிறார்கள் என்பதால், நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வேறு எதற்காகவோ பாராட்டுகிறேன் என்று நினைக்கக் கூடாது. காரணம் இருக்கிற நிலைமைகளை இங்கே எடுத்துச் சொல்கிறோம். அதாவது சென்ற முறை நான் இங்கே பேசும்போது, இருக்கிற நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொன்னேன். குறைகளை எடுத்துச் சொன்னேன். நிர்வாகத்தில் இருக்கிற குறைபாடுகளை எல்லாம் சொன்னேன். எதற்காகச் சொல்கிறோம்? அந்தத் தொழில் நன்றாக நடக்க வேண்டும், நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டும் என்று சொல்லுகிறோம். அப்படி எடுத்துச் சொன்ன பிறகு, அந்த நிலைமையிலிருந்து ஏதேனும் முன்னேற்றம் இருக்கிறதா என்று பார்க்கிறோம். முன்னேற்றம் இருந்தால், நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அரசுத் துறையில் மற்றும் பொதுத் துறையில் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறவர்கள் என்னென்ன தவறுகளைச் செய்கிறார்கள் என்பதையெல்லாம் சுட்டிக் காட்டினோம். அந்தத் தவறுகள் எல்லாம் இன்றைக்குத் திருத்தப்பட்டிருக்கின்றன என்பதுதான் உண்மையான நிலை. யதார்த்தமான உண்மை இது தான் என்பதை நாம் அறிவோம். இத்தகைய நிறுவனங்களுக்கு முழுக்க முழுக்க அதிகாரிகளையே போடாதீர்கள். சேர்மன், எம்.டி., டைரெக்டர் என்று எல்லாப் பதவிகளும் அதிகாரிகளுக்கே இருந்தால் அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஓரேயடியாக முடித்துவிடுவார்கள். காரணம் அவர்கள் மக்களுக்குப் பொறுப்பாளர்கள் அல்ல. அவர்களையும் குறை சொல்லிப் பயனில்லை.

ரொம்பப் போனால், அவர்களை நாம் வேறு இடத்திற்குத்தான் மாற்றுவோம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே தப்பு பண்ணுவார்கள். சில பேர் 'டிரான்ஸ்பர்' வேண்டும் என்பதற்காகக்கூட தப்பு பண்ணுவார்கள். தனக்கு ஒரு 'டிரான்ஸ்பர்' வேண்டும் என்றால் எப்படிப் போய்க் கேட்பது என்ற சுய மரியாதை காரணமாக கேட்காமல், தப்பு பண்ணுவார். இது அதிகாரிகளின் இயல்பு. நான் அதிகாரியாக இருந்தாலும், அதைத்தான் செய்வேன். இப்படி அதிகாரிகளை மட்டும் எல்லா இடத்திற்கும் போட்டுவிட்டால், பின்னாலே கொள்கையை அமுல்படுத்தும்போது, சிரமம் ஏற்படுகிறது என்ற காரணத்தால், நான்-அபிஷியல்களையும் போட வேண்டும் என்று நாம் வற்புறுத்தினோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களும் அதை ஆலோசனை செய்து டிட்கோவுக்கு ஒரு நான்-அபிஷியலைப் போட்டார்கள். டிட்கோதானே நமக்கு மிகவும் முக்கியம். இப்போது டிட்கோவுக்கு ஒரு நான்-அபிஷியலை சேர்மென் ஆகப் போட்டிருக்கிறார்கள். அப்படி நான்-அபிஷியலைப் போட்ட பிறகு, ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். திரு. பணிக்கர் அவர்களை எடுத்து விட்டு திருமதி சுலோசனா சம்பத் அவர்களைப் போட்டார்கள் என்றால், அதனால் மக்களுக்கு ஏதாவது நல்லது நடந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதிலே முன்னேற்றம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். முன்னேற்றம் இல்லை என்றால், விட்டுவிடலாம். முன்னேற்றம் இருக்கிறது என்றால் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். முன்பு தொழில் அமைதி இல்லாமல் இருந்த பல்வேறு யூனிட்களின் தொழிற் சங்கத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் மன நிறைவு கொள்ளத்தக்க அளவுக்கு பல பிரச்சினைகள் இன்றைக்குத் தீர்க்கப் பட்டிருக்கின்றன. நான்-அபிஷியலைச் சேர்மென் ஆகப் போட்ட காரணத்தால், அவர்கள் தொழில் துறையில் இருப்பவர்களுக்கு ஊக்கம் அளிப்பதோடு, தொழில் துறையில் இருக்கிற பிரச்சினைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டு தீர்க்க முற்படுகிறார்கள். காரணம் மேலவையிலும் சட்ட மன்றப் பேரவையிலும் இந்தப் பிரச்சினை கிளம்பும், அப்போது நாம் பதில் சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது என்று அக்கறை எடுத்துக்கொண்டு செயல்படுகிறார்கள். அதனால் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். சென்ற முறை பேசும் போது, அரக்கோணம் ஸ்டீல் பிளாண்ட்டுக்கு ஆக்சிஜன் சப்ளையை ஏஷியாட்டிக் ஆக்சிஜன் கம்பனி என்ற நிறுவனம் செய்து வந்தது. 15 வருஷமாக ஒரு காண்ட்ராக்ட் அடிப்படையில் அந்தக் கம்பெனிதான் ஆக்சிஜன் சப்ளை

செய்து கொண்டிருந்தது. அதனால் வருஷத்திற்கு ரூ. 10 லட்சம் நமக்கு நட்டம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. மொத்தம் எவ்வளவு இழப்பு என்று கணக்கு போட்டுக்கொள்ளலாம். அந்தக் கம்பெனியில் எவ்வளவு ஆக்சிஜன் 'கன்சியூம்' ஆகியிருக்கிறது என்று தெரிந்து கொள்ளுவதற்கான மீட்டர்கூட இல்லை. அப்படி நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டுவந்த நிறுவனம் அது. அதனால் பல லட்சக் கணக்கான ரூபாய் கணக்கில் வராத வருவாயாக அந்தத் தொழில் அதிபர்களுக்கு வந்தது. அந்தப் பணத்தை என்ன செய்வது? பணத்தை அனாவசியமாக யாரும் செலவு பண்ணமாட்டார்கள். எனவே ரூ. 10 லட்சம், ரூ. 20 லட்சம் பணம் வந்தபோது, அதை நல்ல முறையில் பங்கிட்டுக் கொண்டு செயல்பட்டு வந்தார்கள். பிறகு அந்த காண்ட்ராக்ட முடிநதுவிட்டது. அதை எடுத்துக்கொள்வது எப்படி என்று பார்த்து, அந்தக் காண்ட்ராக்ட்டை பொதுத்துறை நிறுவனம் ஒன்றிற்குக் கொடுத்தார்கள். டிட்கோவே கூட இப்படிப்பட்ட ஆக்சிஜென் தயாரிக்கும் தொழிற்சாலையை தானே உருவாக்கி இந்த சப்ளையைத் தானே மேற்கொள்ளலாமா என்றுகூட இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அப்படி இருந்தால், அது வரவேற்கத தக்க ஒன்றாகும். எதற்காகச் சொல்கிறேன் என்றால், நான் அதோடு தொடர்பு கொண்டவன். அந்தக் காண்ட்ராக்ட்டை முடிவுக்குக் கொண்டு வருவதறகு அவர்கள் பட்ட பாடு எவ்வளவு என்பது எனக்குத் தெரியும். அந்தக் கம்பனியின் காணட்ராக்ட் 'லேப்ஸ்' ஆன உடனே வேறு ஒருவருக்குக் கொடுக்கலாம் என்று முடிவு செய்வதற்குள் அந்த 'சேர்-பர்சன்' பட்ட பாடு எவ்வளவு என்பது எனக்குத் தெரியும். காரணம் அதற்குரியவர்கள் மீண்டும் அந்தக் காண்ட்ராக்டைப் பெறுவதற்கு யார் யாரை அணுக வேண்டுமோ, அணுக முடியுமோ அவர்களையெல்லாம் அணுகினார்கள். அந்த முதலாளிகள் வட நாட்டுக்காரர்களாக இருந்தாலும், ரொம்பக் கெட்டிக்காரர்கள். மந்திரிகள் அனைவரையும் பார்த்தார்கள். தொழிற் சங்கத் தலைவர்களையும் பார்த்தார்கள். தமிழ்நாட்டிலிருந்து எடுத்துவிட்டால், வேறு ஊருக்குப் போய் விடுவோம் என்றார்கள். ஏதோ தமிழ்நாட்டுக்கும் தொழில் வளர்ச்சிக்கும் இவர்களை விட்டால் வேறு வழியே இல்லை என்பதைப்போல் பேசினார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டிலேகூட இதைப்பற்றி ஒரு ஆர்ட்டிகிளாக எழுதினார்கள். எல்லாமே மோசம் போனதைப்போல் செய்தி போட்டார்கள். தமிழ்நாட்டிலிருந்து இவர்கள் போய்விட்டால் தொழில் வளர்ச்சியே இல்லாமல் போய்விடும் என்பதைப் போலவும் தொழிலாளர்களுக்கு இதனால் வேலையே இல்லாமல் போய்விடும் என்றெல்லாம் எழுதினார்கள். அதுமட்டுமல்ல, தொழிற் சங்கத்திலேயே முற்போக்கான அமைப்புகளைக்கூட அவர்கள் தூண்டிவிட்டு அவர்களை விட்டே அந்தக் காண்ட்ராக்ட்டை மீண்டும் அவர்களுக்கே தர

வேண்டுமென்று கேட்க வைத்தார்கள். "இப்படி எடுத்துவிட்டால், எங்கள் தொழிலாளர்களுக்கு எல்லாம் வேலை போய்விடும்" என்றார்கள். தொழிற் சங்கத்தை இவர்கள் எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்காக இதைச் சொல்லுகிறேன். முற்போக்குத் தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்களே கடிதம் எழுதினார்கள். அதிலே என்ன சொல்லப்பட்டது என்றால், அந்தத் தொழிற் சாலைக்கு காண்ட்ராக்ட் கொடுக்காவிட்டால், தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படும் என்றார்கள். அப்படியானால் அந்தத் தொழிலாளர்களுக்குப் புதிய நிறுவனம் வேலை கொடுக்கும் என்று சொல்லப்பட்டது அதற்கும் அந்தத் தொழிற் சங்கம் ஒப்புக்கொள்ளவில்லை. இப்படி ஒரு தனியாரிடமிருந்து பொதுத் துறைக்கு மாற்றினால் இவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது. தனியார் துறையில் நல்லபடியாக நடந்தால், அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. தனியார் துறையில் நன்றாக நடந்தால், நாம் கை வைக்க வேண்டியதில்லை. மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தனியாரை ஊக்கப்படுத்துவது தான் எங்கள் திட்டம் என்று சொல்லியிருக்கிறார்.

(பிற்பகல் 11-50)

சரியாக நடக்காத பொதுத் துறை நிறுவனத்தையே தனியாருக்குக் கொடுக்க லாம் என்ற அளவிற்கு வந்திருக்கிறோம். ஜாயின்ட் செக்டர் என்பதே தனியார் நிறுவனம்தான். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூட பல முறை பல பொதுத் துறை நிறுவனங்கள் சரியாக இயங்காததால், வேதனைப்பட்டு தனியாருக்குக் கொடுத்துவிடலாம் என்ற எண்ணத்திற்கு வந்துவிட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை, போக்கு இருக்கிறது. இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், அவர்களது காண்ட்ராக்டை 'ரெனியூ' பண்ண வேண்டாம் என்ற விஷயம் விவாதத்திற்கு வரும்போது, டைரக்டர்களே வராமல் கோரம் இல்லாமல் போனது. ஏனென்றால் அதிகாரிகளுக்கு அவர்கள் மேல் அவ்வளவு அன்பு. அந்த ஆக்சிஜன் கம்பெனி இருந்தால்தான், அவர்களுக்கு ஆக்சிஜன் கிடைக்கும் போலும். இல்லாவிட்டால் கரியமில வாயுதான் இருக்கும் போலும். அதனால்தான் அவர்கள் வரவில்லை. பிறகு ஏசியாடிக் ஆக்சிஜன் கம்பெனியின் காண்ட்ராக்டை ரத்து செய்து, பொதுத் துறைக்கு மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள் பிறகு நாமே தொடங்குவது என்றும் முடிவு செய்திருக்கிறார்கள்.

இந்த மாதிரியாகத்தான் சிமெண்ட் உற்பத்தியைப் பொறுத்த வரையிலும், நிலைமை இருக்கிறது. அவர்கள் உற்பத்தியை அதிகமாகச் செய்ய வேண்டும் என்று இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். அவர்கள் உற்பத்தி செய்த

பிரஷர் பைப்பை விற்க முடியாமல் இருக்கிறது. பிறகு 'டுவாட்' போர்ட் வாங்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு, இப்போது 2 கோடி ரூபாய்க்கு ஆர்டர் வாங்கியிருக்கிறார்கள். இப்படி இரண்டு கோடி ரூபாய்க்கு ஆர்டர் வாங்கும்போது, இன்னும் உற்பத்தி பெருகும், அதனால் அவர்களுக்கு ஊக்கம் வரும்.

பாளையத்தில் ஒரு தொழிற்சாலையைத் தொடங்க மத்திய சர்க்கார் இன்னும் அனுமதி கொடுக்கவில்லை என்று வருகிறது. இதைப்பற்றி மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் வருத்தப்படமாட்டார்கள். ஏன் மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்தால் நல்லது. அவர்கள் இதற்கு அனுமதி கொடுப்பதில்லை என்று முடிவு எடுத்திருந்தால் அதை விட்டுவிட வேண்டியதுதான். யாராவது தனியார் தலையீடு இருக்கிறதா? இதிலே யாராவது பெரிய மனிதரின் தலையீடு இருந்தால், நாம் ஏன் இடையிலே தகராறு பண்ண வேண்டும்? மத்திய சர்க்காரே அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு நமக்கு அனுமதி கொடுக்காத போது, மாநில அரசுக்கு மட்டும் என்ன வந்தது? ஆகவே பாளையம் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கவில்லை என்றால், அதற்குக் காரணம் என்னவென்று நாம் பார்க்க வேண்டும்.

தொழிலாளர்கள் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், அவை தீர்க்கப்பட்டிருக்கின்றன. இது வரவேற்கத்தக்கது. தமிழ் நாடு ஸ்மால் பிளாண்ட்டில் 'புரொமோஷன் பாலிசி' வகுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு முன்னேற்றங்களைக் கொண்டு வந்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அவருடைய மேற்பார்வையில் பணியாற்றும் அரசு சார்பில் உள்ள நிர்வாகத்தினரையும் வரவேற்கிறோம்.

அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், நாம் இன்ஸ்டால்ட் கெப்பாசிட்டியை 'ரீச்' செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இப்போது அங்கே பழைய இயந்திரங்கள் மாற்றப்பட்டு, புதிய இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு, சிறந்த முறையில் இயங்கி வருகின்றன. முன்பு 4 இலட்சம் மெட்ரிக் டன் இன்ஸ்டால்ட் கெப்பாசிட்டி என்று இருந்ததை, இப்போது 10 இலட்சம் மெட்ரிக் டன் 'இன்ஸ்டால்ட் கப்பாசிட்டி' என்று அதிகரித்திருக்கிறோம். அங்கே ஒரு டிரையர் பிளாண்ட்டைக் கொண்டு வந்திருக்கிறோம். அதனால் இனி அந்தச் சுண்ணாம்பில் ஈரப்பசை காய்ந்துவிடும். அதற்கு வேண்டிய இயந்திரங்களை வாங்கிவிட்டோம். டீசல் ஜெனரேட்டர்களையும் வாங்கிவிட்டோம். ஆகவே

ஆலங்குளத்திலே ஆலை தொடர்ந்து நடக்கும். ஸ்ட்ரைக் பண்ணாத வரைக்கும் அது தொடர்ந்து நடக்கும். ஆகவே நாங்கள் போன பிறகு, ஸ்ட்ரைக் பண்ணுங்கள் என்று சொல்ல வேண்டும். தனியார் நிறுவனங்கள் தவறான அணுகுமுறையால் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யும் தவறான வழியை நாம் கண்டிக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

தமிழகத்திலே புதிய தொழில்களுக்கு உரிமங்கள் பெற்றது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். 'டாசெல்' என்ற பீங்கான் தொழிற்சாலையின் கீழ் ஒரு செங்கல் தொழிற்சாலை இருக்கிறது. அது சென்னைக்கு அருகிலே இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், அது 31—3—1968 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டது. அதிலே 100 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாழ்த்தப் பட்டவர்கள். செங்கல் தொழிற்சாலையில் வேறு யார் வேலை செய்வார்கள்? தாழ்த்தப்பட்டவர்கள், ஏழைகள்தான் வேலை பார்ப்பார்கள். அவர்கள் எல்லாம் அந்தத் தொழிற்சாலைக்கு நிலம் கொடுத்தவர்கள். தங்களுக்கு வேலை கிடைக்கும் என்று எண்ணி, செண்ட் ஒன்றுக்கு 30 ரூபாய்க்கு தங்கள் நிலத்தைக் கொடுத்தவர்கள். இப்போது அதே இடத்தில் ஒரு செண்ட் நாலாயிரம் ரூபாய்க்குப் போகிறது. அது தப்புதான். அது வேறு விவகாரம். அந்தத் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்தவர்கள் கடந்த 19 வருஷங்களாக வேலை பார்க்கிறார்கள். இடையிலே ஒரே ஒரு ஊதிய உயர்வு தான் கொடுக்கப்படும் என்று 1974 ஆம் ஆண்டிலேயே ஒரு ஒப்பந்தத்தைப் போட்டிருக்கிறார்கள். மேல் அதிகாரிகளைக் கேட்டால், இந்தத் தொழிற் சாலையை மூடுவதா அல்லது நடத்துவதா என்ற நிலையிலே காலத்தைத் தள்ளிக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்கே அடிமட்டத் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், அந்த தொழிற்சாலைக்காக குறைந்த விலைக்கு நிலம் கொடுத்தவர்கள் வசதியில்லாமல் 19 ஆண்டுக் கால சர்வீசுக்குப் பிறகும் மாதம் 400 ரூபாய்தான் வாங்குகிறார்கள். நிர்வாகப் பணியாளர்கள் வேறு துறைகளிலிருந்து டெபுடேஷனில் வருகிறார்கள். அரசு ஊழியர்களுக்கு டி.ஏ. வழங்கும்போது, அவர்களுக்கும் வருகிறது. இப்படி ஒரே தொழிற்சாலையில் பணியாற்றும்போது, உழைப்புத் தொழிலாளிகளுக்கு ஓர் அளவுகோலும், மற்ற நிர்வாக ஊழியர்களுக்கு ஓர் அளவுகோலும் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படி இருக்கக் கூடாது. வேறு இடத்திலே அப்படி இருக்கலாம். ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆரம்பித்த இந்தத் தொழிற்சாலையில் அப்படி இருக்கலாமா? அதை மூடவும்

முடியாது. அண்ணா வழியில் நடக்கும் அரசு, பெருமையோடு அந்தத் தொழிற்சாலையை மூடினோம் என்று சொல்ல முடியாது. இப்படிப்பட்ட ஏழை மக்கள், அடித்தள மக்களுக்கு வாழ்வைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் அண்ணா அவர்கள் முனைப்போடு இருந்து இந்தத் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தார். ஆகவே அந்தத் தொழிற் சாலையை எந்தக் காரணத்தைக் கொண்டும் மூடக்கூடாது. அந்தத் தொழிற்சாலை நன்றாக நடக்க வேண்டும். அந்தத் தொழிலாளிகளுக்கு நியாயமான ஊதியம் கொடுக்க வேண்டும். இதிலே ஒரு உத்தரவாதம் வேண்டும். அவர்கள் தினம் தினம் செத்துப் பிழைக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் ஏதாவது கேட்டால், இந்தத் தொழிற்சாலையை மூடப் போகிறோம் என்று ஒரே வார்த்தையைச் சொல்லி அவர்களுடைய வாயை மூடுகிறார்கள். இதற்கெல்லாம் மாற்றாக, அவர்கள் மீது கருணை காட்டி, மூடமாட்டோம் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்து, அவர்களுக்கு நல்ல ஊதியத்தை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11 55)

அதே மாதிரி மற்ற தொழில்துறைகள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையில் வருவது டான்சி, காதி மற்றும் வில்லேஜ் இன்டஸ்ட்ரீஸ். கிராமப்புறத் தொழிலைப் பொறுத்துச் சொல்லும்போது கதர் வாரியம் இருக்கின்றது. பெருந்தொழில்கள் என்று சொல்லும்போது, அதில் 100 பேர்கள் அல்லது 500 பேர்களுக்கு வேலை கொடுக்கின்றார்கள். இருந்தாலும் அவைகளையும் திடீரென்று மூடிவிடுகின்றார்கள். அதற்கு உத்தரவுகள் வரும். அந்த நிலைமைகளும் இருக்கின்றன. கிராமப்புற சிறு தொழில்களைப் பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டும். கதரைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே இரண்டாவதாக தமிழகம் இருக்கின்றது. எண்ணெயைப் பொறுத்தவரையில், அது இந்தியாவிலேயே முதலிடம் பெற்றிருக்கின்றது.

மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி): மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தாங்கள் பேசுவது ரூரல் இன்டஸ்ட்ரீஸ் தலைப்பிலே வருவதாக இருப்பதால், அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வாய்ப்பில்லை.

திரு. க. சுப்பு: அதற்காக அதைப்பற்றிப் பேச வேண்டாம் என்பதில்லை. அதிலே என் கருத்துக்களைச் சொல்லிக்கொள்கிறேன். மேலவையிலே ரூரல் இண்டஸ்ட்ரிஸ்க்கு தனியாக டிமான்ட் வருவதில்லை. தொழில் துறையிலே

சொல்கின்றேன். அதிலேயும் என் கருத்துக்களை இப்போது சொல்லிவிட்டால் அவர்கள் கேட்டுக்கொள்ளட்டும் என்ற அடிப்படையிலேதான் சொல்கின்றேன். நான் சொல்வதற்கு அவர்கள் பதில் தரவில்லை என்றாலும், இந்தக் கருத்துக்கள் அரசாங்கத்தினுடைய அதிகாரிகள் கவனத்திற்குப் போகும். நேரம் அதிகமாகப் போய்விடக்கூடாது என்பதற்காகத்தான் மாற்றுத் தலைவர் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கின்றார்கள். எண்ணெய் உற்பத்தியிலே குடிசைத் தொழில் துறையிலே இந்தியாவிலேயே முதலிடத்திலே இருக்கிறோம். அடுத்து, சோப்பு தயாரிப்புத் துறையிலேயும் முதலிடத்தைப் பெற்றிருக்கின்றோம். நான்-எடிபிள் ஆயில் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது. பாலி வஸ்த்திரா உற்பத்தியிலும் முதலிலேதான் இருக்கின்றது. திரு. இராமகிருஷ்ணய்யா அவர்கள் தலைமையிலே அகில இந்திய அளவிலே ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கின்றது. பல துறைகளிலே தமிழ் நாடு முதலில் இருக்கின்றது. கதர் கிராமத் தொழில் துறையில் இந்தியாவிலேயே முதலில் இருக்கின்றது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். கதர்-கிராமத் தொழில் துறையிலே, அரசு உத்தரவு போட்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வாங்கிக்கொள்ள வேண்டும் என்று போட்டும், 3 கோடி ரூபாய் அளவுக்கு சோப்பு தேங்கியிருக்கின்றது. இருந்தாலும் நம் உத்தரவு இந்தியாவிலேயே வேறு யாரும் போடாத அளவுக்கு தமிழக அரசினாலே போடப்பட்டிருக்கின்றது. 1987 வரை அரசுத் துறையில் வாங்கிக்கொள்ளப் பட வேண்டும் என்று உத்தரவு போட்டிருந்தும், ரூ 3 கோடி அளவுக்கு சோப்பு தேங்கியிருக்கின்றது. அதுபோல நூல் ரூ. 3 கோடி அளவுக்குத் தேங்கியிருக்கின்றது.

இந்த போர்டு கடந்த 7 வருடமாக மாற்றி அமைக்கப்படவில்லை. இருந்த ஆட்களே இருந்துகொண்டிருக்கிறார்கள். அது ஒரு குறையாக இருக்கிறது. மின்சக்தி செக்கு கொடுக்கிறதாகச் சொன்னார்கள். அதற்கு செக்கு லோன் என்று கொடுத்து செக்கு வாங்கிக் கொடுத்திருக்கின்றார்கள். டேன்சி சப்ளை செய்கின்றது. பிரைவேட் காண்ட்ராக்டர்கள் மூலமாக சப்ளை செய்யப்படுகிறது. அதற்கு ஒரு வருடம் காரண்டி. ஆனால் ஒரு வாரத்திலேயே பழுதடைந்து விடுகின்றது. அவர்கள் என்ன சொல்கின்றார்கள்? எங்கள் வாழ்விலே முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்று சொல்கின்றார்கள். அவர்கள் என்னிடம் பெடிஷன் கொடுத்திருக் என்று சொல்கின்றார்கள். அவர்கள் என்னிடம் பெட்டிஷன் கொடுத்திருக் கின்றார்கள். நான் மாயவரத்திலே பேசிக்கொண்டிருந்தபோது கொடுத்தார்கள். நிறைய பேர்கள் செக்கு போட்டிருந்தார்கள். அது உடைந்துபோயிருக்கின்றது. ‘பவர் கட்டு’ வந்து கெட்டுவிட்டது. அதற்கு

கோரண்டியெல்லாம் கிடையாது. இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. கதர் துறைக்கும் சொல்லியாகிவிட்டது. போர்டுக்கும் சொல்லியாகிவிட்டது. 2 வருடமாக யாரும் வரவில்லை. சாங்ஷன் பண்ணிய காலத்திலேதான் வந்தார்கள். அதுவும் வேறு காரியத்திற்காக வந்தவர்கள் வந்துவிட்டுப் போய்விட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் வரவே இல்லை என்ற குறை இருக்கின்றது. இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்ற இந்தத் துறை முக்கியமாக இருக்கின்றது. இன்னொன்று சொல்கிறேன். அவர்கள் வேதனை பற்றி இந்தக் குறைகளை எழுதி பெட்டிஷனாகக் கொடுத்திருக்கின்றார்கள். தமிழ்நாடு இதில் முதலிடத்தில் இருந்தாலும், தேன் உற்பத்தி, ஹனி மார்க்கெட்டிங் டெப்போ என்று ஒன்று நாகர்கோயிலிலே வைத்திருந்தார்கள். அது குறிப்பாக கன்னியாகுமரியிலே தான் அதிகமாக இருக்கிறது. ஆனால் அங்கே இருக்கின்ற மார்க்கெட்டிங் டெப்போவை தேவையில்லாமல் கேரளாவிற்கு மாற்றிக்கொண்டுபோய் விட்டிருக்கின்றார்கள். அங்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இன்றையதினம் மாற்றிக்கொண்டு போயிருக்கின்றார்கள். அங்கே இருக்கின்றவர்கள் என்ன செய்திருக்கின்றார்கள்? அதைக் கேரளாவிற்கு மாற்றியிருக்கின்றார்கள். ஸ்டேட் டைரக்டருடைய கண்ட்ரோலில் மாற்றம். நிர்வாகத்திலேதான் மாற்றம். அது அங்கே போய்விட்டது. அதற்கு அங்கே இருப்பவர்கள் வருத்தம் தெரிவித்திருக்கின்றார்கள். அதனாலே என்னவாயிற்று என்றால், வருடத்திற்கு 24 லட்சம் ரூபாய் என்று கொள்முதல் இருந்தது 9 லட்சம் ரூபாய் அளவுக்குக் குறைந்துவிட்டது.

மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி) : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 20 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குப் பின்னர் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேச வேண்டும். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

(நண்பகல் 12-00)

திரு. க. சுப்பு: உங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு உட்கார்ந்துவிடுகிறேன். உங்களைப் பற்றி என்றால் உங்களுடைய மத்திய அரசுபற்றி சொல்லிவிட்டு உட்கார்ந்துவிடுகிறேன். 'சோப் இண்டஸ்ட்ரீஸ்'. அதற்கு என்று 'ரீஜினல் அனாலிட்டிக்கல் லேப்' நம் ஊரிலே இருந்தது. அதை இன்றைக்கு கோளாவில் உள்ள மணத்தாரா என்ற இடத்திற்குக் கொண்டுபோய் விட்டார்கள். அடுத்து, 'சென்ட்ரல் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மெண்ட்'. அதுவும் திருப்பூரிலே இருந்தது. அதையும் கோளாவிற்கு மாற்றி விட்டார்கள். அடுத்து, 'சென்ட்ரல் இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட்'.

இருக்கிறது. அதற்குப் புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று சொல்லியும், அங்கே கட்டிடம் கட்ட அக்கறை செலுத்தவில்லை என்ற வருத்தம் இருக்கிறது. 'காட்டேஜ் மேச் இண்டஸ்ட்ரீஸ் குவாலிட்டி கண்ட்ரோல் சென்ட்டர்' என்று சாத்தூரில் இருந்தது. அதுவும் இப்போது இல்லை. அவசியம் இல்லாத இடத்திற்கு, கேரளாவுக்கு மாற்றிவிட்டார்கள். குவாலிட்டி கண்ட்ரோல் இருக்க வேண்டிய இடம் இதுதான். 'காட்டேஜ் மேச் பாக்டரீஸ்' இங்கேதான் அதிகமாக இருக்கிறது. அதை மாற்றி விட்டார்கள். ஒவ்வொன்றையும் மாற்றியிருக்கிறார்கள். 'ரீஜினல் பி ரிசர்ச் சென்ட்டர்' திண்டுக்கல்லில் இருந்தது. அதை கோட்டயத்திற்கு மாற்றிவிட்டார்கள். இதையெல்லாம் யார் சொல்வது என்றால், நாங்கள் சொல்லவில்லை. அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் — 'காதி கர்மாச்சார் யூனியன்' என்று வைத்திருக்கிறார்கள்—மெமோராண்டத்தில் இருக்கிறது. இவற்றை எல்லாம் ஏன் மாற்றினார்கள் என்று தெரியவில்லை. மத்திய அரசு தொழில்களைத் துவங்க வேண்டுமென்று சொல்லும்போது, காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் எல்லாவற்றிலுமே நாம் முன்னணியில் இருக்கும்போது, எதற்காக இதையெல்லாம் மாற்றுகிறார்கள்? அகில இந்திய ரீதியில் தமிழ் நாடுதான் இதில் முன்னணியில் இருக்கிறது என்று அவர்களே ஒப்புக் கொள்ளும்போது, இப்படிச் செய்வது புதிராக இருக்கிறது. இதை நாங்கள் சொல்வதைவிட, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்ல வேண்டும். அப்படி அவர்கள் சொல்வதால், எடுப்பதையாவது நிறுத்தட்டும். புதிதாக தொழில்கள் இங்கே வர வேண்டுமென்று சொல்ல வில்லை. ஏற்கெனவே இந்த மன்றத்திலே நாம் வலியுறுத்தியிருக்கிறோம். இங்கே இருப்பதை பஞ்சாப், ஒரிஸ்ஸா, பெங்களூர் ஆகிய இடங்களுக்குக் கொண்டுபோனால், இங்கே உள்ளதை மற்ற இடங்களுக்கு மாற்றினால், அதனால் நமக்கு வேலை வாய்ப்புகள் குறைகின்றன, வருமானம் குறைகின்றது; இதனால் புதிய தொழில்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது என்று சொல்லியிருக்கிறோம். 10 கோடி ரூபாய்க்கு மேலே முதலீடு உள்ள தொழிற்சாலைகள் எல்லாம் உத்திரப் பிரதேசத்திற்குப் போகும் நிலைமை இருக்கிறது. இதெல்லாம் தொழில் வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக இருக்கின்றன. இவற்றை எல்லாம் அகற்றி, முழுமையாக தொழிற் கொள்கை வெற்றி பெற, மத்திய அரசு முயல வேண்டும். இதிலே குறைபாடுகள் இருப்பதால், ஒவ்வொரு முறையும் இங்கேயிருந்து டெல்லிக்குப் போக வேண்டியிருக்கிறது, ஒவ்வொரு முறையும் பேச வேண்டியிருக்கிறது, இப்படி ஒவ்வொரு முறையும் லைசன்ஸ் வாங்குவதற்குள் உயிரே போய்விடுகிறது. இப்படிப்பட்ட நிலைமை இருந்தாலும், மாநில அரசைப் பொறுத்தவரையில்,

பொதுத் துறை, கூட்டுத் துறை, கூட்டுறவுத் துறை ஆகிய மூன்று துறைகளிலும் தொழில்களைத் துவங்க உரிமங்களைப் பெற்று, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பொதுத் துறை நிறுவனங்களைப் பொறுத்தவரையில், அவை லாபகரமாக இயங்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அரசாங்கம் மாத்திரம் இதைச் செய்ய முடியாது. தொழிலாளர்களுக்கு இதில் பங்கு இருக்கிறது. அவர்கள் வேலை செய்ய உரிமை இருக்கிறது. தொழிற் சங்கத்தின் பங்கு இருக்கிறது. எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தால்தான், பொதுத் துறை வெற்றி பெற முடியும். இல்லையென்றால் தனியார் நிறுவனத்திற்கு இவற்றைக் கொடுக்க வேண்டி வரும். இதனால்தான் இதில் அரசாங்கத்தைக் குறை சொல்வதில்லை. எடுத்ததற்கெல்லாம் அரசாங்கத்தைக் குறை சொன்னால், அதைத் தனியார் துறைக்குக் கொடுக்கிறோமென்று சொல்லுவார்கள். எனவே அந்த அடிப்படையிலே பொதுத் துறை நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும். அடுத்து, லாபகரமாக நடக்கும் நிறுவனங்களைக் கூட தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற பேச்சு அடிபடுகிறது. அந்தப் பேச்சு 'அடி' பட வேண்டும். தொழில்கள் துவங்குவது என்ற கொள்கையைப் பொறுத்தவரையில், முதலில் பொதுத் துறை, பிறகு கூட்டுத் துறை, பிறகு கூட்டுறவுத் துறை, அதற்குப் பிறகு தனியார் துறை என்று இருக்க வேண்டும். இதற்கு மாறாக தொழிற் கொள்கை இருந்தால், பொருளாதாரச் சிக்கல் ஏற்படும். தொழில்களைத் துவங்கி லாபத்தை மட்டும் அடிப்படையாக வைத்து, இயங்கி வரும் தனியாரிடத்தில் தொழில்களை விடுவது என்பது அடிப்படைக் கொள்கைக்கு விரோதமானதாகும். பண்டித நேரு அவர்களின் தொழிற் கொள்கை இன்னும் தொடருகிறது. அதில் மாறுபாடு இல்லை. நமக்குத் தொழில் நுட்பம் கிடைக்காத நேரத்திலேதான் வெளியிலிருந்து அது வர வேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர, இங்கே இருப்பதை எடுக்க வேண்டுமென்று சொன்னால், இங்கே இருக்கிற தொழில்களை எல்லாம் மூட வேண்டிவரும். இங்கேயுள்ள, தமிழ் நாட்டிலே உள்ள தொழில் முனைவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, தொழில்களை ஊக்குவிக்க வேண்டும். 'சிங்கிள் விண்டோ கன்செப்ட்' என்று சொல்லுகிறோம். அதையெல்லாம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு விண்ணப்பங்களையெல்லாம் 'பிராசஸ்' செய்வதில் காலதாமதம் இருக்கிறதா, இல்லையா என்றெல்லாம் கண்டறிய வேண்டும். அப்படிக் கண்டறிந்து, அவற்றையெல்லாம் துரிதமாகச் செய்து இங்கே இருக்கிறவர்களை ஊக்குவிக்க வேண்டும். அதோடு, நான்-ரெசிடன்ட்.' இன்டியன்சையும் ஊக்குவிக்க வேண்டும். பினாமியாக யாரும் இருக்கக் கூடாது. அவர்கள் இங்கே மூலதனம் போடுவதற்கு முழுமையாக ஊக்குவித்து,

தொழில்களைப் பெருக்க முயற்சிகளை எடுக்க வேண்டும். அந்த முறையிலே இந்த அறிக்கை அமைந்திருப்பதால், இதை வரவேற்று பாராட்டி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(பிற்பகல் 12-05)

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள முற்படுகிறேன். என் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு தந்ததற்காக முதலில் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இக்கொள்கை விளக்கக் குறிப்பை நான் ஒரு தனியான கண்ணோட்டத்தில் அணுகினேன். இப்புத்தகங்களை எல்லாம் படித்துப் பார்த்தபோது, நான் ஒன்றைத் தெரிந்து கொண்டேன். இது உண்மையான கொள்கை விளக்கக் குறிப்பாக அமைய வில்லை. அதுவும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் அனுபவமும் ஆற்றலும் மிக்கவர்கள். முதிர்ந்த அனுபவம் பெற்றவர்கள். அப்பேர்ப்பட்ட தொழில் அமைச்சரின் கீழ் இயங்குகின்ற இந்தத் துறையானது புதிய சிந்தனை ஓட்டத்தோடு, புரட்சிகரமான தொழில் கொள்கைகளை உள்ளடக்கியதாக அமையும் என்று நாங்கள் எல்லாம் எதிர் பார்த்தோம். ஆனால் உள்ளபடியே அப்படி அமையவில்லை. இதைப் பொறுத்தவரையில், சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தொழில் துறை பற்றிய சாதனைகளைத் தொகுத்துக் கொடுத்திருக்கக்கூடிய ஒரு செய்திக் குறிப்பாகக் கருதலாம். அல்லது புள்ளிவிவரங்களைத் தொகுத்துத் தந்திருக்கிற ஒரு தொகுப்பாகக் கருதலாம். அந்த வகையில் ஒரு கொள்கை விளக்கக் குறிப்பாக என்னால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக் கொள்வேன். அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலாவது, அடுத்த முறை தொழில் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை வைக்கும்போது, அவர்களே அதுவரை தொடர்ந்து இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன், அப்படி அவர்கள் தொடர்ந்து இருப்பார்களேயானால், அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்,

I would appeal to the Hon. Minister to come forward with a bold, dynamic and aggressive policy of Industrial Development. என்கிற முறையிலே வருங்காலத்தில் கொள்கை விளக்கக் குறிப்பு வர வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இது உள்ளபடியே எப்படி இருக்கிறது என்றால், என்னைப்

பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்கிறேன். ஒரு கதை சொல்வார்கள். ஒரு குக்கிராமத்தில் ஒரு சாதாரண விவசாயி இருந்தான். அந்த விவசாயி அவசர வேலை காரணமாக வெளி ஊருக்குப் போகின்ற நிலை ஏற்பட்டது. அந்தக் காலத்தில் இப்பொழுது இருப்பது மாதிரி பஸ் மற்றும் வசதிகள் எல்லாம் கிடையாது. வெளியூருக்குப் புறப்படுகின்றபோது, பாரவண்டியில் மாட்டைப் பூட்டி விட்டான். இரவு நேரமானபடியால், அப்படியே கண் அயர்ந்து, பயணக் களைப்பின் காரணமாக உறங்கிவிட்டான். பொழுது விடிந்து, பார்த்தபோது, வண்டி காளைகளைப் பூட்டிய இடத்திலேயே இருப்பதை உணர்ந்தான். அப்போதுதான் அவன் ஒன்றைப் புரிந்து கொண்டான். செக்கு காளைகளை வண்டியில் பூட்டியதால், அந்தக் காளைகள் செக்கையே சுற்றுவதுபோல சுற்றிச் சுற்றி வந்திருக்கின்றன. அதனால் பயணத்தை மேற்கொள்ள முடிய வில்லை. அதே முறையில் தான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பும் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் "நீங்கள் ஆட்சியில் இருந்தீர்களே, அப்போது என்ன செய்தீர்கள் ?" என்று கேட்கலாம். நாங்கள் சில மாற்றங்களை நல்ல முறையில் செய்திருக்கிறோம். அந்தவகையில் அமைச்சர் அவர்கள் தீவிரமாக, புரட்சிகரமாக சிலபல நல்ல காரியங்களை இந்த விளக்கக் குறிப்பிலே அறிவித் திருக்க வேண்டுமென்ற என்னுடைய எண்ணத்தினைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, தொழிற் புரட்சி பற்றி எல்லாம் நாம் படித்திருக்கிறோம். தொழில் முன்னேற்றம் நாட்டில் வளர்ச்சிக்கு அவசியமானது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் அந்தத் தொழில் வளர்ச்சியடைய வேண்டுமென்றால், அது தொழிலுக்குத் தேவையான அடிப்படைப் பொருள்கள் கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது. அதைத் தான் இன்றைக்கு 'இன்ப்ராஸ்ட்ரக்சர் பெசிலிட்டீஸ்' என்றார்கள். அப்படிப் பார்க்கும்போது, முதலாவது நமக்குத் தேவைப்படுவது நிலம். வசதியான இடத்தில் நியாயமான விலையில் நிலம் கிடைக்க வேண்டும். இரண்டாவது, தண்ணீர் வசதி, மூன்றாவது, நிதி வசதி வேண்டும். குறைந்த வட்டி விகிதத்தில் தேவையான பண வசதி கிடைக்கிற வசதி இருக்க வேண்டும். அடுத்து, நாம் பார்க்கும்போது மூலப்பொருள்கள். மூலப்பொருள்கள் என்று பார்க்கும்போது, நம்முடைய தொழில்களுக்கு இன்றைக்கு முக்கியமாக கரும்பு, பருத்தி போன்ற மூலப் பொருள்கள் தேவை. இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு நமக்கு மிகவும் முக்கியமாகத் தேவை எது என்று கேட்டால்,

அது மின்சார வசதி. இங்கே உறுப்பினர்கள் கூட இதுபற்றிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இங்கே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. எனவே உள்ளபடியே இங்கே தொழில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்று நாம் கருதினால் அதற்கு அடிப்படையாக இருக்கின்ற மின்சாரத்தைத் தடங்கலின்றி வழங்குவதற்கான வழிவகைகளை முதலில் வகுக்க வேண்டும்.

(பிற்பகல் 12-10)

அதைப்பற்றி இதில் குறிப்பிட்டிருக்கிறார்களா, 'ஸ்டடி' செய்திருக்கிறார்களா என்று தெரியாது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஆண்டுதோறும் மின்சார வெட்டு வருகிறது. அப்படி மின்சார வெட்டு ஏற்படுவதால் எவ்வளவு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்ற விவரத்தை இங்கே வைத்திருக்கிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். அப்படிப் புள்ளிவிவரங்கள் வைத்தால் அது பயனுள்ளதாக இருக்கும். மின்சாரத்தைப்பற்றிப் பேசும் போது பத்திரிகையில் 'ஆசிரியர்களுக்குக் கடிதம்' பகுதியில் வந்த ஒரு கடிதத்தைப்பற்றிச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில், புகழ்பெற்ற நியூரோ சர்ஜன் டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் ஒரு கடிதத்தை எழுதியிருந்தார். அவர் குறிப்பிடுகிறார், 'சிம்பிள் நீட்ஸ்' என்று சொல்லி அதிலே,

It is exhilarating to listen to the Prime Minister Rajiv on the dreams for our country in the coming decades. In the U.S., the Prime Minister was shown a robot helping in a brain operation. While all these are inspiring, what surgeons and others in India ask for is minimal uninterrupted electricity supply so that intricate operations could be continued without anxiety.

ஆப்பரேஷனுக்கு மட்டுமல்லாமல், தொழிலுக்கும் தட்டுப்பாடற்ற மின்சாரம் தேவை என்று அவர் சொல்லியிருக்கிறார்.

Supply of good surgical tools without exorbitant customs duty and a working telephone system so that we may know about the condition of our patient-operated patient and advise suitably. If these simple things are provided by the country as a first step, it will be a great leap forward to robot stage.

அடிப்படைத் தேவையான மின்சாரத் தேவையை இன்றைக்கு பூர்த்தி செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. என்றைக்கு மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்கிறோமோ அப்போதுதான் தொழில் முன்னேற்றம் காண முடியும்.

என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கடுத்து பார்க்கும்போது, தொழில் நுட்பம், மனநிறைவோடு ஒத்துழைக்கிற தொழிலாளர்கள், நல்ல திறமையான நிர்வாகம் எல்லாம் அமைந்திருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், மேஜர் இண்டஸ்டிரீஸ், மீடியம் இண்டஸ்ட்ரீஸ், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ், காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் என்று பல வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். தொழில்களை எந்த வகையாகப் பிரித்திருக்கிறார்கள் என்றால், பொதுத்துறை, கூட்டுத்துறை, தனியார் துறை, கூட்டுறவுத் துறை என்று பல்வேறு துறைகள் வருகின்றன. ஆனால் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், திட்டவட்டமான கொள்கை, தொழிலைப் பொறுத்தவரையில், இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதே அவையில் நான் கடந்த முறை பேசுகிறபோது, அன்றைக்கிருந்த அமைச்சர் சொன்னதற்கும் இன்றைக்கு இங்கே வைக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்புக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைக்கிருந்த அமைச்சர் பிரைவேட் செக்டாரிலிருந்து, ஜாயிண்ட் செக்டாருக்கும், கோ-ஆபரேடிவ் செக்டாருக்கும், அதற்குப் பிறகு பப்ளிக் செக்டாருக்கும் மாற்றுவதற்குப் பாதை வகுத்திருப்பதாகச் சொன்னார். இன்றைக்கு அருமை நண்பர் திரு. சுப்பு அவர்கள் சொன்னதைப்போல, தனியார் தொழிலை ஊக்குவிப்பதைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மிகவும் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர், இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது சில விபரங்களைச் சொல்லியிருக்கிறார். ஆனால் பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி சார்பாக இங்கே அறிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் சிபாரிசு என்னவென்றால், தொழிற்சாலைகளை மூடிவிடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கமிட்டியில் நிறைய விதிகளைச் சொல்லி அதைச் செய்ய வேண்டுமென்கிறார்கள். ஆனால் நடைமுறைப்படுத்துவதில் உள்ள கோளாறு காரணமாக, மிஸ்மேனேஜ்மெண்ட் காரணமாக, பல தொழிற்சாலைகளை மூட வேண்டுமென்று இந்தக் கமிட்டி சிபாரிசு செய்திருப்பதாக நான் கருதுகிறேன். நான் கேட்க விரும்புவது, நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், இப்படி ஒரு சிந்தனையோட்டம் ஏற்படுவதை அனுமதித்திருக்கக்கூடாது என்பதுதான்.

இதுபோன்ற எண்ணம், பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டிக்கு வருகிற நிலைமையை அனுமதித்திருக்கக்கூடாது என்பதுதான். அரசு சார்பாக, அதிகாரிகள் அந்தக் கமிட்டிக்கு சரியான தகவல் தந்திருந்தால், அரசு முயற்சி எடுத்துக்கொண்டு அந்தத் தொழிற்சாலைகளை மீண்டும் சிறப்பாக நடத்தியிருந்தால், இதுபோன்ற ஒரு சிபாரிசே வந்திருக்காது என்றுதான் நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 12-15)

(மாண்புமிகு மேலவைத்துணைத் தலைவர் தலைமை)

எனவே நம்மைப் பொறுத்தவரையில், நாம் பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டி சிபாரிசுகளை வைத்துப்பார்க்கும்போது, அவ்வாறில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னது போல, இன்றைக்கு பல தொழிற்சாலைகளிலே தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். 'டான்சி' நிறுவனத்தில் சுமார் 200 தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று சொல்கி றார்கள். சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன், இன்னும் 500 பேர் வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள் என்றும் சொல்கிறார்கள். இதுதான் தொழில் முன்னேற்றமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஏதோ ஓர் அமைச்சர் வெளியேறிய பிறகு அவசரம் அவசரமாக சில ஆலைகளைத் திறக்க முடிவு எடுத்திருப்பதைத் தவிர, வேறெந்த முன்னேற்ற முமில்லை என்பதைக் கவலையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சில உறுப்பினர்கள் மத்திய அரசின் கொள்கைபற்றிச் சொன் னார்கள். மத்திய அரசின் கொள்கை காரணமாக, மாநில அரசினுடைய முன்னேற்றம் தடைபடுகிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும் புகிறேன். சமீப காலத்தில் மத்திய அரசு சில பொருள்களின் விலையை உயர்த்தியது. "Increase in administered prices" என்கிற நிலையில் உயர்த்தியிருக்கிறது. குறிப்பாக பெட்ரோலியம் பிராடக்டஸ் விலைகளை உயர்த்தியிருக்கிறது. இதன்காரணமாக இன்றைக்குப் பல பொருள்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. அதனால் நம்முடைய மாநிலத்திலும் பல பொருள்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. மத்திய சர்க்கார் இவ்வாறு இவற்றின் விலையை திடீரென்று அதிகரிக்கும் காரணத்தால், சங்கிலித் தொடர்போல் மற்ற பொருள்களின் விலைகளும்

உயர்ந்துவிடுகின்றன. எனவே இனி மத்திய அரசு நம்மையெல்லாம் கலந்து பேசாமல் இவ்வாறு திடீரென்று விலையை உயர்த்திவிடக்கூடாது என்று நாம் அவர்களுக்குக் கூற வேண்டும். இவ்வாறு இவர்கள் செய்வதால், சங்கிலித் தொடர்போல் மற்ற பொருள்களின் விலைகளும் உயர்கின்றன; மூலப் பொருள் களின் விலைகளும் ஏறுகின்றன; போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்கின்றன; அவற்றின் காரணமாக தொழிலாளர்களும் ஊதிய உயர்வு கோருகின்றனர். இவையெல்லாம் தொழில் துறை முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிற தென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கைக் குறிப்பிலே இரண்டாவது பக்கத்திலே, கீழ்க்கண்டவாறு கூறி யிருக்கிறார்கள் :

"புதிய தொழில்களுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் முழுவதும் மத்திய அரசிடம் உள்ளது. உரிமங்கள் வழங்குவதற்கு முன் மாநில அரசின் பரிந்துரையைப் பெறுவதில் ஒரு நிலையான நடைமுறையை மத்திய அரசு பின்பற்றுவதில்லை என்ற சங்கடமான சூழ்நிலையை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்."

அடுத்ததாக, "தொழிற்சாலை இல்லாத மாவட்டத்தில் தொழில் முற்றா திக்கம் வரையறுத்த தொழில் நடைமுறைகள் சட்ட (M.R.T.P. Act) வரம் பிற்குள் வருகின்ற தற்போதைய தொழில் நிறுவனங்களையும் விரிவுபடுத்தும் கொள்கையை மத்திய அரசு பின்பற்றி வருவதால், பெருந்தொழில்கள் வளர்ச்சியில் தமிழ் நாடு எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் அடைய முடிய வில்லை. இதில் மாற்றம் வேண்டுமென கூறி வருகிறோம். மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது" என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கத்தைக் கோருகி றேன். மத்திய அரசு அட்மினிஸ்டெர்டு பிரைசஸ்ஸை (Administered Prices) உயர்த்தும்போது, நம்முடைய மாநிலத்தையும் கலந்துகொண்டு, அதிகப்படுத்துகிறார்களா என்று தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அப்படி இல்லை என்று சொன்னால், மத்திய அரசு இவ்வாறு இன்றியமையாப் பண்டங்களின் விலைகளை உயர்த்தும்போது, நம்மையும் கலந்து, பேசி, பின்தான் அவ்வாறு உயர்த்த வேண்டுமென்கிற கொள்கையை மத்திய அரசிடம் வற்புறுத்திச் சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதை நான் ஆலோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இதுபோன்று பொருள்களின் விலை உயர்வினால் வந்திருக்கின்ற வருமான உயர்வில் நமக்கும் பங்கு கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை நாம் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு இவ்வாறு விலைகளை உயர்த்துவதனால் வருகிற வருமான உயர்வு மாநில மக்களிடமிருந்துதான் போய்ச் சேருகிறது. நம்முடைய பங்கும் அதிலே இருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-20)

அதனாலே அந்த விலை உயர்வினாலே வருகிற ஆதாயங்களுக்கு அரசாங்கத்தின் சார்பிலே பங்கு கேட்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் நான் குறிப்பிலே படித்தது போல ஆதங்கப்பட்டு இருக்கிறாரே தவிர, மாற்றுத் திட்டங்களை அறிவிக்கவில்லை.

"The State Government has not spelt out its policy regarding the powers of the Union Government over the Industries. The Minister has not come forward with a clear policy about this. இது குறித்து திட்டவட்டமாக கொள்கையோடு அமைச்சர் அவர்கள் வரவில்லை என்றுதான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதிகாரங்களைப் பற்றிச் சொல்லும்போது, நான் ஒரு சிறிய குறிப்பை மாத்திரம் துணைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு, படித்துச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சிறந்த பத்திரிகை ஆசிரியர். அவருடைய பெயர் ஜெயதுபாஷி என்பது. அவர் பல கட்டுரைகளை பல ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார். "ஸ்நேக்ஸ் அண்டு லேடர்ஸ்" என்ற புத்தகத்தைப் போட்டிருக்கிறார்கள். அதிலே அவர்கள் மத்திய அரசின் அதிகாரத்தைப்பற்றி குறிப்பு ஒன்று சொல்லியிருக்கிறார்கள். நான் பூராவையும் படிக்க விரும்பவில்லை. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களை மாத்திரம் படிக்க விரும்புகிறேன். அவர்கள் "A finger in every pie" என்ற கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அதிலே The Indian Government is becoming, in the somewhat exaggerated words of a well-known industrialist, "a sex maniac on the rampage bent upon raping the whole country".

அந்த அளவுக்கு அதிகாரத்தை மத்திய அரசு பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அது அவ்வளவு நல்லதல்ல. நான் பூராவையும் படிக்க விரும்பவில்லை. இன்னொரு சென்டன்ஸ் மாத்திரம் படிக்க விரும்புகிறேன். Rapist or not,

the Government of India is easily the biggest monopolist. Its tentacles have spread to every area of Indian life. Like some monolith creating machine it has a finger in every pie, a foot in every door and a puppet on every string."

என்ற அளவுக்கு முழுமையாக அதிகாரத்தை மத்திய அரசு பெற்றிருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் ஆதங்கப்படுவதோடு நின்றுவிட்டார்களே தவிர, அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் நாம் பெரிய போராட்டம் நடத்த வேண்டுமென்று சொல்லவில்லை. போராட்டத்திற்குத் தயாராக இல்லை. ஆனால் நான் சொல்வது தீவிரத்தைக் காட்ட வேண்டும். நம்முடைய உரிமைகளுக்காகத் தீவிரத்தைக் காட்டும்போது, அதை மத்திய அரசு தவறாக எண்ணாது. அதனாலே நமக்கிருக்கிற உறவு கெட்டுவிடும் என்று எண்ண வேண்டிய அவசியம் இல்லை. மக்களுடைய நன்மைக்காக உரிமைகளைப் போராடிப் பெற வேண்டுமென்ற எண்ணத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சில விஷயங்களைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளைப் பொறுத்து, நம்முடைய ஜனாதிபதி அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

The President of India while addressing the 4th Indian Agricultural Congress said that unless the lot of the farmers was improved, the country could not prosper.

அது ஒப்புக்கொள்ள வேண்டிய ஒரு நல்ல கருத்து என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அதில் யாருக்குமே கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் தொழில் துறை மூலமாக வாங்குகின்ற மூலப் பொருள்களுக்கு நியாயமான விலை கொடுக்கப்படுகிறதா என்று பார்க்கும்போதுதான், வேதனையாக இருக்கிறது. அதற்கு உதாரணமாக சுகர் இண்டஸ்ட்ரீசை எடுத்துக்கொள்கிறேன். இதுபோன்ற சமாச்சாரங்களுக்காக அதை எடுத்துக் கொள்கிறேன். ஆனால் 'சுகர் கோடேட் பில்' ஆகத்தான் கொடுத்திருக்கிறார்களே தவிர, விவசாயிகளுக்குப் பலன் அளிப்பதாக இல்லை என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலே "கான்ஸ்டிடியூஷன் ஆஃப் இந்தியா"ல் "ஆர்ட்டிக்கிள் 39 'சி'-ல்

"The State shall in particular direct its policy towards securing (*c*) that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production to the common detriment." என்று குறிப்பிட்டப்பட்டிருக்கிறது இந்த அடிப்படைக் கொள்

கையை அரசாங்கம் பின்பற்றக் கடமைப்பட்டிருக்கிறது. சர்க்கரைத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு தனியார்கள் இரண்டு பேர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இன்னும் பல பேர்களுக்குக் கொடுக்கப்படலாமென்று தெரிகிறது. ஏன் அப்படி தனியார்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டது என்பதை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், கோவை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பாக ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்க வேண்டுமென்று அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளிடமிருந்து பணத்தை வசூலித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-25)

அங்கே கூட்டுறவு சர்க்கரை ஆலை வரும் என்று ஆசை வார்த்தை சொல்லப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னால் அந்தக் கொள்கை கைவிடப்பட்டு இன்றைக்குத் தனியார் ஒருவருக்கு பெரியார் மாவட்டத்தில் சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. தனிப்பட்ட அந்த நபர் மீது எனக்குக் கோபமோ ஆத்திரமோ இல்லை. ஆனால் ஏன் ஒரு தனிப்பட்ட நபருக்கு அந்த சர்க்கரை ஆலை அமைப்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்பதை மட்டும்தான் கேட்க விரும்புகிறேன். யாருக்கு இப்போது அவ்வாறு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர் அதாவது அந்த ஆலையை நிறுவ அனுமதியைப் பெற்று பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அவர் இதற்கு முன்னால் சென்னைக்கு அருகில் இருக்கிற ஒரு இடத்தில் ஒரு பைப் கம்பெனியைத் தொடங்கினார்கள். அந்த பைப் கம்பெனியைச் சரியாக நடத்தாமல் அதன் காரணமாக அரசு அதற்கு உதவி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அரசே அதற்கு கியாரண்டி கொடுத்து அதற்குப் பிறகும் அந்தத் தொழிற்சாலை சரியாக நடத்தப்படாததால் மூட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது அரசாங்கம் ஏறத்தாழ 70 அல்லது 72 லட்சம் ரூபாய்க்கு கியாரண்டி கொடுத்து அந்தத் தொகையை அவர் கட்டாத காரணத்தால், அந்தத் தொகையை வசூலிக்க கோர்ட் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 1½ வருஷத்திற்கு மேலாக அந்த கேஸ் நெம்பர் ஆகாமல் காலம் கடத்தப்பட்டு வருகிறது. அரசாங்கம் கியாரண்டி கொடுத்தும், அந்தத் தொழிலை நடத்த முடியாத ஒருவருக்கு இப்போது சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான அனுமதியை அரசு கொடுக்கலாமா என்றுதான் கேட்க முன்வருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப் போல், அண்மையில் சென்னையில் அண்ணா சமாதிக்கு அருகில் சில கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். நான்கூட ஆர்வம் காரணமாகப் போய்ப் பார்த்தேன். அவர்களைப் பார்த்து 'என்ன கோரிக்கை' என்று கேட்டேன். அவர்கள் என்னிடம் "பக்கத்தில் உள்ள கருநாடக மாநிலத்தில் கரும்புக்கு அதிக விலை கொடுக்கிறார்கள். அதைப் போலவே அண்டையில் உள்ள ஆந்திர மாநிலத்திலும் அதிகமான விலையைக் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் மட்டும் அந்த விலையைக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி மறுத்துவிட்டார்கள்" என்று சொன்னார்கள். அதாவது அவர்கள் கேட்பது ஒரு டன் கரும்புக்கு ரூ. 215 கொடுக்க வேண்டும் என்பதாகும். இங்கே அளிக்கப்பட்ட கொள்கைக் குறிப்பில் ஒரு டன் ஒன்றுக்கு ரூ. 195 இங்கே கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் மத்திய அரசு சர்க்கரை விலையை அதிகமாக விற்கலாம் என்று அனுமதித்திருக்கிறது என்பதாகும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மற்ற மாநிலங்களுக்கும் நமக்கும் இருக்கிற வித்தியாசத்தைச் சொல்கிறேன். நாம் 8.5 சதவீதம் ரெக்கவரி ரேட் இருந்தால் டன் ஒன்றுக்கு ரூ. 195 கொடுக்கிறோம். ஆனால் மற்ற மாநிலங்கள் ஃபிளாட் ரேட்டாகத் தருகிறார்கள் . . . ரூ. 215 தருகிறார்கள். ரெக்கவரி ரேட்படி பார்த்தால் இங்கேயே அதிகமாகத்தான் கிடைக்கும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த விளக்கத்தையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விவசாயிகளிடமே சொல்லியிருக்கலாம். அதிலே விலைகூட முக்கியமல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்களை தர்மபுரி மாவட்டத்தைச் சார்ந்த கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் சந்தித்த போது, கொஞ்சம் தரக் குறைவாகப் பேசியதாகச் சொல்லி என்னிடம் வருத்தப்பட்டார்கள். நான்கூட சொன்னேன். அவர் அப்படிப் பேசமாட்டாரே என்று. ஆனால் அவர்கள் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளைப்பற்றிக் கொஞ்சம் தரக் குறைவாகப் பேசியதாகக் குறிப்பிட்டார்கள். அதிலும்கூட ஜாதியைக்கூட குறிப்பிட்டுப் பேசினார்கள் என்று வருத்தப்பட்டு என்னிடத்திலே தெரிவித்தார்கள். நான் நம்முடைய அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்க மாட்டாரே என்று தெரிவித்தேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லும்போது, அதைப்பற்றி விளக்க வேண்டும். இங்கே சொல்லவில்லை என்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் தர்மபுரிக்குச்

செல்லும்போது, அந்த விவசாயிகளை அழைத்துப் பேசலாம். அவர்கள் எல்லாம் ஏற்கெனவே அமைச்சர் அவர்களுக்கு அறிமுகமானவர்கள்தான். அவர்களை அழைத்து வைத்துப் பேசலாம். அவர்கள் தங்களுக்கு டன் ஒன்றுக்கு 215 கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள்.

இன்றைக்கு நிலைமை என்னவென்றால், ஓப்பன் மார்க்கெட் சர்க்கரை யானாலும் சரி, அவர்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 45 அதிக லாபம் கிடைப்ப தாகச் சொல்கிறார்கள். ஒரு டன்னுக்கு சர்க்கரை ஆலை அதிபர்களுக்கு ரூ. 45 அதிகமாகக் கிடைக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகளின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்து அதைப் பரிசீ லிக்க கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆண்டுதோறும் கரும்புக்கான விலையை நிர்ணயிக்க டிரைப் பார்ட்டைட் கான்பரென்ஸ் நடத்தி முடிவெடுப்பது வழக்கம். ஆனால் அத்தகைய மாநாடு இந்த ஆண்டு நடத்தப்படவில்லை என்று சொல்லு கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலை அதிபர்களையும் கரும்பு உற்பத்தியாளர்களையும் அழைத்து இந்த டிரைப்பார்ட்டைட் கான்ப ரென்சை நடத்தி விலையை நிர்ணயிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள் கிறேன்.

சென்ற முறை இந்த அவையில் பேசும்போது நான் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடக்கும் தவறுகளைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசினேன். அப்போதிருந்த தொழில் அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரை நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாததால், அங்கே உள்ள அதிகாரி "கவுன்சிலில் பேசி என்னவாகிவிட்டது?" என்று பேசுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் சொல்லுகிற குறைபாடுகளில் தவறு இருந்தால், அதனைத் தள்ளிவிடலாம் அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லிவிட்டு, நடவடிக்கை எடுப்பதற்கு 2 வருஷம் ஆனாலும் நடவடிக்கை இல்லை என்றால், என்ன பிரயோசனம்? இப்போது என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், அந்தக் குறைபாடுகளைச் சொன்ன தொழிற் சங்கத்தைச் சார்ந்த ஒரு தொழி லாளி மீது அந்த ஆலை நிர்வாகம் பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொண் டிருக்கிறது. அதுவும் ஆலைக்குச் சம்பந்தமில்லாத ஒரு கோயிலைப்பற்றி அந்தத் தொழிலாளி மீது குற்றஞ்சாட்டி நடவடிக்கை எடுக்கிறது. அந்தக்

கோயில் அந்த மில் நிர்வாகத்தில் கட்டுப்படாத ஒன்று. நான் கோயிலைப் பற்றிச் சொன்னால், தவறாக எண்ணிவிடக்கூடாது. நான் தவறான எண்ணத்தில்

(பிற்பகல் 12-30)

இங்கே பேசவில்லை. அந்தக் கோவிலில் வாங்கிய தேங்காய் மற்றும் சில பொருள்களுக்குரிய இரண்டு ரூபாய் அல்லது ஐந்து ரூபாய் வவுச்சரில் தேதியில்லை என்று அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து, அதற்காக அந்தத் தொழிலாளி கோர்ட்டுக்குப் போய், இரண்டு கோர்ட்டுகளில் ஜெயித்தாகிவிட்டது. பிறகு அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் இப்போது ஐக்கோர்ட்டுக்கு வந்துவிட்டது. அந்தத் தேங்காயின் விலை இரண்டு ரூபாய்தான். ஆனால் இந்த நிர்வாகம் இதுவரை இரண்டாயிரம் ரூபாய் செலவழித்திருக்கிறது. தேங்காய் வாங்குவதில் தவறு இருந்தால், அது பக்தனுக்கும், ஆண்டவனுக்கும் உள்ள விவகாரம் என்று இதை அத்தோடு முடித்திருக்க வேண்டும். இந்த நிர்வாகத்தின் பொறுப்பிலே உள்ள ஸ்பெஷல் ஆபீசர், Director of Sugar முஸ்லீம்களாக இருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையை வேறு ஒருவரை வைத்து விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இது கோவில் விவகாரம், தவறாக வந்துவிடக்கூடாது.

என்.ஆர்.ஐ. பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அழகாகச் சொன்னார்கள். இந்த விவகாரத்திலே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனென்றால் இப்போது சில பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. இந்தியா மீட்டர்சைப் பொறுத்த வரையில், Induction of 2 N.R.I. Members on the Board of Directors என்பது மத்திய அரசுக்கும் தெரியாமல், நம்முடைய அமைச்சருக்கும் தெரியாமல் நடந்திருக்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், தொழிலாளர்களும் பங்கு கொள்ளலாம் என்றும், என்.ஆர்.ஐ. இன்வெஸ்ட்மெண்ட் நடக்கும் என்றும் சொல்லும் போது, நமக்கு என்ன ஆபத்து வருமோ தெரியவில்லை. என்.ஆர்.ஐ. இன்வெஸ்ட்மென்டில் தவறு இல்லை. ஆனால் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சுவராஜ்பால் என்ற அந்நிய இந்தியர் இங்கே 'இன்வெஸ்ட்' பண்ண முன்வந்து, ஷேர் வாங்கி, எவ்வளவு பிரச்சினைகள் வந்தன என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே இதிலே கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்,

'இண்டஸ்ட்ரிஸ்' என்றால், என்னவென்று ஒரு ஆர்வத்தின் காரணமாக 'ஆக்ஸ்போர்ட் டொண்டியத் சேம்பர் டிக்ஷனரியில்' அர்த்தம் பார்த்தேன். Industries means systematic economic activity in any branch of trade or manufacture. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, ரியல் எஸ்டேட் பிசினஸ் என்பதும் ஒரு இண்டஸ்ட்ரீதான். கண்ஸ்டரக்ஷன் பிசினஸ், மணி லெண்டிங் பிசினஸ் எல்லாம் இண்டஸ்ட்ரீஸ் தான். இப்படி போகிற போக்கைப் பார்த்தால், நாளைக்கு அமைச்சர் விரும்பினாலும், தொழில்களை நடத்த நிலம் இல்லாமல் போகும். அந்த அளவிற்கு ரியல் எஸ்டேட் பிசினஸ் நடக்கிறது. நாம் இதற்கு கட்டுப்பாடு விதிக்கத் தவறினால், மிக பயங்கரமான ஆபத்து ஏற்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ரியல் எஸ்டேட் எப்படி நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே ஒரு கருத்துச் சொல்லுவேன். தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் உள்ள நிலத்தைத் தவிர மற்ற நிலம் பூராவும் சர்க்காருக்குச் சொநதம் என்று உத்திரவு போட வேண்டும். அப்போதுதான் இதைக் கட்டுப்படுத்த முடியும்.

அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்ததைப் போல, மணிலெண்டிங் பிசினெஸில்—உம்மிடியார் போன்ற நிறுவனங்களில்—பலபேர் பணம் போட்டு ஏமாந்திருக்கிறார்கள் என்பதையும் பார்த்தோம். இதிலே அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய சர்க்காருடைய முதலீட்டைப்பற்றி இங்கே சொன்னார்கள். ஏற்கெனவே சில திட்டங்களைப்பற்றிப் பேசியிருக்கிறோம். குறிப்பாக சேது சமுத்திரத் திட்டம், கரூர் திண்டுக்கல் அகல இரயில் இருப்புப்பாதைத் திட்டம், சேலம் உருக்காலைத் திட்டம் போன்றவைகள். சேலம் உருக்காலை இப்போது உருட்டாலையாக மாறிவிட்டது. பிறகு சென்னை துரித ரெயில் போக்குவரத்துத் திட்டம், நகர விமானப் போக்குவரத்துத் திட்டம் என்று பல திட்டங்களை நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவைகள் எல்லாம் நடைபெறுகின்றனவா என்பதைப் பார்க்கும்போது, மிகவும் வேதனையாக இருக்கிறது. கரூர்—திண்டுக்கல் அகல இருப்புப் பாதை திட்டம் பெரிய ஏமாற்றுத்திட்டமாக இருக்கிறது. நான் மோசடி என்று சொல்லவில்லை.

(பிற்பகல் 12-35)

அது என்னவென்று சொன்னால், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ரூ. 30 கோடி தேவையென்றால், ரூ. 3 கோடிக்குக்கூட 'அலாட்மெண்ட்' இல்லை.

இதிலேயும் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போகின்ற போக்கிலே பார்த்தால், நாளடைவில் மத்திய அரசின் தொழில் முதலீடு பெரிய Zero ஆகி விடும். ஆகவே இதை யெல்லாம் கவனத்திலே கொண்டு அரசு பணியாற்ற வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல. இன்றைக்கு பல்வேறு தொழில்களை ஆரம்பிக்கின்றார்கள். அப்படி தொழில்களை ஆரம்பிக்கும்போது, அங்கே இருக்கின்ற மக்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக் கின்றார்கள். நம்முடைய மக்களுக்கு வேலைவாய்ப்புகள் பெருகும் என்ற கருத்திலேதான் இதையெல்லாம் சொல்கின்றேன். பல தொழில்களைப் பார்க்கும்போது, நான் குறைசொல்வதற்காக இதைச் சொல்லவில்லை, இங்கு திறமையானவர்கள், வேலைக்குத் தகுதி பெற்றவர்கள் இருக்கும்போது, அவர் களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காமல் இருக்கின்றார்கள். அவர்கள் புறக் கணிக்கப்படுகிறார்கள். sons of the jail. என்ற "தியரி"யின் அடிப் படையிலே வேலை பெற எல்லோரும் விரும்புகின்றார்கள். எனவே இவை களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு இலாக்காக்களைப்பற்றி, பணி களைப்பற்றிச் சொல்லும்போது அதிலே உள்ள குறைகளையெல்லாம் நான் வைத்திருக்கின்றேன். அதையெல்லாம் வேறு சமயத்திலே பேசிக்கொள் கிறேன். அடுத்து, ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை. அதிலே ஒரு குற்றச்சாட்டு சொல்லிக்கொள்கிறேன். அங்கே திரு. தாமோதரன் என்பவருக்கு கல் உடைப்பதற்கு குவாரியில் கல் உடைப்பதற்கு காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது. அதிலே அதிகாரிகள் தவறு செய்திருக்கின்றார்கள். அவர்கள் பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை. தரம் குறைவான கற்கள் என்று சொன்ன இரண்டு பேர்களைக்கூட சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். ஜெனரல் மேனேஜர் அவர்களுக்குக்கூட தெரியாமல் நடந்திருக்கிறது என்று சொல்லி, இந்தக் குறைகளை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். குறைகள் இருக்கின்றன, அந்தக் குறைகளையெல்லாம் சொல்ல நேர மில்லை. ஒன்று மாத்திரம் சொல்லிக்கொள்கிறேன். அந்தக் குறைகளைப் பற்றிச் சொல்லும்போது, எனக்கு ஒரு சினிமாப் பாட்டு ஞாபகம் வருகின்றது. அது என்னவென்று சொன்னால், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதியது. சௌந்தரராசன் அவர்கள் பாடியது.

'திட்டமிட்டு திருடறகூட்டம் திருடிக்கொண்டே இருக்குது
சட்டம்போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்குது,
திருடனாகப் பார்த்து திருந்துகின்ற வரையில் திருட்டை ஒழிக்க முடியாது' என்று பாட்டு.

1986 மே 3]

திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பாட்டை எழுதியவர் யார் என்று சொன்னார், பாட்டைப் பாடியவர் யார் என்று சொன்னார், ஆனால் வாயை அசைத்தது யார் என்று சொல்லவில்லை.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : சொல்வதற்குள் அவசரப்பட்டு விட்டார்கள். சினிமாப் படம் பெயர் 'திருடன்' என்று நினைக்கிறேன். போதுமா ? அந்தப் படம் பெயர் எல்லாம் சரியாக நினைவில் இல்லை. அதை முதலமைச்சர்தான் சொல்ல வேண்டும். அதையெல்லாம் இழுக்க வேண்டாம் என்றுதான் இருக்கின்றேன். பெருந்தன்மையோடு இருக்க வேண்டும் என்று தான் சொல்லவில்லை. அதிலே உள்ள கருத்தைத்தான் சொல்லுகின்றேனே தவிர வேறல்ல. அவையில் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் பண்ணும்போது அதையெல்லாம் சொல்ல வேண்டும் என்றதால் சொல்கின்றேன். இல்லை என்றால் அதைக்கூட நான் சொல்லமாட்டேன். அப்படி ஒரு நல்ல நிலைமை ஏற்பட்டால்தான், நாடு முன்னேறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கடைசியாக நான் சொல்ல விரும்புவது . . .

திரு. க. சுப்பு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஒரு நல்ல பாட்டு. அது சினிமாவுக்காகப் பாடினது. "திருடனாகத் திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது' என்று சொன்னார்கள். நாம் அதைச் சொல்வதாக இருந்தால், அரசாங்கமே வேண்டியதில்லை. அவர்கள் திருந்தப் போவதுமில்லை. நமக்கு வேலையும் கிடையாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு அறிஞர் சொன்னார். "Make yourself an honest man, and be sure that a rogue is less in the world" கொஞ்சநாள் கழித்து நம்மை நாமே திருத்திக்கொள்ள வேண்டும். அப்படி மற்றவர்கள் சொல்லும்போது, மற்றவர்களைக் காட்டி குற்றம் சொல்லும்போது, ஒரு விரல் அவரைக் காட்டினால், நம் கையில் உள்ள மற்ற மூன்று விரல்கள் நம்மைச் குற்றம் சாட்டும். அதற்காகத்தான் நான் சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை. நான் அந்த சினிமாப் படம் 'திருடன்' என்று சொல்லிவிட்டேன். அது 'திருடாதே' என்ற படம். மன்னிக்க வேண்டும். எனக்குப் படம் அடிக்கடி பார்க்கும் பழக்கம் இல்லை.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒன்று சொல்கிறேன். தாமஸ் மூர் என்று ஒரு அறிஞர் கருத்து சொன்னார். என்ன கருத்து என்று பார்க்கும்போது, 'மலர்மேல் அமர்ந்த தேனீக்கள் பாட்டை நிறுத்துகின்றன'

என்றார். அதுபோல, பதவியில் அமர்ந்த தீவிரவாதிகள் ஊமையாக ஆகி விடக்கூடாது. அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது அப்படி ஆகிவிடக்கூடாது என்பதுதான.

இப்போது டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொன்ன கருத்தை தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

"The rights are got, not by the mere passing of resolutions or supplication, but only by rising to assert our rights".

அதையே தமிழில் சொல்லும்போது, 'பறிபோகிற உரிமைகளை பிச்சைபோல் கேட்காதீர்கள். தீர்மானங்கள் மூலமோ, மன்றாடுவதன் மூலமோ நியாயம் பிறக்காது, சிங்கம்போன்று வீறு கொண்டெழுங்கள்' என்று சொன்னார். அந்த அறிவுரையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய நாட்டிற்காக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இப்போது நான் சொன்னது யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காக அல்ல என்று கூறிக்கொண்டு, நான் சொன்ன கருத்துக்களைப் பரிசிலித்துப் பார்த்து எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வீறு கொண்டு எழுங்கள், நாங்கள் உங்களுக்குத் துணை நிற்போம் என்று கூறி எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

(பிற்பகல் 12-40)

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) நிகழ்ச்சி நிரலில் மாற்றம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே முடிவு செய்தபடி, 5—5—1986 அன்று மாலை 4.30 மணிக்கு அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்வதற்காகக் கூட இருந்த மேலவைக் கூட்டம் நடைபெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

தொழில் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தொழிற் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி வி. ஜெயலட்சுமி அவர்களும், திரு. காடுவெட்டி

கண்ணப்பன் அவர்களும், திரு. எல். ஜெயச்சந்திரன் அவர்களும், திரு.என்.சி. ராகவாச்சாரி அவர்களும், திரு. சுப்பு அவர்களும், திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களும் பேசி முடித்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்த மாமன்றத்தில் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லிய உறுப்பினர் பெருமக்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே, இன்றைக்கு நரிமணத்திலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயைக் கொண்டு வரச் சொல்லியிருந்தோம். அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக அது அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நரிமணத்திலே, அறிஞர் அண்ணா அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதன்முதலாகத் தேர்தலில் போட்டியிட்டபோது, ஒரு பெரிய வண்ணச் சுவரொட்டியை ஒட்டினார்கள் . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பொருள் எதையும் இந்த அவையிலே காட்டக்கூடாது என்பது மரபு. எனவே காண்பிக்காமல் இருப்பது நல்லது. இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் காண்பித்தால், இன்னொரு நாள் இன்னொரு உறுப்பினர் காட்டுவார் . . .

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஜியாலஜி டிப்பார்ட்மெண்டிலிருந்து அனுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : No exhibit should be shown in the house. It is not permissible. பின்னாலே அது பிரச்சினையாகும். ஒரு உறுப்பினர், "அமைச்சருக்கு அனுமதி கொடுத்தீர்கள், எனக்கும் அனுமதி கொடுங்கள்" என்று கேட்பார். அது பிரச்சினையாகிவிடும்.

திரு. ப. மாணிக்கம் : துணைத் தலைவரவர்களே, தலைவரவர்களுடைய முன் அனுமதி பெற்று, காட்டலாமென்று விதி இருக்கிறது. இது ஒரு குற்றச் சாட்டாகவோ, அத்தாட்சியாகவோ அல்ல, தமிழ்நாட்டில் தரமான எண்ணெய் கிடைத்திருக்கிறது. அந்தச் சாதனையை அவைக்குக் காட்டுவது என்பதை அத்தாட்சி என்ற அடிப்படையில் பார்க்காமல், தமிழ் நாட்டுக்குக் கிடைத்துள்ள நம்பிக்கை—பொருளாதார நம்பிக்கை—என்ற அடிப்படையில் பார்த்து, இந்த விஷயத்தில் நம்முடைய விதியைத் தளர்த்த வேண்டுமென்று சொல்லவில்லை, இது விதிக்கு முரணாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு நன்றி. தலைவரவர்களின் அனுமதி பெற்று காட்டலாம் என்பதை, பார்த்துத் தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. இது ஒரு முன் உதாரணமாகக் கூடாது என்றுதான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற மாதிரி, இன்னொருத்தர் சொல்லி, முன்னுதாரணமாகி, பிரச்சினை வரக் கூடாது. மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டால், எனக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அமைச்சரவர்கள் இதைத் தவிர்க்க வேண்டுமென்றோ, அவர்கள் செய்வதைக் குற்றம் என்றோ சொல்ல வில்லை. அவையினுடைய மரபு அப்படி இருக்கிறது என்று சுட்டிக் காட்டு கிறேன். எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அப்படி நினைத்தால், எனக்கு எந்த வித ஆட்சேபணையும் இல்லை.

(பிற்பகல் 12-45)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவையின் மரபுகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனாலும் தலைவரின் அனுமதியைப் பெற்று காட்டுவதில் ஆட்சேபணை இல்லை. இருப்பினும் இம் மாதிரி பொருள்களை அவைக்கு வெளியே கொண்டு போய் காட்டுவதுதான் நல்லது. அந்த வகையில் தலைவர் அவர்கள் இங்கே சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்கள் பேசுகின்றபோது, எது எதையோ கொண்டு வந்து காட்டினார்கள். அதுபோல கோவாப்பரேட்டிவ் சொசைட்டிசில் வருவதை எல்லாம் இங்கே கொண்டு வந்து பிரித்துக் காட்டினார்கள் என்பதை நான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதற்கு துணைத் தலைவர் அனுமதி அளிக்கவில்லை என்பதையும் நான் உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதை இங்கே காட்ட காரணம் இருக் கிறது. நீண்ட காலமாக இருந்து வந்தது இந்தப் பிரச்சினை. 1957 ஆம் ஆண்டிலே போஸ்டர் அடிக்க முடியாத சூழ்நிலையிலே நாங்கள் போஸ்டர் அடித்து ஒட்டினோம். அங்கிருந்து இத்தனை வருடங்களாக எதையும் எடுக்கவில்லை, அதுதான் எனக்கு இருக்கிற ஆதங்கம். இந்த வருடம்

தான் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதுவும் ரஷ்ய உதவியுடன் கண்டுபிடித் திருக்கிறார்கள். பெரிய அளவில் தமிழகத்தின் பொருளாதாரத்தையே மாற்றும் அளவுக்கு இதனைக் கண்டுபிடித்ததன் மூலம் விளைவு ஏற்பட்டிருக் கிறது. தஞ்சாவூரில் எண்ணெய் கிடைக்கவில்லை, கிடைக்கவில்லை என்று இத்தனை வருடங்களாகப் பிரச்சினை இருந்த நிலையில் இன்றைக்கு களப்பா லில் 10 ஆயிரம் அடிக்கு மேல் தோண்டி இதனைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதுபோல் இரண்டு இடங்களிலும் எண்ணெய்க்கான சாத்தியக் கூறுகள் இருக் கின்றன. அவ்வளவு பெரிய ஆராய்ச்சி இது சம்பந்தமாக ரஷ்ய நாட்டின் உதவியுடன் நடந்திருக்கிறது. மேலும் கிடைக்கப் போகிற எண்ணெயைப் பொறுத்தவரையில், 80 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்த எண்ணெய் இது. ஆனால் மற்ற இடங்களில் கிடைக்கின்ற எண்ணெயைப் பொறுத்தவரையில், அது 40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள எண்ணெய் என்று சொல் கிறார்கள். அந்த வகையில் இது நீண்ட காலத்திற்குக் கிடைக்கின்ற ஒன்று. மேலும் இந்தியா பூராவுக்கும் தேவைப்படுகிற எண்ணெய் இங்கு கிடைத் தாலும் கிடைக்கும். அத்துடன் இது தமிழ்நாட்டின் பொருளாதாரத்தையே மாற்றக்கூடிய ஒன்று. அத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவு நனவாகியிருக்கிறது. அதனால்தான் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. மேலும் அண்ணாவுடன் இருந்தவர்களில் பலர் இன்றைக்கு இல்லை. அவர்கள் குறைந்துகொண்டே வருகிறார்கள். அதனால் தான் இதைச் சொல்கிறேன். மேலும் இந்த எண்ணெயிலிருந்து நமக்குக் கொஞ்சம் பங்குத் தொகை கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் சொல்கிறேன். மத்திய அரசு தான் இதனை எடுக்கிறது. செலவுத் தொகை போக எப்படியும் லாபம் வரும். மாநிலத் திற்கும் ஒரு பங்குத் தொகை தரவேண்டும் என்பதுதான் நம்முடைய எண்ணம். பூராவையும் அவர்களே எடுத்துக்கொண்டு விடக்கூடாது. நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் பொறுத்தமட்டில், அவர்கள் செய்வது போல் இதிலும் செய்தால், அது சரியல்ல. இது தமிழ் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படும். வேலை வாய்ப்பு கிடைக்கும். மத்திய அரசு இதிலே பங்கு தரும். தர வேண்டும் என்பது எங்களுக்கு இருக்கிற எண்ணம். அதற்காகத்தான் இந்த எண் ணெயைக் காட்டுவதற்காகக் கொண்டு வந்தேன். இந்த எண்ணெய் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, ஒன்றைச் சொல்கிறேன். புவியியல்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் குவா லிட்டியான எண்ணெய் என்கிறார்கள். யாராவது இங்கேயுள்ள உறுப்பினர் ஒருவர் அது குவாலிட்டியானது அல்ல என்று சொன்னால், அதுபற்றி இங்கே நிரூபிக்க முடியாது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதுபற்றிய ஆராய்ச்சிக்கு நான் போக விரும்பவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அமைச்சர் விரும்பாமல் இருக்கலாம். யாராவது அந்தக் கருத்து சரியில்லையென்று சொன்னால், அதனை நிரூபிக்க முடியாது. யாராவது இதுபற்றிப் பிரச்சினை கிளப்பக் கூடும். நான் எண்ணெயின் தரத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னால், இதிலே முடிவுக்கு வர முடியாது. அப்படிப்பட்ட பிரச்சினை வரக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். பிரச்சினை இல்லாதவரையில் அதிலே ஒன்றுமே இல்லை. பிரச்சினை என்றால், நாம் இதிலே முடிவுக்கு வரவும் முடியாது. யாரும் முடிவு சொல்லவும் முடியாது. அத்தகைய ஒரு சங்கடம் வரும் என்பதால் தான், அப்படிச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆசைப்பட்டதால் தான் கொண்டு வந்து காட்டினேன்.

திரு. ப. மாணிக்கம்: நெய்வேலியில் போல் அல்லாமல் இந்த எண்ணெயைப் பொறுத்தவரையில், பங்கு கிடைக்க வேண்டும் என்றார்கள். பங்கு என்றால், ராயல்டி என்ற அடிப்படையில் அப்படிக் கூறினார்களா? ஏனென்றால் அஸ்ஸாமில் அது இன்றைக்கு ஒரு பெரிய விவகாரமாக இருக்கிறது. ஒரு டன் எண்ணெய்க்கு 10 ரூபாய் கொடுக்கிறார்கள். பங்கு வேண்டுமென்று கேட்டார்கள். இங்கே ராயல்டி என்கிற அடிப்படையில், அதிகத் தொகை வேண்டுமென்று கேட்கிறார்களா? அல்லது எண்ணெயில் பங்குத் தொகை கேட்கிறார்களா? அல்லது சுத்திகரிப்பு ஆலை வேண்டுமென்று கேட்கிறார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தமாதிரி மட்டெயில்சுக்குள் எல்லாம் போக விரும்பவில்லை. அந்த வகையில் இதனை விவாதப் பொருளாக ஆக்கவும் விரும்பவில்லை. மத்திய அரசும் மாநில அரசும் உட்கார்ந்து பேசி முடிவெடுக்கப்பட வேண்டிய விவகாரம் இது. எண்ணெய் எடுப்பதில் நியாயமான பங்கை அவர்கள் நமக்குத் தருவார்கள் என்று நினைக்கிறோம். மற்ற மாநிலங்களுக்குக் கொடுப்பது போல நமக்கும் கிடைக்க வேண்டும்.

(பிற்பகல் 12-50)

திரு. எம். பி. சுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, அங்கே எண்ணெய் கண்டுபிடித்து அது இன்னும் வியாபாரத்திற்கே வரவில்லை. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், கணவன் மாடு வாங்க வேண்டும் என்று சொன்னானாம். மனைவி, அதற்குள் எங்கள் அப்பன் வீட்டுக்கு மோர் கொடுப்பேன் என்று சொன்னாளாம் என்பதுபோல் அமைச்சர் பதில்

சொல்கிறார். என்னையே எடுக்கவில்லை. அதற்குள் பங்கு கேட்பது இதுபோல்தான் இருக்கிறது. நெய்வேலியைப்பற்றிச் சொன்னார்கள். இன்றைக்குக் கூட, இந்தியன் மைன்ஸ் ஆக்ட்டின்படி, டன் ஒன்றுக்கு எங்களுக்கு இவ்வளவு கொடுங்கள் என்று கேட்க நமக்கு உரிமை இருக்கிறது. அதைக் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாடு வாங்குவது என்று முடிவு எடுத்துவிட்டால், பெண்டாட்டி சொல்வதையும் கேட்கத்தான் வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கும்வரை குறுக்கிடாமல் இருக்க வேண்டும். அவர் பேசி முடித்தபின், விளக்கம் கேட்கலாம். இல்லையென்றால் பேச்சில் தொடர்பற்றுப் போகிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அம்மையார் அவர்கள் பேசும்போது டிட்கோ நஷ்டத்தில் நடப்பதுபற்றிச் சொன்னார்கள். டிட்கோவில் இருக்கும் சில நிறுவனங்களை இப்போது விலக்கிவிட முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் டான்செம் பற்றி நீண்ட உரையாற்றினார்கள். ஆலங்குளம், அரியலூர் போன்ற சிமிண்ட் ஆலைகளில் எடுக்கப்பட்ட சுண்ணாம்புக்கல்லில் அதிகமான தாசு இருப்பதால், அங்கே நஷ்டம் இருந்தது உண்மை. அதோடு 100 சதவீதம் உற்பத்தி செய்யவில்லை என்றும் சொன்னார்கள். ஆலங்குளத்தில் 4 லட்சம் டன் சிமிண்ட் உற்பத்தி ஆக முடியும் என்று சொன்னாலும், இதுவரையில் அப்படி உற்பத்தி ஆகாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காகத்தான் இப்போது மின்வெட்டுக் காலங்களில் இந்தத் தொல்லை இருப்பதை உணர்ந்து, மின் வெட்டைத் தவிர்க்க 2500 கிலோ வாட்ஸ் திறன் கொண்ட சுய உற்பத்தி கலன்கள் அங்கே நிறுவப்பட்டிருக்கின்றன. அடுத்த மாதத்திலிருந்து அவை இயங்கத் தொடங்கும். அடுத்த ஆண்டு 100 சதவீதம் சிமிண்டு உற்பத்தி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆலங்குளம், அரியலூர் இரண்டிலும் இப்போது அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரியலூரில் இதே திறன் கொண்ட மூன்று கலன்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு அரியலூரிலும் 100 சதவீதம் சிமிண்டு உற்பத்தி ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆலங்குளத்தில் ஈ.எஸ்.எப். சரியாக வேலை செய்யவில்லை என்று சொன்னார்கள். ஆலங்குளத்தில் மின் கட்டுப்பாடு காரணமாக தொடர்ந்து ஆலை இயங்கவில்லை. சுய உற்பத்தி கலன்கள் நிறுவப்பட்டு வருவதால், இந்த வேலைகளை நன்றாகச் செய்ய முடியும்.

ஆலங்குளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் நிறுவனம் தண்ணீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். தண்ணீர்ப் பற்றாக்குறை பாதிப்பு என்ற நிலைமை இல்லை. அதற்கான நடவடிக்கைகளையும் தற்போது அந்த நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கிற அரசுத் துறை நிறுவனங்கள், தங்களுக்குத் தேவையான ஆஸ்பெஸ்டாஸ் கூரைகளை இங்கேயே வாங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். காரணம், அளவுக்கு அதிகமாக உற்பத்தி ஆவதால் மார்க்கெட் இல்லை. அதோடு இனிமேல் புதிய ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் சிமிண்ட் பைப் தொழிற்சாலைகளுக்கு லைசன்ஸ் கொடுக்க வேண்டாம் என்று மத்திய அரசையும் கேட்டிருக்கிறோம். குடிநீர் வடிகால் வாரியம் கூட இந்த பைப்புகளை வாங்குவதில்லை என்று அம்மையார் பேசினார். அவர்கள் மட்டுமல்ல, எல்லா அரசுத் துறை நிறுவனங்களும் இங்கேதான் பைப்புகள் வாங்குகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்காட் கடிகாரம் பற்றிச் சொன்னார்கள். அந்த ஒன்றைத்தான் அதிகமாக மார்க்கெட் செய்ய முடியவில்லை. ஆகவே இப்போது நான் இந்தத் துறையின் பொறுப்பேற்ற பிறகு, நானே போய்ப் பார்த்தேன். அதன் பிறகு தவணை முறையில் எல்காட் கடிகாரங்களை விற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லி அதன்படி செய்து வருகிறார்கள்.

(பிற்பகல் 12-55)

'டாமின்' நிறுவனத்தைப்பற்றி சில குறைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்நிறுவனம் குறித்து நான் மேலவையிலும் கூட குறிப்பிட்டிருக்கிறேன். தமிழ்நாடு கனிம நிறுவனம் விற்கும் விலைகளுக்கு மேல் எந்த அண்டை மாநிலமும் மற்றும் தனியாரும் சாம்பல் நிறப் பாறைகளை விற்கவில்லை. அதற்கு மாறாகக் குறைந்த விலைக்கே விற்பனை செய்கின்றன என்பதை சில எடுத்துக்காட்டுகள் மூலம் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முட்டீஸ்வரா கிராடைட் எக்ஸ்போர்ட் என்கிற நிறுவனம் விற்பனை செய்த வில்லை 550 டாயிஷ் மார்க் ஆகும். ஆனால் டாமினின் விலை 650 டாயிஷ் மார்க் ஆகும். மைசூர் மினரல்ஸ் லிமிடெட் பெங்களூர் விற்பனை செய்த விலை 700 டாயிஷ் மார்க் ஆகும். ஆனால் டாமினின் விலை 725 டாயிஷ் மார்க் ஆகும். ராயல் கிராடைட்ஸ், • குப்பம் (ஆந்திர மாநிலம்) விற்பனை செய்த விலை 740 டாயிஷ் மார்க் ஆகும். ஆனால் டாமினின் விலை 800 டாயிஷ் மார்க் ஆகும். அது மட்டுமல்லாமல், சுமார் 4,000 கன மீட்டர்

நாம் மேற்கு ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்கிறோம். மேற்கு ஜெர்மனியில் இருக்கும் திரு. ஆடம் டாக்கோ என்பவருக்கு தமிழ்நாடு கனிம நிறுவனம் மூலம் 4,000 கன மீட்டர் ஏற்றுமதி செய்கிறோம். தமிழ்நாடு கனிம நிறுவனம், இவருக்கு 1980-இல் கன மீட்டர் 650 டாயிஷ் மார்க்குகளுக்கு விற்பனை செய்தது. 650 டாயிஷ் மார்க்குகள் அப்போது கரும்பாறைகளைத் தனியார் விற்றுவந்த 350 அமெரிக்க டாலர் விலைக்குச் சமமானதாகும். ஆண்டுக்காண்டு இது கூடுதலாகி தற்போது விற்பனை விலை 810 டாயிஷ் மார்க்குக்கு உயர்ந்துள்ளது.

சாம்பல் நிறப் பாறைகளுக்கு ஐரோப்பாவில் கூடிவரும் கிராக்கியை அறிந்த சில நிறுவனங்கள் தமிழ் நாடு கனிம நிறுவனத்தை அணுகின. ஆனால், அவர்களுக்கு திரு. ஆடம் டாக்கோவிற்குள்ள நிலையான பெரிய சந்தை அமைப்பு கிடையாது என்பதால், அவர்களுடன் தமிழ் நாடு கனிம நிறுவனம் வணிகத் தொடர்பு கொள்ளவில்லை. கூடுதலான விலையில் குறைந்த அளவு ஏற்றுமதி செய்வதைவிட சற்றுக் குறைவான விலையில் அதிக அளவு நிலையான ஒப்பந்த முறையில் ஏற்றுமதி செய்வது என்பது சிறந்ததொரு வணிகக் கொள்கையாகும். எம்.எம்.டி.சி. தனது இருப்புக் கனிம ஏற்றுமதியில் இதே கோட்பாட்டைக் கடைப் பிடிக்கிறது. இன்றைக்குக் கூட பத்திரிக்கைகள் மூலமாக நாம் இதைக் காணலாம்.

நம்முடைய தமிழகத்தில் கறுப்புக்கல் ஏற்றுமதிக்கு முயற்சி செய்து, வெளிநாட்டுக்காரர்கள் எடுத்துக்கொள்ளாமல், அதை ஏலத்திலே விடக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு வந்திருப்பதை பத்திரிக்கையிலே நாம் காணலாம். 'டாமின்'-க்கு அந்த துர்பாக்கிய நிலைமை என்றைக்கும் ஏற்பட்டது கிடையாது. அந்த அளவுக்கு நாம் மிகவும் ஜாக்கிரதையாகச் செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள், ஒரே வணிகருக்கு டெண்டர் முறையைப் பின் பற்றாமல் சாம்பல் நிறப்பாறைகள் ஏற்றுமதி செய்யப்படுவதாக புகார் கூறினார்கள். கரும்பாறை வணிகத்தில் உலகத்திலேயே டெண்டர் முறையை அறிமுகப்படுத்திப் பயனடைவது தமிழ் நாடு கனிம நிறுவனம் மட்டுமே. வெளிநாடுகளில் கரும் பாறைகளுக்கு நல்ல கிராக்கியுள்ளதால், டெண்டர் முறையைத் தமிழ் நாடு கனிம நிறுவனம் பின்பற்றி, தமிழ் நாட்டுக் கரும் பாறைகளுக்குக் கூடுதலான ஏற்றுமதி விலையைப் பெற்று வருகிறது. ஆனால் சாம்பல் நிறப்பாறைகளின் விற்பனை அப்படியல்ல. கரும்பாறைகளுக் குள்ளதுபோல் சாம்பல் நிறப்பாறைக்குச் சந்தை கிடையாது. மேற்கு ஜெர்மனி—இத்தாலி நாடுகளில் மட்டும் சொற்ப அளவே சாம்பல் நிறப்

பாறைகளுக்கு சந்தை உள்ளது. ஜப்பானில் இதற்கு சந்தை அறவே கிடையாது. ஆகவே அவற்றை டெண்டர் முறையில் விற்பதற்கு முடியாது. பேச்சுவார்த்தைகளின் மூலம்தான் விலை நிர்ணயம் செய்து எற்றுமதி செய்ய வேண்டும். மேற்கு ஜெர்மனியில் திரு. ஆடம் டாக்கோ என்பவர்தான் முதன் முதலாக சாம்பல் நிறப்பாறைகளுக்குச் சந்தையை உருவாக்கிக் கொடுத்தவர் என்கிற குறிப்பையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள், இரயில் பெட்டித் தொழிற்சாலை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் உற்பத்தி செய்கிற மின்சக்தியை மாநில அரசே பயன் படுத்த வேண்டுமென்கிற கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். இரயில் பெட்டித் தொழிற்சாலை இங்கே அமையவிருந்த ஒன்று, பல்வேறு அரசியல் காரணங்களினால் வேறொரு மாநிலத்திற்குப் போய்விட்டதென்பதை நாம் அறிவோம். இதற்குப் பதிலாக தமிழகத்திற்கு வேறேதாவது ஒன்று கிடைக்கலாம் என்கிற எண்ணத்தில்தான் இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன், கடலூர் துறைமுகத்தை விரிவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். கடலூரில் சிப்காட் நிறுவனம் ஒரு பெரிய தொழிற்பேட்டையையே உருவாக்கியிருக்கிறது. அப்பகுதி நிலத்தின் விலையெல்லாம் உயர்ந்துகொண்டு வருகிறதென்று சொன்னார்கள். நிலத்தைப் பொறுத்தவரையில், கும்முடிப்பூண்டியானாலும் சரி, கடலூர் ஆனாலும் சரி

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

7. தகவல் கோரல்.

(2) அவையில் பொருட்களைக் காண்பிப்பது குறித்து.

திரு. ஆர். டி. சீத்தாபதி: துணைத் தலைவரவர்களே, ஒரு "பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்". கூட்டுறவுத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் நடைபெற்ற நேரத்தில் தாங்கள் ஒரு தீர்ப்பு தந்தீர்கள். அதற்குள் நான் போகவில்லை. இந்த அவையில் உள்ள எல்லா உறுப்பினர்களும்—இங்கே இப்போது அவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக எதிர்க் கட்சித் துணைத் தலைவர்

என்றார். அதுபோல, பதவியில் அமர்ந்த தீவிரவாதிகள் ஊமையாக ஆகி விடக்கூடாது. அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது அப்படி ஆகிவிடக்கூடாது எனபதுதான.

இப்போது டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொன்ன கருத்தை தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

"The rights are got, not by the mere passing of resolutions or supplication, but only by rising to assert our rights".

அதையே தமிழில் சொல்லும்போது, 'பறிபோகிற உரிமைகளை பிச்சைபோல் கேட்காதீர்கள். தீர்மானங்கள் மூலமோ, மன்றாடுவதன் மூலமோ நியாயம் பிறக்காது, சிங்கம்போன்று வீறு கொண்டெழுங்கள்' என்று சொன்னார். அந்த அறிவுறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய நாட்டிற் காக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இப்போது நான் சொன்னது யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காக அல்ல என்று கூறிக்கொண்டு, நான் சொன்ன கருத்துக்களைப் பரிசீலித்துப் பார்த்து எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வீறு கொண்டு எழுங்கள், நாங்கள் உங்களுக்குத் துணை நிற்போம் என்று கூறி எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

(பிற்பகல் 12-40)

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) நிகழ்ச்சி நிரலில் மாற்றம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே முடிவு செய்த படி, 5—5—1986 அன்று மாலை 4.30 மணிக்கு அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்வதற்காகக் கூட இருந்த மேலவைக் கூட்டம் நடைபெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

தொழில் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தொழிற் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி வி. ஜெயலட்சுமி அவர்களும், திரு. காடுவெட்டி

பாறைகளுக்கு சந்தை உள்ளது. ஜப்பானில் இதற்கு சந்தை அறவே கிடையாது. ஆகவே அவற்றை டெண்டர் முறையில் விற்பதற்கு முடியாது. பேச்சுவார்த்தைகளின் மூலம்தான் விலை நிர்ணயம் செய்து எற்றுமதி செய்ய வேண்டும். மேற்கு ஜெர்மனியில் திரு. ஆடம் டாக்கோ என்பவர்தான் முதன் முதலாக சாம்பல் நிறப்பாறைகளுக்குச் சந்தையை உருவாக்கிக் கொடுத்தவர் என்கிற குறிப்பையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள், இரயில் பெட்டித் தொழிற்சாலை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் உற்பத்தி செய்கிற மின்சக்தியை மாநில அரசே பயன் படுத்த வேண்டுமென்கிற கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். இரயில் பெட்டித் தொழிற்சாலை இங்கே அமையவிருந்த ஒன்று, பல்வேறு அரசியல் காரணங்களினால் வேறொரு மாநிலத்திற்குப் போய்விட்டதென்பதை நாம் அறிவோம். இதற்குப் பதிலாக தமிழகத்திற்கு வேறேதாவது ஒன்று கிடைக்கலாம் என்கிற எண்ணத்தில்தான் இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன், கடலூர் துறைமுகத்தை விரிவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். கடலூரில் சிப்காட் நிறுவனம் ஒரு பெரிய தொழிற்பேட்டையையே உருவாக்கியிருக்கிறது. அப்பகுதி நிலத்தின் விலையெல்லாம் உயர்ந்துகொண்டு வருகிறதென்று சொன்னார்கள். நிலத்தைப் பொறுத்தவரையில், கும்முடிப்பூண்டியானாலும் சரி, கடலூர் ஆனாலும் சரி

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

7. தகவல் கோரல்.

(2) அவையில் பொருட்களைக் காண்பிப்பது குறித்து.

திரு. ஆர். டி. சீத்தாபதி: துணைத் தலைவரவர்களே, ஒரு "பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்". கூட்டுறவுத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் நடைபெற்ற நேரத்தில் தாங்கள் ஒரு தீர்ப்பு தந்தீர்கள். அதற்குள் நான் போகவில்லை. இந்த அவையில் உள்ள எல்லா உறுப்பினர்களும்—இங்கே இப்போது அவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக எதிர்க் கட்சித் துணைத் தலைவர்

திரு. சாதிக் பாட்சா அவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் இருக்கிறார்கள்—எதிர்காலத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு ஒரு 'கெய்டுலைன்ஸ்' துணைத் தலைவரவர்கள் கொடுத்தால் நன்றாக இருக்கும். முன்பு கூட்டுறவுத் துறை கொள்கைக் குறிப்பு மீது மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் பேசும் போது அவர்கள் மெட்டியைக் காண்பித்ததற்காக, இங்கே நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினேன். அதற்கு தாங்கள் அதை இங்கே காட்டக் கூடாது என்று ரூலிங் கொடுத்தீர்கள். ஆனால் திரு. எல். கணேசன் அவர்கள் பேசும்போது, இங்கே கொடி, மற்றவைகளைக் காட்டினார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் எண்ணெயைக் கொண்டுவந்த நேரத்தில் அதற்காக வாதிடுகிறேன் என்று தயவுசெய்து துணைத் தலைவர் அவர்கள் கருதிக்கொள்ளக் கூடாது. ஒரு மரபு இருக்க வேண்டுமென்பதற்காகத் தெரிவிக்கிறேன். இனி எதிர்காலத்தில் உறுப்பினர்கள் தங்களுடைய அனுமதியைப் பெற்று பல பொருட்களை அவைக்குள்ளே கொண்டு வரலாமா என்பதை அவை முன்னவர் அவர்களும் சேர்ந்து முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முதலிலே உறுப்பினரவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பக்கூடாது; எதுவும் சம்பந்தம் இல்லாமல் கிளப்பக்கூடாது. திரு. கணேசன் அவர்கள் என்ன கொடியைக் காட்டினார் என்பது எனக்குத் தெரியாது. அப்போது யார் தலைமை வகித்தார்கள் என்பதும் தெரியாது. ஆகவே தலைமை வகித்தவர் அதற்கு முடிவு சொல்ல வேண்டும். யார் தலைமை வகித்தார்களோ அவர்கள் சொல்வது தான் முடிவானது. தலைவர் அவர்கள் தலைமை வகிக்கும்போது தலைவர் தீர்ப்பு முடிவானது. துணைத் தலைவர் தலைமை வகிக்கும்போது, அவருடைய தீர்ப்பு முடிவானது. மாற்றுத் தலைவர் தலைமை வகித்தால், மாற்றுத் தலைவருடைய தீர்ப்பு முடிவானது. ஒருவருடைய தீர்ப்புக்கு மேலே யாரும் அப்பீல் செய்ய முடியாது. ஆகவே யார் தலைமை வகித்தார்களோ அவர்கள் செய்தது சரியா, தவறா என்று நான் சொல்ல இயலாது. அது முறையும் அல்ல. அந்தப் பிரச்சினையை உறுப்பினரவர்கள் இப்போது கிளப்புவது சரியாக இருக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன். ஆகவே அந்தப் பிரச்சினையை உறுப்பினரவர்கள் கிளப்பாமல் இருப்பது நல்லது . . .

திரு. ஆர். டி. சித்தாபதி: துணைத் தலைவரவர்களே, நான் கிளப்ப விரும்புவது

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எதற்காகச் சொல்கிறேன் என்றால், முன்பே இந்தப் பிரச்சினையைப்பற்றி எழுப்பப்பட்டிருக்கிறது. சட்ட சபையில் ஒரு முறை 1966-ல் ஒரு இட்லி அளவு குறைந்து போய் விட்டது என்று சொல்லி ஒரு உறுப்பினர் இட்லியை எடுத்துக் காண்பித்தார். அப்போது முதலமைச்சர் அவர்கள் இட்லியைக் காண்பிக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதுமாதிரி காட்ட வேண்டுமென்று சொன்னால், தலைவருடைய அறையில் அவருடைய அனுமதியைப் பெற்று, செல்லலாமென்று கருத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் தலைவர் அதற்கு அனுமதி அளிக்க மாட்டார். பொதுவான விதி, அவையில் எதையும் காண்பிக்கக்கூடாது என்பதுதான். ஒரு முறை ஒரு கம்யூனிஸ்ட் உறுப்பினர் பாம்பைக் கொண்டு வந்து விட்டார். அவர் அந்தப் பாம்பைக் கொண்டுவந்து காண்பிக்கிறேன் என்று சொல்லும்போது, அதை அனுமதிக்க இயலாது. ஆகவே உறுப்பினர்கள் என்ன பொருளைக் கொண்டு வருவார்கள், அந்தப் பொருளுக்கு என்ன அத்தாட்சி, அது சரியா, தவறா என்று பல பிரச்சினைகளுக்கு இடம் அளிக்கும் என்பதனாலே, எந்தப் பொருளையும் கொண்டுவரக் கூடாது என்பது என்னுடைய தீர்ப்பாகும். இன்னொருவர் கொடுத்த தீர்ப்புக்கு உறுப்பினரவர்கள் என்னிடத்தில் முறையீடு செய்ய முடியாது என்பதையும், அப்போது என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது என்பதையும், ஆகவே உறுப்பினரவர்கள் அதைப்பற்றிப் பேசவேண்டாமென்றும், அவர்கள் அமரும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: துணைத் தலைவரவர்களே, எல்லோருக்கும் தெரியும்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இந்தச் சமயத்தில் அந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கான எந்தவிதமான நிலையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. மாயவன்: துணைத் தலைவரவர்களே, 'ரூலிங்' என்பது அந்த இடத்தில் அமருகிறவர்களைப் பொறுத்து மாறுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேல் முறையீடு கிடையாது. யார் இந்த அவையில் உட்கார்ந்துகொண்டு தீர்ப்பு அளிக்கிறார்களோ, அவர்கள் சொல்வதே முழுமையானது. அவர்கள் சொல்வதை எடுத்துக்கொண்டு மற்றொருவரிடத்தில் சென்று மேல் முறையீடு செய்வதற்கு இங்கு வகை கிடையாது. இங்கே துணைத் தலைவர் ஒரு தீர்ப்பு சொன்னால், அதற்கு

மேல் முறையீடு எதுவும் கிடையாது. இன்னொரு தீர்ப்பை மாற்றுத் தலைவர் சொன்னாரென்றால், அதற்கு மேல் முறையீடு துணைத் தலைவரிடத்திலேயும், துணைத் தலைவர் செய்த காரியத்திற்கு தலைவரிடத்திலேயும் மேல் முறையீடு செய்ய இயலாது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே இந்தப் பிரச்சினையைப்பற்றி இப்போது எழுப்ப வேண்டாம். அன்றைக்கு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: துணைத் தலைவரவர்களே, நான் தங்களுடைய விவாதத்திலே பங்கு கொள்ளவில்லை. என்னுடைய விவாதத்தை முடித்தால் போதுமென்று நான் கருதுகிறேன்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தொழில் அமைச்சரவர்கள் நீண்ட நாள் சட்டமன்றத் தலைவராக இருந்தவர்கள். அவர்களுக்கு என்னைவிட அதிகமாக அதனுடைய சட்டத்தைப்பற்றித் தெரியும். ஆகவே நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

5. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புமீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழ்நாடு கனிம நிறுவனத்தைப் பற்றி உறுப்பினர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பல இடங்களிலே ஜியாலஜிஸ்ட்களை நியமித்திருக்கிறார்கள்; ஆனால் பொறியாளர்களை நியமிக்கவில்லை என்று சொன்னார்கள். மைனிங் டிப்ளமா படித்தவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; குவாரிகளை மேற்பார்வையிட்டு காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-05)

மைனிங் லொகேஷன்கள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. காடுகளிலும் மலையடிவாரங்களிலும் எல்லாம் இருக்கின்றன. எனவே சுரங்கத் தொழில் படித்த இளைஞர்கள்தான் இதில் வேலை செய்கிறார்கள். அவர்களும் நல்லபடியாக வேலை செய்கிறார்கள்.

அடுத்து, கட்டப்பட்ட கட்டிடம் பற்றி பேரவையிலும் சரி மேலவையிலும் சரி, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அந்தக் கட்டிடம் இ.இ.சி. என்கிற கம்பனியால் கட்டப்பட்டிருக்கிறது. அது உலகத்திலேயே பெரிய

ஆகிவிடும். ஏற்கெனவே கரும்பை அரைத்துவிட்டவர்கள், இப்போது போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். கரும்பை அரைக்காமல் வெளியில் இருப்பவர்கள் அப்படிச் செய்யவில்லை. எனக்கு அரை ஏக்கர் நிலம் கூட தர்மபுரியில் இல்லை. நியாயமான விலையை எல்லா விவசாயிக்கும் கொடுக்கிறோம். இந்த ஆண்டு அதிக விலை கொடுத்தால், அடுத்த ஆண்டு சர்க்கரை ஆலையை நடத்த வேண்டுமா, வேண்டாமா? எல்லோரையும் சமமாகத்தான் வைத்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், கரும்பாலையில் இப்போது நியாயமான விலைக்கே கரும்பை எடுக்கிறார்கள். அதில் அவர்கள் பங்குத் தொகை கேட்கிறார்கள். அவ்வளவுதான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்று மாலை 5 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள், சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு விருந்து வைத்து அழைத்திருக்கிறார்கள். ஆகவே அதில் அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மேலவை மீண்டும் 10—5—1986 சனிக்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-32)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

இல்லை

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

184. மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

185. நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து கப்பல் போக்குவரத்து குறித்த சாதனை பற்றிய ஆய்வுரை, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

1986 மே 3]

186. 1986-87 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாடு துறைமுகத் துறை பற்றிய சாதனை விளக்க அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

187. எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்க ஆய்வுரை, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

188. பாசனம் மற்றும் கட்டிடங்கள் மீதான கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

189. பொதுப்பணித்துறை (கட்டிடப்பிரிவு) 1985-86 ஆம் ஆண்டின் பணிகள் பற்றிய ஆய்வுக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

190. செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கைக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

191. பொது நிறுவனங்கள் குழுவில் முப்பத்தி ஒன்றாவது அறிக்கை 1985-86 (ஆங்கிலம் மற்றும் தமிழ்).

192. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை, 1985-86 (தமிழ்).

193. பொது கணக்குக் குழுவின் முப்பத்திரண்டாவது அறிக்கை 1985-86 (தமிழ்).

194. பொது கணக்குக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை 1985-86 (தமிழ்).

195. பொது கணக்குக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை 1985-86 (தமிழ்).

196. தொழில் கொள்கையும் திட்டங்களும் (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்) குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

197. 1986-87 ஆம் ஆண்டிற்கான ஊரக மற்றும் சிறு தொழில்கள் குறித்த சாதனைத் திட்டம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

இணைப்பு-

4 1 5 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

8—4—1986 அன்று பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் முதலமைச்சர் சத்துணவு மையங்களை தான் தனிமையாக ஆய்வு செய்து சத்துணவு அமைப்பாளர்கள் சிலரை தற்காலிக வேலை நீக்கம் செய்ய அறிவுரை வழங்கியதாக பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெரிவித்தார்.

அரசு ஆணை (வாலாயம்) எண் 1308, பொது (மு.கு.ச.தி.) துறை, நாள் 30—3—1984-ன் படி அதிகாரம் பெற்ற நபர்கள் தவிர வேறு எவரும் சத்துணவு மையங்களை தணிக்கை இடலாகாது. அதிகாரம் பெற்ற அலுவலர்கள் தவிர வேறு எவரேனும் தணிக்கை செய்து குறிப்பை அனுப்பினால் அதன் மீது நடவடிக்கை எடுப்பது சட்டப்படி செல்லுபடி யாகாது. ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் சத்துணவு மையங்களைப் பார்வையிட அனுமதி வழங்கப்படவில்லை. அவருடைய பார்வைக் குறிப்பின் மீதும் நடவடிக்கை எடுக்க இயலாது என்பதால், பெருந்தலைவர், அரசு அனுமதியில்லாத நிலையில் சத்துணவு மையங்களை ஆய்வு செய்ய வேண்டாம் என்று தெரிவித்து குறிப்பு வைக்கும்படி ஆணையருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தினார். அதன்படி ஆணையாளர் பெருந்தலைவருக்கு குறிப்பெழுதி வைத்துள்ளார்.

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மட்டுமே இப்பிரச்சினை அதிக அளவில் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதால் அந்த ஆணையருக்கு மட்டுமே பெருந்தலைவருக்கு குறிப்பு வைக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது போல இது சம்பந்தமாக மதிய சத்துணவுக் கூடங்களை பார்வையிடும் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களின் குறிப்புகள் மீது ஆணையாளர்கள் நடவடிக்கை எடுக்கக்கூடாது என தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவு ஏதும் போடவில்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு முக்கியத்துவம் அளித்து மாவட்ட முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்ட ஆய்வுக் குழுவில் அவர்கள் அங்கம் வகிக்க பொது (மு.கு.ச.தி.) அரசு ஆணை பல்வகை எண் 826, நாள் 15—4—1986-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1986 மே 3]

இணைப்பு II.

(420ம் பக்கத்தில் இனம் 5—க்கான அடிக்குறிப்பைக் காண்க)

தொழில் கொள்கையும் திட்டங்களும்.

1. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் தொழில் வளர்ச்சிக்கு பெரும் பங்குண்டு என்பதை நன்குணர்ந்த தமிழக அரசு இம்மாநிலத்தில் தொழில் வளம் பெருக அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து புதிய தொழில்கள் மேலும் அமைந்து செழித்தோங்க ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது.

2. கிராமப்புறப் பொருளாதாரம் வளர சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களுக்கு ஊக்கமும் உயர்வும் அளிக்கப்படவேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு பெரிய தொழில்கள் மேலும் உருவாக்கப்படவும் அதன் மூலம் வேலைவாய்ப்புகளைப் பெருக்கி வறுமையை வென்றிடவும் பல்வேறு திட்டங்களை வகுத்து திறம்பட செயல்படுத்தி வருகின்றது.

3. தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை திறம்பட செயல்படுத்தும் சீரிய நோக்குடன் கீழ்க்கண்ட அரசு சார்பு நிறுவனங்களை இவ்வரசு அமைத்துள்ளது. தமிழ்நாடு அரசு தொழில் துறையின் நேரடிப் பார்வையில் இந்நிறுவனங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அனைத்து வகைத் தொழிற்சாலைகளும் பெருகி வளமுற பாராட்டத்தக்க பணிகளை ஆற்றி வருகின்றன;—

(1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO)
(2) தமிழ்நாடு சிமென்ட் நிறுவனம் (TANCEM)
(3) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT)
(4) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC)
(5) தமிழ்நாடு அச்சுத்தாள் காகித நிறுவனம் (TNPL)
(6) தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN)
(7) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் (TANMAG)
(8) தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் (TASCO)

4. இம்மாநிலத்தில் புதிய தொழில்களை அமைக்க முன்வருவோர்க்கு வேண்டிய எல்லா உதவிகளையும் தங்கு தடையின்றி இவ்வரசு செய்து வருகிறது. புதிய விண்ணப்பங்களை பரிந்துரை செய்து, இசைவுக் கடிதம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டபின் அதைதொழில் உரிமங்களாக மாற்ற உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1977முதல் 1986 மார்ச் மாதம் வரை 819 விண்ணப்பங்களை புதிய தொழில்கள் துவங்குவதற்காக பரிந்துரை செய்து இவ்வரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. அவற்

றுள் 468 தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசால் அனுமதியளிக்கப்பட்டும் 255 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டும் உள்ளன. 1985-ம் ஆண்டில் (டிசம்பர் வரையில்) தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அமைக்க தொழில் முனைவோருக்கு 97 இசைவுக் கடிதங்களும், 155 தொழில் உரிம மாற்றங்களும் வழங்கப்பட்டுள்ளன. 1985-ம் ஆண்டில் 35 எஸ்.ஐ.ஏ. பதிவுகளும் 163 டி.ஜி.டி.டி. (D.G.T.D.) பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன. புதிய தொழில்களுக்கு அனுமதியளிக்கும் அதிகாரம் முழுவதும் மத்திய அரசிடம் உள்ளது. உரிமங்கள் வழங்குவதற்கு முன் மாநில அரசின் பரிந்துரையைப் பெறுவதில் ஒரு நிலையான நடைமுறையை மத்திய அரசு பின்பற்றுவதில்லை என்ற சங்கடமான சூழ்நிலையை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

5. ''தொழிற்சாலை இல்லாத மாவட்டம்'' என்ற திட்டத்தின் கீழ் 25 சதவித மூலதன உதவித் தொகையை பெற உத்திர பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் முதலிய வட மாநிலங்களிலும் மத்திய அரசின் நேரடி ஆட்சி பகுதியான புதுச்சேரியிலும் அண்டை மாநிலமான கர்நாடகத்திலும் தகுதிவாய்ந்த குறிப்பிட்ட சில பகுதிகள் உள்ளன. ஆனால் தமிழ்நாட்டில் தொழிற்சாலை இல்லாத மாவட்டம் ஏதும் இல்லாததால் அந்த அடிப்படையில் மத்திய அரசு வழங்கி வரும் சிறப்புச் சலுகைகளுக்குச் சமமான நன்மைகளை தமிழகம் பெற முடியாத நிலை உள்ளது. ''தொழிற்சாலை இல்லாத மாவட்டத்தில்'' தொழில் முற்றாதிக்கம் வரையறுத்த தொழில் நடைமுறைகள் சட்ட(M.R.T.P. Act) வரம்பிற்குள் வருகின்ற தற்போதைய தொழில் நிறுவனங்களையும் விரிவுபடுத்தும் கொள்கையை மத்திய அரசு பின்பற்றி வருவதால் பெருந் தொழில்கள் வளர்ச்சியில் தமிழ்நாடு எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் அடைய முடியவில்லை. இதில் மாற்றம் வேண்டுமென கூறி வருகிறோம். மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

6. பெரிய நடுத்தரத் தொழில்களை ஏற்படுத்த ஒரே மைய அமைப்புக் கோட்பாடு : முதுநிலை அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட ''உயரதிகாரக் குழு'' தமிழ்நாட்டிலுள்ள பெரிய, நடுத்தர தொழில்களுக்கான ஒரே மைய அமைப்பாகச் (Single window Agency) செயல்படுகிறது. தொழில் முனைவோருக்கு இசைவு வழங்குவதையும், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிப்பதையும் விரைவுபடுத்துவதற்காக இக்குழு மாதமொரு முறை கூடுவது மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

7. மூலதன உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து ஈடுசெய்து தொகை பெறுவதில் முன்னணியில் உள்ள சில மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ளலாம்,

1986 மே 3]

8. இவ்வரசு எடுத்த தீவிர நடவடிக்கை மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளின் பலனாக 1977 முதல் 1986 வரை தமிழ் நாட்டில் ரூ. 1,600 கோடிக்கு மேலாக முதலீடு செய்து புதிய தொழிற்சாலைகள்/விரிவாக்கப் பணிகள் மைய அரசைச் சார்ந்த நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளியில் கனரக உலோக துளையிடும் திட்டம், ஆவடியில் கனரக வண்டிகள் தொழிற்சாலை விரிவுப் பிரிவு போன்ற இம்மாநிலத்தில் உருவாகி வருகிற மத்திய அரசுத் திட்டங்களுக்கு நிலம், நீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தையும் அரசு வழங்கியுள்ளது. மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தையும், சென்னை உர நிறுவனத்தையும் விரிவுபடுத்த இயன்ற விரைவில் அனுமதிக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறது. மாநிலத்தில் தொடங்கப்படும் மத்திய அரசின் ஏனைய திட்டங்கள் வருமாறு:— சேலம் உருக்காலை 55.78 கோடி ரூபாய் செலவில் சென்ஸிமெர் ஆலை (Sensimer Mill) ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளது. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் 12.62 கோடி ரூபாய் செலவில் மின் தட்டச்சுப் பொறிகளையும், மின் அணுவியல் தட்டச்சுப் பொறிகளையும் தயாரிக்க முயற்சித்து வருகிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் விரிவுத் திட்டங்களைப் பொறுத்த வரையில் இரண்டாம் சுரங்கம் வெட்டியெடுக்கும் நிலக்கரி 4.7 மில்லியன் டன்னிலிருந்து 10.5 மில்லியன் டன்னாகவும் இரண்டாம், அனல் மின்நிலையம் உற்பத்தி செய்யும் மின்சாரம் 630 மெகவாட்டிலிருந்து 1,470 மெகவாட்டாகவும் அதிகரிக்கும். திட்டங்கள் 1983 ஆம் ஆண்டிலிருந்தே செயற்படுத்தப்படுகின்றன. பாரத மின்னணுவியல் நிறுவனம், 30 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு நந்தம்பாக்கத்தில் மின்னணுவியல் திட்டமொன்றை அமைக்க உத்தேசித்துள்ளது. இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனம் 2 கோடி ரூபாய் செலவில் ''காஸ்டிங்'' தொழிற்சாலையையும், 1.97 கோடி ரூபாய் செலவில் ஆராய்ச்சி வளர்ச்சி நிலையத்தையும், 10 கோடி ரூபாய் செலவில் காந்த நாடா தயாரிக்கும் தொழிற்சாலையையும் நிறுவி வருகிறது. மேலும் 170 கோடி ரூபாய் செலவில் எக்ஸ்ரே கதிர் பாலியஸ்ட்டர் பிலிம் தயாரிக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக அமெரிக்காவிலுள்ள டியுபான்ட் (Du Pont) என்ற நிறுவனத்துடன் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம் 27-3-1986 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. 200 கோடி ரூபாய் செலவில் கலர் சினிமா பிலிம் தயாரிக்கும் திட்டத்திற்கு விரைவில் அனுமதி வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.

[1986 மே 3

9 சென்னை ஏற்றுமதி பரிசீலனை மண்டலம்:

மாநில அரசு சென்னை ஏற்றுமதி பரிசீலனை மண்டலத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதில் இயன்ற உதவிகள் அனைத்தையும் மாநில அரசு செய்து வருகிறது. இதற்காக தமிழ்நாடு தொழில் ஆக்கக் கழகம் மாதிரி முகவரமைப்பாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட உயர் அதிகாரக் குழு பல்வேறு பணி முன்னேற்றங்களின் வளர்ச்சியை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. முதற்கட்டமாக 228.80 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக மேலும் 328.60 ஏக்கர் நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை ஏற்றுமதி பரிசீலனை மண்டலம் செயல்படத் தொடங்கியுள்ளது. மேலும் மேலும் தொழிலதிபர்கள் இத்திட்டத்தில் பங்கு பெற விரும்புகின்றனர். இதுவரை 160 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. இவற்றில் 80 விண்ணப்பங்களுக்கு சென்னை ஏற்றுமதி பரிசீலனை மண்டல வாரியம் இசைவளித்துள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட 80 விண்ணப்பதாரர்களில் 6 பேர் வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களாவர்.

10. தொழில் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கின்ற அரசு நிறுவனங்களின் செயல் திட்டங்கள் கீழே விவரிக்கப்படுகின்றன.

10. (1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ):

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பொதுத்துறையில் பெரிய, நடுத்தரத் தொழிற்சாலைகள் பலவற்றைத் தொடங்கி உள்ளது. மேலும் இக்கழகம், தனியார் தொழில் முனைவோரின் ஒத்துழைப்போடு கூட்டுத் துறையில் பல்வேறு தொழிற்பிரிவுகளைத் தொடங்கியுள்ளது. இம்மாநிலத்தில் இதுவரை 45 தொழிற்சாலைகள் ''டிட்கோ'' ஈடுபாட்டுடன் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றுள் 10 தொழிற்சாலைகள் பொதுத்துறையிலும், 35 தொழிற்சாலைகள் கூட்டுத் துறையிலும் இயங்குகின்றன. பொதுத்துறையில் இயங்கும் 10 தொழிற்சாலைகளில் ரூ. 93.55 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. 5,250 நபர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். கூட்டுத் துறையில் இயங்கும் 35 தொழிற்சாலைகளில் ரூ. 515.35 கோடி முதலீடு செய்யப்பட்டு 14,600 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

டிட்கோவினால் நிறுவப்பட்ட 45 தொழிற் திட்டங்களில் 38 திட்டங்கள் இம் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. பின்தங்கிய பகுதிகளில் விரைவான முன்னேற்றம் ஏற்பட டிட்கோ நிறுவனம் தொழிற்சாலைகளை அப்பகுதிகளில் நிறுவ அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.

1986 மே 3]

'டிட்கோ' பணியின் தொடர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ள ரூ. 20.55 கோடி முதலீட்டிலான டிடோனேடர்ஸ் மற்றும் டிடோனேடிங் ப்யூசஸ் திட்டம் (Detonators and Detonating Fuses Project) நடப்பு நிதியாண்டில் வணிக அளவிலான உற்பத்தியைத் துவங்க உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 500 நபர்களுக்கு மேல் வேலைவாய்ப்பு பெறுவர். இதே போல் ரூ. 5.85 கோடி முதலீட்டில் 110 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள 'மக்னீசியம் மெட்டல்' திட்டமும் (Magnesium Metal Project) இவ்வாண்டு உற்பத்தியைத் துவங்கும்.

தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து 'டிட்கோ' அமைத்துள்ள பென்டாசா கெமிக்கல்ஸ் லிமிடெட் (Pentasa Chemicals Limited), வட ஆற்காடு லெதர்ஸ் லிமிடெட் (North Arcot Leathers Limited) யுனி ஆர்கானிக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (Uni Organic Industries Limited) மற்றும் டைட்டான் வாட்சஸ் லிமிடெட் (Titon Watches Limited) முதலிய நிறுவனங்கள் நடப்பு நிதியாண்டில் வணிக அளவிலான உற்பத்தியைத் துவங்க உள்ளது. மொத்தம் 1,720 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் மேற்கண்ட தொழிற்சாலைகள் ரூ. 61.61 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் ஆண்டுக்கு 12,000 டன்கள் பிரோபைலின் ஆக்ஸைடு (Propylene Oxide) தயாரிக்க வசதி படைத்த புதிய தொழிற்சாலை ஒன்றை அமைக்க மத்திய அரசு டிட்கோவிற்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தை சென்னைக்கு அருகிலுள்ள மணலியில் கூட்டுத் துறையில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

மேலும் கீழ்க்கண்ட இரு தொழில் திட்டங்கள் டிட்கோவின் கூட்டுத் துறையின் கீழ் நிறுவ முடிவெடுக்கப்பட்டுள்ளது :—

(1) அமோனியம் நைட்ரேட் மற்றும் நைட்ரிக் ஆசிட் தயாரிப்புத் திட்டம்.

(2) ஜெல்லி பீல்டு டெல்போன் கேபிள்ஸ் தயாரிப்பு திட்டம். முதல் திட்டம் ரூ. 2,257 இலட்சம் முதலீட்டிலும், இரண்டாவது திட்டம் ரூ. 1,735 இலட்சம் முதலீட்டிலும் தீட்டப்பட்டுள்ளது. இந்த இரு புதிய திட்டங்களின் மூலம் முறையே 350 மற்றும் 270 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர்.

இவையல்லாமல் ரூ. 790 கோடி திட்ட மதிப்பீட்டில் 5,150 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய 16 புதிய தொழிற் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டங்கள் குறிக்கோள்களை வகுத்தல், சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரித்தல், தொழில் உரிமங்கள் பெறுதல், டி.ஜி.டி.டி. (D.G.T.D.) யுடன் பதிவு செய்தல் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

10. (2) தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் :

இது தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்தின் துணை நிறுவனமாகச் செயல்படுகிறது. இந்நிறுவனம் சிமெண்ட் தயாரிப்பதுடன், ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமிட்டிக் குழாய்களைத் தயாரிப்பதற்கான தொழில் பிரிவுகளையும் அமைத்துள்ளது. அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை 4 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 10 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்த்துவதற்கு இசைவுக் கடிதம் பெறப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் பாளையம் என்னுமிடத்தில் புதிதாகச் சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவதற்கு அனுப்பப்பட்ட இசைவுக் கடிதத்திற்கு மத்திய அரசு இன்றும் இசைவளிக்கவில்லை.

10. (3) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் :

தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவி, தொழில் நுட்ப உதவி, வளர்ச்சி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து முதலீட்டுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் மாநில அரசு வழங்கும் உதவிகளை தொழிற்சாலைகளுக்கு முறைப்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) ஏற்று செயலாற்றி வருகிறது. சிப்காட் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பொதுவாக நல்ல வளர்ச்சியினையும் குறிப்பாக கடந்த சில ஆண்டுகளில் பாராட்டத் தகுந்த முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் புதிதாக தொழில் துவங்க உரிமம் பெறுவதில் ஆரம்ப காலத்தில் ஏற்படும் வீணான காலதாமதத்தைத் தவிர்த்து குறுகிய காலத்தில் அனைத்து நடைமுறைகளையும் முடித்து தொழிற்சாலைகளை இயங்கச் செய்யும் வகையில் சிப்காட் நிறுவனமே வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இலாபகரமான தொழில்களில் முதலீடு செய்வதற்கான தொழில் அனுமதி (Industrial licence) யைப் பெறுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், தேவையற்ற காலதாமதம் தவிர்க்கப்படும். அதே சமயத்தில், அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள் முதலீடு செய்வதற்கான ஒரு திட்டத்தினை தயாரித்து, அதன்படி அவர்கள் சிப்காட்டில் முதலீடு செய்யலாம். சிப்காட்டில் முதலீடு செய்யப்பட்ட இந்த மூலதனம், சிப்காட் உதவி பெற்று செயல்படும் கம்பெனியில் சம பங்குகளாக மாற்றப்படும். இதனால் வெளிநாடுகளில் தங்கி இருக்கும்போதே, அவர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் வாய்ப்பு கிடைப்பதுடன், பின்னர் தாயகம் திரும்பியவுடன் மேலும் அபிவிருத்தி செய்திடவும் இயலும்.

1986 மே 3]

மேலும் அயல்நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் மூலதனமிட ஊக்குவிக்க ஒரு தனி அமைப்பு சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 10 அயல்நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் ரூ. 666.10 இலட்சம் மதிப்புள்ள தொழில்களை துவங்கியுள்ளனர். இது தவிர, 9 தொழில் பிரிவுகளை அயல் நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் ரூ. 1,169 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

சிப்காட், மத்திய முதலீட்டு மானியம், மாநில மானியம் மற்றும் மாநில சிறப்பு மானியம் ஆகியவற்றை விநியோகம் செய்வதில் மாநில அரசின் பிரதிநிதியாக பணியாற்றி வருகிறது. 1982–83-ல் வழங்கப்பட்ட தவணைக் கடன் ரூ. 1,567.58 லட்சம். இது 1985–86-ல் ரூ. 3,184.50 லட்சமாக உயர்ந்துள்ளது. இதுபோலவே வழங்கப்பட்ட ஆதார மூலதன மானியம் ரூ. 29.70 லட்சமாக இருந்தது. 1985–86-ல் ரூ. 113.30 லட்சம் வரை வழங்கப்பட்டுள்ளது. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் 1982–83-ல் ரூ. 263.30 வழங்கப்பட்டது. 1985–86-ல் ரூ. 401.26 வரை வழங்கப்பட்டுள்ளது. 1982–83-ல் ரூ. 317.25 லட்சமாக இருந்த மைய அரசு மானியம் 1985–86-ல் ரூ. 398.38 லட்சமாக உயர்ந்துள்ளது. 1982–83-ல் ரூ. 15.16 லட்சமாக இருந்த மாநில மானியம், 1985–86-ல் ரூ. 173.54 லட்சமாக கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

புதிய தொழில்களுக்கு தற்போது துண்டு துண்டாக பல பகுதிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு ஊக்க சலுகைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் நிறுவப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களுக்கு மட்டும் ஒட்டு மொத்தமான சலுகைகளை ஒருங்கிணைந்து வழங்கப்படலாம் என்ற புதிய கொள்கை இவ்வரசின் பரிசீலனையில் உள்ளது.

10. (4) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் :

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இக் கழகம் தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய நிலம், கட்டிடம், இயந்திரம் முதலியவைகளுக்காக அதிக பட்சம் ரூ. 60 இலட்சம் வரை நிதியுதவி வழங்குகிறது. கடந்த 10 ஆண்டுகளில் இக் கழகத்திற்கு கிடைத்த நிகர இலாபம் (வரி ஒதுக்கீட்டிற்குப் பின்) ரூபாய் 87.47 இலட்சமாகும். 1985–86 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட குறியீடு ரூ. 71 கோடியாகும். ஆனால், சாதனை ரூ 93 கோடியாகும். 1986–87 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள குறியீடு ரூ. 100 கோடியாகும்.

இந்நிறுவனத்தால் 1978 முதல் 1986 மார்ச் வரை வேலை வாய்ப்புப் பெற்றவர்களின் எண்ணிக்கை 2,43,443 ஆகும். இக் கழகம் சுலபக் கடன் திட்டம், போக்குவரத்து வாகனங்கள், ஜெனரேட்டர் வாங்குவதற்கு நிதியுதவி போன்ற சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துகிறது. மத்திய மற்றும் மாநில அரசு மாநிலத்தில் உள்ள சில வட்டங்களை 15 சதவீதம் / 10 சதவீதம் முதலீட்டு மானியத்திற்கு தகுதியுள்ளதாக அறிவித்துள்ள இத் திட்டத்தின் கீழ் இக் கழகம் 1-4-85 முதல் 25-3-86 வரையில் ரூ. 475.79 இலட்சத்தை மானியமாக தொழிற் பிரிவுகளுக்கு வழங்கியுள்ளது. 1949 முதல் 1978 வரை வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 74.51 கோடி மட்டுமே. ஆனால் 1978 முதல் 1986 (மார்ச் மாதம்) வரை வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 269.75 கோடியாகும். பதிவு பெற்ற மருத்துவர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்ட அதிகபட்ச கடன் தொகையான ரூ. 2 இலட்சம், ரூ. 15 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

10. (5) தமிழ்நாடு அச்சுத்தாள் காகித நிறுவனம் :

இந்நிறுவனம் கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்தி செய்தித் தாள், அச்சுத் தாள், எழுதும் தாள் ஆகியவற்றை தயாரிக்கும். இது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40 கோடி அந்நிய செலவாணியை மிச்சப்படுத்தும். இந்நிறுவனம் 1-10-1985-லிருந்து வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

10. (6) தமிழ்நாடு கனிம நிறுவனம் :—

கிராபைட்டைப் பயன்படுத்தி சிவகங்கையில் அமைக்கவிருக்கும் தொழிற்சாலையின் செலவு ரூ. 340 இலட்சமாகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. பங்கு மூலதனத்தில் அரசின் பங்கு ரூ. 55 இலட்சமாகும். ரூ. 6·40 கோடி செலவிலான கருங்கற்களை வெட்டி மெருகிடும் தொழிற்சாலை, வணிக உற்பத்தியை 25-3-1986ல் தொடங்கியது.

10. (7) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் :

மாக்னசைட்டைப் பயன்படுத்தி ரூ. 80 கோடி மொத்தச் செலவில் தொழிற்சாலை ஒன்றை இந்நிறுவனம் அமைக்கும். முதற் கட்டமாக மாக்னசைட் தாதுப் பொருளைக் கரிந்த மாக்னசைட்டாக மாற்றுவதற்கு ரூ. 7·65 கோடி செலவில் சுழல் சூளை திட்டம் நிறைவேற்றப்பட்டு உற்பத்தி 5-2-1986ல் தொடங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக வெட்டி எடுக்கப்பட்ட மாக்னசைட் தாதுப் பொருளிலிருந்து அதிக அளவில் மாக்னசைட் எடுப்பதற்கு இரசாயன முறையில் சுத்திகரிக்கும்

1986 மே 3]

தொழிற்சாலை ரூ. 58 கோடி செலவில் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூன்றாம் கட்ட பணியாக நவீன உருக்கு ஆலைகளில் பயன்படுத்துவதற்காக உயர்ந்த ரக வெப்பத் தாங்கிக் கற்களைத் தயாரிக்க ரூ. 52 கோடி மதிப்பீட்டு செலவில் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் கருதப்பட்டுள்ளது. வெப்பந் தாங்கி கற்கள் தயாரிப்புத் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில் ஆஸ்திரியாவிலுள்ள திருவாளர்கள் ரெப்ராக்டரிஸ் கன்சல்டிங் அண்டு இன்ஜீனியரிங் நிறுவனத்தின் தொழில் நுட்ப திறனை பெற தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

11. சர்க்கரைத் தொழில் :

சர்க்கரை உற்பத்தித் தொழில் கிராமப்புற மக்களுக்குப் பெருமளவில் நேரடியாகவும் பிற வகையிலும் வேலை வாய்ப்பு அளிக்கிறது. இது, விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் வேளாண்மை சார்ந்த தொழிலாகும். சர்க்கரை ஓர் இன்றியமையாதப் பொருளாகும். சர்க்கரை ஆலைகள், சர்க்கரையை உற்பத்தி செய்து வழங்குவதோடு ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மிக முக்கிய மூலப் பொருளான கருப்பஞ்சாறுக் கசண்டையும் வழங்குகின்றன. இது சர்க்கரையின் மற்றொரு முக்கிய துணைப் பொருளாகப் பயன்படுகிறது. பொதுத் துறையில் புதிய சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்காகத் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 11 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 10 தனியார் துறை சர்க்கரை ஆலைகளும், 3 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் உள்ளன. மயிலாடுதுறை கூட்டுறவு சர்க்கரை ஆலை இவ்வாண்டு இறுதியில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 30 சர்க்கரை ஆலைகளை தனியார், பொது, கூட்டுறவு ஆகிய துறைகளில் ஆரம்பிப்பதற்கு வாய்ப்புள்ளதாக தமிழ்நாடு அரசு, மத்திய அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. மாநில அரசு, விண்ணப்பங்களை பரிசீலித்து வகைப்படுத்தி மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. சர்க்கரைத் தொழிலின் வருங்கால நிலை தொடர்பாக கொள்கை முடிவை எடுத்த பின்னர் மாநில அரசுக்கு ஆதரவு அளிப்பதாக மத்திய அரசு உறுதியளித்துள்ளது. சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த கொதிகலன்களைப் பயன்படுத்தி கரும்புச் சக்கையை எரிபொருளாகக் கொண்டு அதிக அளவில் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் செயல்படுத்தப்படும்.

12. (1) தமிழ்நாடு மின்னணுக் கழகம் (எல்காட்) :

(1) மின்னணு மற்றும் மின்னியல் தொழிற்சாலைகள் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மனித ஆற்றலை அடிப்படையாகக் கொண்ட இத் தொழிலுக்கு, மின்சாரம், தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் மிகவும் குறைந்த அளவிலேயே தேவைப்படுவதால், தமிழகத்திற்கு இத் தொழில் மிகவும் உகந்தது. தமிழகத்தில் பெருந் தொழில்கள் பிரிவுகளும் இத் தொழிலை மேம்படுத்த தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

12. (2) மாநில அரசின் நிறுவனமான தமிழ்நாடு மின்னணு கழகம், இம் மாநிலத்தில் மின்னணுவியல் தொழிற்சாலைகளின் முன்னேற்றத்தினை தனது தலையாய நோக்கமாகக் கொண்டு உள்ளது. இக் குறிக்கோளினை அடைவதற்காக, அரசுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதுடன், உள்நாட்டில் உள்ள தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்வதற்கும் வசதி செய்து தருகிறது. தற்போது இந்நிறுவனத்தின் நான்கு பொதுத் துறைத் திட்டங்களும், ஆறு கூட்டுறவுத் துறை திட்டங்களும் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இது தவிர வேறு பல திட்டங்களும் துவங்குவதற்குரிய பல்வேறு நிலைகளில் உள்ளன. எல்காட் அவற்றை நடத்தும் நிறுவனம் என்ற நிலையில் அவற்றின் இயக்கத்தை முறைப்படுத்துகிறது.

12. (3) எல்காட் வருகிற ஐந்தாண்டுகளில் இத்தொழிலை இம்மாநிலத்தில் மேம்படுத்துவதற்கு ரூ. 200 கோடி செலவில் திட்டத்தைத் தயாரித்துள்ளது. 1990ம் ஆண்டில் மின்னணுத் தொழில்களின் உற்பத்தி இம்மாநிலத்தில் சுமார் ரூ. 1,000 கோடி அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றுள் முதன்மையான வளர்ச்சியைப் பெறும் பிரிவுகள் கீழ் வருவன :—

தகவல் தொடர்புத் திட்டங்கள்;

தொழில் முறை மின்னணுக் கனிப் பொறிகள்.;

நுகர்வோர் மின்னணுக் கருவிகள்;

மின்னணு உதிரிப் பாகங்கள் உற்பத்தி.

இத்திட்டங்கள் கூட்டுத் துறையில் பெரும்பாலும் தனிப்பட்ட தொழிலதிபர்கள், அயல்நாட்டில் வசிக்கும் இந்தியர்கள். மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் வாயிலாகவே ஏற்படுத்தப் படுகின்றன. எல்காட் தனிப்பட்ட தொழிலதிபர்களை, குறிப்பாக தொழில் வல்லுனர்களை அழைத்தது, தன்னுடைய கூட்டு முயற்சித் திட்டங்களின் மூலம் தொழில் துவங்குவதற்கு ஊக்குவிக்கிறது இத்தகைய கூட்டு முயற்சித் திட்டங்களுக்கு

1986 மே 3]

எல்காட்டின் மூலதனம் 26 சதவிகிதம், கூட்டு முயற்சியாளரின் முதலீடு 25 சதவிகிதம், மீதமுள்ள 49 சதவிகிதம் பங்குத் தொகை பொதுமக்களிடமிருந்து பெறப்படுகிறது. இந்த ஏற்பாடு மாநிலத்தின் நிர்வாக தொழில் நுட்பத் திறன், நிதிவசதி போன்ற வளங்களை இத்தொழிலின் மேம்பாட்டிற்கு எல்காட் முழு அளவில் பயன்படுத்த உதவுகிறது. எல்காட்டின் கூட்டு முயற்சித் திட்டத்தின் தலையான நோக்கம், தொழில்நுட்ப வல்லுநர்களை முறைப்படி கண்டறிந்து, அவர்களின் தொழில் துவக்கும் முயற்சிகளை ஊக்குவித்து, அவற்றிற்கு வடிவம் கொடுத்து எல்காட்டின் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறமையைப் பயன்படுத்திக் கொண்டு தொழில் திட்டங்களை ஏற்படுத்த வழி நடத்திச் செல்வதேயாகும்.

12.(4) சிறு தொழில் பிரிவில் இத்துறையை மேம்படுத்த தொழிற்பேட்டைகளில் சோதனை மற்றும் வளர்ச்சி மையங்கள், தகவல் வங்கி மற்றும் தகவல் மையம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மின்னணுத் தொழிலில் 163 புதிய திட்டங்களுக்கு 1985–86-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. திருவான்மியூரில் உள்ள மின்னணுத் தொழிற்பேட்டை இத்தொழிலில் வளர்ச்சியின் கருமை மையமாக உருவெடுத்து வருகிறது. மின்னணுத் தொழிலுக்குத் தேவையான சோதனை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. காக்கலூரில் உள்ள மின்னணு சோதனை மையம் சிறு தொழிலுக்குத் தேவையான அனைத்து சோதனை வசதிகளையும் செய்து தரும் வண்ணம் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

12. (5) மின்னணுத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் முனைவர்களுக்கு தேவைப்படும் மூலப்பொருட்களை அளிக்கும் பொருட்டு சென்னையில் ஒரு மூலப் பொருள் கிடங்கு ஒன்றை நிறுவுவதற்கும் சோதனை வசதிகளை செய்து தரும் பொருட்டு, கோயம்புத்தூரில் பொது சோதனை மையத்தை நிறுவுவதற்கும், திருச்சியில் தொழில் மேம்பாடு மற்றும் பயிற்சி மையத்தை நிறுவுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேலத்திலும், சென்னையை அடுத்த நந்தம்பாக்கத்திலும், மின்னணுத் தொழிலுக்கென்றே தனியாக ஒரு தொழிற்பேட்டையை நிறுவுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழில் வளர்ச்சியில் தமிழகத்தின் இடம் :—

13. தொழில் வளர்ச்சியில் தமிழகம் சிறப்பு இடத்தை பெற்றுள்ளது என்பதையும் முன்னணியில் உள்ள முதல் நான்கு மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது என்பதையும் பெருமையுடன் இங்கே குறிப்பிடலாம்.

பம்பாயிலுள்ள இந்திய பொருளாதார வளர்ச்சி ஆய்வு மையம் (Centre for Monitoring Indian Economy) என்ற நிறுவனம் 1985 செப்டம்பர் மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி பொதுவாக தொழில் வளர்ச்சியை நிர்ணயிக்கும் கீழ்க் கண்ட ஐந்து அம்சங்களில் தமிழகம் முதல் நான்கு இடங்களில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்:—

1. புதிய தொழிலுக்கு அடிப்படை வசதிகளைப் பெருக்கும் குறிப்பு: (Index Development of Infrastructure) இதில் தமிழகம் மூன்றாவது இடத்திலுள்ளது.

2. தொழிற்சாலைகளில் உற்பத்தி மதிப்பு (Per Capita Value added by Manufacture) இதில் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது.

3. 1960–61 முதல் 1980–81 வரையிலான காலத்தில் ஆலைகளில் சேர்க்கப்பட்ட மதிப்பீட்டை ஒப்பிடுதல்: (Comparision of value added in the factory sector during 1960–61 to 1980–81) இதில் தமிழகம் நான்காவது இடத்திலுள்ளது.

4. தொழில்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தி பற்றிய ஒப்பீடு.
(No. of factories, employment and value of output in the factory sector.)

தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை தமிழ்நாடு நான்காவது இடத்திலும், தொழிலாளர்களின் எண்ணிக்கையில் தமிழகம் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

5. தொழிற்சாலைத் துறையில் மதிப்பு பெருக்கம் (தேசிய வருமான உற்பத்தி அடிப்படையில்):—

இவ்வினத்தில் தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

அகில இந்திய நிதி நிறுவனங்களிலிருந்து உதவித் தொகை பெறும் இனத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது என்பதையும் பெருமையுடன் குறிப்பிடலாம்.

மேற்கண்ட விவரங்களிலிருந்து தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னிலையிலுள்ளது என்பது தெளிவாகும்.

1986 மே 3]

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ).

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இது தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு பெருமை வாய்ந்த நிறுவன மாகும். இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 60 கோடியாகும். இதில் ரூ. 59.72 கோடி செலுத்தப்பட்டுள்ளது.

2. நான்கு கிளை நிறுவனங்களைக் கொண்ட டிட்கோ இம் மாநிலத்தில் கூட்டுத் துறையில் தொழிற்சாலைகள் நிறுவுவதிலும், முக்கியமாக தனியார் தொழில் முனைவர்கள் தொழிற்சாலைகள் நிறுவ முன்வராத பின் தங்கிய பகுதிகளிலும் தொழிற் சாலைகள் நிறுவுவதிலும் தன் முழு கவனத்தையும் செலுத்துகிறது. கூட்டுத் துறை நிறுவனங்களில், டிட்கோ 26 சதவீத பங்கு மூலதனம், கூட்டுத் தொழில் முனைவர் 25 சதவீத பங்கு மூலதனம், எஞ்சிய 49 சதவீதத்தினை பொது மக்களிடம் இருந்து பெறுதல் என்ற முதலீட்டு முறை பின்பற்றப்படுகின்றது. சாதாரணமாக திட்டச் செலவில் 1/3 பங்கு மூலதனமாகவும் 2/3 பங்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகவும் பெறப்படுகிறது.

3. தனது 20 ஆண்டுகால பணியில் டிட்கோ பல வேறுபட்ட துறைகளில் முயற்சிகளை மேற் கொண்டதன் பயனாக பொதுத் துறையில் புதிய தொழிற் சாலைகளையும், தனியார் தொழில் முனைவர்களுடன் பல கூட்டுத் தொழில் நிறுவனங்களையும் நிறுவியுள்ளது. மேலும் சில நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கும் உதவி செய்துள்ளது.

4. டிட்கோ இது வரையில் பொதுத் துறையிலும் கூட்டுத் துறையிலும் 45 தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. அதன் விவரம் பின் வருமாறு:—

விவரம்.	தொழிற் சாலைகளின் எண்ணிக்கை.	திட்டச் செலவு (ரூபாய் கோடியில்).	வேலை வாய்ப்பு (நபர்களின் எண்ணிக்கை).
(1)	(2)	(3)	(4)
1. பொதுத் துறை—			
(அ) உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள்.	8	67.00	4,550
(இ) நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற் சாலைகள்.	2	26.55	750

கூட்டுத்துறை—			
(அ) உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள்.	25	256.00	10,200
(இ) நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற் சாலைகள்.	10	259.35	4,400
	45	608.90	19,900

5. கூட்டுத் துறையில் நிறுவப்பட்டு வரும் 10 தொழிற் சாலைகளில் ரூ. 1.30 கோடி திட்டச் செலவினைக் கொண்ட திருவாளர்கள் ஃபாப்லைன் லிமிடெட் (M/s. Fabline Ltd.) விரைவில் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. 1986–87 ஆம் ஆண்டில் பின் வரும் தொழில் நிறு வனங்கள் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவரம்.	மூலதனச் செலவு. (ரூபாய் கோடியில்.)	வேலை வாய்ப்பு.
(1)	(2)	(3)
1. பொதுத்துறை—		
(i) மக்னீஷியம் மெட்டல் திட்டம் (Magnesium Metal Project)	5.85	110
(ii) டிடோனேடர்ஸ் மற்றும் டிடோனேடிங் ப்யூசஸ் திட்டம். (Detonators and Detonoting Fuses Project)	20.55	500
2. கூட்டுத்துறை—		
(i) பென்டேசியா கெமிகல்ஸ் லிமிடெட் (Pentasia Chemicals Limited)	19.00	200
(ii) நார்த் ஆற்காட் லெதர்ஸ் லிமிடெட் (North Arcot Leathers Limited)	1.46	150
(iii) யுனி ஆர்கானிக் இண்டஸ்டிரிஸ்லிமிடெட். (Uni Organic Industries Limited)	1.95	100
(iv) டைட்டான் வாட்சஸ் லிமிடெட் (Titan Watches Limtited)	39.20	1,270
	88.01	2,330

TRUTH ALONE TRIUMPHS

7. டிட்கோவினால் நிறுவப்பட்ட 45 தொழிற் திட்டங்களில் 38 திட்டங்கள் இம்மாநிலத்தின் பின் தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. பின்தங்கிய பகுதிகளிலே விரைவான முன்னேற்றம் ஏற்பட டிட்கோ நிறுவனம் தொழிற்சாலைகளை அப்பகுதிகளில் நிறுவ அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.

8. ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலைகளின் மூலமாக ஏறத்தாழ 14,750 நபர்களுக்கு டிட்கோ இதுவரை வேலை வாய்ப்பினை நல்கியுள்ளது.

9. பிப்ரவரி 1986ல் மத்திய அரசு டிட்கோவிற்கு ஆண்டுக்கு 12,000 டன்கள் பிரோபிலின் ஆக்ஸைடு (Propylene Oxide) தயாரிப்பதற்காக இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இத் திட்டத்தை சென்னைக்கு அருகிலுள்ள மணலியில் கூட்டுத் துறையில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

10. இவையல்லாமல் ரூ. 775 கோடி திட்ட மதிப்பீடும் 5,150 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய 15 புதிய தொழிற் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. இத் திட்டங்கள் குறிக்கோள்களை வகுத்தல், சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரித்தல், தொழில் உரிமங்கள பெறுதல், டி.ஜி.டி.டி. (D.G.T.D.)-யுடன் பதிவு செய்தல் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

11. 1985 ஆம் ஆண்டில் டிட்கோ கூட்டுத் தொழில் முனைவர்களுடன் 3 கூட்டுத் துறை ஒப்பந்தங்கள் செய்து கொண்டுள்ளது.

12. மேலும், கீழ்க்கண்ட இரு தொழில் திட்டங்கள் டிட்கோவின் கூட்டுத் துறையின் கீழ் நிறுவ முடிவெடுக்கப்பட்டுள்ளது :—

(1) அமோனியம் நைட்ரேட் மற்றும் நைட்ரிக் ஆசிட் தயாரிபபுத் திட்டம்.

(2) ஜெல்லி பீல்டு டெலிபோன் கேபிள் தயாரிப்பு திட்டம்: முதல் திட்டம் ரூ. 2,257 இலட்சம் முதலீட்டிலும், இரண்டாவது திட்டம் ரூ. 1,735 இலட்சம் முதலீட்டிலும் தீட்டப்பட்டுள்ளது. இந்த இரு புதிய திட்டங்களின் மூலம் முறையே 350 மற்றும் 270 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர்.

[1986 மே 3

13. வரி செலுத்துவதற்கு முன் டிட்கோ ஈட்டிய லாபங்களின் விபரம் பின்வருமாறு :

ஆண்டு.	இலாபம். (இலட்சத்தில்)
1980–81	29.60
1981–82	159.80
1982–83	192.75
1983–84	163.03
1984–85	207.80

இதனால் 1979–80 வரையில் ஏற்பட்ட திரண்ட நட்டமான ரூ. 631.93 இலட்சம், 1984-85-ல் ரூ. 86.78 இலட்சங்களாக குறைந்துள்ளது. 31–3–1984 வரையில் ஏற்பட்ட திரண்ட நட்டமான ரூ. 86.78 இலட்சத்தை சரிக்கட்டிய பின்னர், 31–3–1985 வரை ரூ. 121.02 இலட்சம் திரண்ட இலாபத்தை டிட்கோ முதன் முறையாக ஈட்டியுள்ளது. வரும் ஆண்டுகளிலும், இந்த வளர்ச்சியை நிலை நிறுத்திக் கொள்ள அனைத்து முயற்சிகளையும் டிட்கோ மேற்கொள்ளும்.

தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனம் :

தொடக்கத்தில் டிட்கோவின் ஒரு பிரிவாக நிறுவப்பட்ட தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனம் 3–4–1984 முதல் டிட்கோவின் ஒரு கிளை நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. இதன் திட்டச் செலவு ரூ. 798.91 இலட்சங்களாகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 50,000 டன் பில்லட்ஸ் (Billets) மற்றும் மோல்டன் மெடல் (Molten Metal) தயாரித்தல் ஆகும். இது ஏறக்குறைய 635 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை நல்கியுள்ளது. 30–6–1985 நிலவரப்படி ரூ. 36.21 இலட்சம் இலாபத்தை ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் ரூ. 92 இலட்சம் செலவில் நவீனமாக்கல் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு ஸ்டீல்ஸ் லிமிடெட்—மீள் உருளை ஆலை (Rerolling Mill.)

3–4–1984 முதல் மீள் உருளை ஆலையும் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் திட்டச் செலவு ரூ. 782.10 இலட்சமாகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 25,000 டன்கள் ஆகும். இவ்வாலை 30–6–1985 வரையிலான காலத்திற்கு ரூ. 49.12 இலட்சம் நட்டம் அடைந்தது. இந்த ஆண்டில் இவ்வாலை இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 109 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை நல்கியுள்ளது.

1986 மே 3]

தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட் லிமிடெட்.

இது டிட்கோவினுடைய ஒரு கிளை நிறுவனமாகும். ஆண்டொன்றுக்கு 3,300 மெ. டன்கள் சோடியம் ஹைட்ரோ சல்பைட் (Sodium Hydro Sulphite) மற்றும் 4,950 மெ. டன்கள் திரவ சல்பர் டை-ஆக்ஸைட் (Liquid Sulphur Dioxide) தயாரிப்பதற்கென நிறுவப்பட்டது. இத்தொழிற்சாலை காரைக்குடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திட்டச் செலவு ரூ. 756 இலட்சமாகும். இது சுமார் 271 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கியுள்ளது. இலாபத்தில் இயங்கிவரும் இந் நிறுவனம் 30-9-1985 வரை ரூ. 83.10 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

மக்னீஷயம் மெட்டல் திட்டம். (Magnesium Metal Project)

தமிழ்நாடு கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம் மக்னீஷியம் மெட்டல் தயாரிக்கும் திட்டத்தை ரூ. 585 இலட்சம் திட்டச் செலவில் நிறுவி வருகிறது. காரைக்குடியிலுள்ள மத்திய மின் இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தினரின் (Central electro Chemical Research Institute) கண்டுபிடிப்பான தொழில் நுட்பத்துடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இது இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கம் என்னும் இடத்தில் நிறுவப்படுகிறது. இது சுமார் 110 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும்.

தமிழ்நாடு தொழிலியல் வெடி மருந்து நிறுவனம்.

இது பொதுத் துறையில் நிறுவப்பட்ட டிட்கோவினுடைய மற்றுமொரு கிளை நிறுவனமாகும். இது ஆண்டொன்றுக்கு 15,000 டன்கள் நைட்ரோ கிளிசரினை (Nitro Glycerine) அடிப்படையாகக் கொண்ட தொழிலியல் வெடி மருந்துகளை தயாரிக்க நிறுவப்பட்டது. இவ்வெடி மருந்துகள் சுரங்கப் பணிகள் மற்றும் இதர கட்டுமான தொழிற்சாலைகளில் பயன்படுத்தப் படுகிறது. இது தென் பிராந்தியங்களில் இத்துறையில் நிறுவப் பட்ட முதல் தொழிற்சாலையாகும். இத்திட்டம் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் போஃபோர்ஸ் நோபெல் செம்மதூர் (Messrs. Bofores Nobel Chematur) நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திட்டச் செலவு ரூ. 2,350 இலட்சமாகும். இத்திட்டத்தினால் சுமார் 450 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், ஏறக்குறைய 100 பேருக்கு நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் கிடைக்கும். இத்திட்டம் தன் வணிக அளவிலான உற்பத்தியை 9-2-1986 முதல் தொடங்கியுள்ளது.

டிடோனேடார்ஸ் மற்றும் டிடேரனேடிவ் ப்யூசஸ் திட்டம்.

தமிழ்நாடு தொழிலியல் வெடி மருந்து நிறுவனம், 40 மிலியன் டிடோனேடார்கள் மற்றும் 10 மிலியன் மீட்டர் டிடோனேடிவ் ப்யூஸ்கள் தயாரிக்கும் திட்டம் ஒன்றையும் நிறைவேற்றி வருகிறது. இவை சுரங்கம் மற்றும் பிற தொழிற்சாலை பணிகளில் பயன்படுத்தப்படும் தொழிலியல் வெடி மருந்துடன் துணைப் பொருட்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. மேற்கு ஜெர்மனியின் தொழில்நுட்ப உதவியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படுகின்றது. இதன் திட்டச் செலவு ரூ. 2,055 இலட்சமாகும். இது 630 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும். இதன் சோதனை உற்பத்தி 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்சம்)

1, பொது :

1.1. மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு அரசு பொதுத் துறை நிறுவனங்களை ஏற்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் (டான்சம்) நிறுவனமானது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினரால் (டிட்கோ) முழுவதும் உடமை ஆக்கப்பட்ட ஒரு நிறுவனமாக 1976 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூபாய் பன்னிரண்டரை கோடியில் ரூபாய் 12.36 கோடி இது வரையில் செலுத்தப்பட்டு உள்ளது. இந்நிறுவனம் 1—4—1976 முதல் செயல்படத் தொடங்கியது.

1.2. சிமெண்ட்டை உற்பத்தி செய்து விற்பனை செய்தல், சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல், சுட்ட சுண்ணாம்பு, சிமெண்ட் கல்நார் தகடுகள் முதலியனவும், சிமெண்ட் தயாரிப்புக்குத் தேவையான ஏனைய தொடர்புடைய பொருட்களையும் உற்பத்தி செய்து, விற்பனை செய்தல் இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்நோக்கங்களுக்கு ஏற்ப இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகளையும், ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் அதன் துணைப் பொருட்கள், மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் தயாரிக்கும் இரு ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலைகளையும் டான்செம் நிறுவனம் இயக்கி வருகிறது.

1986 மே 3]

இத் தொழிற்சாலைகளைப் பற்றிய விவரங்கள் கீழ் வருமாறு :

2. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை :

2.1. இந்த ஆலையின் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 666 இலட்சமாகும். இந்த ஆலை 1970 ஆம் ஆண்டு முதல் வணிக உற்பத்தியை தொடங்கியது. பல்வேறு காரணங்களால் ஆலங்குளம் சிமெண்ட் ஆலை தன் உற்பத்தி இலக்கினை எய்த இயலவில்லை. தேசிய அளவிலான நிலக்கரிப் பற்றாக் குறை உயர்ந்தபட்ச மின்சாரத் தேவையின் மீதான தடை, உயர் அழுத்த மின்சக்தி பயனீட்டாளர்களுக்கு விதிக்கப்பட்ட மின்வெட்டு, ரெயில்வே வேகன்களின் பற்றாக்குறை முதலிய புற இடர்பாடுகள் காரணமாக இத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் குறைவாக இருந்தது.

2.2. சுமார் ரூ. 4.90 இலட்சம் செலவில் இந்த ஆலையில் நவீனமாக்கல் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தல் ஆகிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1984 ஜனவரி முதல் 1985 ஜனவரி வரையிலான கால அளவில் ஆறு மாதங்களில் இந்த ஆலையின் நிறுவுத் திறனில் 100 சதவீதத்திற்கு மேல் உற்பத்தி இருந்தபோதிலும், சராசரி உற்பத்தித் திறனானது நிறுவுத் திறனில் 92.47 சதவீதமாகும். எனினும் பிப்ரவரி 1985-லிருந்து டிசம்பர் 1985 வரையிலான கால அளவில் தமிழ்நாடு மின் வாரியத்தின் 30 சதவீத மின் வெட்டு விதிப்பின் காரணமாக ஆலை 75 சதவீதத் திறனையே எய்தியது. மின் தட்டுப்பாட்டினைச் சமாளிக்கவும் முழு உற்பத்தித்திறனை அடையவும் ரூ. 250 இலட்சம் செலவில் ஜப்பான் நாட்டிலிருந்து இரண்டு 2,500 கே.வி.ஏ. டீசல் ஜெனரேட்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டு இவ்வாலையில் நிறுவப்பட்டு வருகின்றன. ஜெனரேட்டர்களை நிறுவும் பணி விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் 1-4-1976 முதல் ஆண்டு வரிசையில் கீழ் வருமாறு :—

ஆண்டு.	ஆண்டின்போது உற்பத்தி. (மெட்ரிக் டன்களில்.)	ஆண்டின்போது விற்பனை. (மெட்ரிக் டன்களில்.)
1976–77	3,38,445	3,33,294
1977–78	3,09,105	3,07,607
1978–79	3,19,277	3,20,379
1979–80	2,74,400	2,77,655
1980–81	3,01,148	3,06,614
1981–82	2,93,515	2,93,399

[1986 மே 3

ஆண்டு.	ஆண்டின்போது உற்பத்தி.	ஆண்டின்போது விற்பனை.
	(மெட்ரிக் டன்களில்.)	
1982–83	2,80,760	2,83,508
1983–84	2,43,435	2,38,158
1984–85	3,40,031	3,44,096
1985–86	2,33,682	2,30,089

[31–12–1985 வரை]

2.4. முன்பு இந்த ஆலையானது அடுத்தடுத்து இழப்புக்களை அடைந்திருப்பினும், திருப்புமுனையாக இப்போது இலாபத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு :—

ஆண்டு.	லாப/நட்டம்.	திரண்ட நட்டம்,
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1983–84	(—)96.55	284.05
1984–85	(+)83.94	200.01
1985–86	(+)100.00 (தோராயமாக)	100.00 (தோராயமாக)

2.5. இவ்வாலை, இப் பின்தங்கிய பகுதியில் சுமார் 1,600 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், மற்றும் மூலப்பொருட்கள், உற்பத்தி பொருட்களின் போக்குவரவு வகையினில் கணிசமான அளவில் நேரடி இல்லாத வேலைவாய்ப்பினையும் அளிக்கிறது.

3. அரியலூர் சிமெண்ட் ஆலை :

3.1. அரியலூர் சிமெண்ட் ஆலை ஓர் உலர் செய்முறை ஆலை (Dry Process Plant) ஆகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 2,876 இலட்சங்கள், வணிக அளவிலான உற்பத்தி 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கியது.

1986 மே 3]

3.2. இந்த ஆலை உற்பத்தியைத் தொடங்கிய ஆரம்ப காலங்களில் பல இடர்பாடுகளுக்கு உட்பட்டது. இந்த இடர் பாடுகள் பின் களையப்பட்ட போதிலும், சுண்ணாம்புக்கல்லின் அதிக அளவு ஈரத் தன்மையின் காரணமாக ஆலையின் உற் பத்தித் திறன் குறைவாகவே உள்ளது. இந்த ஆலையில் நவீனமாக்கல் மற்றும் உற்பத்தியை மேம்படுத்துதல் திட்டம் சுமார் 10 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற திட்டமிடப் பட்டுள்ளது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் சுவிட்சர் லாந்தின் மெஸர்ஸ் ஹோல்டர் பேங்க் மானேஜ்மெண்ட் கன்சல்டென்ட்ஸ் நிறுவனத்தை இந்த சிமெண்ட் ஆலையில் உற்பத்தியை பாதிக்கும் கச்சாப் பொருள் சிக்கலைக் கண் டறிந்து அதைப் போக்குவதற்கான வழிவகைகளை எடுத் துரைப்பதற்கென நியமித்துள்ளது. ஆலையின் செயல் திறனை ஊக்குவிப்பதோடு மட்டுமன்றி அதன் உற்பத்தித் திறனையும் கூடுதலாக்கும் தொழில் நுட்பத்தினை வகுத்தளிக் கவும் இது வழி வகுக்கும். ஆலோசனைக் குழுவின் பரிந்துரை களுக்கு ஏற்ப இவ்வாலையின் செயல் திறனை மேம்படுத்து வதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

3.3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங் கள் கீழ் வருமாறு :—

ஆண்டு.	ஆண்டில் உற்பத்தி.	ஆண்டில் விற்பனை.
(1)	(2)	(3)
	(மெட்ரிக் டன்களில்.)	
1979–80 (8 மாதங்களுக்கு)	1,15,919	1,15,525
1980–81	2,46,733	2,41,949
1981–82	2,84,350	2,87,474
1982–83	2,47,300	2,47,836
1983–84	3,01,366	2,99,377
1984–85	2,84,366	2,80,569
1985--86 (31–12–1985 வரையில்).	2,02,364	2,05,963

3.4. மின் தட்டுப்பாட்டினைச் சமாளிக்கும் பொருட்டு இவ் ஆலையில் சுமார் ரூ. 350 இலட்சம் செலவில் மூன்று 2500 KVA டீசல் ஜெனரேட்டர்கள் ஜப்பான் நாட்டிலிருந்து தருவிக்கப் பட்டு நிறுவப்படுகிறது. இவற்றை நிறுவும் பணி விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.5. குறைந்த அளவு உற்பத்தியின் காரணமாக இந்த ஆலை ஆரம்ப முதல் நட்டத்தை அடைந்து வருகிறது.

3.6. இவ்வாலை சுமார் 900 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் மூலப் பொருட்கள், செய் பொருட்கள் முதலியவற்றின் போக்குவரவு வகையில் கணிசமான அளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

4. அரியலூர் சிமெண்ட் ஆலையின் விரிவாக்கம் :

அரியலூர் சிமெண்ட் ஆலையின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெ. டன்னிலிருந்து 10 இலட்சம் மெ. டன்னாக அதிகரிக்க டான்செம் மத்திய அரசிடமிருந்து இசைவுக் கடிதம் பெற்றுள்ளது. இவ்விரிவாக்கத்தின் திட்ட மதிப்பீடு ரூபாய் 60 கோடியாகும். இவ்விரிவாக்கத் திட்டம் ஏறக்குறைய 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும் பெருமளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பினையும் ஏற்படுத்தித் தரும். இவ்விரிவாக்கத் திட்டத்தில் பின்பற்றப்படவுள்ள தொழில் நுட்பம் பரிசீலனையில் உள்ளது.

5. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (தகடுகள் ஆலை) :

ஆண்டொன்றுக்கு 36,000 டன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் தயாரிக்கும் திறனுள்ள தொழிற்சாலை ஆலங்குளத்தில் ரூபாய் 250 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. இந்த ஆலை தன் வணிக அளவிலான உற்பத்தியை 1-10-1981-ல் தொடங்கியது.

5.2. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் கீழ் வருமாறு :—

ஆண்டு.	ஆண்டில் உற்பத்தி.	ஆண்டில் விற்பனை.
(1)	(2)	(3)
	(மெட்ரிக் டன்களில்.)	
1981–82 (ஆறு மாதங்கள்)	8,251	5,067
1982–83	19,091	19,867
1983–84	17,839	16,886
1984–85	25,606	26,612
1985–86 (டிசம்பர் 1985 வரையில்).	20,931	17,937

1986 மே 3]

5.3. மின்வெட்டின் காரணமாக இந்த ஆலையின் உற்பத்தித் திறன் 1984–85-ல் 85 சதவீதமாகவே இருந்தது. ஏப்ரல் 1985 முதல் டிசம்பர் 1985 வரை உள்ள காலத்தில் இதன் சராசரி உற்பத்தி 93 சதவீதமாகும்.

5.4. இந்த ஆலை இரண்டாவது ஆண்டு முதல் இலாபம் ஈட்டத் தொடங்கியது. 31–3–1985 காலவரையிலான காலத்தில் இதன் திரண்ட இலாபம் ரூபாய் 49.39 இலட்சங்கள். 31–3–1986 வரையிலான காலத்தில் இதன் இலாபம் ஏறக்குறைய ரூபாய் 35 இலட்சங்களாக இருக்கும்.

5.5. இந்த ஆலை சுமார் 250 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், மேலும் கச்சாப் பொருட்கள், செய் பொருட்கள் முதலியவற்றின் போக்குவரவு வகையினில் கணிசமான அளவில் நேரடியில்லாத வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

6. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (அழுத்தக் குழாய்த் திட்டம்) மாயனூர், திருச்சி மாவட்டம் :

6.1. ஆண்டொன்றுக்கு 36,000 மெட்ரிக் டன்கள் அளவில் 80 மி.மீ. முதல் 600 மி.மீ. வரை விட்ட அளவுகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்ட் குழாய்களை உற்பத்தி செய்யும் இத் தொழிற்சாலை திருச்சி மாவட்டம், மாயனூரில் அமைக்கப்பட்டது. இதன் திட்ட செலவு ரூபாய் 945 இலட்சங்களாகும். வணிக அளவிலான உற்பத்தி 1–10–1984 இல் திட்ட அட்டவணைப்படி துவங்கியது.

6.2. 1984–85-ம் ஆண்டில் இதன் ஆறுமாத கால உற்பத்தியில் 8,427 மெ. டன் ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களை உற்பத்தி செய்தது. நடப்பு ஆண்டில் 10,886 மெ. டன் குழாய்கள் மற்றும் துணைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6.3. சுமார் 300 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், மேலும் கணிசமான அளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் இத்திட்டம் வழங்கியுள்ளது.

7. பாளையம் சிமெண்ட் ஆலைத் திட்டம், மதுரை மாவட்டம்:

மதுரை மாவட்டம் பாளையம் எனும் பகுதியில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்கள் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு சிமெண்ட் ஆலையை நிறுவுவதற்கு இசைவுக் கடிதம் கோரி டான்செம் நிறுவனம் மைய அரசுக்கு விண்ணப்பம் செய்துள்ளது.

இதன் திட்டச் செலவு ரூபாய் 48 கோடி அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்படும்பொழுது சுமார் 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், கணிசமான அளவில் நேரடியில்லாத வேலை வாய்ப்பும் அளிக்கும்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக் கான நிதி உதவி மற்றும் தொழில் நுட்ப உதவிகளான திட்ட அறிக்கை, வளர்ச்சி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து முதலீட்டுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் மாநில அரசு வழங்கும் உதவிகளை தொழில்களுக்கு முறைப்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) ஏற்று செயல்பட்டு வருகின்றது. சிப்காட் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து குறிப் பிடத்தக்க வளர்ச்சியினை குறிப்பாகக் கடந்த சில ஆண்டுகளில் அடைந்துள்ளது.

2. தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால், தொழில் தேவைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு தற்போது தொழில் வளர்ச்சியில் புதிய நவீன கட்டத்தில் உள்ளது. அதற்கேற்ப தற்போது உள்ள தொழிற்சாலைகளில் உயர்ந்த தொழில் நுட்பத்தினை கொணரவும் எலக்ட்ரானிக்ஸ் கெமிக்கல் தொழிற்சாலை மற்றும் புதிய தொழிற்சாலைகளை அமைக்கவும், சிப்காட் முக்கியத்துவம் அளிக்கின்றது. மேலும் ஜெனரேட்டர்கள் மற்றும் பிற கருவிகளை குத்தகைக்கு விடுவது பற்றியும் (Leasing activity) வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர் களின் முதலீடு போன்ற பிற பணிகளிலும் 'சிப்காட்' ஈடுபட விருக்கின்றது.

(அ) சமீபத்தில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி அளிப்பதில் செய்துள்ள மாற்றத்தின் காரணமாக, தொழில் முனைவோர்களுக்கு ஏற்பட்டுள்ள நிதிச் சுமையினை குறைக்கும் பொருட்டு, சிப்காட் ஜெனரேட்டர் போன்ற சில கருவிகளை வாங்கி, குத்தகை அடிப்படையில் தொழில் முனைவோர்களுக்கு வழங்கும். இதன் பலனாக, தொழில் முனைவோர்கள் தங்களின் தொழிலில் கவனம் செலுத்த முடியும்.

(ஆ) அயல் நாட்டில் வாழும் தமிழர்கள் அதிக அளவில் தமிழ்நாட்டில் தொழில்களில் முதலீடு செய்ய சிப்காட்டை அணுகு கின்றனர். அதில் பெரும் பகுதியினருக்கு இங்கு முதலீடு செய்யும் வாய்ப்பினைப் பற்றி தெரியவில்லை. மேலும் சிப்காட் அனுமதி வழங்கும் முறையிலும் கால தாமதம் அதிகமாவதால் அயல் நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இலாபகரமான தொழில்களில் முதலீடு செய்வதற்காக, தொழில் அனுமதி (Industrial Licence)

பெறுவதற்கு முடிவு செய்துள்ளது. இதனால், தேவையற்ற காலதாமதம் தவிர்க்கப்படும். அதே சமயத்தில், அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள் முதலீடு செய்வதற்கான ஒரு திட்டத்தினை தயாரித்து, அதன்படி அவர்கள் 'சிப்காட்டில்' முதலீடு செய்ய லாம். 'சிப்காட்டில்' முதலீடு செய்யப்பட்ட இந்த மூலதனம், சிப்காட் உதவி பெற்று செயல்படும் கம்பெனிகளில் சம பங்கு களாக மாற்றப்படும். இதனால் வெளி நாடுகளில் தங்கி இருக்கும் போதே, அவர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் வாய்ப்பு கிடைப்பதுடன், பின்னர் தாயகம் திரும்பியவுடன் மேலும் அபி விருத்தி செய்திடவும் இயலும். அயல் நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் தமிழக தொழில்களில் மூலதனமிட ஊக்குவிக்க ஒரு தனி அமைப்பு சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

3. மேலும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான புள்ளி விவரங்களை வழங்குவதற்கு ஏதுவாக, ஒரு கம்பியூட்டரை வாங்க 'சிப்காட்' உத்தேசித்துள்ளது.

I. பல்வேறு உதவித் திட்டங்களின் விவரங்கள் :

4. (அ) ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டம்.—இத்திட்டம் 1981 முதல் புதிய முறையில் அமலாக்கப்பட்டது. இத் திட்டத் தின் கீழ் லாபகரமான தொழில்களை கண்டறிவதற்கான ஆய்வு களை சிப்காட் செயல்படுத்துகின்றது. மேலும் இந்த ஆய்வுகள் சலுகை விலையில் தொழில் முனைவோர்களுக்கு அளிக்கின்றது. இந்த ஆய்வுகள் மொத்த விலையில் 10 விழுக்காடுகளை செலுத் தினால் அளிக்கப்படுகின்றது. மிஞ்சிய 40 விழுக்காட்டுத் தொகை தொழில் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த பிறகு திரும்பச் செலுத்த வேண்டிய கடனாக மாற்றப்படும். எஞ்சிய 50 விழுக்காடு சிப்காட்டிலிருந்து தரப்படும் மானியமாக அளிக்கப் படும் புதிய திட்டத்தின் கீழ் 31 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 14 ஆய்வுகள் மேற் கொள்ளப்படுவதற்காக பரிசீலனை யில் உள்ளது. மொத்தம் 20 தொழில் முனைவோர் இந்த ஆய்வுகளை பயன்படுத்தியுள்ளனர்.

(ஆ) வட்டியில்லா விற்பனை வரிக் கடன்.— ஊக்கச்சலுகை தீவிரத் திட்டத்தின் மிக முக்கிய அங்கங்களில் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் ஒன்றாகும். இக் கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம் மாநிலத்தின் பின்தங்கிய 11 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி நகர்ப்பகுதி தவிர) தொடங்க இருக்கும் நடுத் தர அல்லது பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு

அக்டோபர் திங்கள் 3ஆம் தேதியில் இருந்து சுலபமாக்கப்பட்ட இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதியின் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்கு தொழிலை விரிவுபடுத்தும் போதோ, வேறு பிரிவுகளாகப் பெருக்கும் போதோ இச்சலுகை கிடைக்கும். அத்தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப் படும் அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப்படும் திட்டத்தில் நிலையான இருப்புகளில் 25 சதவீதத்துக்கோ அல்லது ரூபாய் 15 இலட்சத்துக்கோ, நடுத்தர, பெரிய தொழில்களுக்கும், சிறிய தொழிலிலிருந்து நடுத்தர தொழிலாக விரிவுபடுத்தும் போது ரூபாய் 7.50 இலட்சத்துக்கோ (எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப் பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்த பிறகு 3 ஆண்டுத் தவணைகளில் சமத் தொகைகளாக வட்டி இன்றி இக் கடன் தொகைகளைத் திருப்பியடைக்க வேண்டும்.

புதிய தொழில் இணையங்களை ஏதேனும் பின் தங்கிய மாவட்டங்களில் அமைத்திடவும், மற்றும் மறைமலை நகர் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள குன்னத்தூர் இணையத்தில் நிறுவப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் வரும் இத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட உள்ள புதிய தொழிற் கூடங்களுக்கு அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு ஆண்டு தோறும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் முந்திய ஆண்டில் செலுத்திய விற்பனை, வரித் தொகைக்கு சமமானதாகவும், நிலையான இருப்புகளில் 20 சதவீத அளவுக்கோ அல்லது ரூபாய் 20 இலட்சத்திற்கோ எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப்படும். இந்தக் கடன் காலாண்டுக்கு ஒரு முறை, தொகை 100 இலட்சத்திற்குள் 24 காலாண்டுகளுக்கு என்ற அடிப்படையில் வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட 8 ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு சம ஆண்டுத் தவணைகளில் வட்டி ஏதுமின்றி திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்கும் ஊக்கச் சலுகைத் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை 250 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 29,15.49 இலட்சத்துக்கு ஒப்புதல் அளித்து, அதில் ரூபாய் 25,07.46 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1986 மே 3]

(இ) மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை:

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் இம் மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 30 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவு அதன் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15 சதவீதத்தை நேரடி மானியமாக அல்லது மானியமாகப் பெற தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்கு கருவிகள், தளவாடங்கள் மாற்றப்பட்டபோதிலும், அந்தத் தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையதாகும். ஒவ்வொரு தொழிற் பிரிவு பெறத் தக்க மானியத்தின் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தின் 85 சதவீதத் தொகையும் உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும்.

1-4-1983 முதல் மேலும் இலகுவான நிதியுதவி பெற அனுமதிக்கப்பட்டுள்ள 9 பின்தங்கிய மாவட்டங்கள் 10 சதவீதம் மத்திய நேரடி மானியம் (உயர்ந்த பட்ச நிதி உதவி ரூ. 10 இலட்சம்) பெற அனுமதிக்கப்பட்டது. இத்திட்டம் ஏற்கனவே 15 சதவீதம் மானியம் அறிவிக்கப்பட்டுள்ள வட்டாரங்களுக்கோ 31-3-1983 ஆம் நாள் ரூ. 30 கோடி தொழில் மூலதனம் உள்ள பகுதிகளுக்கோ அனுமதிக்கப்பட மாட்டாது.

(ஈ) மாநில அரசின் மானியம் (உதவித் தொகை):

இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் 15 சதவீத மானியத் திட்டத்தின் கீழ் வராத 35 பின்தங்கிய வட்டங்களிலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடியிலும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கடலூரிலும் அமைக்கப்படவிருக்கும் இணையங்களிலும் எந்தத் தொழில் பிரிவும் அதன் நிலையான முதலீட்டில் 15 சதவீதம் மானியத்தின் இணையான தொகையோ அல்லது 15 இலட்சம் உதவித் தொகையோ இரண்டில் எது குறைவோ அதை பெறும் வகை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள்

பயன்பெறும். இது 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் நாள் அமுலுக்கு வந்தது. 1985–86 ஆம் ஆண்டுக்கு ரூ. 200 இலட்சம் ஒப்புதல் அளிக்க நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில் 1985 டிசம்பர் வரை ரூ. 174.42 இலட்சத்திற்கு அமுலுக்கு வந்துள்ளது. அதே போல் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூ. 100 இலட்சத்தில் 1985 டிசம்பர் வரை ரூ 89.52 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

(உ) குறிப்பிட்ட தொழிலுக்கு மானியத் திட்டம்:

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானிய திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மின் அணு, மருந்துகள் தயாரிப்பு மற்றும் மோட்டார் வாகன உபரி தொழில்கள் மேலும் சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கருவிகளை தயாரிக்கும் பிரிவுகளுக்கும், சூரிய சக்தி கருவிகளையும் குறிப்பிடப்பட்டுள்ள புதுப்பிக்கும் சக்தியைக் கொண்டு இயங்கும் கருவிகளையும் பயன் படுத்தும் பிரிவுகளுக்கும் இந்த மானியம் அளிக்கப்படுகிறது. மேலே கூறப்பட்ட தொழில்கள் மத்திய மற்றும் மானியத் திட்டத்தின் கீழ் வராத தமிழகத்தின் எந்த பகுதியில் நிறுவப் படும் எந்த ஒரு நிறுவனமும் அதன் நிலையான முதலீட்டில் 10 சதவீதம் மானியமாகவோ அல்லது ஒரு நிரந்தர ஊழியருக்கு ரூ. 20,000 அல்லது ரூ. 10 இலட்சம் ரூபாய் என்ற இந்த மூன்று வகையான திட்டத்தில் எது குறைவோ அதை பெறலாம். இத் திட்டம் பாரதத்தின் எந்த பகுதியிலும் இதுவரை செயல்படுத் தப்படாத ஈடு இணையற்ற தமிழக அரசின் திட்டமாகும். இத் திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

II (i) நேரடி நிதி உதவி.—கடந்த பதினான்கு ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணை கடன் உதவி முறையே 1985 மார்ச்சு 31 முடிய ரூ. 18,469.03 இலட்சம் மற்றும் ரூ. 11,674.31 இலட்சமாகும். 1980–81 இல் இருந்தே மொத்தம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டு நிலையை நோக்குங்கால் வெகுவாக உயர் வடைந்துள்ளது.

1986 மே 3]

(ii) உத்தரவாதம் அளித்தல்/நேரடி சந்தா :

பொறுப்புகளுக்கு உத்திரவாதம் அளித்ததின் விளைவாக அல்லது நேரடி சந்தா வாயிலாக, கடந்த பதினான்கு ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட உத்திரவாத வசதிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டவை. எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.		ஒப்புதல் அளிக்கப் பட்டது.	ரத்து செய்யப் பட்டது.	நேரடி சந்தாவுக்கு கோரிக்கை பங்குகள்.
(1)		(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
1972–73	..	23.20	..	..
1973–74	..	24.30	..	..
1974–75	..	5.00	..	0.55
1975–76	..	16,500	..	1.29
1976–77	..	11.00	18.50	2.00
1977–78	..	16.00	13.30	1.13
1978–79	..	5.00	3.50	0.37
1979–80	..	6.20	2.50	1.53
1980–81	..	24.40	..	12.29
1981–82	..	13.75	..	8.03
1982–83	..	18.25	..	1.52
1983–84	..	26.50	8.00	15.67
1984–85	..	56.70	..	..
1985–86 (டிசம்பர் 1985 வரை).	..	17.80	..	10.15
		264.60	45.80	39.90

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1986 மே 3

(iii) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவி திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்த மற்றும் வழங்கியது 31–3–1985 முடிய முறையே ரூ. 519.24 இலட்சம் மற்றும் ரூ. 382.61 இலட்சம் ஆகும். தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவு செய்துள்ளது :—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சதவீதத்தை தங்களது மூலதனமாகக் கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின்தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும் முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது).

(ஆ) உத்திரவாதமளித்தல், நேரடி சந்தா ஆகிய நிதி உதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 11 சதவீதம் வட்டியும், ஏனைய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 12.5 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் $1\frac{1}{2}$ சதவீதமாகும்.

III. வளர்ச்சி மையங்கள்.

இணையத்தின் பெயர்.	மேம்படுத்தப் பட்ட பரப்பு.	மூலதனச் செலவு.
(1)	(2)	(3)
	(ஏக்கர்)	(ரூபாய் இலட்சத்தில்.)
இராணிப்பேட்டை–1	570.63	159.00
இராணிப்பேட்டை–2	141.03	
ஓசூர்	938.26	363.00
மானாமதுரை	382.20	109.00
கும்மிடிப்பூண்டி	650.00	86.00
புதுக்கோட்டை	330.50	97.00
கடலூர்	371.00	140.00
தூத்துக்குடி	595.40	12.59

(விரிவு படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டது.)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1986 மே 3]

1. இராணிப்பேட்டை :

சிப்காட் நிறுவனம் முதன் முதலாக இந்த இராணிப்பேட்டை தொழில் இணையத்தினை 1973-ல் அமைத்தது. முதல் கட்ட திட்டத்தில் ஏறக்குறைய எல்லா நிலமும் ஒதுக்கப்பட்டு விட்டது. இரண்டாவது கட்ட திட்டத்தில் என்பீல்டு இந்தியா நிறுவனத்தின் மனைகள் வழங்கப்பட்டுவிட்டது. தொழில் துவங்கி உள்ள, ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் இந்த தொழில் இணையத்தில் உள்ளது. இரண்டாவது கட்டத் திட்டத்தில் எஞ்சியுள்ள மனைகள் விரைவில் வழங்கப்படும்.

2. ஓசூர் :

ஓசூர் தொழில் இணையம் 1976-ல் இருந்து செயல்பட்டு வருகின்றது. பெங்களூருக்கு அருகாமையில் உள்ளதால், தமிழ் நாடு மற்றும் கர்நாடக மாநில தொழில் முனைவோர்கள் இந்த இணையத்தில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். இந்த இணையத்தில் எல்லா அடிப்படை வசதிகளும் செய்து தரப் பட்டுள்ளன.

ஓசூர் இரண்டாவது கட்டத்தில் சமுதாய அடிப்படை வசதியைக் கருத்தில் கொண்டு, குடியிருப்பு இணையமாக அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. மானாமதுரை :

இந்த மானாமதுரை வளர்ச்சி மையம் மதுரையிலிருந்து 45 கி.மீ. தூரத்தில் உள்ளது. எல்லா கட்டுமான வேலைகளும் ஏறக்குறைய முடிவடைந்து விட்டன. தண்ணீர் விநியோகம் மற்றும் குழாய்ப் பணிகள் இனி எடுத்துக் கொள்ளப்பட்டு, விரைவில் முடிக்கப்படும். எல்லா அடிப்படை வசதிகள் இருந்தும், தொழில் முனைவோர்களின் ஆர்வம் போதிய அளவு இல்லை. ஒரு ஏக்கர் மனை விலை ரூ. 15,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் மற்றும் மத்திய மானியம் போன்ற உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே இனிமேல் போதிய முன்னேற்றம் ஏற்பட்டு, மனைகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

4. கும்மிடிப்பூண்டி :

சென்னையிலிருந்து 45. கி.மீ. தொலைவில் சென்னை நெல்லூர் தேசீய நெடுஞ்சாலையில், கும்மிடிப்பூண்டி தொழில் இணையம் உள்ளது. இந்தத் தொழில் இணையத்தில் தொழில்

[1986 மே 3

முனைவோர்களின் ஆர்வம் நன்றாக உள்ளது. இதுவரை 100 தொழிற்சாலைகளுக்கு நிலம் ஒதுக்கப்பட்டு உள்ளது. மேலும் 109 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. நிர்வாக கட்டிடம், சாலை வசதி, தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. கழிவு நீர் குழாய்கள் விரைவில் அமைக்கப் படும். ஏற்கனவே நில எடுப்பு செய்த நிலங்களுக்கு, அதிக நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. எனவே ஏற்கனவே மனைகளுக்கு நிர்ணயித்த விலையினை உயர்த்துவதுப் பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

5. புதுக்கோட்டை :

புதுக்கோட்டை தொழில் இணையம், புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிடத்தில் அமைந்துள்ளது. தொழில் முனைவோர்களிடமிருந்து தொழில் துவங்க தற்போது ஆர்வம் அதிக மாகத் தெரிகின்றது. இதுவரை 18 தொழில் முனைவோர்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டு உள்ளது. மேலும் 11 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. அடிப்படை வசதிகளைப் பொறுத்த வரை 95 சதவீத சாலை வேலைகள், 50 சதவீத தண்ணீர் வழங்குதல் வேலைகள் முடிக்கப்பட்டுவிட்டன. கழிவு நீர் அகற்றுதல் சம்பந்தமான பணி நடந்து கொண்டு உள்ளது. மற்றும் அலுவலர்களுக்கு குடியிருக்க குடியிருப்பு கட்டப்படும்.

6. கடலூர் :

கடலூர் தொழில் இணையம், பழைய கடலூர் நகரத்திற்கு அப்பால் அமைந்துள்ளது. இதுவரை 18 தொழில் முனைவோர்களுக்கு நிலம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 10 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளது. அடிப்படை வசதிகளைப் பொறுத்தவரை, 75 சதவீத தண்ணீர் வழங்குதல் வேலைகள், 90 சதவீத அளவிற்கு நிர்வாக அலுவலகக் கட்டிட வேலைகள், பணியாளர்களுக்கான குடியிருப்பு 50 சதவீத அளவிற்கு முடிக்கப்பட்டு விட்டது. மேலும் சாலை வசதிகள், கழிவுநீர் அகற்றுதல் போன்ற பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் பட்டு முடிக்கப்படும்.

7. தூத்துக்குடி :

தூத்துக்குடி தொழில் இணையத்திற்கு கையகப்படுத்த வேண்டிய 1256.90 ஏக்கர் நிலப்பரப்பளவில் இதுவரை 595.40 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. தூத்துக்குடியில் ஒரு திட்ட அலுவலகம், 1985 அக்டோபரில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. காடுகளை அழித்து, நிலங்களைச் சமப்படுத்தும் பணிகள் துவக்கப்பட்டு உள்ளது.

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலம் :

சென்னைக்கு அருகே ஏற்றுமதி தொழில் மண்டலம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக ஒப்படை செய்யப்பட்ட 228 ஏக்கர் நிலத்தில், 98 ஏக்கர் நிலம் ஏற்றுமதி தொழில் மண்டலம் அமைக்க ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி தொழில் மண்டலம் அமைப்பதற்கான முழு செலவையும், மத்திய அரசு ஏற்றுக் கொள்கின்றது.

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்தின் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்தும் முகமைப் பொறுப்பை சிப்காட்டிடம் தமிழக அரசு ஒப்படைத்துள்ளது. மேற்கண்ட பணிகளை 5 விழுக்காடு சேவை கட்டணத்தில் சிப்காட் நிறைவேற்றி தருகின்றது. சென்னையில், சென்னை ஏற்றுமதி தொழில் மண்டல, வளர்ச்சி ஆணையர் அலுவலகமும், நிர்வாக, நிதி போன்ற இனங்களில் அனுமதி வழங்க ஒரு அதிகாரக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தேவையான செலவினை 'சிப்காட்' முதலில் செய்துவிட்டு, பின்னர் மத்திய அரசிடமிருந்து காலாண்டு முறையில் பணத்தைத் திரும்ப பெற்றுக் கொள்கின்றது.

பல்வேறு வகையான பணிகளுக்காக ரூ. 679.57 இலட்சம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முக்கிய கட்டுமானப் பணிகளான எல்லைச் சுவர், கண்காணிப்பு அறை (Watching Cabins) சாலைகள் அமைத்தல், ஸ்டாண்டர்டு டிசைன் பாக்டரி போன்ற பணிகள் ஏற்கனவே துவங்கப்பட்டுவிட்டன. சமீபத்தில் பெய்த அடை மழையின் காரணமாக ஏற்பட்ட சில மராமத்து வேலைகள் மற்றும் சுவர்களுக்கு வெள்ளை அடித்தல் நீங்கலாக, காம்பவுண்டு சுவர் வேலை ஏறக்குறைய முடிவு பெற்று விட்டது. 75 சதவீத சாலை அமைத்தல் பணி முடிந்து விட்டது. எஞ்சிய பணியும் துரிதமாக நடந்து வருகின்றது. ஸ்டாண்டர்டு டிசைன் பாக்டரியில் பிளாக் நெ. 1 மற்றும் 2-ல், 40 சதவீத வேலைகள் பூர்த்தியாகி விட்டது. பிளாக் நெ. 3 முதல் 8 வரை, தரை வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றது. மேலும், நிலத்தினை சீர்படுத்துதல், தண்ணீர் விநியோகம், மின்சாரம், தெரு விளக்குகள் போன்ற பிற பணிகள் விரைவில் துவக்கப்பட்டு செயல் படுத்தப்படும். எஞ்சிய பிற பணிகள் அடுத்த நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

பணியின் முடிவுகள்.

1984–85-ம் நிதியாண்டில் எல்லா செலவினங்களும் தேய்மானங்களும் போக நிகர லாபம் ரூபாய் 116.56 இலட்சம் 1983–84-ம் ஆண்டு இலாபம் ரூ. 124.42 இலட்சமாகும்.

[1986 மே 3

இணைப்பு இரண்டில் திட்டவாரியான நிதியுதவிகள் பற்றிய விவரங்கள்:

1. 1985–86-ம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

2. 1986–87-ம் ஆண்டுகளுக்கான ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய திட்டக் குறியீடுகள்.

வேலை வாய்ப்பு :

1985-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் தேதி முடிய சுமார் 88,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்று நிறுவனங்களில் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை ஏற்படுத்திய வேலை வாய்ப்புகளும், இனி ஏற்படுத்த இருக்கும் வேலை வாய்ப்புகளும் ஆண்டு வாரியாக :

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆண்டு. (1)	வேலை பெற்றவர்களின் எண்ணிக்கை. (2)
1981–82	5,700
1982–83	9,000
1983–84	9,000
1984–85	10,000
1985–86 (டிசம்பர் 1985 வரை)	5,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

மத்திய மூலதன உதவித் தொகைத் திட்டம் 1971.

அ. ஒப்புதல் (மொத்தம்).

ஆண்டு.	எண்.	பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் தொகை.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்.)
1978 மார்ச் 31 வரையில்	154	975.89
ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை	46	284.04
ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை	52	333.72
ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை	69	528.42
ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை	46	289.98
ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை	103	740.69
ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை	47	358.49
ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை	40	322.45
ஏப்ரல் 1985 முதல் டிசம்பர் 1985 வரை	18	169.56
மொத்தம்	575	4,003.24

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆண்டு.	சிறு தொழில்கள. எண்.	தொகை.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1978 மார்ச் 31 வரையில்	749	179.47
ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை	181	62.85
ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை	406	78.86
ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை	637	218.26
ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை	544	213.38
ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை	2,369	895.76
ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை	560	228.46
ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை	781	245.54
ஏப்ரல் 1985 முதல் டிசம்பர் 1985 வரை	1,132	359.79
31—12—1985 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை	7,359	2,482.37

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆண்டு.	மொத்தம்.	
	எண்.	தொகை.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1978 மார்ச் 31 வரையில்	903	1,155.36
ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை	227	346.89
ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை	458	412.58
ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை	706	746.68
ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை	590	503.36
ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை	2,472	1,636.45
ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை	607	586.95
ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை	821	567.99
ஏப்ரல் 1985 முதல் டிசம்பர் 1985 வரை	1,150	520.35
31—12—1985 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை	7,934	6,485.61

ஆ. வழங்குதல்.

ஆண்டு. (1)	நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். (2)	சிறு தொழில்கள். (3)	மொத்தம். (4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
1978 மார்ச் 31 வரை	618.43	151.62	770.05
1978 ஏப்ரல் முதல் மார்ச் 1979 வரை	176.03 2.24	30.09	206.12 2.24
1979 ஏப்ரல் முதல் மார்ச் 1980 வரை	232.26	41.78	274.04
1980 ஏப்ரல் முதல் மார்ச் 1981 வரை	319.09	109.33	428.42
1981 ஏப்ரல் முதல் மார்ச் 1982 வரை	307.50	155.64	463.14
1982 ஏப்ரல் முதல் மார்ச் 1983 வரை	360.77	108.13	468.90
1983 ஏப்ரல் முதல் மார்ச் 1984 வரை	426.40	361.96	788.36
1984 ஏப்ரல் முதல் மார்ச் 1985 வரை	438.62	361.71	800.33
1985 ஏப்ரல் முதல் டிசம்பர் 1985 வரை	*276.77	**335.55	612.32
டிசம்பர் 1985 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை	3,158.11	1,655.81	4,813.92

* தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மட்டும்.

** தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

இ. மத்திய அரசிடம் திரும்பப் பெற்றது.

ஆண்டு.	சிப்காட்.	ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை,
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1978 மார்ச் 31 வரை	448.30	613.59
ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை	161.51	229.63
ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை	125 54	165.57
ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை	301.91	425.35
ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை	215.52	376.94
ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை	192.23	289.99
ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை	501.97	816.42
ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை	384.90	926.21
ஏப்ரல் 1985 முதல் டிசம்பர் 1985 வரை	321.50	668.98
டிசம்பர் 1985 வரையான மொத்தத் தொகை	2,653.38	4,512.68

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 2.

1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்புதல் மற்றும் வழங்குதல் பற்றிய விவரங்கள்.

1985-86 மற்றும் 1986-87 ஆண்டுகளுக்கான திட்டங்களின் குறியீடுகள் :—

விவரம்.	1984-85 முன்னேற்ற விவரம்.	1984-85 வரவு-செலவு திட்ட மதிப்பீடு.	1985-86 செயலாக்கப் பட்டது. (டிசம்பர் 1985 வரை). 1985-86.	1985-86 1986-87-க் கான செயல் இலக்கு 1986-87.	இலக்கு 1986-87.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் இலட்சத்தில்.)		
தவணைக் கடன்					
ஒப்புதல் ..	4,638.45	3,500.00	3,250.32	4,500.00	5,000.00
வழங்குதல் ..	2,969.91	2,800.00	2,026.01	3,200.00	3,500.00
ஆதார மூலதனத் திட்டம்—					
ஒப்புதல் ..	184.40	120.00	72.00	150.00	150.00
வழங்குதல் ..	131.23	150.00	86.60	150.00	150.00
வட்டியில்லா விற்பனை வரிக்கடன் —					
ஒப்புதல் ..	494.92	300.00	337.61	550.00	400.00
வழங்குதல் ..	494.74	375.00	190.91	550.00	400.00

விவரம்.	1984-85 முன்னேற்ற விவரம்.	1984-85 வரவு-செலவு திட்ட மதிப்பீடு.	1985-86 செயலாக்கப் பட்டது. (டிசம்பர் 1985 வரை). 1985-86.	1985-86 1986-87-க் கான செயல் இலக்கு. 1986-87.	இலக்கு 1986-87
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் இலட்சத்தில்.)		
மத்திய உதவி மானியம் (சிப்காட்) மட்டும்—					
ஒப்புதல் ..	322.45	250.00	154.56	350.00	400.00
வழங்குதல் ..	387.22	350.00	276.13	350.00	400.00
திரும்பப்பெறுவது	384.90	350.00	319.69	350.00	400.00
உத்திரவாதமளித்தல் / நேரடிச் சந்தா—					
ஒப்புதல் ..	56.70	25.00	17.80	50.00	50.00
வழங்குதல் ..	10.15	25.00	12.50	25.00	50.00
மாநில மூலதன உதவி மானியம் —					
ஒப்புதல் ..	365.03	100.00	174.50	200.00	200.00
வழங்குதல் ..	180.41	100.00	89.72	160.00	100.00

1986 மே 3]

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் :

உலக வங்கியிடமிருந்து ரூ. 105 கோடி உதவியுடன், கரும்பு சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கும் ஒரு பெருமை வாய்ந்த காகித ஆலை திட்டத்தை நிறுவும் நோக்கத்துடன் (தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை) தமிழக அரசு உருவாக்கியது. இந்த ஆலை நாளொன்றுக்கு 300 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 240 டன்கள் அச்சிடும் / எழுதும் காகிதமும் உற்பத்தி செய்யும் திறனுடையதாகும்.

2. 1984 செப்டம்பர் மாதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட காகிதக் கூழைக் கொண்டு மாதிரி உற்பத்தியை துவக்கியது. படிப்படியாக, காகிதக் கூழ் குழாய்கள் நிறுவப்பட்டன. கடினமரம் மற்றும் இரசாயன கரும்புச் சக்கைக் கூழ் குழாய்கள் ஆகியவை 1985 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தயாராகியது. 1985 அக்டோபர் மாதத்தில் இயந்திர கரும்புச் சக்கை கூழ் தயாரிக்கும் குழாய் தயாராகியது. 75 சதவிகிதம் கரும்புச் சக்கைக் கூழ் மூலப் பொருளாகக் கொண்டு, அச்சிடும் மற்றும் எழுது தாள் காகித உற்பத்தி 1985 ஆகஸ்ட் மாதத்தில் துவங்கியது. முதன் முறையாக 100 சதவீதம் உள்நாட்டு கரும்புச் சக்கை கூழைக் கொண்டு செய்தித்தாள் காகித உற்பத்தி 1985 அக்டோபர் 18-ம் தேதியன்று துவங்கியது.

3. முக்கியமாக, கிரிம்வோவ் (Cream wove) மற்றும் நகல் எடுக்கும் காகிதங்கள் ஆகிய இரண்டு விதமான காகிதங்கள் இந்த ஆலையில் தயாரிக்கப்பட்டு, சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்த ஆலையில் தயாரிக்கப்படும் காகிதம், நாட்டிலுள்ள முதன்மையான பல பத்திரிக்கைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

4. 1—4—1985-லிருந்து 31—12—1985 முடிய உள்ள கால கட்டத்தில் டி.என்.பி.எல். நிறுவனம் 39,535 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 6,797 டன்கள் எழுதுதாள்/அச்சிடும்தாள் காகிதம் உற்பத்தி செய்து, தனது உற்பத்தித் திறனில் 70 சதவிகிதத்தை எட்டியுள்ளது. ரூ. 24 கோடி மதிப்புள்ள அந்நியச் செலவாணியை மிச்சப்படுத்த உதவியுள்ளது.

5. இந்த ஆலை 1,500 பேருக்கு நேர்முக வேலை வாய்ப்பும், 5,000 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளித்துள்ளது.

6. நாட்டில் முதன்முறையாக, கரும்புச் சக்கையிலிருந்து வெற்றிகரமாகவும், வியாபார ரீதியாகவும், செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

டி.என்.பி.எல். நிறுவனம் 1—10—1985-லிருந்து வியாபார ரீதியான உற்பத்தியைத் துவங்கியுள்ளது. எதிர் காலத்தில் உருவாகும் இதுபோன்ற பல காகித ஆலைகளுக்கு டி. என். பி. எல். ஒரு முன்னோடியாக இருக்கும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் செயல் முறை குறித்த விவரக் குறிப்பு :

மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் நிறுவனத்தைச் சார்ந்த தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (TIIC), தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் அதன் விரைவான முன்னேற்றத்திற்கும் நிதி உதவி அளிக்கும் தனது பணிகளுடன் இருபது அம்சத் திட்டம் உள்ளிட்ட அரசின் சமூக பொருளாதார கொள்கைகளைச் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

நிலம், கட்டிடம், தளவாடம், எந்திரச் சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கு இந்த நிறுவனம் குறிப்பிட்ட காலக் கடன்களை வழங்குவதுடன் காலவரம்பைக் கடந்து தொகை செலுத்துவதற்கும் உத்தரவாதம் அளிக்கிறது. நிதியுதவி பெறும் தொழில் நிறுவனங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்கிறது. புதிய தொழிற்களைத் தொடங்குவதற்கு நிதியுதவி அளிப்பதோடு தற்போதுள்ள தொழில் பிரிவுகளை விரிவாக்கவும், பல்திறப்படுத்தவும், நவீனப்படுத்தவும் இந்நிதியுதவி அளிக்கப்படுகிறது.

நாடாளுமன்றம் அண்மைக் காலத்தில் மாநில நிதியுதவியிலும் நிறுவனங்கள் நன்முறையில் செயல்படும் பொருட்டு மாநில நிதியுதவி நிறுவனங்கள் சட்டத்தில் பல பிரிவுகளைத் திருத்தியமைத்ததோடு, புதிய சில பிரிவுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தின்கீழ், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் உட்பட, மாநில நிதியுதவி பெறும் நிறுவனங்கள் கூட்டமைப்புகளுக்கு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கடனுதவியை ரூ. 30.00 இலட்சத்திலிருந்து ரூ. 60.00 இலட்சம் வரையிலும், சிறிய நடுத்தரத் தொழில்களின் உரிமையாளர்களுக்கு அல்லது பங்குதாரர்களுக்கு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கடனுதவியை ரூ. 15.00 இலட்சத்திலிருந்து ரூ. 30.00 இலட்சம் வரையிலும் உயர்த்தியுள்ளது.

தொழில் விரிவுகளில் செயல்களை ஆய்வு செய்தல் :

கடன் தொகைக்கு அனுமதித்தல், வழங்குதல், வசூலித்தல் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், இந்நிறுவனத்தின் பணி கணிச

மான அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறாகும் :—

ஆண்டு.		அனுமதித்த தொகை.	வழங்கிய தொகை.	வசூலித்த தொகை.
(1)		(2)	(3)	(4)
		(ரூபாய் கோடியில்.)		
1980–81		36.90	22.59	11.47
1981–82		52.13	35.07	13.76
1982–83		55.87	39.56	19.85
1983–84		59.74	41.11	25.23
1984–85		68.11	48.70	32.38
1985–86	(தோராயம்)	93.00	63.00	42.50

IV. சிறிய அளவிலான மிகச் சிறிய அளவிலான தொழில்களுக்கு நிதியுதவி :—

குறைவாக முதலீடு செய்து சிறிய மிகச் சிறிய அளவிலான தொழில்களின் மூலம் அதிக வேலை வாய்ப்பை உருவாக்கும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, எளிமையான நடை முறைகளுடன் சலுகைகளுடன் கூடிய நிபந்தனைகளின் பேரில் நிதியுதவி அளித்து சிறு தொழில்களில் அதிவேகமாக வளர்ச்சி பெறச் செய்வதே இக்கழகத்தின் முக்கியப் பணியாகும். பின் வரும் அட்டவணையில் அதன் ஒப்பீட்டுப் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன :—

(ரூபாய் இலட்சத்தில்).

ஆண்டு.	எண்ணிக்கை.	தொகை.	அனுமதிக்கப்பட்ட மொத்த தொகையின் சதவீதம்.	
			எண்ணிக்கை.	தொகை.
1980–81 ..	5,083	2,268	98	61
1981–82 ..	5,646	4,444	99	85
1982–83 ..	4,161	4,859	99	87
1983–84 ..	3,800	5,353	99	90
1984–85 ..	4,008	6,269	99	92
1985–86 (தோராயம்)	3,282	8,624	..	..

சுய வேலை வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல் :

பின்வரும் விவர அறிக்கைகளின்படி, பல்வேறு சிறப்புத் திட்டங்களின் கீழ் சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளும் தொழில் முனைவோர்களுக்குத் தாராளமாக நிதியுதவியை இக்கழகம் அளிக்கிறது :—

திட்டங்கள்.	1980-81		1981-82		1982-83		1983-84		1984-85	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
						(ரூபாய் இலட்சத்தில்.)				
போக்குவரத்து ஊர்திகளை இயக்குவோர்.	649	226	956	791	1,073	1,042	1,386	1,390	1,119	1,318
பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள்.	13	21	14	21	21	27	34	26	27	41
மின் உற்பத்தி எந்திரம்	94	229	19	26	699	504	168	143	54	53
ஓட்டல் தொழில்	10	57	2	9	1	2	15	161	34	297
தொழில் நுட்ப திறன் பெற்றவர்கள்.	40	52	91	103	64	105	88	161	15	26
மீன்பிடி படகுகள் ..	17	29	3	3	..	..	2	3	1	7

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1986 மே 3]

கடந்த 5 ஆண்டுகளில் அளிக்கப்பட்ட நிதியுதவியால் சுமார் 2,43,443 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தது.

1985–86 ஆம் ஆண்டிற்கான திட்டம் :

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஏற்பளிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான செயல் முறை வருமாறு :—

அனுமதிக்கப்பட்டவை ரூ. 71.00 கோடி.
வழங்கப்பட்டவை ரூ. 61.00 கோடி.
வசூலிக்கப்பட்டவை ரூ. 38.00 கோடி.

எனினும் அதிகரித்துவரும் தொழில் நடவடிக்கைகளின் போக்கைப் பார்க்கையில் அனுமதிக்கப்படும் தொகை ரூ. 85.00 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொகை வசூலிப்பதும், வழங்குவதும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

VI. பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டும் எளிமையாக்குதல்.

இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களுக்கு அளிக்கப்படும் அதிக அளவு கடனானது ரூ. 2.00 இலட்சத்திலிருந்து ரூ. 15.00 இலட்சமாக உயர்த்தப்பட்டது. அதாவது, முதல் நிலை நகராட்சிகளின் கிராம, ஓரளவு நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள மருத்துவர்களின் தனியார் மருத்துவர்களை சிறு மருத்துவமனைகளை ஏற்படுத்துவதற்கு ரூ. 5.00 இலட்சம் வரையிலும் தமிழ்நாட்டில் எவ்விடத்திலேனும் மருத்துவத் தொழிலுக்காகப் பயன்படுத்தும் வகையில் மின்னியல் மருத்துவ நவீனச் சாதனங்களை வாங்குவதற்கு ரூ. 15.00 இலட்சம் வரையிலும் கடனுதவி அளிக்கப்படுகிறது.

20 அம்சத்திட்டம் உட்பட அரசின் சமூகப் பொருளாதார கொள்கைகளைச் செயற்படுத்துவதிலும், பெருமளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களை ஆதரிப்பதிலும், சமுதாயத்தினரிடையே நலிந்த, பொருளாதார வகையில் ஏழ்மைப் பிரிவைச்சேர்ந்த மக்களை உயர்த்துவதிலும் மாநிலத்தில் தொழில் வளர்ச்சி பற்றிய பொதுவான நோக்கத்தின்படி வட்டார சமன் பாட்டின்மையை நீக்கும் வகையில் மாநிலத்திலுள்ள வட்டாரங்கள் பின்தங்கிய பகுதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதிலும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தன்னுடைய முக்கியப் பங்கைப் பெருமளவில் ஆற்றிவருகிறது.

[1986 மே 3

தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் ரூபாய் 200 இலட்சங்கள் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் 1974 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ. 200 இலட்சம், ரூ. 145 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு, உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உப பொருட்களைத் தயாரிப்பது ஆகும்.

மாரியர் வாலிநோக்கம் உப்புத் திட்டம் :

மிகவும் பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ள இத் திட்டம் 1975 ஆம் ஆண்டு திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு முதல் உப்பு உற்பத்தியைத் தொடங்கியது. வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க இயலாத மிகவும் பின் தங்கிய இடத்தில் அமைந்துள்ள இத்திட்டம் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன், பின்தங்கிய பகுதியை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டம் 1985 ஆம் ஆண்டு இரசாயன தொழிற் சாலைக்குகந்த தரமான 33,600 டன் உப்பு உற்பத்தி செய்தது. 1985 ஆம் ஆண்டில் இடைவிடாது பெய்த மழை மற்றும் மின் சார தடை முதலியவைகளால் இத்தொழிற்சாலையின் உற் பத்தி பாதிக்கப்பட்டது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் தூத்துக் குடி அல்காலி கெமிக்கல்ஸ் லிமிடெட், திருவாங்கூர் கொச்சின் கெமிகல்ஸ் லிமிடெட் மற்றும் கோத்தாரி இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் போன்ற தொழிற்சாலைகளுக்குத் தொடர்ச்சி யாக உப்பு விற்பனை செய்கிறது. 31–12–1985 முடிய 27,202 மெட்ரிக் டன் உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு ரூ. 75 இலட்சம் செலவில் வாலிநோக்கத்தில் சிறு துறைமுகம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு துறைமுகத் துறை இதற்கான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இத்துறைமுகம் நிறுவப்பட்ட பின் உப்பு அதிகம் தேவைப்படும் மேற்கு வங்காளம், அஸ்ஸாம் மற்றும் அயல் நாடுகளுக்கு ஏற்று மதி செய்ய உப்பு விற்பனையைப் பெருக்க வாய்ப்பு உள்ளது.

1986 ஆம் ஆண்டில் இத்திட்டம் இரசாயன தொழில் சாலைக்குத் தகுந்த சுமார் 60,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும். தவிர, குறிப்பிட்டளவான உற்பத்தி அடைய மற்ற மேம்பாட்டுப் பணிகள் படிப்படியாக நிறைவேற்றப் படும். இதன் முதற் கட்டமாக உப்பளத்தின் தெற்குக்கரை

1986 மே 3]

மேம்படுத்தப்பட உள்ளது. இப்பணிக்கு ஆலோசகரின் பரிந்துரையின்படி சுமார் ரூ. 30 இலட்சங்கள் மதிப்பில் ஒரு விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மத்திய உப்பு அறிவுரைக்குழு சென்னையில் நடந்த கூட்டத்தில் 50 சதவிகித உப்பு வரி மானியத்துடன் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 1986 மற்றும் 1987 உப்பு உற்பத்தி காலத்திற்குள் நிறைவேற்றப்படும். 1986 ஆம் ஆண்டில் குறைந்த அழுத்த மின்சக்தி இடைநிலை நீரேற்றுப் பகுதிக்குப் பெறப்படும்.

இத்திட்டம் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டதும் 200 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும், 1,000 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கப்படும். மேலும் உப்பு உற்பத்தி காலத்தில் 70 பேர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 150 பேர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிப்பதுடன் ஒப்பந்தக்காரர்கள் மூலமாக சுமார் 200 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தற்பொழுது 32 நபர்கள் அலுவலக வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சர்தார் வேதரத்னம் உப்புத் திட்டம்:

1979 ஆம் ஆண்டில் இத்திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே மாதம் முதல் உப்பு உற்பத்தி தொடங்கின. 1985 ஆம் ஆண்டு ஜூலை முதல் ஆகஸ்டு வரை பெய்த பெருமழையினாலும் மற்றும் நவம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தினாலும் மற்றும் வருட ஆரம்பம் முதல் பெய்த அடை மழை காரணமாகவும் இத்தொழிற்சாலையில் 6,403 மெட்ரிக் டன் உப்பு மட்டும் உற்பத்தி செய்ய முடிந்தது. முக்கிய கால்வாய் வெட்டவும், உப்பளப் பாத்திகள் அமைக்கவும், இன்ஜின் மற்றும் பம்புகள் போன்றவைகள் வாங்கவும் 1986 ஆம் வருடத்தில் ரூ. 10.96 இலட்சம் செலவிடப்படும். உயர் மின் அழுத்த வசதி பெறத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இவ்வாண்டு 10,000 மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரயில் போக்குவரத்து வசதி இருப்பதால் உப்பு விற்பனை அதிகரிக்கும் இத் திட்டம் முழுமையாகச் செயல்படும்பொழுது 100 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 400 முதல் 500 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கப்படும். தற்பொழுது உப்பு பணிகளுக்காக சுமார் 200 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பும் 20 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

உப்பு கழிவு நீரை தயார் செய்யும் பதப்படுத்தப்படாத மற்றும் கலவு உப்புகளைத் தயார் செய்வதற்கான பணிகளில் சுமார் 75 சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ளது. பவ நகரில் உள்ள

மத்திய உப்பு மற்றும் கடல் சார்ந்த இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஜீ. டி. பட் 36° உப்பு கழிவு நீர் உற்பத்திப் பணிகளை பார்வையிட ஜூலை 1985 ஆம் ஆண்டில் வாலிநோக்கம் உப்புத் திட்டத்திற்கு விஜயம் செய்தார். அவர் இது குறித்து வழி முறைகளையும் மற்றும் தொடர் நடவடிக்கை எடுக்க குறிப்பு ஒன்றையும் கொடுத்து உள்ளார். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. இதற்கு உப்பு வரிப் பணத்திலிருந்து உதவியும் பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மத்திய மற்றும் மாநில அரசு உதவியுடன் இரும்பு ஊட்டச் சத்துள்ள உப்பைத் தயாரிக்க இந்நிறுவனம் இசைந்துள்ளது. தேவையான கடன் உதவியுடன் இதற்கான ஆணை மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

மாநில அரசு மற்றும் உப்புத் துறையின் கூட்டுடன் வாலி நோக்கத்தில் மாதிரி உப்புப் பண்ணை ஒன்றை நிறுவ பவநகரி லுள்ள மத்திய உப்பு மற்றும் கடல் சார்ந்த இரசாயன பொருட் கள் ஆராய்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் இந்நிறுவனப் பணியாளர்கள் பயிற்சி பெறுவதுடன் உப்பு உற்பத்தியும் மேம்பட வாய்ப்பிருக்கிறது.

திட்ட உதவிகள் :

1986–87 ஆம் ஆண்டு திட்டத்தில் உப்புத் திட்டங்களுக்காக ரூ. 30 இலட்சம் பங்கு மூலதனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு 1987 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இழப்பைத் தவிர்க்கும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம், சென்னை.

தொழில்களுக்குப் பயன்படும் சில முக்கிய கனிமங்களை வணிக முறையில் வெட்டியெடுப்பதற்கும் கரும்பாறை மற்றும் இதர நிறப் பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யும் பணி களை மேற்கொள்ளவும் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் தற்போது ரூ. 300 லட்சம் ஆகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 197.50 லட்சம் ஆகும்.

1986 மே 3]

1985–86 ஆம் ஆண்டில் (1985 டிசம்பர் முடிய) உற்பத்தி மற்றும் விற்பனை, 1984–85 ஆம் ஆண்டு உற்பத்தி மற்றும் விற்பனையுடன் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1. கனிமங்களின் உற்பத்தி :

விபரம்.	1984–85		1985–86 (1985 டிசம்பர் முடிய).	
	அளவு.	மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்)	அளவு.	மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்)
கரும்பாறை	3,587க.மீ.	117.70	3,207க.மீ.	112.73
சாம்பல் நிறப்பாறை	3,432க.மீ.	42.80	2,662க.மீ.	35.41
உயர்வகை கனிமங்கள்	87,674 டன்	49.80	1,15,709 டன்.	56.09
		210.30		204.23

கனிமங்களின் விற்பனை :

விபரம்.	1984–85		1985–86 (1985 டிசம்பர் முடிய).	
	அளவு.	மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்)	அளவு.	மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்)
கரும்பாறை	3,165க.மீ.	221.82	2,755க.மீ.	207.80
சாம்பல் நிறப்பாறை	3,402க.மீ.	105.95	2,942க.மீ.	102.93
உயர் கனிமங்கள்	92,200 டன்	80.43	1,04,978 டன்.	96.18
		408.20		406.91

1985–86 ஆம் ஆண்டின் வருவாய் ரூ. 600 லட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டாமின் கிரெனைட் தொழிற்சாலை, மணலி.

உலகச் சந்தையில் மெருகிடப்பட்ட பாறைகளுக்கு உள்ள கிராக்கியைப் பயன்படுத்திக்கொள்ள நவீனமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய பாறை அறுத்து மெருகிடும் தொழிற்சாலை ஒன்றை டாமின் சென்னைக்குப் பக்கத்தில் மணலியில் ரூ. 640 இலட்ச மூலதனத்தில் நிறுவியுள்ளது. இந்த தொழிற்சாலை 50,000 ச.மீ. மெருகிட்ட கற்பலகைகளும், மற்றும் 10,000 ச.மீ. மெருகிட்ட நினைவுக் கற்களும் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். இத்தொழிற்சாலை நிறுவப்பட்டு உற்பத்தி 25-3-1986-ல் தொடங்கப்பட்டது.

சிவகங்கை கிராபைட் திட்டம்.

கிராபைட்டைப் பயன்படுத்தி சுத்திகரிப்பு மற்றும் மூசைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவ டாமின் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தை ரூ. 340.00 இலட்சம் மூலதனத்தில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் தொழிற்சாலை நாளொன்றுக்கு ரூ. 100 டன் கிராபைட்டைக் கொண்டு 14 டன் சுத்திகரிக்கப்பட்ட கிராபைட் தயாரிக்கும் திறன் வாய்ந்ததாக இருக்கும். இத்தொழிற்சாலை 1986-87 ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும்.

இந்நிறுவனம் சுமார் 3,200 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இது 1986-87 ஆம் ஆண்டில் 3,400 ஆக உயரும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் 1985-86 ஆம் ஆண்டில் செயல் ஆதாயமாக ரூ. 157.00 இலட்சம் ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் இந்த செயல் ஆதாயம் ரூ. 112.00 இலட்சமாகும்.

அயல்நாட்டுக் கூட்டுறவில் கிராபைட் பொருட்கள் மற்றும் உருக்கிய குவார்ட்ஸ் தயாரிக்கும் தொழில்களை நிறுவ தமிழ்நாடு கனிம நிறுவனம் வழி வகைகளை ஆராய்ந்து வருகிறது.

தமிழ் நாடு மேக்னசைட் லிமிடெட், சேலம்.

17-1-1979 அன்று தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், மேக்னசைட்டை வெட்டியெடுத்து விற்கும் நோக்குடன் ஒரு அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. அரசு இந்நிறுவனத்திற்கு பங்கு முதலீடாக ரூ. 550 லட்சம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு மேக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட், தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் துணை நிறுவனமாகும்.

1986 மே 3]

2. தொடக்கத்திலிருந்து மேற்கூறிய இரு நிறுவனங்களும் லாபத்தில் இயங்கி வருகின்றன. ஈட்டிய லாப விவரங்கள் வருட வாரியாக கீழே தரப்பட்டுள்ளன :—

வருடம்.	தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்.		தமிழ்நாடு மேக்னசைட் புராடெக்ட்ஸ் லிமிடெட்.	
	வரி செலுத்து முன் லாபம்.	வரி செலுத்திய பின் லாபம்.	வரி செலுத்து முன் லாபம்.	வரி செலுத்திய பின் லாபம்.
	(ரூபாய் லட்சத்தில்.)			
1979-80 ..	35.35	28.52	4.34	1.74
1980-81 ..	12.13	7.33	25.72	7.58
1981-82 ..	32.34	24.14	5.48	2.86
1982-83 ..	18.58	12.48	3.64	1.64
1983-84 ..	32.32	24.82	3.45	2.82
1984-85 ..	41.92	34.57	1.68	1.26

3. உற்பத்தி விற்பனை விவரங்கள் குறியீடுகளுடன் கீழே தரப்பட்டுள்ளன :—

தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்.

வருடம்.	உற்பத்தி.		விற்பனை.	
	குறியீடு.	அடைந்தது.	குறியீடு.	அடைந்தது.
	(மெட்ரிக் டன்னில்.)			
1979-80 ..	..	1,14,587	..	1,05,079
1980-81 ..	1,15,000	1,13,454	1,15,000	1,20,398
1981-82 ..	1,27,000	1,32,993	1,26,000	1,27,846
1982-83 ..	1,13,000	1,18,626	1,07,500	1,10,147
1983-84 ..	1,20,000	1,17,856	1,07,000	1,07,818
1984-85 ..	1,10,000	1,09,845	1,03,000	1,02,474

தமிழ்நாடு மேக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட்.

வருடம்.	மித சூடேற்றப்பட்ட மாக்னசைட்.				முழு எரியூட்டப் பெற்ற மேக்னசைட்.			
	உற்பத்தி.		விற்பனை.		உற்பத்தி.		விற்பனை.	
	குறியீடு.	அடைந்தது.	குறியீடு.	அடைந்தது.	குறியீடு.	அடைந்தது.	குறியீடு.	அடைந்தது.
	(மெட்ரிக் டன்னில்.)							
1979-80 ..	10,000	8,622	10,000	8,228	7,200	1,717	7.200	1,717
1980-81 ..	6,000	5,837	6,000	6,021	6,000	4,987	6,000	4,676
1981-82 ..	6,000	3,549	6,000	3,235	8,000	2,172	8,000	922
1982-83 ..	4,000	3,756	4,000	3,857	2,600	1,497	2,600	2,091
1983-84 ..	4,800	4,631	4,800	4,605	3,200	3,000	3,200	3,852
1984-85 —	5,207	3,166	5,207	6,654	3,918	6,332	3,918	3,194

1986 மே 3]

1. சுழலும் சூளைத் தொழிற்சாலை :

கச்சா மேக்னசைட்டைக் கொண்டு முழு எரியூட்டப்பெற்ற மேக்னசைட் தயாரிக்கும் சுழலும் சூளை திட்டம் ஒன்றை தமிழ் நாடு மேக்னசைட் லிமிடெட் ரூ. 765 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு உற்பத்தி 5–2–1986-இல் தொடங்கிவிட்டது.

2. இரசாயன முறை தரம் உயர்த்தும் திட்டம் :

ரூ. 58 கோடி மதிப்பீட்டில் இரசாயன முறை தரம் உயர்த்தும் திட்டத்தை நிறுவுவதற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் நிதி உதவிக்கு அணுகியுள்ளது. 1988 ஆம் ஆண்டு இறுதியில் உற்பத்தி தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

3. சூளைக் கற்கள் தயாரிக்கும் திட்டம் :

முழு எரியூட்டப்பெற்ற மேக்னசைட் மற்றும் உயர்தர ஸிண்டர்டு மேக்னீசியாவை கச்சாப் பொருள்களாகக் கொண்டு, தமிழ் நாடு மேக்னசைட் லிமிடெட் உயர்தர வெப்பந்தாங்கி கற்களைத் தயாரிக்கும் திட்டம் ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கு தொழில்நுட்ப உதவி வழங்க ஆஸ்திரியாவிலுள்ள திருவாளர்கள் ரீப்ராக்டரீஸ் கன்சல்டிங் மற்றும் என்ஜினியரிங் ஜி.எம்.பி.எச். உடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திட்டத்தின் செலவு சுமார் 52 கோடியாகும்.

மைய அரசின் முதலீடுகள்.

மைய அரசு 1977-க்கும் பின்னர் தமிழ்நாட்டில் இரு புதிய தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது—ஒன்று சேலம் உருட்டாலை, மற்றொன்று இராணிப்பேட்டையில் உள்ள பாரத கனரக மின் உபபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை. தமிழ் நாடு அரசின் விடா முயற்சியால் திருச்சியில் ரூ. 70 கோடி முதலீட்டில் மிகு உலோக கலவை ஊடுருவல் தொழிற்சாலை நிறுவப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ. 12 இலட்சம் செலவில் 170 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்தி மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திடம் ஒப்படைக்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ரூ. 376 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கல் திட்டம் ஒன்றை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற்படுத்தி வருகிறது. மணலியிலுள்ள சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ரூ. 170 கோடி செலவில் விரிவாக்கத் திட்டப் நிறைவேற்றப்

படுகிறது. மேலும் சென்னை உரத் தொழிற்சாலை ரூ. 550 கோடி செலவில் விரிவாக்கத் திட்டம் செய்யவிருக்கிறது. சேலம் உருக்காலை ரூ. 55.78 கோடி செலவில் சென்ஸிமிர் மில் ஏற்படுத்த இருக்கிறது. இந்துஸ்தான் டெலிபிரிண்ட்டர்ஸ் நிறுவனம் ரூ. 12.62 கோடி செலவில் மின்சார தட்டச்சு இயந்திரங்களையும் மின்னணுவியல் தட்டச்சு இயந்திரங்களையும் தயாரிக்கும் விரிவாக்கத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நெய்வேலி நிலக்கரி நிறுவனம் இரண்டாவது சுரங்கத்தை 4.7 மில்லியன் டன்னிலிருந்து 10.5 மில்லியன் டன் வரைக்கும் மற்றும் இரண்டாவது அனல் மின் நிலையத்தை 630 மெகாவாட்டிலிருந்து 1,470 மெகாவாட்டாக 1983-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ரூ. 30 கோடி செலவில் மின்னணுவியல் தொழிற்சாலை ஒன்றை நந்தம்பாக்கத்தில் நிறுவ இருக்கிறது. மற்றும் இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனம் ரூ. 2 கோடி செலவில் பூச்சு தொழிற்சாலையும் ரூ. 1.97 கோடி செலவில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையமும், ரூ. 10 கோடி செலவில் காந்த நாடா தயாரிக்கும் தொழிற்சாலையும் நிறுவியுள்ளது. மேலும் ரூ. 170 கோடி செலவில் எக்ஸ்ரே பிலிம் தயாரிக்கும் திட்டம் மைய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 200 கோடி செலவில் கலர் பாசிடிவ் பிலிம் தயாரிக்கும் திட்டத்தையும் உதகமண்டலத்திலேயே நிறுவுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை.

சுவிட்ஜர்லாந்து, ஜூரிச், சீலிரியன் திருவாளர்கள் சுவிஸ்கார் மற்றும் எலிகேப்டர் தயாரிப்பு நிறுவனத்தின் உடனுழைப்புடன் உருக்கி பற்றவைக்கப்பட்ட இலேசான எடையுள்ள ஆண்டி டெலஸ்கோப்பிக் கட்டுமான அமைப்புடன் கூடிய இணைப்பு பெட்டிகளைத் தயாரிப்பதற்காகச் சென்னை இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை 1955-ல் அமைக்கப்பட்டது.

நிறைந்த வசதியுடனும், பாதுகாப்புடனும் பயணம் செய்வதற்கு ஏற்றபடி அமைதியாக ஓடவும் லேசான எடை கொண்டவலுவுடன் கூடியதுமான இணைப்புப் பெட்டிகள் இப்போது தயாரிக்கப்படுகின்றன.

ஆரம்பத்தில் அகல இருப்புப் பாதையில் ஓடக்கூடிய 350 மூன்றாம் வகுப்புப் பெட்டிகளை மட்டுமே உற்பத்தி செய்வதற்கு ஏற்றவாறு இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பெட்டிகளில் இருக்கை வசதி, மின் விசிறி போன்றவற்றைப் பல்வேறு மண்டல இரயில்வே பிரிவுகள் செய்து தர வேண்டும். பின்னர் இரண்டாம் ஆண்டுத் திட்டத்தின் மத்தியில் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில் உற்பத்தி செய்

1986 மே 3]

யப்படும் அனைத்துப் பெட்டிகளுக்கும் இருக்கைகள், மின்சார விசிறிகள் போன்றவற்றை அமைப்பதற்கு வளாகத்தை அமைப்பதென முடிவு செய்யப்பட்டது. இதற்குக் காரணம் வசதிகளைச் செய்து தருவதற்கு மண்டல இரயில்வே பணிமனைகளில் நிறுவுத் திறன் மிகவும் குறைவு. மேலும் அதிக அளவில் தொழில்நுட்ப உத்திகளைக் கைக்கொள்ளவும் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்திய இரயில்வேயின் பல்வேறு தேவைகளை இத்தொழிற்சாலை நிறைவு செய்கிறது. பிற நாடுகளுக்கும் இரயில் பெட்டிகளை ஏற்றுமதி செய்கிறது. அகல இருப்புப் பாதை குறுகிய இருப்புப் பாதை ஆகியவற்றிற்கான இரயில் பெட்டிகளையும் தூங்கும் வசதி கொண்ட இரயில் பெட்டிகள், அகல இருப்புப் பாதையில் செல்லும் குளிர்வசதியுடன் கூடிய முதல் வகுப்புப் பெட்டிசள், புறநகர் இரயில் போக்குவரத்திற்கான மின்சார இரயில் பெட்டிகள், டீசல் இரயில் கார்கள், இருப்புப்பாதை பதிவுக் கார்கள், இரண்டடுக்குப் பெட்டிகள், சமையல் வசதியுடன் கூடிய இரயில் பெட்டிகள், பாண்ட்ரி கார்கள், நுரை மெத்தையுடன் கூடிய தூங்கும் வசதிகொண்ட மூன்றடுக்குப் பெட்டிகள் ஆகியவற்றை இந்திய இரயில்வேத் துறைக்குத் தயாரித்து வழங்குவதும் இதன் பணியாகும். மேலும் இரயில் பெட்டிகளை உற்பத்திச் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. இரயில் பயணிப் பெட்டிசளை உற்பத்தி செய்வதில் உலகிலேயே மிக்பெரிய தொழிற்சாலையாக இந்த இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை விளங்குகிறது. ஆண்டொன்றுக்கு 750 இணைப்புப் பெட்டிகளை (பல வகையான பெட்டிசள்) உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாகும்.

இத்தொழிற்சாலையின் நிறுவத் திறன் 750 பெட்டிகள் என்றிருக்க 1984–85-ல் 825 இணைப்புப் பெட்டிசள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பாண்டிலும் இதே அளவிற்கு உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மதிப்பு ரூ. 103 கோடியாக மதிப்பிடப்படுகிறது.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை இத்தொழிற்சாலை குளிர்வசதியுடன் கூடிய முதல் வகுப்புப் பெட்டிகள், தூங்கும் வசதிகொண்ட இரண்டாம் வகுப்புப் பெட்டிகள், குளிர்வசதியுடன் கூடிய சேர் கார்கள், பவர் கார்கள், மின்சார இரயில்பெட்டிகள் இரண்டடுக்கு இரயில் பெட்டிசள், குளிர் வசதிசொண்ட தூங்கும் வசதியுடன் இரண்டடுக்குப் பெட்டிகள் உட்பட சுமார் 75 வகை கொண்ட 16,429 பெட்டிகளைத் (அனைத்து வசதிகொண்ட) தயாரித்துள்ளது.

[1986 மே 3

தொழிற்சாலை— ஒரு கண்ணோட்டம்.
(31–12–1985 அன்றுள்ளபடி.)

திட்டச் செலவு	ரூ. 10.25 கோடி
கூடுதல் செலவு	ரூ. 10.87 கோடி மொத்தம் ரூ. 21.12 கோடி.
உற்பத்தி தொடங்கியது	2–10–1955.
மொத்தப் பரப்பளவு (தொழிற்சாலையும் நகரியமும்).	191.36 எக்டேர்.
தொழிற்சாலை அமைந்துள்ள பரப்பளவு	1,57,237 சதுர மீட்டர்.
31–12–1984-ல் உள்ள பணியாளர் எண்ணிக்கை.	15,570
நிறுவு திறன்	ஆண்டொன்றுக்கு அனைத்து வசதி கொண்ட 750 இணைப்புப் பெட்டிகள்.
உற்பத்தி (1984 டிசம்பர் வரை) ..	16,429 இணைப்புப் பெட்டிகள்.

1986–87 ஆம் ஆண்டிற்கான உற்பத்தித் திட்டம் :

1986–87 ஆம் ஆண்டு இத்தொழிற்சாலை சுமார் ரூ. 125 கோடி மதிப்புடைய 850 இணைப்புப் பெட்டிகளை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. அவற்றில் பின்வருவன அடங்கும் :

(அ) சென்டர் பப்ரீகப்லர், காற்றுத்தடைகள், வெளிநாட்டு வகை வெஸ்டிபுல், 110 மின்திட்ட அமைப்பு ஆகிய புதிய சாதனங்களைக் கொண்டு 12 ரேக்குகளுக்கான 323 இணைப்புப் பெட்டிகளை தென் பிராந்திய துரித இரயில் வண்டிகளுக்குத் தயாரித்து வழங்குதல்.

(ஆ) குறுகிய இருப்புப் பாதைக்கு குளிர் வசதி கொண்ட தூங்கும் வசதியுள்ள இரண்டடுக்குப் பெட்டிகள் :

(இ) வங்காள தேசத்திற்கு ஏற்றுமதி செய்ய 60 இரயில் பெட்டிகள் (7 வகை) தயாரித்தல்.

1986 மே 3]

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையை நவீனப்படுத்துதல் :

ரூ. 37 கோடி செலவில் ஆண்டொன்றுக்கு ஆயிரம் இரயில் பெட்டிகளை உற்பத்திச் செய்வதற்கு ஏற்றவாறு இதன் திறன் அளவை உயர்த்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணி 1986–87 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. பழைய உதவாத எந்திரங்கள் தளவாடங்கள் ஆகிய வற்றை மாற்றுதல், மேலும் அதிக இருக்கை வசதிக்கு வகை செய்தல், நவீன எந்திரங்களை நிறுவுதல் மூலம் நவீன தொழில் நுட்ப உத்திகளைப் பின்பற்றுதல், பல பாகங்களை ஒழுங்கு சேர்த்து பெட்டியாக உருவாக்கும் பிரிவை விரிவுபடுத்துதல், செய்முறைகளை நவீனப்படுத்துதல் ஆகியவற்றிற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், நெய்வேலி.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 14–11–1956 அன்று தொடங்கப்பட்டது. இது ஒருங்கிணைந்த தொழில் தொகுதி ஆகும். பின்வரும் தொழில் பிரிவுகள் அடங்கும் :—

(அ) திறந்த வகையிலான பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்.

(ஆ) அனல் மின் நிலையம்.

(இ) உரத் தொழிற்சாலை.

(ஈ) நிலக்கரி பாளங்கள் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலை.

(உ) களிமண் சுத்தப்படுத்தும் ஆலை.

இச்சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரி அனல் மின் நிலையத்திற்கும் நிலக்கரி கட்டித் தயாரிப்புக் கரிம ஆலைக்கும் மூலப் பொருளாக உள்ளது. இரசாயன ஆலைகளில் பயன்படுத்தத் தேவைப்படும் நீராவியை உற்பத்தி செய்யவும் மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தி நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தேவைக்கு அனுப்பப்பட்ட பின்னர் தமிழ்நாடு மின்வாரியத்தின் மின் தொகுப்புக்கு அனுப்பப்படுகிறது. களிமண் சுத்தப் படுத்தும் தொழிற்சாலை பழுப்பு நிலக்கரி சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் கச்சா வெள்ளைக் களிமண்ணை செய்முறை படுத்தி இதில் ஒரு பகுதியைத் தூளாக்கி தொழிற்சாலைப் பயனுக்கு உகந்ததாக விற்பனை செய்கிறது. லீக்கோ, சுட்ட நிலக்கரி ஆகியவை தொழில் எரிபொருளாக விற்பனை செய்யப்படுகின்றன.

[1986 மே 3

தொழிற்சாலையின் நிறுவு திறன் கீழே கொடுக்கப் பட்டுள்ளது:

(அ) சுரங்கம் 1 ஆண்டொன்றுக்கு 6.5 மில்லியன் டன்.

(ஆ) அனல் மின் நிலையம் 1,600 மெ. வா.

(இ) உரத் தொழிற்சாலை : ஆண்டொன்றுக்கு 1,29,200 டன் யூரியா.

(ஈ) நிலக்கரி பாளம் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலை; 2,62,000 டன்கள் கல்கரி ஆலை.

(உ) களிமண் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை : சுத்தப் படுத்தப்பட்ட 6,000 டன்.

(ஊ) நிலக்கரி பாளம் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலையில் உற்பத்தியாகும் தார்ப்பொருள்களிலிருந்து கீழ்க்கண்ட துணைப் பொருள்களும் உற்பத்தி செய்யப்படு கின்றன :

	ஆண்டுத் திறனளவு (டன்னில்)
(1) தார்	29,500
(2) நியூட்ரல் எண்ணெய்	2,900
(3) கார்பாலிக் அமிலம்	880
(4) ஆர்த்தோ கிரிசால்	120
(5) எம்.பி. கிரிசால்	590
(6) கைலினோ	135
(7) எம். பி. பினால்	290

31—12—1985 அன்று உள்ளபடி முதலீடு (ரூபாய் லட்சத்தில்).

மூலதனப் பங்கு
(பங்கு மூலதனத்திற்குக் கொடுத்த முன்பணம் ரூ. 68,262.42 ரூ. 580 லட்சம் உட்பட).

1986 மே 3]

நடப்பாண்டில் சாதனை (1985 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை).

1.	லிக்னைட்	50.94 டன்
2	மின்சக்தி (மில்லியன் யூனிட்டுகள்) ..	2,865
3.	யூரியா டன்	89,326
4.	கரி (டன்)	1,39,302
5.	நெக்கோலின்	1,140

கட்டுமானத் திட்டங்கள்

கீழ்க்காணும் திட்டப் பணிகள் நடந்தேறி வருகின்றன :

(அ) ஆண்டொன்றுக்கு 4.7 மில்லியன் மெட்ரிக் டன் லிக்னைட் கிடைக்கும் வகையில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல்.

(ஆ) 630 மெகாவாட் திறனுள்ள இரண்டாம் அனல் மின் உற்பத்தி நிலையம்.

இரண்டாவது சுரங்கம் :

மேற்பரப்பு அகற்றும் திட்டங்கள் மூன்றும் நல்ல முறையில் செயல்படுகின்றன. சுரங்கத்தை முழுமையாக மேம்படுத்த 270 எல். எம். 3 மேற்பரப்பை அகற்ற வேண்டும். இவ்வாறு அகற்றும் பணி 1985 ஜூன் மாதத்தில் முடிவடைந்தது. 1985 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 152.52 எல். எம். 3. அளவில் மேற்பரப்பை அகற்றியிருப்பது திட்டமிட்ட இலக்கினைக் காட்டிலும் 46 சதவீதம் கூடுதலாகவே உள்ளது. இச்சுரங்கம் தொடங்கப்பட்டதிலிருந்து 1985 டிசம்பர் வரை மேற்பரப்பு அகற்றப்பட்ட மொத்த அளவு 384.07 ஆகும்.

லிக்னைட்டு திட்டம் 27—3—1985 அன்று செயற்படத் தொடங்கியது. இது நாள் வரை 71,000 டன் லிக்னைட் வெட்டியெடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையம் : முதல் கட்டம்-

210 மெகா வாட் திறனுள்ள மூன்றாவது மின் உற்பத்தி நிலையத்தை நிறுவும் பணி (இது முதற்கண் தொடங்கப்படும்) முன்னோடி நிலையில் உள்ளது. இப்பிரிவு 1986 மார்ச்சு மாதத்தில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1986 மே 3

இரண்டாவது, முதலாவது மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இவை முறையே 1987 மார்ச்சு மாதத்திலும் 1988 மார்ச்சு மாதத்திலும் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விரிவாக்கத் திட்டங்கள் :

மத்திய அரசு கீழ்க்காணும் விரிவாக்கத் திட்டங்களுக்கு 1983 பிப்ரவரி மாதத்தில் அனுமதி வழங்கியது :

(அ) இரண்டாவது சுரங்கம் விரிவாக்கம் 4.7 மில்லியன் மெட்ரிக் டன்னிலிருந்து 10.5 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்தல்.

(ஆ) இரண்டாவது அனல் மின் நிலைய விரிவாக்கம் 630 மெகா வாட்டிலிருந்து 1,470 மெகா வாட்டாக அதிகரித்தல்.

இரண்டாவது சுரங்கம்—இரண்டாவது கட்டப்பணி :

1,400 லிட்டர் B.W.E. 3,700 லிட்டர் B.W.E. 4 2,400/2,000 மி.மீ. அகலமுடைய கன்வேயர் பெல்டுகள் ஆகியவற்றிற்கு இசைவுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

நேரடி வேலைவாய்ப்பு:

இரண்டாவது சுரங்கத்திற்கும் இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையத்திற்கும் (முதலாவது, இரண்டாவது கட்டப் பணிகள் உட்பட) மொத்தம் 13,050 பேர் கூடுதலாக தேவைப்படுவர். ஆயினும் பெரும்பாலான இயந்திரங்களும் சாதனங்களும் அதிக நுட்பம் வாய்ந்தவையாகவும் நவீன சாதனங்களாகவும் இருப்பதால் உயரிய நுட்பத்திறன் வாய்ந்த தொழிலாளர்களே இதற்குப் பெரும்பாலும் தேவைப்படுவர்.

மறைமுகமான வேலைவாய்ப்பு :

இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையத்தில் முதலாவது கட்டுமானப் பணி நடைபெறும் இடத்தில் ஒப்பந்தக்காரர்கள் ஏராளமான தொழிலாளர்களை இப்போது வேலைக்கு அமர்த்தியிருக்கின்றனர். தற்போதுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 2,700 பேர் ஆகும். இரண்டாவது சுரங்கத்தின் இரண்டாம் கட்டப் பணியும். இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம் கட்டப் பணியும் தொடங்கும்போது ஒப்பந்தக்காரர்கள் ஏராளமான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவர்

1986 மே 3]

என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற் சொன்னவை தவிர மேற்குறிப்பிட்ட விரிவாக்கத் திட்டங்களின் பயனாக இன்னும் அதிகவேலை வாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம், சென்னை :

டெலிபிரிண்டர்களையும் துணை சாதனங்களையும் தயாரிப்பதற்காக இத்தாலியைச் சேர்ந்த திருவாளர்கள் Ing. .C Olivetti நிறுவனத்தின் உடனுழைப்புடன் 1960 டிசம்பரில் இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்த நிறுவனம் ஆரம்பக் கட்டத்தில் 1964-ஆம் ஆண்டிற்குள் ஆண்டுக்கு 1,500 தொலைவரி தட்டச்சுப் பொறிகளைத் தயாரிக்கும் திறனை எட்டியது பின்னர் இத்திறனளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. தற்போது இந்த நிறுவனம் ஆண்டிற்கு 8,500 தொலைவரி தட்டச்சுப் பொறிகளைத் தயாரிக்கும் திறன் பெற்றுள்ளது.

நாட்டிலேயே பலவகையான தொலைவரித் தட்டச்சுப் பொறிகளையும் அவை தொடர்பான சாதனைங்களையும் தயாரிக்கும் ஒரே தொழிற்சாலையான இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம் அஞ்சல் தந்தி துறை, பாதுகாப்புப் படை இரயில்வே விமானப் போக்குவரத்துத் துறை. செய்தி நிறுவனங்கள் மற்றும் தனியாரின் தேவையை நிறைவு செய்கிறது.

அஞ்சல், தந்தித் துறையிடமிருந்து குத்தகைக்கு விடப்பட்டுள்ள சர்கியூட்டுகளில் தொலை வரித் தட்டச்சுப் பொறிகளை இயக்குபவர்களுக்கு விற்கப்பட்ட எந்திரங்களையும் அது தொடர்பான சாதனங்களையும் பழுது பார்த்துச் செப்பனிடும் பணியை இந்த நிறுவனம் மேற்கொள்கிறது.

இந்த நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 592 இலட்சமாகும். 31—3—1985 அன்றுள்ளபடி இத்திட்டத்திற்கு பயன்படுத்திய மூலதனம் ரூ. 18.62 கோடியாகும்.

1984–85இல் இந்த நிறுவனம் 7,680 தொலைவரித் தட்டச்சுப்பொறிகளை உற்பத்தி செய்தது. அதே ஆண்டில் ரூ.106.06 இலட்சம் மதிப்புடைய உதிரிப்பாகங்களையும் உற்பத்தி செய்தது.

1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் வரையில் 5,749 தொலைவரித் தட்டச்சுப் பொறிகளை மட்டுப் உற்பத்தி செய்தது.

[1986 மே 3

இதன் பல்திறப்படுத்தும் திட்டத்தில் ஒரு பகுதியாக இந்த நிறுவனம் மின்சார தட்டச்சுப் பொறிகளையும், மின்னணு தொலைவரி தட்டச்சுப் பொறிகளையும் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் பொருள்களைக் கொண்டு மின்சாரத் தட்டச்சுப் பொறிகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகையில் 90 சதவிகிதம் பணி முடிந்து விட்டது. இந்த நிறுவனம் 1986 ஆம் ஆண்டு ஜுன் மாதத் தொடக்கத்தில் உள் நாட்டு மின்சாரத் தட்டச்சுப் பொறிகளை தயாரித்து வழங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. வெவ்வேறு மாநிலங்களிலிருந்து வரக்கூடிய திட்டவட்டமான தேவைக் குறிப்புகளைப் பொறுத்து உள்நாட்டு மாதிரியிலான தேவன்கிரி மின்சாரத் தட்டச்சு பொறிகளையும் பிற மொழிகளில் அமைந்த மின்சார தட்டச்சுப் பொறிகளையும் உற்பத்திசெய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டம், ஓசூரில் மின்னணு தொலைவரித் தட்டச்சுப் பொறிகளைத் தயாரிக்க பிரான்சு நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் சாகெம் என்ற நிறுவனத்துடன் உடனுழைப்பு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. ஓசூரில் கட்டுமானப் பணி தொடங்கி விட்டது. 1986 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் இது முடிவடையும். உடனுழைப்பு நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யப்படும் மின்னணு தொலைவரித் தட்டச்சு கருவிகளை சென்னை, கிண்டியிலுள்ள இந்த நிறுவனத்தின் தொழிற்சாலையில் ஒருங்கு சேர்த்து தட்டச்சுப் பொறியாக உருவாக்க முதற்கண் திட்டமிடப்பட்டுள்ளது. தேவநாகரி மின்சார தட்டச்சுப் பொறிகளையும் பிற மொழியில் அமைத்து மின்னணு தொலைவரித் தட்டச்சுப் பொறிகளையும் தயாரிக்க இந்நிறுவனம் திட்டம் தீட்டியுள்ளது.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம்
உதகமண்டலம்.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் நிறுவனம் 1960 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு 1967 ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கியது.

உற்பத்தி அளவு :

இந்நிறுவனம் நுட்பமான புகைப்படச் சுருள்களையும் காகிதத்தையும் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. ஒருங்கிணைந்த உற்பத்தியில் அடங்கும் உற்பத்திப் பொருட்களாவன :—

(1) திரைப்பட பாசிடிவ் படச்சுருள்-கருப்பு-வெள்ளை
(2) திரைப்படச் சுருள் ஒலி நெகடிவ்
(3) மருத்துவ எக்ஸ் கதிர் படச்சுருள்
(4) புகைப்படக் காகிதம்

1986 மே 3]

பெரிய படச்சுருள்களைச் சிறியனவாக மாற்றும் உற்பத்தியில் அடங்கும் பொருள்கள் :

(1) திரைப்பட கலர் பாசிடிவ் படச்சுருள்
(2) அமெச்சூர் நேரல் திரைப்படச்சுருள்-கருப்பு, வெள்ளை
(3) தொழில் எக்ஸ் கதிர் படச்சுருள்
(4) கிராபிக் ஆர்ட்ஸ் படச்சுருள்
(5) கலர் காகிதம்

இவை தவிர, எக்ஸ் கதிர் படச்சுருளை கிராபிக் ஆர்ட்ஸ் படச்சுருளைக் கழுவுவதற்காக இரசாயனப் பொருள்கள் தயாரிப்பதும் தயாரிப்புப் பகுதியில் ஒரு பகுதியாகும்.

நிறுவுத் திறன் :

இந்த நிறுவனம் ஆரம்பத்தில் 6.15 மில்லியன் சதுர மீட்டர் திரைப்படச் சுருள்களையும், காகிதங்களையும் உற்பத்தி செய்யும் திறன் பெற்றிருந்தது. 1981–82-ல் தொழிற்சாலையில் செய்த மாற்றங்களையும், 1967 ஆம் ஆண்டு வணிக உற்பத்தி தொடங்கியதிலிருந்து செய்து கொடுத்த வசதிகளையும் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த நிறுவுத்திறன் 7,673 மில்லியன் சதுர மீட்டர்களாக நிறுவனம் அதிகரித்திருந்தது. நிறுவுத் திறனை அதிகரித்த பின்னர் உதகமண்டலத்திலும் சென்னை அம்பத்தூரிலுமுள்ள இந்த நிறுவனத்தின் தொழிற்சாலைகளில் ஒருங்கிணைந்த உற்பத்திக்கும் பெரிய படச் சுருள்களைச் சிறியனவாக மாற்றும் உற்பத்திக்கும் மொத்த உற்பத்தித் திறன் 15,324 மில்லியன் சதுர மீட்டர்களாகும்.

சாதனை.	1984–85 கணக்குகள்.	1985–86 ஆம் ஆண்டுக்கு எதிர் பார்க்கப் படும் உற்பத்தி.
உற்பத்தி அளவு (மில்லியன் சதுர மீட்டர்).	12,193	12,321
உற்பத்தி மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்).	9,683	12,000
விற்பனை (ரூபாய் இலட்சத்தில்)	10,041	11,550
ஆதாயம் (வரி செலுத்துவதற்கு முன்னர்) (ரூபாய் இலட்சத்தில்).	631	700

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முதலீடு:

இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 1,632 இலட்சமாகும். இது தவிர 31-3-1985 ஆம் நாள் நிலவரப் படி இந்நிறுவனம் இந்திய அரசிடமிருந்து நீண்ட காலக் கடன் தொகையாக ரூ. 1,481 இலட்சம் பெற்றுள்ளது.

வேலை வாய்ப்பு:

31-12-1985 ஆம் நாளன்றுள்ள நிலவரப்படி இந்நிறுவனத்தில் 3,289 பேர் பணியாற்றுகின்றனர். இந்நிறுவனம் 32 துணைத் தொழில் பிரிவுகள் மூலம் 1,000 பேருக்கு பிறவகையில் வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

நடப்பு ஆண்டில் சாதனை:

நடப்பு ஆண்டில் 12,321 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்ய வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் ரூ. 8,115 இலட்சம் மதிப்புடைய 9.068 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்யப்பட்டது. இதைப் போன்றே இக்கால அளவிற்கான விற்பனை ரூ. 6,966 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டிருக்க ரூ. 6,553 இலட்சம் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

விரிவாக்கத் திட்டங்கள்:

கூடுதல் மேல் பூச்சு தொழில் பிரிவு ரூ. 200 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் முடிக்கப்பட்டு 13-1-1985 ஆம் நாளன்று செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனத்திற்கு அதிகப்படியாகத் தேவைப்படும் அதாவது ரூ. 1.8 மில்லியன் சதுர மீட்டர் எக்ஸ் கதிர்படச்சுருளை வழங்குவதற்கும் அமைச்சூர் ரோல் படச் சுருள்களை ஒருங்கிணைந்த முறையில் தயாரிக்கவும் இத் தொழில் பிரிவு உதவியாக இருக்கும்.

அனைத்து வசதிகளையும் கொண்ட முழுமையான ஆராய்ச்சி வளர்ச்சி நிலையத்தை அமைக்கும் திட்டம் குறித்த பணி ரூ. 197 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நடந்தேறி வருகிறது. இந் நிறுவனம் 1986 ஆம் ஆண்டு மே திங்களில் தயார் நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1986 மே 3]

காந்த நாடா தயாரிப்புத் தொழிற்சாலை:

உதகமண்டலத்தில் ரூ. 1,000 இலட்சம் முதலீட்டில் பல்வேறு வகை காந்த நாடா தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றினை நிறுவ அரசின் ஒப்புதல் கிடைத்துள்ளது. வெளி நாட்டு உடனுழைப்பிற்கு இந்நிறுவனம் செய்து கொண்ட விண்ணப்பத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

பாலியெஸ்டர் எக்ஸ் கதிர், (கிராபிக்) ஆர்ட் படச் சுருள்களை உற்பத்தி செய்தல்:

உதகமண்டலத்திலுள்ள இந்துஸ்தான் நிழற்படச் சுருள் தயாரிப்பு நிறுவனத்தை விரிவுபடுத்தும் ஒரு பகுதியாக ரூ. 170 கோடி செலவில் பாலியெஸ்டர் எக்ஸ் கதிர் (கிராபிக் ஆர்ட்) சுருள் தயாரிக்கும் பிரிவை ஏற்படுத்துவது குறித்து இந்திய அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது. தூய்மைக்கேடு கட்டுப்பாடு என்ற நோக்கில் ஒப்புதலைப் பெறுவது குறித்து இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

ரூ. 200 கோடி செலவில் திரைப்படச் சுருள் தயாரிக்கும் திட்டத்தை உதகமண்டலத்தில் ஏற்படுத்த விரைந்து ஒப்புதல் வழங்குமாறு வற்புறுத்தி முதல்வர் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

பாரத் கனரக மின் நிறுவனம், திருச்சிராப்பள்ளி:

திருச்சியிலுள்ள உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலை 1960 ஆம் ஆண்டுக்கு முன்னமேயே திட்டமிடப்பட்டு 1965 ஆம் ஆண்டு ரூ. 152.27 கோடி மூலதனத்தில் உற்பத்தியைத் தொடங்கியது. தொடக்கத்தில் 24.5 கோடி முதலீடு செய்யப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 750 MWC கொண்ட கொதிகலன் உதிரிபாகங்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் இந்த தொழிற்சாலை வடிவமைக்கப்பட்டது. இது இந்திய-செக்கோஸ்லேவோக்கியா பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்துடன் செக்கோஸ்லேவோக்கியா உடனுழைப்புடன் தொடங்கப்பட்டதாகும்.

குறிப்பட்ட காலத்திற்குள் இதன் உற்பத்தித் திறனை எய்தியது. கூடுதலாக ரூ. 4.08 கோடி ரூ. 17.86 கோடி முதலீடு செய்து முறையே ஆண்டொன்றுக்கு 1,100 மெகா வாட், 2,500 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் விரிவாக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

விரிவாக்கத் திட்டத்தின் அடுத்தக் கட்டப்பணி ரூ. 35.48 கோடி செலவில் அண்மையில் முடிக்கப்பட்டுள்ளது. இதனால் இத் தொழிற்சாலையின் திறன் ஆண்டொன்றுக்கு 4,000 MWC ஆக உயர்ந்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பதிலாக அதற்கிணையாக வேறு பொருட்களைத் தயாரிக்கும் ஒரு முயற்சியாக ரூ. 58.2 கோடி முதலீட்டுடன், 40,000 டன் ஆண்டு உற்பத்தித் திறனுடன் பற்றவைப்பு இணைப்பில்லாத உருக்குக் குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இது இபபோது வணிக உற்பத்தியைப் தொடங்கியுள்ளது.

திருச்சியில் தொழிற்சாலை அடைப்பிதழ்களைத் (Va ves) தயாரிப்பதற்கான தொழிற்சாலையின் திறன் ரூ. 5.67 கோடி முதலீட்டுத் திட்டத்தின் மூலம் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

திருச்சியிலுள்ள பாரத் கனரக மின் நிறுவனத்தில் 18,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். திருச்சி பாரத் கனரக மின் நிறுவனத்தின் பயிற்சி நிலையம் மனித ஆற்றலை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பணிப்பண்பாக பாதுகாப்பு ஏற்பாடுகள் நன்முறையில் செய்யப்பட்டுள்ளன. 'பெல்' நிறுவனம் இவ்வகையில் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டும் வகையில திருச்சி 'பெல்' நிறுவனம் தொடர்ந்து பல தேசிய பன்னாட்டுப் பரிசுகளைப் பெற்றுள்ளது.

துணை / சிறு தொழிற்பேட்டை 1969 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இப்போது பாரத் கனரக மின் நிறுவனத் துணை/சிறு தொழில் பிரிவுகளில் சுமார் 12,000 பேர் பணிபுரிகின்றனர். ஆனால், 1969 ஆம் ஆண்டு 200 பேர் மட்டுமே பணிபுரிந்தனர். துணை/சிறு தொழில் பிரிவுகள் அண்டை மாவட்டங்களான தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன. துணை/சிறு தொழில்கள் பிரிவுகளின் வளர்ச்சி பாரத் கனரக மின் நிறுவனத்தின் விரைவான வளர்ச்சிகளுக்கு இணையாக உள்ளது.

திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத் கனரக மின் நிறுவனம் 1967–68 ஆம் ஆண்டில் ஆதாய—இழப்பு அற்ற நிலையை அடைந்தது. 1984-85 ஆம் ஆண்டில திருச்சியிலுள்ள பாரத் கனரக மின் நிறுவனம் அரசுக் கருவூலத்திற்கு ரூ. 106 கோடி ஈட்டித் தந்துள்ளது. 1—1—1968 ஆம் நாளன்று இந்நிறுவனத்தில் மனித ஆற்றல் 18,435 ஆகும்.

பெல் நிறுவனம் சமூக விழிப்புணர்வைக் காட்டி வருவதுடன் சமுதாயப் பணியினைச் செய்து வருகின்றது. இந்நிறுவனம் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் அருகிலுள்ள கிருஷ்ண சமுத்திரம், காந்தலூர் கிராமங்களுக்கு உதவும் வகையில் இக்கிராமங்களில் பள்ளிக்கூடங்கள், சமுதாய சுகாதார மையங்கள், தெரு விளக்குகள் ஆகியவற்றை அமைத்து வருகின்றது. சமீபத்தில் திருச்சி பெல் நிறுவனம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அருகிலுள்ள கீழக்குறிச்சி கிராமத்தில் கதிரொளி விசையில் இயங்கும் தெரு விளக்குகளை அமைத்துள்ளது. இந்நிறுவனம் காற்றாலைகளை நீரேற்றுப் பொறிகள் அமைத்துள்ளதுடன் வானொலி, தொலைக்காட்சி, போன்ற செய்தித் தொடர்பு வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

இந்திய மருந்துகள்—மருந்துப் பொருள்கள் உற்பத்தி நிறுவனம், நந்தம்பாக்கம்:

166 வகையான அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிப்புக் கென்று ரஷிய நாட்டின் கூட்டு முயற்சியுடன் இத்தொழிற்சாலை 1961-ல் தொடங்கப்பட்டது. ரூ. 5 கோடி மூலதனத்துடன். மத்திய அரசின் நிறுவனமாக பெட்ரோலிய இரசாயனப் பொருள்கள் அமைச்சகத்தின் பொறுப்பில் இத்தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

ஆண்டுக்கு 2·5 மில்லியன் கருவிகள் உற்பத்தி செய்யும் உரிமம் பெற்று அதே அளவு உற்பத்தி செய்ய நிறுவனத் திறன் கொண்டு 1965 செப்டம்பரில் அறுவை சிகிச்சைக் கருவிகள் உற்பத்தி தொடங்கியது. மருத்துவத் தொழிலில் மேனாட்டுப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்தியாவில் ரஷிய நாட்டு வடிவமைப்புப் பொருள்களுக்கு வரவேற்பில்லாது போயிற்று.

இந்த அடிப்படையில் இந்திய மருத்துவத் துறைக்கு ஏற்றாற் போல் ரஷிய வடிவமைப்பை மாற்றும் பணியையும் மருத்துவத் துறைக்குப் புதிய கருவிகள் பலவற்றைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தும் பணியையும் இத் தொழிற்சாலை தொடங்கியது.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, மணலி:

இத்தொழிற்சாலை 1965-ல் நிறுவப்பட்டது. இது 1969-ல உற்பத்தியைத் தொடங்கியது. இது ஆண்டொன்றுக்கு 25 மெட்ரிக் டன் குரூட் எண்ணெய் சுத்திகரிக்கும் நிறுவனத் திறன் வாய்ந்தது. இது மோட்டார் ஸ்பிரிட், மண்ணெண்ணெய், அதிவேக டீசல், மிதவேக டீசல், ஊதுலை எண்ணெய் வகைகள், சமையல் எரிவாயு, மசகெண்ணெய், இரச கற்பூரத் தைலம் முதலான பெட்ரோலியப் பொருட்களைச் சுத்திகரிக்கிறது.

ரூபாய் 13.5 கோடி ரூபாயாக இருந்த இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிகர பங்கு மூலதனம் 1984 பிப்ரவரியில் 135 கோடியாக உயர்த்தப்பட்டது. இத் தொழிற்சாலை சுமார் 2,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும் சுமார் 3,000-க்கும் மேற்பட்டோருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

உற்பத்தி உயர்வுக்குத் தடையாக இருந்த சில இடையூறுகளைக் களைந்தும், சமசீர் சாதனங்கள் (Balancing equipments) சிலவற்றை நிறுவியும் இந் நிறுவனத் திறன் அளவு 2.5 மில்லியன் டன்னிலிருந்து 2.8 மில்லியன் டன்னாக பின்னர் உயர்த்தப்பட்டது. அதன் பிறகு இந்த சுத்திகரிப்பு ஆலை அதன் திறனை இரண்டு மடங்காக அதாவது ஆண்டொன்றுக்கு 5.6 மில்லியன் டன்னாக உயர்த்தியுள்ளது. ஆண்டொன்றுக்கு 20,000 டன் பாரபின் மெழுகு உற்பத்தி செய்யும் பாரபின் மெழுகு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றையும் நிறுவியுள்ளது.

ரூபாய் 17·74 கோடி செலவில் கட்டுமானம் பெற்ற இந்த பாரபின் மெழுகு உற்பத்தித் தொழிற்சாலை 31—3—1984-ல் இருந்து உற்பத்தியைத் தொடங்கியது. அதில் "கிலோ காண்ட்ராக்டிங்" தொழிற்சாலை மட்டும் செயல்படவில்லை அது விரைவில் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தீப்பெட்டிகள், மெழுகு வத்திகள் முதலானவற்றின் உற்பத்திக்குத் தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில், மிகச் சிறு தொழில் துறைகள் பயன்படுத்திவரும் தீக்குச்சி, மெழுகு நிர்ணய (Standard) தர மெழுகு முதலியவற்றை விநியோகிக்க "சிட்கோ" நிறுவனம் இந்த சுத்திகரிப்பு ஆலையின் விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளது. "கிலோ காண்ட்ராக்டிங்" தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வெள்ளை நிற பாரபின் இத் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருளாகும். நிர்ணயதரத்திற்கேற்ப இதன் உற்பத்திப் பொருள்கள் இருக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

புதிய தொழிற்சாலைத் திட்டங்கள்.

(அ) மசகெண்ணெய் உற்பத்தி விஸ்தரிப்பு:

மசகெண்ணெயை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் உற்பத்தித் திறனை ரூபாய் 94.0 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு சுமார் 270,000 டன்னாக [ஆண்டொன்றுக்கு 50,000 டன் நிலையான இருப்பு (Bright Stock) உட்பட] விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத் திட்டப் பணியைச் செயற்படுத்த மத்திய அரசின் **ஒப்புதல்** எதிர்பார்க்கப்படுகிறது.

1986 மே 3]

(ஆ) புரோ பைலீன் உற்பத்தி :

ஆண்டொன்றுக்கு சுமார் 16,000 டன் முதல் 17,000 டன் வரை ரூபாய் 13.8 கோடி மதிப்பீட்டுச் செலவில் புரோ பைலீன் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றினை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டப்பணி 1988 மத்தியில் முடிக்கப்பெறுமென எதிர் பார்க்கப்படுகிறது. (இ) சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து கிடைக்கும் மண்ணெண்ணெய் இருப்பை (Kerosene fuel stock) பயன்படுத்தி ஆண்டொன்றுக்கு 50,000 டன் லீனியர் ஆல்கைல் பெஞ்சின் உற்பத்தி செய்யத் தமிழ்நாடு பெட்ரோலியப் பொருள்கள் உற்பத்தி நிறுவனத்திற்கு (டிட்கோ) ஸ்பிக் கூட்டு முயற்சி உரிமம் ஒன்று வழங்கப்பட்டு உள்ளது.

(இ) நறுமணம் பொருள்கள் உற்பத்தி:

ஆண்டொன்றுக்கு 1,50,000 டன் சுத்திகரிக்கப்பட்ட டெரப் தாலிக் அமிலம் (Purified terephthalic acid) உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான முதலீட்டுச் செலவு தோராயமாக ரூபாய் 600 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை உர நிறுவனம் , சென்னை:

சென்னை உர நிறுவனம், மத்திய அரசு நிறுவனமாகும். இந்நிறுவனம் 1966 டிசம்பரில் தொடங்கப்பட்டது. இதில் மத்திய அரசு 51 சதவீதமும், அமெரிக்காவில் உள்ள அமோகோ இந்தியா நிறுவனமும், ஈரானில் உள்ள டெஹ்ரானிலுள்ள தேசீய ஈரானிய எண்ணெய் கம்பெனியும் ஒவ்வொன்றும் 24.5 சதவீதம் மூலதனப் பங்குகளை வைத்துள்ளன. 1985-ஆம் ஆண்டில் பங்கு தாரர்களுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பலனாக,'' அமோகா இந்தியா '' கம்பெனியின் பங்கு முழுவதை யும் மத்திய அரசும், தேசீய இரானியர் எண்ணெய்க் கம்பெனி யும் வாங்கியுள்ளது. எனவே, இந்த உர நிறுவனத்தில் தற்போ துள்ள பங்கு விவரங்கள் வருமாறு : மத்திய அரசு 67.55 சதவீதம் ; தேசீய ஈரானிய எண்ணெய்க் கம்பெனி 32.45 சதவீதம் : சென்னை உர நிறுவனத்தின் நிறுவு திறன் நாளொன் றுக்கு அமோனியா 750 மெ. டன், யூரியா 885 மெ. டன். என். பி. கே. காம்ப்ளக்ஸ் உரம் 1,800 மெ. டன் ஆகும். இந் நிறுவனம் 1971 நவம்பர் முதல் வர்த்தக அளவிலான உற்பத்தியைத் தொடங்கியது.

சென்னை உர நிறுவனம் பணியாளர்களுக்கு ஏலாமை ஏற் படுத்தும் காயம் ஏதுமில்லாமல் 19.80 மில்லியன் மனித நேரங் களை ஈட்டித் தொடர்ந்து உலக சாதனை புரிந்து வருகிறது.

சென்னை உர நிறுவனத்தின் முதன்மையான அங்காடிப் பகுதிகள் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகியவையாகும். சென்னை உர நிறுவனம் தமது உற்பத்திப் பொருள்களை மேற்படி அங்காடிப் பகுதிகளுக்கு நேரடியாக விற்பனை செய்கிறது. '' விஜய் '' என்ற பெயரில் சென்னை உர நிறுவன உற்பத்திப் பொருள்கள் அறிமுகப் படுத்தப்படும். எல்லா இடங்களிலும் நன்கு பிரபலமாகி அமோக அளவில் விற்பனையாகியுள்ளது.

31—12—1985 அன்று இந்நிறுவனத்தில் 1,341 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். நவீன அறிவியல் சாகுபடி முறையை உழவர்கள் பின்பற்றச் செய்யும் நோக்கத்துடன் உழவர்களுக்குப் பல பணிகள் செய்யப்பட்டுள்ளன. சென்னை உர நிறுவனம் வேளாண்மை உற்பத்திக்கான அண்மைக்காலத் தொழில் நுட்பங்களை உழவர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், நீண்ட கால வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் கிராமப்பணி ஏற்புத் திட்டங்கள், ஒலி—ஒளிக்காட்சித் திட்டங்கள் நுகர்வோர் தொடர்பு முனைப்புத் திட்டங்கள் ஆகிய திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை உர நிறுவனம், ரூபாய் 550 கோடி செலவில் நாளொன்றுக்கு 1,350 மெ. டன் அமோனியா உற்பத்தி செய்யும் இயந்திரமும், நாளொன்றுக்கு 2,000 மெ. டன். யூரியா உற்பத்தி செய்யும் இயந்திரமும், நாளொன்றுக்கு 800 மெ. டன் கூடுதலாக டி.ஏ.பி. உற்பத்தி செய்யும் இயந்திரமும் நிறுவுவதன் மூலமாக தமது உற்பத்தியை இரட்டிப்பாக்கக் கருதியுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு இம்மாநில அரசு மத்திய அரசை அமைச்சர் அளவில் வற்புறுத்தி வருகிறது.

படைக்கலன் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி:

இத்தொழிற்சாலை சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்வதற்காக 1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

இத்தொழிற்சாலையில் அலுவலர்கள் பணியாளர்கள் தொழில் அமைப்பு, தொழிலாளர்கள் உட்பட 2,900-க்கும் மேற்பட்டவர்கள் தற்போது பணிபுரிகின்றனர்.

இராணுவத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இத்தொழிற்சாலையில் பல்வேறு வகை சிறிய நடுத்தர படைக்கலன்களை உற்பத்தி செய்வதற்கான உற்பத்தித் திறன் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திறனளவுகள் இத்தொழிற்சாலையிலேயே ஏற்படுத்தப்படும்.

1986 மே 3]

திருச்சிராப்பள்ளி படைக்கலன்கள் தயாரிக்கும் தொழிற் சாலைக்கு அருகாமையில் சிலவகை வெடிமருந்து குண்டுகள் தயாரிப்பதற்கான தனித் திட்டம் ஒன்று பாதுகாப்பு அமைச்ச கத்தில் உருவாகி வருகிறது. முதலமைச்சர் இதற்காக 4—3—1984 அன்று அடிக்கல் நாட்டினார். ரூபாய் 12 இலட் சம் செலவில் 170 எக்டேர் நிலத்தைக் கையகப்படுத்தி, மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திடம் ஒப்படைக்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 376 இலட்சம் செல வில் குடிநீர் வழங்கல் திட்டம் ஒன்றை தமிழ்நாடு குடிநீர்— வடிகால் வாரியம் செயற்படுத்தி வருகிறது.

சேலம் உருக்காலை, சேலம்.

சேலம் உருக்காலை மத்திய அரசு நிறுவனமான இந்திய உருக்காலை நிறுவனத்தின் ஒரு பிரிவாகும் (SAIL) 2,20,000 டன் எவர் சில்வர் மின் உருக்கிகள், ஏனைய தனி உருக்குகள் ஆகியவற்றை இரு நிலைகளில் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றினை அமைக்கவுள்ளது என்று சேலம் உருக்காலை தனது திட்டம் குறித்த விரிவான அறிக்கையில் தெரிவித்துள்ளது. பிந்திய ஒருங்கிணைப்புக் கொள்கை அடிப் படையில் இத்திட்டத்தின் முதல் கட்டப் பணிக்கு மட்டுமே இசைவளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதற்கட்டப் பணி 13—9—1981 அன்று தொடங்கப்பட்டது. வணிக ரீதியான உற்பத்தி 1982 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தொடங்கப் பட்டது.

இந்த முதல் கட்டப் பணியில் இந்த ஆலை ஆண்டொன் றுக்கு 32,000 டன் எவர்சில்வர் மென் உருக்குத் தகடுகள், சுருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறனைக் கொண் டுள்ளது. தற்சமயம், உருக்குப்பட்டைகள் இடு பொருட்கள் ஆகியவை இறக்குமதி செய்யப்படுகின்றன. மூலப் பொருட் களை உள்நாட்டிலேயே பெறுவதற்கான முயற்சி மேற் கொள்ளப்படுகிறது.

இத்தொழிற்சாலையின் முதல் கட்டத்தில் 1,380 பேர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை யில் உற்பத்திப் பிரிவு பராமரிப்பு கட்டுமானம் பொது நிரு வாகப் பணிகள் ஆகியவற்றில் பயிற்சியாளர்கள் உட்பட இன் றுள்ளபடி 1,221 பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

பணியிடத்தில் கட்டுமானப் பணி உச்ச நிலையில் நடை பெற்றுக் கொண்டிருக்கையில் சுமார் 4,000 முதல் 6,000 பணி யாளர்கள் பணி புரிந்தனர். கட்டிடக் கட்டுமானப் பணியிலும் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறும் பராமரிப்புப் பணியிலும் தற்போது சுமார் 400 பணியாளர்கள் பணி புரிந்து வரு கின்றனர்.

இத்தொழிற்சாலையின் முதல் கட்ட மூலதனச் செலவு 181.19 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை தொடங்கப்பட்டதிலிருந்து 198; டிசம்பர் திங்கள் வரை 51,467 டன் உருக்கிகளை உற்பத்தி செய்துள்ளது. ஆஸ்டெனெடிச் சிதைவு உலோகம் (Martensite) இரும்பு சார்ந்த உலோகத் தரங்கள் உட்பட பலவித செய் முறை வேலைகள் நடத்துவதற்கேற்ற வகையில் இத்தொழிற் சாலை ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. மேலும், இத்தொழிற் சாலை இத்தகைய உலோகங்களைத் தரப்படுத்துவதிலும் வேலை நிறைவு செய்வதிலும் பல்வேறு பருமன்களில் அவற்றைத் தயாரிப்பதிலும், வெற்றிகரமாகப் பணியாற்றி வருகிறது. பல் வேறு சாதனத் தயாரிப்பாளர்களின் தேவைக் குறியீடுகளுக்கு ஏற்ப இரசாயனத் தொழில் சாதனம், பஞ்சாலை எந்திரங்கள், பால் பண்ணை இரசாயன உர உற்பத்திச் சாதனங்கள் முத லியவை இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன.

இத்தொழிற்சாலை தொடங்கிய நாளிலிருந்து, உண்மை யில் செய்யப்பட்ட உற்பத்தி, திட்ட இலக்குகளில் நிறைவேறிய சதவீதம் ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு:—

ஆண்டு.	உற்பத்தி (டன்களில்).	நிறைவேற்றிய சதவீதம்.
(1)	(2)	(3)
1981-82	3,214	101
1982-83	6,747	109
1983-84	6,934	73
1984-85	17,127	102
1985 டிசம்பர் வரை	17,445	113

தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களின் உற்பத்தித் திறனை உரிய அளவு பயன்படுத்துவதற்காக 55.78 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், இரண்டாம் சென்ஸிமிர் (Second sandzimir) ஆலை நிறுவுவதன் மூலம் இந்த ஆலையின் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்கும் செயற்குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையிலுள்ளது.

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னர் இரும்பு உருக்கு தயாரிப்பு, உருக்கினை உருக்கிப் பொருள்கள் தயா ரிக்கும் முறை ஆகியவற்றில் கணிசமான அளவிற்குத் தொழில் நுட்ப மேம்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இத்தொழிற்நுட்ப வளர்ச்சிகளைக் கருத்திற் கொண்டு இந்திய உருக்காலை நிறு வனப் பொறியியல்-தொழில் நுட்ப நிலையம், வடிவமைப்புப்

1986 மே 3]

பிரிவு ஆகியவை குறித்து விரிவான திட்ட அறிக்கையை நாளது வரையில் தயாரிக்கத் தொடங்கியது. பொறியியல்—தொழில் நுட்ப நிலையம் அதன் அறிக்கையை அனுப்பியுள்ளது. அதனை இந்திய உருக்காலை நிறுவனம் (SAIL) பரிசீலித்து வருகிறது.

விற்பனை வளர்ச்சி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன், விற்பனை வளர்ச்சி நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டுள்ளன. விற்பனை வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு இணையாக உற்பத்திப் பொருள் மேம்பாட்டுத் திட்டங்கள் பலவற்றையும் இத்தொழிற்சாலை வகுத்துள்ளது.

இத்தொழிற்சாலைக்கருகில் 785 வீடுகள் அடங்கிய நவீன நகரியம் ஒன்று கட்டப்பட்டது. இக்குடியிருப்புப் பகுதிகளில் 18 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனை, தொடக்கப் பள்ளி, நல நிலையம், கடைகள் தொகுதி போன்ற குடியிருப்பு சாராக் கட்டிடங்களும் அடங்கும்.

பாரத கனரக மின் நிறுவனம் (கொதிகலன் துணைப் பாகங்கள் தயாரிப்புத் தொழிற்சாலை)

இத்தொழிற்சாலை, வட ஆற்காடு மாவட்டம் இராணிப் பேட்டையில் 57,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுடன் அமைக்கப் பெற்றுள்ளது. இது சுமார் 4,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பளிக்கிறது.

இத்தொழிற்சாலை கட்டுமான நிலைகளிலேயே உற்பத்தியைத் தொடங்கி, முதலாண்டில் அதாவது 1982-83 ஆம் ஆண்டில் சுமார் 17,000 மெட்ரிக் டன் உற்பத்தியை எய்தியது. நிதியாண்டில் அதாவது 1984–85 ஆம் ஆண்டில் சுமார் 38,600 மெட்ரிக் டன் உற்பத்தி எய்தப்பட்டது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் துணை தொழிற் பிரிவுகளை மேம்படுத்துவதற்காக சுமார் 43 தொழில் முனைவோர்கள் தயாராக உள்ளனர். பெரும்பான்மையான துணைத் தொழிற் பிரிவுகளில் உற்பத்தி தொடங்கப்பட்டது. 1984–85 ஆம் ஆண்டில் சுமார் 15,000 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டது.

இத்தொழிற்சாலையில் இதுவரை முன்னாள் நில உரிமையாளர்கள் குடும்பங்களிலிருந்து சுமார் 525 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்குள் சரக்குகளை எடுத்துச் செல்வதற்காக இரயில்வே சிறிய பக்க இருப்புப் பாதை போடும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது.

எண்ணெய் எரிவாயுக் கமிஷனின் தமிழ்நாட்டில் பெட்ரோலியம் ஆய்வு.

எண்ணெய் எரிவாயுக் கமிஷன் தென் பிராந்தியத் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் 25,000 ச.கி.மீ. கொண்ட கடற்கரைப் பகுதியிலும், 23,000 ச.கி.மீ. தொலைவில் கடல் பகுதியிலும் இக்கமிஷன் பெட்ரோலிய ஆய்வு நடத்தி வருகிறது. படி நிலப்பகுதி முழுவதிலும் அதை ஒட்டிய தீபகற்ப பகுதியிலும் புவிஇயல் இயற்புவியியல் வேதியியல் ஆய்வுகளை விரிவாக இக்கமிஷன் நடத்தி வருகிறது. ''ஜுராஸிக்'' காலத்திலிருந்து அண்மைக் காலம் வரை இங்கு கிடைக்கும் படிமங்கள் பாறை வடிவில் உள்ளன.

2. மேலே காணப்பட்ட புள்ளி விவர அடிப்படையின் பேரில் காவிரி வடிநிலப் பகுதியில் மொத்தம் இதுவரை 38 கிணறுகளில் துளையிட்டதில், காரைக்கால், கோவில்களப்பால், நரிமணம், மாதணன் மற்றும் மூன்று தொலை கடல் பகுதிகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டன. கோவில் களப்பால் பகுதியிலுள்ள கிணற்றில் துளையிடும் விரிவாக்கப் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மேலும் இதைப்போன்று நரிமணம் காரைக்கால், பி.எச். 9 போன்ற பகுதிகளில் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் நமது முதல் அமைச்சர் அவர்கள் பிரதம மந்திரி அவர்களுக்கு கீழ்க்கண்டவை குறித்து ஒரு நேர்முக கடிதம் எழுதியுள்ளார்:

(1) காவிரி வடிநிலப் பகுதியில் எண்ணெய் எரிவாயுக் கமிஷனால் எண்ணெய் துருவும் பணியைத் துரிதப்படுத்துவதற்கு அதிக நிதி ஒதுக்குதல்;

(2) துளைபோடும் 'ரிக்' எந்திரங்களை அதிகப்படுத்தி காவிரி வடிநிலப் பகுதிகளில் எண்ணெய் துருவும் பணியினைத் துரிதப்படுத்தல்;

(3) 7-வது ஐந்தாண்டு திட்ட கால ஆரம்பத்தில், 1986-87 ஆரம்பத்தில் உலக வங்கியின் உதவியினை நாடல்.

3. மைய அரசு 6-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் காவிரிப் படுகைகளில் எண்ணெய் துருவும் பணிக்காக ரூ. 135 கோடி செலவு செய்திருந்ததாகவும், அதேபோல் 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதைவிட இருமடங்கு அதிகம் செலவிடவுள்ளதாகவும், உலக வங்கியின் உதவியை நாடவில்லையென்றும் இரஷ்ய நாட்டுடன் ஒருங்கிணைந்த எண்ணெய் துருவும் பணியை காவிரிப் படுகைகளில் தொடங்க உள்ளது என்றும் மைய அரசு தெரிவித்துள்ளது.

1986 மே 3]

4. தஞ்சாவூர் மாவட்டம், நரிமணம் பகுதியில் 1 கிலோ மீட்டர் பரப்பளவிற்கு பெட்ரோலிய ஆய்வு உரிமம் எண்ணெய் எரிவாயுக் கமிஷனுக்கு அக்டோபர் 1985-ல் 4 ஆண்டுகளுக்கு வழங்கப் பட்டது. அந் நிறுவனம் பெட்ரோலியம் துருவும் பணியை 1–4–1985 முதல் ஆரம்பித்தது. தற்போது எண்ணெய் எரிவாயுக் கமிஷன் அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பெட்ரோலிய ஆய்வு உரிமத்தை சுரங்கக் குத்தகையாக மாற்றி 20 ஆண்டுகளுக்கு குத்தகை வழங்க அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. அந்நிறுவனத்திற்கு சுரங்கக் குத்தகை வழங்கு முன்னர் நரிமணம் பகுதியில் 1 சதுர கி.மீ. பரப்பிற்குட்பட்ட பகுதியில் முன்னுழைவு செய்து குறிப்பிட்டபடி அது தனது உற்பத்தியினைத் தொடங்க அரசு முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.

நிதியுதவி, தவறான நிர்வாகம் மற்றும் வேறு பல காரணங்களினால் நலிவுறும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு அளிப்பதற்காக அரசு தமிழ்நாடு விடுப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டம் 1969-ன் கீழ் இந்நிறுவனங்களை விடுப்பு நிறுவனமாக அறிவிக்கின்றது. விடுப்பு நிறுவனங்கள் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் உதவியுடன் மீண்டும் புத்துயிர் பெற்று இயங்குவதற்கு இச்சட்டம் வழி செய்கிறது. இச் சட்டத்தின் கீழ் விடுப்பு நிறுவனங்களுக்கு கடன் கொடுத்தவர்களின் பிடியிலிருந்து சிறிது காலத்திற்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மற்றும் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. மேலும் விடுப்பு நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டவை, பின் வருமாறு:—

திருவாளர்கள்.

1. ஒமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.

2. சதர்ன் ஸ்விட்ச்கியர்ஸ் லிமிடெட், சென்னை.

3. சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம்.

4. மதராஸ் மெஷின் டூல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

5. அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட் லிமிடெட், சென்னை.

6. பிளாஸ்டிக் ரெஸின் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், சாகுபுரம், திருநெல்வேலி.

7. மாருதி கிரிஸ்ட்டல்ஸ் சால்ட் கம்பெனி லிமிடெட், சென்னை.

8. சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிமிடெட், புதுக் கோட்டை.

9. குன்னியூர் பேப்பர் அண்டு போர்ட் மில்ஸ் லிமிடெட், சென்னை.

10. தி ஜெனரல் ரிப்ளெக்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை.

சேலத்திலுள்ள செளத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஓர்க்ஸ் நிறுவனத்திற்கு நடைமுறை மூலதனத்திற்காக இந்தியன் வங்கி அளித்துள்ள ரூ. 14.35 இலட்சங்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

நலிவுற்ற தொழில் பிரிவுகள் நிதிப் பற்றாக்குறையினால் விற்பனை வரி பாக்கிகளையும் பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலப தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத்தொழில் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருட்களை மத்திய மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு விற்பனை செய்ய அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறது. மேலும் இதற்கான விற்பனை விலைச் சலுகைகளையும் அளிக்கின்றது.

தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் (டாசல்).

தமிழ்நாடு பீங்கான் நிறுவனம், 14—12—1973-ல் ரூ. 200 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் தோற்றுவிக்கப் பட்டது. பீங்கான் தொழிலின் ஒருமித்த வளர்ச்சிக்காக, பீங்கான் சம்பந்தப்பட்ட தொழிற்பிரிவுகளைக் கொண்டு இந்நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இத் தொழிற் பிரிவுகள் பெரும்பாலும் தென் ஆர்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில்

அமைந்துள்ளன. இந்நிறுவனத்தின் தொழிற் பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பொருட்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

தொழிற்பிரிவுகள். (1)	உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் (பணிவசதிகள் அளிக்கப்படுபவை.) (2)
1. வர்த்தகப் பிரிவுகள் :	
1. டாசல் பீங்கான் தொழிலகம், விருத்தாசலம்.	துப்புரவு சாதனங்கள், பீங்கான் கோப்பை, தட்டுவகை மற்றும் பீங்கானிலான மின் காப்பு பொருட்கள்.
2. டாசல் கற்குழாய் தொழிலகம், விருத்தாசலம்.	கற்குழாய்கள் மற்றும் அதன் சிறப்பு வகைகள்.
3. டாசல் இயந்திரச் செங்கற் சூளை, திருமழிசை.	உயர்தரமுள்ள கம்பி அறுவை வகை செங்கற்கள்.(w. e cut b icks).
2. பீங்கான் தொழில் வளர்ச்சி நோக்குடைய பிரிவுகள்.—	
4. பீங்கான் தொழிற் பேட்டை, விருத்தாசலம் (முகவர் அடிப்படையில் நடத்தப்படுவது).	பீங்கான் சிறுதொழில் முனைவோர்களுக்கு சலுகை வாடகையில் தொழிற் கூடங்களை அளித்தல்.
5. டாசல் பீங்கான் பணி வசதி நிலையம், விருத்தாசலம்.	விருத்தாசலத்திலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள பீங்கான் சிறு தொழில் உற்பத்தியாளர்களுக்கு பதப் படுத்தப்பட்ட களிமண், வண்ணம் மற்றும் கீழ்மட்ட சூளை, சுரங்கச் சூளையில் எரியூட்டு வசதி செய்து தருதல்.
3. பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு நோக்கில் நடத்தப்படும் பிரிவுகள் :	
6. டாசல் கலைப்பொருள் நிலையம், விருத்தாசலம்	கலைவண்ணமுள்ள மட்பாண்டங்கள்.
7. டாசல் பீங்கான் மையம், ஓமலூர்.	பல்வகை வடிவமைப்புள்ள ஊறுகாய் ஜாடிகள், வெப்பந்தாங்கிச் செங்கற்கள் மற்றும் கலைவண்ணப் பொருட்கள்.

2. விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்பேட்டை பீங்கான் சிறு தொழில் முனைவோர்களுக்கு குறைந்த வாடகையில் தொழிற்கூடங்களை அளிக்கிறது. இத்தொழில் முனைவோர்களுக்கு, பதப்படுத்தப்பட்ட மூலப்பொருட்களை வழங்குவது மூலமாகவும் அவர்களது உற்பத்திப் பொருட்களை நவீன சுரங்கச் சூளையில் சுட்டுக்கொடுப்பது மூலமாகவும் அந்த பகுதியில் பீங்கான் தொழில் வளர்ச்சி பெற பீங்கான் பணி வசதி நிலையம் பேருதவி புரிகிறது.

3. டாசல் நிறுவனத்தால் பயிற்சி நோக்கில் நடத்தப்படும் தொழிற் பிரிவுகள், குறைந்த படிப்பறிவுடைய கிராமப்புற இளைஞர்களுக்கு, பீங்கான் பொருட்களின் மாதிரி வடிவமைப்பு மற்றும் உற்பத்தி பற்றிய தொழில் நுணுக்க உத்திகளில் பயிற்சி அளித்து வருகிறது. ஓமலூரில் உள்ள பீங்கான் மையத்தில் உற்பத்தி செய்யப்படும் ஊறுகாய் ஜாடிகளும், திருமழிசை இயந்திரச் செங்கற் சூளையில் உற்பத்தியாகும் கம்பி அறுவை வகை செங்கற்களும் தரத்தில் சிறந்தவையாக பெயர் பெற்றுள்ளன.

4. நம் மாநிலத்திலும், அண்டை மாநிலத்திலும் விற்பனையை விரிவாக்கும் நோக்கத்துடன் டாசல் நிறுவனம், சென்னை, பெங்களூர் மற்றும் எர்ணாகுளத்தில் விற்பனை நிலையங்களை நடத்திவருகிறது. தற்போது, பூம்புகார் கைவினைப் பொருட்கள் நிறுவனம், புதுடில்லி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள தனது விற்பனை நிலையங்கள் வாயிலாக, டாசல் நிறுவனத்தின் கலை வண்ணப் பொருட்களை, மொத்த விற்பனை மதிப்பில் 10 சதவீதம் தரகு பெற்றுக்கொண்டு விற்பனை செய்து தர சம்மதித்துள்ளது. டாசல் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் நியாயமான விலையுடன் தரத்தில் சிறந்தவையாகவும் இருப்பதால், இம்மாநிலத்திலும் வெளி மாநிலங்களிலும் அங்காடியில் பெரும் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. இந்நிறுவனம் சுமார் 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் 1,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

5. 1984–85 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனத்தின் அனைத்து தொழிற்பிரிவுகள் மொத்தம் ரூ. 239.44 இலட்சம் மதிப்புடைய பொருட்களை உற்பத்தி செய்தன. 1985–86-ல் அவற்றின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 252.00 இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடும் மழை, மின் வெட்டு, நிலக்கரி விநியோகத்தில் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகள் ஏற்பட்ட போதிலும், இந்நிறுவனம் 1983–84-ல் செய்யப்பட்ட உற்பத்தியைக் காட்டிலும் 1984–85-ல் 16 சதவீதம் அதிக உற்பத்தியை எட்டியுள்ளது. 1984–85-ஆம் ஆண்டில் டாசல்

நிறுவனத்தின் நிகர இழப்பு ரூ. 62.66 இலட்சம் ஆகும். 1985-86 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் இயக்கம் ரூ. 51.56 இலட்சம் இழப்பில் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6, விருத்தாசலம் பீங்கான் தொழிலகத்தில் உள்ள சுரங்கச் சூளை பழுதடைந்ததால், பிப்ரவரி 85 முதல் ஜூன் 85 வரை இப்பிரிவில் உற்பத்தி ஏதும் செய்யப்படவில்லை. மேலும் மூலப் பொருட்கள், உலை எண்ணெய் போன்ற இடுபொருட்களின் சீரான விலை ஏற்றம் மற்றும் ஊதியச் செலவுகளில் ஏற்றம் ஏற்பட்டது. ஏற்படும் அதிக செலவினத்திற்கேற்ப உற்பத்திப் பொருட்களின் விலை மதிப்பை அதிகரிக்க டாசல் நிறுவனத்தால் இயலவில்லை. மேலும் அங்காடியில் கடும் போட்டி நிலவுவதால் அதிக உற்பத்திச் செலவை முழுவதும் சரிக்கட்டும் வகையில் டாசல் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களின் விலையை உயர்த்த முடியவில்லை. எனினும், உற்பத்திச் செலவை ஓரளவேனும் ஈடுகட்ட டிசம்பர் 1985 முதல் டாசல் நிறுவனம் தனது உற்பத்திப் பொருட்களின் விலையை பீங்கான் உற்பத்தியில் பெயர் பெற்ற நிறுவனங்களான பாரி, நெய்சர் போன்ற நிறுவனங்களின் பொருட்களின் விலையைவிட சிறிதளவே குறைந்த அளவில் திருத்தியமைத்துள்ளது. போட்டி உற்பத்தியாளர்கள் பின்பற்றும் முறையைக் கையாண்டு அதன் மூலம் டாசல் நிறுவனம் அதன் உற்பத்திப் பொருட்களின் முதல் தர வகையின் (First Class items) சதவிகிதத்தை அதிகரித்துள்ளது.

7. விருத்தாசலம் கற்குழாய் தொழிலகத்தில் உள்ள கீழ் மட்டச் சூளைகள் அதிக அளவு நிலக்கரியை பயன்படுத்தி எரியூட்டப்படுவதாக அமைக்கப்பட்டுள்ளதால், இதனால் ஏற்படும் அதிக உற்பத்திச் செலவினை டாசல் நிறுவனத்தால் குறைக்க இயலவில்லை. மேலும் இப்பிரிவின் உற்பத்திப் பொருட்கள் தரத்தில் சிறந்தவை என்றாலும் அதற்கேற்ப அவற்றின் விற்பனை விலையை உயர்த்தவும் இயலாது; ஏனெனில், தொடர் சுடு சூளை முறை மூலம் எரியூட்டப்பட்ட பொருட்கள் அங்காடியில் மலிந்த விலையில் கிடைக்கின்றன. இந்நிலையில், இப்பிரிவில் நிலக்கரி உபயோகத்தை குறைக்கும் வகையிலும் தேவையான உற்பத்தித் திறனை எய்தவும், தொடர் சுடு சூளை ஒன்றினை நிர்மாணிக்கும் திட்டம் ஒன்றை டாசல் நிறுவனம் அரசுக்கு அனுப்பியது. இத்திட்டம் அரசால் ஏற்கப்பட்டு, திட்டத்தைச் செயலாக்க டாசல் நிறுவனத்திற்கு ரூ. 24.60 இலட்சம் பங்கு மூலதன உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1986–87-ல் டாசல் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன் கற்குழாய் தொழிற்பிரிவில் தற்போது உண்டாகும் எரியூட்டும் செலவு மூன்றில் ஒரு பங்காக (1/3) குறைக்கப்பட்டு 1987–88 ஆம் ஆண்டிலிருந்து இப்பிரிவு ஆதாயத்துடன் செயல்படும் என்றும் எதிர்பார்க்கலாம்.

8. டாசல் நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள்!

டாசல் நிறுவனத்தின் இயக்கத்தைச் செம்மைப் படுத்தவும் கிராமப் புறங்களில் அதிக வேலைவாய்ப்பை ஏற்படுத்தவும் பீங்கான் தொழில்களைத் தொடங்கவும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் (1985–90) கீழ்க்கண்ட திட்டங்களை அரசு உதவியுடன் நிறைவேற்ற டாசல் நிறுவனம் உத்தேசித்துள்ளது :—

(1) மின்னணுவியல் சார்பான பீங்கான் பொருட்கள் உற்பத்தி செய்தல் :

(2) பீங்கான் இழைகளைத் தயாரித்தல் ;

(3) பெரியார் மாவட்டத்தில் பளிங்குத் தரை ஓடு மற்றும் சுவர் ஓடுகள் தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்துதல் :

(4) திருமழிசையில், இயந்திரச் செங்கற் தொழிற்சாலையில் உள்ள அடிப்படை வசதிகளைப் பயன்படுத்தி பளிங்கு சுவர் ஓடுகள் தயாரித்தல் :

(5) திருமழிசையில் தொழிற்பேட்டை அமைத்தல் ;

(6) சேலம் மாவட்டம், ஓமலூரில் ஒரு தொழிற்பேட்டை அமைத்தல் ;

(7) பீங்கான் தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்தல்; மற்றும்

(8) மனைப் பொருட்கள் பிரிவை நவீனப்படுத்துதல்.

9. மேற்குறிப்பிட்டவைகளில் முதல் நான்கு திட்டங்களை கூட்டுத் துறையில் செயல்படுத்த பரிசீலிக்கும்படியும் பீங்கான் தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் திட்டத்தை (இனம் 7) தனியார் துறைக்கு விட்டுவிடலாம். எனவும் டாசல் நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டங்களைப் பொறுத்த வகையில் (இனம் 5, 6) உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற் பேட்டைகளில் தொழிற் கொட்டகைகளைக் கட்டி, அவைகளை பீங்கான் தொழில் முனைவோர்களுக்கு தவணை முறைக் கொள்முதல் அடிப்படையில் (hire purchase basis) அவ்வப்போது ஒதுக்கீடு செய்யும்படி டாசல் நிறுவனத்திற்கு ஆலோசனை தரப்பட்டுள்ளது. இதன்பேரில், இம்மாதிரி தொழிற் கொட்டகைகள் தேவைப்படும் பீங்கான் தொழில் முனைவோர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்று டாசல்

நிறுவனம் தினசரிப் பத்திரிகைளில் விளம்பரம் செய்துள்ளது. இதற்கான வரவேற்பினைப் பொறுத்து. தொழிற்பேட்டை நிறுவுவதற்குத் தேவையான முதலீட்டைக் கணித்து டாசல் நிறுவனத்திற்கு தேவைப்படும் தொகையை தக்க சமயத்தில் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. மேற்கண்ட திட்டங்களைத் தவிர 1986-87 ஆம் ஆண்டில் ரூபாய் 20.00 இலட்சம் செலவில் அரசு உதவியுடன் கீழ்க்கண்ட பீங்கான் திட்டங்களை நிறைவேற்ற டாசல் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

1. பீங்கான் தொழிலகம், விருத்தாசலம்.

(1) சுரங்கச் சூளையை செம்மைபடுத்துதல் மற்றும் பீங்கான் இழைகளை உபயோகப்படுத்தத் தொடங்குதல்,

(2) சிம்ப்ளெக்ஸ் எரிசாதனத்தை (Simplex burners) அறிமுகப்படுத்துதல்.

(3) பெருமளவு உலர்கலனை (Bulk dryers) அறிமுகப் படுத்துதல்.

(4) தரநிர்ணயக்கட்டுப்பாடு சோதனைச் சாலை ஒன்று ஏற்படுத்தல்.

2. சுற்குழாய் தொழிலகம், விருத்தாசலம்.

(1) பொருட்களை இருப்பில் வைப்பதற்காக மூன்று கொட்டகைகளைக் கட்டுதல்.

(2) அரவைத் திறனை அதிகப்படுத்தும் இயந்திரச் சாமான்கள் வாங்குதல்.

11. மேற்கண்ட செயல்முறைகளையும், திட்டங்களையும் மேற்கொண்டு செயல்படுத்துவதன்மூலம் டாசல் நிறுவனத்தின் இயக்க வரம்பு விரிவாக்கப்பட்டு அதனால் இந்நிறுவனம் வணிக முறையில் ஆதாயத்துடன் இயங்குவதற்கான முன்னேற்றம் ஏற்படுவது மட்டுமல்லாது, கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரகத்தின் பணிகள், கனிம ஆய்வுகள் மற்றும் கனிம நிர்வாகம் என இரு வகைப் படும்.

இத்துறை, கனிமம் சார்ந்த தொழில்களை அமைப்பதில் விரைவாக மாறிவரும் தொழில் நுட்பவியல்/உற்பத்தி செயல் முறைகளுக்கேற்ப கனிம அமைப்புகளை முறையாக விரிவான கனிம ஆய்வு முறைகளை மேற்கொண்டு மதிப்பீடு செய்கிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இத்துறை நுண்ணிய உபகரணங்களையும் ஒன்றோடொன்று தொடர்புள்ள சிறந்த அறிவியல் முறைகளையும் கனிம ஆய்வுப்பணிகளில் பயன் படுத்தி சிறந்த அமைப்பாக விளங்குகிறது. இச்சிறந்த நிபுணத்துவத்தையும் அடிப்படை வசதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இத்துறையினை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு சிராமிக்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் போன்ற அரசுத்துறை கழகங்கள் தங்களின் சுரங்கக் குத்தகைப் பகுதிகளிலும் காணப்படும் கனிமம் அவைகளின் நவீன திட்டங்கள் மற்றும் விரிவாக்கப் பணிகளுக்கும் தேவையான கனிம மூலப் பொருட்களை தரம் மற்றும் இருப்பளவு முதலியனவற்றை மறு மதிப்பீடு செய்யுமாறு இத்துறையினை கேட்டுக் கொள்கின்றன. இத்துறையின் பணி மேற்கூறிய வர்த்தகக் கழகங்கள் நிதி உதவி கழகங்களை கனிமத்தரம் மற்றும் இருப்பளவு முதலியவற்றை அரசு உத்திரவாதத்துடன் அளித்து நிதிக்காக அணுகுவதற்கு பெரிதும் உதவுகின்றன.

இத்துறை மேற்கொள்ள திட்டமிட்டுள்ள கனிம ஆய்வுகள் முன்னரே முறையாக திட்டமிடப்பட்டு இந்திய புவியியல் ஆய்வுக்கழகம் மற்றும் இந்திய சுரங்கங்கள் அமைப்பு முதலிய அங்கத்தினர்களைக் கொண்ட மாநில புவியியல் செயற்பாட்டுக் குழுவில் கலந்தாலோசிக்கப்படுகிறது. இதன் மூலம் ஒரே களப் பணி ஆய்வுகள் ஒரே சமயத்திலும் மீண்டும் நடைபெறா வண்ணம் ஒழுங்குபடுத்தப்படுகிறது. மும்முறை ஆய்வுகள் முடிவுகளின் மூலம் துறப்பண ஆய்வு போன்ற விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊக்க மூட்டும் முடிவுகள் கண்டறியப்பட்ட இடங்களில் திட்ட செயல்முறைகள் தனியே தயாரிக்கப்பட்டு விரைவான முடிவுகளை அறிய களப்பணி ஆய்வுகள் விரைவாக முடிக்கப்படுகின்றன.

சமீபகாலத்தில் இத்துறைக்கு மாற்றப்பட்டுள்ள கனிம நிர்வாகப்பணியிலும் பெரும்பங்கு வகிக்கிறது. மாவட்ட அளவில் உதவி இயக்குநர்கள் பெருவகை கனிம குத்தகை மனுக்களை பரிசீலித்து அரசிற்கு பரிந்துரை செய்வதிலும் சிலவகை கனிம சுரங்கங்களை குத்தகை—ஏலம் விடும் முறைகளிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பெரிதும் உதவுகின்றனர். முன்னர் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பணிபுரிந்து வந்த தனிச் சுரங்க பணியாளர்கள் இத்துறைக்கு மாற்றப் பட்டுள்ளனர். உதவி இயக்குநர்களின் முறையான குறுகிய கால் சுரங்க ஆய்வுகளின் மூலமும் கனிம அனுமதிச் சீட்டு முறையாலும், சட்டத்திற்குப் புறம்பான முறையில் கனிமங்களை வெட்டியெடுத்துக் கொண்டு செல்லும் செயல் பெரிதும்

1986 மே 3]

கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இமமுறையினை மேலும் வலிவுடன் செயல்படுத்தி கனிம வருவாய் இழப்பினைக் கட்டுப்படுத்த முறைகள் திட்டமிடப்பட்டுள்ளன:—

கனிம ஆய்வுப் பனிகள் :

1985–86 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப் படும் கீழ்க்கண்ட ஆய்வுப்பனிகள் அவைகளின் பரந்த அமைப் பளவு மற்றும் ஊக்கமூட்டும் முடிவுகளின் காரணமாக 1986–87 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டுள்ளன:—

(1) தர்மபுரி மாவட்டம் கிருட்டிணகிரி வட்டம் மகாராச கடைப் பகுதிகளில் தங்கம் கிடைப்பதற்கான ஆய்வு. இப் பணியில் முதல்கட்ட பகுதி 1983 ஆம் ஆண்டு மத்தியில் முடி வுற்றது. இரண்டாம் நிலை ஆய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

(2) திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் வட்டத்தில் கல்லங்குறிச்சி, ரெட்டிபாளையம் மற்றும் புதுப்பாளையம் பகுதி களில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் ஆலை யின் விரிவாக்கத் திட்ட தேவைகளை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் படிந்த வகை விரிவான சுண்ணாம்புக்கல் ஆய்வுப்பணி.

(3) காமராசர் மாவட்டம் ஆலங்குளத்தில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவன ஆலையின் சுரங்க குத்தகைப் பகுதி களில் காணப்படும் படிகவகை சுண்ணாம்புக்கல் பற்றிய ஆய்வு.

(4) ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் 50 கி.மீ. ஆரப் பகுதியில் காணப்படும் குத்தகையற்ற சுண்ணாம்புக்கல் அமைப்பு களை இவ்வாலையில் கூடுதல் தேவைகளுக்காக கண்டறியும் பணி.

(5) பெரியார் மாவட்டம், காங்கேயம் பகுதியிலும் திருச்சி ராப்பள்ளி மாவட்டம் சின்னதாராபுரம் பகுதியிலும் வெங்கக் கல் மற்றும் பெல்சுபார் கனிம ஆய்வு.

(6) தென் ஆற்காடு மாவட்டம் மாமண்டூரில் செம்புக் கனிம செரிவு பற்றிய மறு ஆய்வுப்பணி.

(7) தஞ்சாவூர் மாவட்டம் சீர்காழி வட்டத்தில் காவிரிபூம் பட்டினத்தில் இல்மனைட், கார்னட், சிர்கான் போன்ற கன கனிமங்களுக்கான ஆய்வு, மேற்குறித்த ஆய்வுப்பணிகளுடன் இத்துறை கீழ்க்கண்ட சிறப்பு வகை களப்பணி ஆய்வுகளையும் மேற்கொண்டது.

(8) சிறு சிமெண்ட் ஆலைகளை அமைப்பதில் தனித்து அமைந்துள்ள சிறந்த சுண்ணாம்புக்கல் அமைப்பு பற்றிய ஆய்வுகள்.

(9) திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூரைச் சுற்றி யுள்ள பகுதிகளில் எற்பட்ட நில நடுக்கம் பற்றிய களப்பணி சோதனைகள்.

(10) நீலகிரி மாவட்டத்தில் கட்டுமான பணிகளுக்காக நிலச்சரிவுகள் கண்ணோட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரை அனுமதி அறிக்கைகள்.

(11) திருவண்ணாமலை பகுதிகளில் காணப்படும் தரம் குறைந்த இரும்புத்தாதுவினை பயன்படுத்தி ஸ்பாஞ்ச் இரும்பு உறபத்தி செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி சென்னை தேசிய உலோகவியல் ஆய்வுக்கூடம் மற்றும் ஆந்திரப் பிரதேசம், கம்மத்தில் அமைந்துள்ள ஸ்பாஞ்ச் அயர்ன் இந்தியா லிமிடெட் நிறுவனம் இவற்றுடன் கூட்டாக இணைந்து மேற்கொள்ளப் படும் சோதனைப் பணிகள்.

(12) சென்னை இந்திய தொழில் நுட்பவியல் கழகத்தில் அமைந்துள்ள G-FXEL முறை கம்ப்யூட்டரில் புவியியல் தகவல் சேகரிக்கும் பணி முதலியன.

இத்துறையின் இரசாயன ஆய்வுக்கூடம் இவ்வாண்டில் 1,362 மாதிரிகளை சோதனை மேற்கொண்டது. இந்த அளவானது முந்தய ஆண்டை விட 30 விழுக்காடுகள் அதிகமானதாகும்.

நீலகிரி மாவட்டத்தில் இத்துறை முன்னர் கண்டறிந்த நிலச் சரிவுகளின் பாதிப்பு மற்றும் இடப்பெயர்ச்சியினை தொடர்ந்து கண்காணிக்கவும், குன்னூர், ஊட்டி பகுதிகள் மற்றும் கூடலூர், வட்டம் முழுவதிலும் சுமார் 1,400 சதுர கி. மீ, பகுதிகளில் நிலச்சரிவிற்குட்படக் கூடிய பகுதிகளை கண்டறியவும் மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இத்துறை புவி-நுட்பவியல் அமைப்பினை குன்னூரில் அமைந்துள்ளது. இப் பகுதியின் வரைப்படங்கள் தயாரிப்பில் விமான புகைப்படங்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. அரசின் ஆணைக்கிணங்க புவி-நுட்பவியல் அமைப்பு, பல இடங்களை நிலச்சரிவு அடிப் படையில் ஆய்வு செய்து நிலச்சரிவுகள் ஏற்படா வண்ணம் அல்லது நிலச் சரிவுகளின் சேதத்தை மிக குறைப்பதற்கான வழி முறைகளை அறிவுறுத்துகின்றன. இத்திட்டம் ரூ. 14.56 இலட்சங்கள் இத் திட்ட மதிப்பீட்டில் சுமார் மூன்றாண்டு காலத் திற்கு செயல்படுத்தப்படும். இதன் மூலம் நிலச்சரிவுகளின் இடப்பெயர்ச்சி தகுந்த தொழில் நுட்ப முறைகளுடன் அறிவியல் அடிப்படையில் முதல் முறையாக இம்மாநிலத்தில் சோதனையிடப்படுகின்றன.

கனிம சோதனைக்கூடம் :

சேலத்தில் அமைந்துள்ள கனிம சோதனைக்கூடம் குறைந்த தரம் உள்ள மாக்னசைட், இரும்புத்தாது, வெங்கக்கல், சிலிக்கா மணல் முதலிய கனிமங்களை மேம்பாடு செய்யும் உயர் ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டுள்ளது, மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட

1986 மே 3]

சுமார் 80 சோதனை மாதிரிகள் இங்கு பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வுக்கூடத்தை தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்திற்கு மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது. இங்கு அமைந்துள்ள அடிப்படை வசதிகளைக்கொண்டு தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் இங்கு உயர் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளும். இக்கழகம் நவீன மற்றும் நுண்ணிய கனிம மேம்பாட்டு முறைகளை மேற்கொண்டு தரம் குறைந்த மற்றும் அதிக சிலிக்கா கொண்ட மாக்னசைட் கனிமத்தை மேம்படுத்த உற்பத்தியைப் பெருக்க திட்டமிட்டு உள்ளது.

கனிம ஆய்வுப் பணியில் புதுத்திட்டங்கள்:

1986-87 ஆம் ஆண்டில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மூன்று புதிய திட்டங்களை அரசு அங்கீகரித்துள்ளது. அவையாவன :—

(1) தர்மபுரி மாவட்டம் கிருட்டிணகிரி வட்டத்தில் மகராசகடை மற்றும் நாரளப்பள்ளி காப்புக் காட்டு பகுதிகளில் தங்கம் கிடைப்பதற்கான விரிவான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளுதல்.

1983 ஆம் ஆண்டு முதல் தங்கம் பற்றிய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தரை மற்றும் நீர் குழிகளிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளின் ஊக்கமூட்டும் சோதனை முடிவுகளின் மூலம் இந்த ஆய்வுப்பணிகள் செயல் முறைகளை அதிகரிக்க திட்டமிடப்பட்டு, அரசு இதற்கென தனியாக ஒரு திட்டத்தினை அங்கீகரித்துள்ளது. இத்திட்டத்தின் விரிவான புவியியல் ஆய்வுப்பணிகளுடன், துறப்பண ஆய்வு அதிக ஊக்கமூட்டும் பகுதிகள் புவி இரசாயன மாதிரிகள் சேகரித்தல் முதலிய பணிகளும் அடங்கும், இத்திட்டத்தினை உடன் செயல்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளன.

(2) தென் ஆற்காடு மாவட்டத்தில் சுரங்க குத்தகையற்றப் பகுதிகளில் லிக்னைட் கிடைப்பது பற்றிய விரிவான ஆய்வு செய்யும் பணி.

சுமார் 110 சதுர கி.மீ. பகுதியில் வடக்கில் கம்மாபுரத்திலிருந்து தெற்கே சிறிமுஸ்ணம் வரையுள்ள சுரங்க குத்தகையற்ற பகுதிகளில் லிக்னைட் கிடைப்பது பற்றி உறுதி செய்வதற்கான ஆய்வுப்பணிகள் தொடரப்பட்டுள்ளன. இதில் நிலத்தடி நீர் அமைப்பு பகுதி தாது மற்றும் மேல்மண் சதவிகிதம் முதலிய அடிப்படை தகவல்களைக் கண்டறிந்து பொருளாதார அடிப்படை சுரங்க முறைகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பான பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

[1986 மே 3

(3) கனிம ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்காக இந்திய நில அளவை கழகத்திலிருந்து பல அளவைகளில் சுமார் ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் விமான புகைப்படங்கள் வாங்குவது.

இத்துடன் புவி பௌதீக மற்றும் புவி இரசாயன பிரிவு களை புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கனிம வருவாய் :

கடந்த ஐந்து ஆண்டுகளில் கனிம வருவாய் கீழே தரப் பட்டுள்ளது. இதன் மூலம் புவியியல் மற்றும் சுரங்கத்துறை தனியாக அமைக்கப்பட்ட பின்னர் கனிம வருவாய் பெருமளவில் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கனிம வருவாய்

ஆண்டு.	மொத்த கனிம வருவாய்.	மாக்னசைட் விற்பனை மூலம் வருவாய்.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சங்களில்,)	
1981–82	433.08	260.00
1982–83	574.82	308.20
1983–84	742.87	459.78
1984–85	841.53	447.51
1985–86 (அக்டோபர் முடிய)	547.79	295.76

1985 ஆம் ஆண்டு அக்டோபர் முடிய பெருவகை கனிம உரிமவரி, தலவரி மற்றும் தலவரிகளின் உபரிவரி முதலியவற்றின் மூலம் ரூ. 252.03 இலட்சங்கள் வருவாய் கிடைத்துள்ளது. ஒப்புதல் சான்றிதழ்கள் அளிக்கப்பட்டதன் மூலம் ரூ. 1,53,000 வருவாய் கிடைத்துள்ளது. இதில் ரூ. 91,000 புதிய ஒப்புதல் சான்றிதழ்கள் மூலமும் ரூ. 62,500 சான்றிதழ்கள் புதுப்பித்தல் மூலமும் கிடைத்துள்ளது.

மேற்குறித்த காலத்தில் 432 ஒப்புதல் சான்றிதழ்கள் அளிக் கப்பட்டன. (புதியன மற்றும் புதுப்பித்தல்) இத்துடன் பெரு வகை மற்றும் சிறுவகை கனிமங்களுக்காக 55 உயர்நீதிமன்ற வழக்குகளும், வழக்குகளின் மேல்முறையீட்டு மனுக்களும் பரிசீலிக்கப்பட்டன.

1986 மே 3]

சுரங்க குத்தகை மனுக்கள் பரிசீலித்தல் :

1981–82		81
1982–83		98
1983–84		100
1984–85		237
1985–86 (1985 டிசம்பர் முடிய).		91

ஒப்புதல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது மற்றும் வருவாய் :

ஆண்டு.	புதியன.		புதுப்பித்தல்.	
	எண்.	ரூபாய்.	எண்.	ரூபாய்
(1)	(2)	(3)	(4)	(5)
1981–82 ..	107	53,500	204	53,500
1982–83 ..	175	87,500	219	54,750
1983–84 ..	111	55,500	118	39,500
1984–85 ..	198	99,000	266	66,500
1985–86 .. (சனவரி 1986 முடிய).	182	91,000	250	62,500

சர்க்கரைத் தொழில்.

புதுப்பிக்கக்கூடிய மூலப்பொருட்கள் கிடைக்கக் கூடியதும், பலதரப்பட்ட மண் வகைகளிலும், மாறுபட்ட சீதோஷ்ணநிலைகளிலும் உற்பத்தி செய்யக்கூடிய கரும்பினை அடிப்படையாகக் கொண்ட சர்க்கரை உற்பத்தி தொழிலே, இம்மாநிலத்தின் கிராமப் புறங்களுக்கேற்ற விவசாய தொழிற்பிரிவாகும். எனவே, இத்தொழில், வேளாண்மை மற்றும் தொழிற்துறையை இணைக்கும் பாலமாக விளங்குகிறது. கரும்பு உற்பத்தியைத் தவிர இது கிராமப்புறத்தில் தொழில் வளர்ச்சியை அபிவிருத்தி செய்ய உதவுகிறது. சர்க்கரைத் தொழில் விளை பொருள்கள் அறுவடைக்குப் பின் ஆதாயமான விலை பெறுவதற்கான வழி வகை செய்து கொடுக்கிறது. கரும்பைத் தவிர வேறு எந்த வேளாண் விளை பொருளும் விலைகளைப் பொறுத்தமட்டில் நிறுவன ரீதியான பாதுகாப்பு பெறுவதில்லை. இத் தொழிலில் முக்கிய உற்பத்தியான சர்க்கரை, மக்கள் உபயோகிக்கும் பண்டங்களில் முக்கியமானவைகளில் ஒன்றாக உள்ளது. இதன் முக்கிய நோக்கமானது சர்க்கரையை உற்பத்தி செய்வது. உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை, கிராமம், நகரம் என்ற பாகுபாடில்லாமல், ஏழை பணக்காரர் என்ற வேறுபாடுகள் இல்லாமல் எல்லாத் தரப்பு மக்களாலும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் மாநில அரசு காட்டும் ஆர்வத்தில்தான் இந்தத் தொழிலின் வளர்ச்சி அமைந்திருக்கிறது என்று கூற முடியாது. எனவே, சர்க்கரைத் தொழிலின் ஒழுங்கான வளர்ச்சியை மேம்படுத்தவும் குறிப்பாகக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இயக்கத்தை சீர்படுத்தவும் தமிழக அரசு 1969 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சர்க்கரை இயக்ககத்தை

புதியதாக உருவாக்கியது. இவ்வியக்ககம் சர்க்கரை தொழில் சம்பந்தப்பட்ட அனைத்து பொருட்களையும் கவனித்து வருகிறது.

தற்போது கூட்டுறவுத் துறையில் 11 சர்க்கரை ஆலையும் தனியார் துறையில் 10 சர்க்கரை ஆலையும், பொதுத் துறையில் 3 சர்க்கரை ஆலையும் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மத்திய அரசு, 1984 ஆம் ஆண்டு மே திங்களில் தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை பகுதியில் நாளொன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலை அமைக்க அனுமதி அளித்தது. இந்த சர்க்கரை ஆலை கூட்டுறவுத் துறையில் தலைஞாயிறு கிராமத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. இவ்வாலை தனது அரவையை 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் தமிழகத்தில் 30 புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க தமிழ்நாடு அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. இதன் அடிப்படையில் 22 இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைக்க 28 விண்ணப்பங்களை மாநில அரசிற்கு சர்க்கரைத்துறை இயக்குநரகம் பரிந்துரை செய்து அனுப்பியுள்ளது.

7. விண்ணணப்பங்கள் மைய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் மாநில அரசின் ஆய்வில் உள்ளன.

தமிழக சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள் :

தமிழக சர்க்கரை ஆலைகளின் 1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளில் பொதுவான செயல்பாட்டு விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழக சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு போன்ற விவரங்களும் 1985–86 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு கொண்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

சர்க்கரை ஆண்டு.	பிழியப் பட்ட கரும்பின் அளவு.	உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரையின் அளவு.	சர்க்கரை கட்டுமானம் (விழுக் காடுகள்).	நிறுவிய பிழி திறனை பயன் படுத்திய அளவு.
(1)	(2)	(3)	(4)	(5)
		(இலட்சம் டன்களில்.)		
1982–83 ..	72.02	6.51	9.04	101
1983–84 ..	45.55	4.24	9.30	60
1984–85 ..	62.87	6.00	9.54	83
1985–86 மதிப்பீடு.	65.77	5.97	9.07	83

1986 மே 3]

இம்மாநிலத்தில் 1985–86 ஆம் ஆண்டில் 65.77 இலட்சம் டன்கள் மட்டுமே கரும்பு அரவை செய்யப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

1984–85 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 6 இலட்சம் டன்களாக இருந்தது. 1985–86 ஆம் ஆண்டில் 5.97 இலட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

3. கரும்பின் விலை :

1985–86 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சதவீத சர்க்கரை சத்துடைய கரும்பின் விலை டன் ஒன்றிற்கு ரூ. 165 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. 8.5 சதவீதத்திற்குக் கூடுதலாக இருப் பின் 0.1 சதவீதம் ஒவ்வொன்றிற்கும் குவிண்டால் ஒன்றிற்கு 19.412 பைசா வீதம் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. கரும்பு உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால் கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயம் செய் துள்ள குறைந்த அளவு விலை ஆதாயமற்றது என முறையீடுகள் எழுந்ததாலும், வேளாண்மை இடு பொருள் விலை, கூலி உயர்வு ஆகியவற்றை கருத்திற்கொண்டு 8.5 சதவீதம் அல்லது அதற் குக் குறைந்த சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 195 என்று 1985–86 ஆம் ஆண்டிற்குக் கொடுக்க வேண்டும் என தமிழக அரசு சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுரை கூறியுள்ளது. சர்க்கரை கட்டுமானம் 8.5 சதவீதத்திற்கு கூடுதலாக இருப்பின் விழுக்காடுக்கு 22.9411 பைசா வீதம் அதிகமாக வழங் கவும் சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

1984–85 ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகளிடம் பதிவு செய்து கரும்பு வழங்கும் கரும்பு பயிரிடுவோர்களுக்கு டன் ஒன் றுக்கு ரூ. 10 மானியமாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த மானியம் 1984–85 ஆம் ஆண்டில் ஆலையிடம் பதிவு செய்த கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கப் படும்.

4. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் :

தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் பணி புரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் தமிழக அரசு சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தை 1979 ஆம் ஆண்டு நிறுவியது. இந்நிறுவனம் சர்க்கரை ஆலை களில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு சர்க்கரை உற்பத்தி பற்றி பயிற்சி அளித்து வருகிறது.

5. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் :

பொதுத் துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கென தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. தற்பொழுது இம்மாநிலத்தில் கீழே குறித்துள்ள மூன்று சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையில் இயங்கி வருகின்றன :—

(1) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

(2) ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எரையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(3) மதுரா சர்க்கரை ஆலை, பாண்டியராஜபுரம், மதுரை மாவட்டம்.

6. சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின்சாரம் தயாரிக்கும் திட்டம் : (Co-Generation Plant).

சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த கொதிகலன்களை பயன்படுத்தி கரும்பு சக்கையை எரி பொருளாக பயன்படுத்தி அதிக அளவில் மின்சாரம் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகளுக்கு தேவையான மின்சாரம் போக உபரி மின்சாரத்தை மின்சார வாரியத்திற்கு வழங்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஒரு கோ-ஜெனரேஷன் பிளாண்ட் தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அமைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. திட்டத்தின் மொத்த செலவு ரூ. 16 கோடிக்கு மேல் போகாது என்றும் மின் உற்பத்தி செலவு ஒரு யூனிட்டுக்கு 80 பைசாவாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இத்திட்டத்தை அமல்படுத்தும் சர்க்கரை ஆலைகளுக்கு மாநில அரசும், மைய அரசும், கலால் வரிச் சலுகை, வெளிச் சந்தையில் சர்க்கரை விற்பனை, கொள் முதல் வரி மான்யம் மற்றும் குறைந்த அளவில் கரும்புத்தீர்வை வசூலித்தல் போன்ற சலுகைகளை அளித்தால்தான், இத்திட்டம் செயல் படுத்த இயலும். இத்திட்டத்திற்காக மைய அரசு ரூபாய் 196 இலட்சம் மான்யமாக அளித்துள்ளது. இந்த செயற் குறிப்பு அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.

7. கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம் :

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தான் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் கரும்பு மீதான மேல் வரி (செஸ்) அரசுக்கு செலுத்துகின்றன. மேற்படி தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள சாலைகளை பராமரித்தல் போன்ற இனங்களுக்கு செலவழிக்கப்படுகின்றது. 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. வேலை வாய்ப்பு :

சர்க்கரை தொழில் பெருமளவில் நேரடி வேலை வாய்ப்பு அளிப்பதோடு சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு வழங்கி வருகின்றது.

இணைப்பு.

சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன் அளவு, பிழிந்த கரும்பின் அளவு, உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு மற்றும் சராசரி சர்க்கரை கட்டுமானம் பற்றிய விவரம்.

வரிசை எண்ணும், சர்க்கரை ஆலைகளின் பெயரும்.	1984–85 நாளொன்றுக்கு பிழிதிறன் (டன்களில்).	1983–84.			1984–85.		
		பிழியப்பட்ட கரும்பின் அளவு (டன்களில்.)	உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு (டன்களில்.)	சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்).	பிழியப்பட்ட கரும்பின் அளவு (டன்களில்.)	உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு (டன்களில்.)	சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1. கூட்டுறவுத்துறை—							
1. ஆம்பூர்	2,200	1,15,034	11,831	10.29	1,97,666	20,577	10.41
2. மதுராந்தகம்	1,750	2,75,316	25,900	9.41	2,58,438	24,117	9.33
3. அமராவதி	2,000	1,13,326	11,588	10.23	2,87,180	30,142	10.50
4. சேலம்	2,500	3,01,665	26,673	8.84	3,31,287	31,530	9.52
5. கள்ளக்குறிச்சி	2,000	2,04,015	17,875	8.76	2,76,140	26,055	9.44
6. நேஷனல்	1,500	1,80,277	17,348	9.62	2,36,829	23,451	9.90
7. தர்மபுரி	1,250	1,65,608	17,884	10.80	2,23,143	23,174	10.39
8. வேலூர்	1,250	2,01,062	19,802	9.85	2,32,880	22,069	9.48
9. திருப்பத்தூர்	1,250	59,067	5,715	9.68	1,75,001	17,858	10.22
10. செங்கல்ராயன்	1,250	2,31,032	21,612	9.35	3,27,750	29,944	9.14
11. திருத்தணி	1,250	4,345	186	4.29	1,23,624	10,275	8.31
	18,200	18,50,747	1,76,414	9.54	26,69,938	2,59,282	9.70

2. தனியார் துறை—

12. இஐடி பாரி ..	4,000	3,30,076	27,952	8.47	2,92,049	25,373	8.69
13. காவேரி சுகர்ஸ் ..	1,250	1,36,498	12,892	9.45	1,64,300	15,987	9.73
14. டெக்கான் சுகர்ஸ் ..	1,850	1,54,610	12,842	8.31	2,65,088	23,783	8.97
15. தென் இந்தியா ..	2,700	2,39,033	19,989	8.36	3,19,090	27,366	8.58
16. அருணா சுகர்ஸ் ..	4,000	5,82,450	55,436	9.52	5,83,782	54,759	9.38
17. சக்தி சுகர்ஸ் ..	4,000	3,39,704	34,375	10.12	6.97,491	70,103	10.05
18. கோத்தாரி சுகர்ஸ் ..	2,000	2,64,486	23,870	9.03	2,79,523	26,822	9.60
19. திரு ஆரூரான் ..	2,000	2,69,269	24,365	9.05	2,38,546	24,116	9.05
20. பொன்னி சுகர்ஸ் ..	1,250	42,556	3,854	9.06	2,40,290	23,352	9.72
	23,050	23,58,682	2,15,575	9.13	30.80,109	2,91,661	9.47

3. பொதுத் துறை—

21. அறிஞர் அண்ணா ..	1,250	1,87,560	16,662	8.88	2,34,058	21,494	9.18
22. பெரம்பலூர்	1,250	1,62,670	15,352	9.44	2,54,375	23,961	9.42
23. மதுரா சுகர்ஸ்	1,250	4,427	345	7.80	49,308	8,602	7.81
..	3,750	3,54,657	32,359	9.14	5,37,741	49,057	9.12
ஆக மொத்தம் ..	45,000	45,64,086	4,24,348	9.29	62,87,788	5,99,940	9.54

மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை :

மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்பிரிவுகளை சிறப்பாக ஊக்குவிக்கும் பொருட்டு தலைமைச் செயலகத்தில் 1984 ஆம் ஆண்டு மே திங்களில் புதிதாக ஒரு துறை தோற்றுவிக்கப்பட்டது. மின்னணுவியல் துறையில், இத்துறை மாநில அரசின் பெரிய நிறுவனமான தமிழ்நாடு மின்னணுக் கழகத்தின் பொறுப்புகளையும், தொழில் மற்றும் வாணிபத் துறையின் வாயிலாக ஏனைய மின்னணுவியல் வளர்ச்சித் திட்டங்களின் நிர்வாகப் பொறுப்பினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழ்நாடு மின்னணுக் கழகம் :

மாநில அரசின் நிறுவனமான தமிழ்நாடு மின்னணுக் கழகம், இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழிற்சாலைகளின் முன்னேற்றத்தினை தனது தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்குறிக்கோளை அடைவதற்காக, அரசுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதுடன், உள்நாட்டில் உள்ள தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்வதற்கும் வசதி செய்து தருகிறது. இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த மூலதனம் ரூ. 5 கோடியாகும். அதில் 1—3—1986 வரை தமிழக அரசு ரூ. 3.24 கோடி முதலீடு செய்துள்ளது. கீழே தரப்பட்டுள்ள செயலாக்கம் பற்றிய புள்ளி விவரங்கள் தமிழ்நாடு மின்னணுக் கழகம் அண்மை ஆண்டுகளில் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளதை விளக்கும்.

ஆண்டு.		எல்காட்டின் தனிப்பட்ட திட்டங்களின் உற்பத்தி.	எல்காட் மற்றும் அதன் கூட்டுத்துறை நிறுவனங்களின் மொத்த உற்பத்தி.
(1)		(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1983–84	..	26.79	26.79
1984–85	..	113.12	330.12
1985–86	..	337.00	1,000.00
1986–87	..	630.45 (மதிப்பீடு)	1,500.00

1986 மே 3]

''எல்காட்'' இதுவரை சுமார் 400 பேர்களுக்கு அதன் சொந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளித்துள்ளது. 1986—87-ல் இவ்வெண்ணிக்கை 500 ஆக உயரும். கூட்டு முயற்சித் திட்டங்களின் மூலம் வேலைவாய்ப்புப் பெறுவோர் எண்ணிக்கை 1986—87-ல் சுமார் 500 ஆக இருக்கும். இந்தத் திட்டக் காலத்தில் அவ்வெண்ணிக்கை 3,000 ஆக உயரும் என்வும் எதிர்பார்க்கப்படுகிறது.

(1) எல்காட் முற்றிலும் சொந்தமாக நடத்தும் (பொதுத் துறை) திட்டங்கள் :

(அ) அலுமினிய மின்னாற்பகுப்பு கொள்கலன்கள் : இத் தொழிற்சாலை தருமபுரி மாவட்டத்தில் ஹோசூரில் அமைக்கப் பட்டுள்ளது. இதன் மொத்த முதலீடு ரூ. 179.31 இலட்சமாகும். மிகக் குறுகிய கால அளவில், அதாவது 18 மாதங்களில் இது நிறுவப்பட்டு, 1983 மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கொள் கலன்கள் விற்பனைச் சந்தையில் சிறந்த இடத்தைப் பிடித் துள்ளது. இத் தொழிற்சாலை தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப் பெரிதும் உபயோகிக்கப்படும் உதிரி உறுப்புகளை தயார் செய்கின்றது. இத்தொழிற்சாலையின் உற்பத்தி 1985—86-ல் ரூ. 178 இலட்சமாக இருந்தது. 1986—87-ல் ரூ. 380 இலட்சமாக உயரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

(ஆ) எண்காட்டும் எலக்ட்ரானிக் கைக்கடிகார உற்பத்தி : எண் காட்டும் மின்னணுக் கடிகாரங்களை பொதுத் துறையில் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்க வேண்டும் என்னும் மைய அரசின் கொள்கை அடிப்படையில் தொடங்கப்பட்ட இத்திட்டமானது அரசால் அங்கீகரிக்கப்படாத, சட்ட விரோதமாக தயாரித்து, மிகவும் மலிவான அரை விலைக்குக் கிடைக்கக் கூடிய, பொய்த் தயாரிப்புப் பெயர்கள் கொண்ட போலி கைக் கடிகாரங் கள் விற்பனைச் சந்தையில் போட்டி விற்பனையை எதிர் கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் இந்நிலை, உண்மையான கைக் கடிகாரங்களின் தரம் மற்றும் நெடுநாள் நீடித்து நிற்கும் தன்மை ஆகியவைகளை மக்கள் உணர ஆரம்பித்திருப்பதால் விரைவில் உறுதியாக மாறும். கடிகாரங்களின் விற்பனை குறிப்பிடத் தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதுடன், மக்கள் மத்தியில் குறிப்பாக, உபயோகிப்போர் மத்தியில், ''எல்காட்''டின் பெயரை நிலை நாட்ட உதவுகின்றது.

(இ) ஒப்பந்தப் பிரிவு : ஒப்பந்தப் பிரிவின் விற்பனை அளவு வெகுவாக அதிகரித்துள்ளது. 1983—84ல் இப்பிரிவின் விற்பனை அளவு ரூ. 3.29 இலட்சமாக இருந்தது. 1984—85-ல் ரூ. 24.58 இலட்சமாக உயர்ந்தது. 1985—86-ல் ரூ. 50 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. 1985—86-ல் ரூபாய் 18.60 இலட்சம் மதிப்புள்ள 3,100 வானொலிப் பெட்டிகளை இப்பிரிவு ஊராட்சிகளுக்கு வழங்கியுள்ளது. 1986—87ல்

ரூ. 24 இலட்சம் மதிப்புள்ள 4,000 வானொலிப் பெட்டிகளை இப்பிரிவு விற்பனை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர இந்தியாவில் உள்ள சர்வதேச விமான நிலையங்களுக்கான பொறுப்பு நிறுவனம், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் போன்ற பல்வேறு அமைப்புகளுக்குத் தேவைப்படும் உயர் தொழில் நுட்பம் வாய்ந்த கருவிகளையும் இப்பிரிவு தயாரித்து வழங்குகிறது.

(ஈ) இரு வழி ரேடியோ தொடர்பு அமைப்பு : இங்கிலாந்தில் உள்ள மார்க்கோனி நிறுவனத்தின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் ''எல்காட்'' நிறுவனத்தின் தகவல் தொடர்புக் கருவிப் பிரிவானது 1985 ஏப்ரலில் இருந்து தகவல் தொடர்புக் கருவிகளை விற்பனைக்காக உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 150 இலட்சம். சென்னையை அடுத்த திருவான்மியூரில் இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகளான காவல் துறை. நல்வாழ்வுத் துறை ஆகியவற்றிற்கும், இரயில்வேக்கும் இக்கருவிகள் தயாரித்து அளிக்கப்படுகின்றன. . இத்திட்டத்தின் உற்பத்தி மதிப்பு 1985–86-ல் ரூ. 60 இலட்சமாகவும், 1986–87-ல் ரூ. 120 இலட்சமாகவும் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் தமிழ்நாடு மின்னணுக் கழகத்தின் பெரிய செயல் திட்டங்களுள் ஒன்றாக விளங்குவதுடன் தகவல் தொடர்பு உயர் தொழில் நுட்பத் துறையில் தமிழ்நாடு மின்னணுக் கழகம் நுழைந்துள்ளதற்கு அடையாளமாக அமைந்துள்ளது.

(உ) விற்பனை செய்ய உதவி: தனியார் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் குவார்ட்ஸ் அனலாக் சுவர்க் கடிகாரங்களை (Quartz Analog Wall Clock) இந்நிறுவனம் விற்பனை செய்து உதவி வருகிறது. 1983–84-ல் 334 கடிகாரங்களும், 1984–85-ல் ரூ. 6.55 இலட்சம் மதிப்புள்ள 2,248 கடிகாரங்களும் விற்கப்பட்டன. 1985–86-ல் ரூ. 11 இலட்சம் மதிப்புள்ள கடிகாரங்களும், 1986–87-ல் ரூ. 14 இலட்சம் மதிப்புள்ள கடிகாரங்களும் விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(2) கூட்டு முயற்சித் திட்டங்கள் : எல்காட் நிறுவனத்தின் மிகவும் இன்றியமையாத பங்கு, இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்கு கிரியா ஊக்கி போன்று அமைந்து தனியார் தொழில் முனைவர்களின் தொழில்முயற்சிகளை ஊக்குவிப்பது மற்றும் கூட்டு முயற்சித் திட்டங்களை மேம்படுத்துதல் போன்றவையாகும். கூட்டு முயற்சித் திட்டங்களில், இந்நிறுவனத்தின் பங்காக 26 சதவீதம், தனியார் தொழில் முனைவோர் பங்கு 25 சதவீதம். மீதமுள்ள தொகையை பொது மக்களிடமிருந்து பெற்று, கூட்டு முயற்சித் திட்டங்களை இந்நிறுவனம் ஏற்படுத்துகிறது. கூட்டு முயற்சித் தொழில்களின் மொத்த உற்பத்தி மதிப்பு 1985–86-ல் ரூ. 637 இலட்சமாக

1986 மே 3]

இருக்கும் என்றும், அடுத்த ஆண்டு ரூ. 875 இலட்சமாக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளில் 20 கூட்டு முயற்சித் திட்டங்களுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் உற்பத்தி தொடங்கியுள்ள கூட்டு முயற்சிகளின் விவரம் பின்வருமாறு :—

உற்பத்தி செய்யப் படும் பொருள்.	கூட்டு முயற்சியின் பெயர்.	1985–86-ல் உற்பத்தி மதிப்பு.	1986–87-ல் உற்பத்தி மதிப்பு (எதிர் பார்க்கப் படுவது).
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்)	
(1) கறுப்பு மற்றும் வெள்ளை, மற்றும் வண்ண தொலைக் காட்சிப் பெட்டிகள்.	திருவாளர்கள் ஹேப்பி ஹவுஸ் டி.வி.மானுபாக்சரிங் டிவிஷன் லிமிடெட்.	580	750
(2) மின்கணிப்புப் பொறிகளின் பயன்பாட்டுத் திட்டங்கள் (முழுமையும் ஏற்றுமதிக்காக).	திருவாளர்கள் அட்வன்ட் கம்ப்யூட்டர்ஸ் லிமிடெட்.	25	50
(3) கார்பன் பிலிம் ரெசிஸ்டர்கள்.	திருவாளர்கள் ருக்மணி எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்.	7	25
(4) மின்சார கட்டுப்பாட்டு கருவிகள்.	திருவாளர்கள் எல்காட் பவர் கண்ட்ரோல்ஸ் லிமிடெட்.	25	50

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
(5) மைக்ரோ ப்ராசசர் அடிப்படையிலான தொழிற் கருவிகள்.	லாம்ப்டா எல்காட் லிமிடெட்.	1	10
(6) மின்னணு மருத்துவச் சோதனைக் கருவிகள்.	கோடி எல்காட் லிமிடெட்.	1	20

இம்மாநிலத்தில் விற்பனையாகும் தொலைக் காட்சிப் பெட்டிகளின் விற்பனை வரிசையில் 3வது இடத்தை ''சியர்ஸ் எல்காட்'' பெற்றுள்ளது. 1985—86-ல் 20,000 தொலைக் காட்சிப் பெட்டிகள் விற்கப்பட்டன. வரும் ஆண்டில் அதன் விற்பனை 30,000 வரை உயரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS